https://telegram.me/aedahamlibrary

தாயம்

Tamil translation of *'Unposted Letter'*

மஹாத்ரயா ராஜ்

BEST SELLER

Over
2,00,000 copies sold

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாழ்வில் எனை உன்னோடு சுமந்து செல்,

வாழ்க்கை முழுதும் நான் உனைச் சுமப்பேன்.



https://telegram.me/aedahamlibrary

• • •

தாயம் என்ற இந்நூலில் வாழ்க்கையின் ஞானம் ஓர் எளிய, ஆனால் திறன்மிக்க வழியில் வெளிப்படுகிறது. எங்களுடைய மூத்த நிர்வாகிகளின் சந்திப்புக்கூட்டம் தினசரி இப்புத்தகத்தில் இருந்து ஏதாவது ஒரு 'ஞானத்தைக்' கேட்பதுடன்தான் துவங்குகிறது. நாங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் பார்வையில் அது குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

முருகவேல் ஜானகிராமன்
முதன்மை நிர்வாகி, மேட்ரிமோனி.காம்

நான் இரவு வேளைகளில் ஏதாவது ஒரு கட்டுரையை வாசிப்பது வழக்கம். அக்கணத்தில் எனக்குத் தேவைப்படும் தெளிவைக் கொடுக்கும் அற்புதமான, சுருக்கமான முன்னோக்குகள் இதில் உள்ளன. என் மனத்தில் அக்கணத்தில் தோன்றும் எக்கேள்விக்கும் 'கூகிள்' போன்றது இது. ஆனால் இங்கு விடைகள் நான் மிகவும் நேசிக்கும் மஹாத்ரயாவிடம் இருந்து வருகின்றன.

ஜி.ஆர். 'ஆனந்த்' அனந்தபத்மநாபன்
ஜிஆர்டி குழுமம்

என் எண்ணங்களின்மீதும் இருத்தலின்மீதும் தாக்கம் செலுத்துகின்ற, என் வேலையின் மூலம் உலகத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த உதவுகின்ற சக்தி ஒன்று உண்டென்றால் அது மஹாத்ரயாதான். மக்களின் அற்புதமான வாழ்க்கைப் பயணத்தின் தொடக்கமாகவும் அதன் கிரியா ஊக்கியாகவும் இப்புத்தகம் விளங்கும். எல்லோரும் இதைப் பெறத் தகுதியானவர்கள்தான். உங்களுடைய பயணத்தை இன்றே துவக்குங்கள்.

அத்துல் என். ஷா
நிர்வாக இயக்குநர், எஃப்ஏசிஏஏஐ, எஃப்ஏஏஏஏஐ,
மருத்துவ இயக்குநர், சென்டர் ஃபார் ஆஸ்துமா & அலர்ஜி.
நியூயார்க், அமெரிக்கா

"புத்தகப் பதிப்புத் துறையில் என்னுடைய நாற்பது வருடங்களுக்கும் மேலான அனுபவத்தில் இதைப் போன்ற ஒரிஜினல் படைப்பை நான்

https://telegram.me/aedahamlibrary

ஒருபோதும் பார்த்ததில்லை . . . நான் இந்நூலை மீண்டும் மீண்டும் பலமுறைப் படித்துள்ளேன்."

- ராயஸம் எச். ஷர்மா
புத்தகப் பதிப்புத் துறை முதுவர்

https://telegram.me/aedahamlibrary

இன்ஃபினிதீயிஸம்

ஆன்மீகம், உணர்வுகள், பொருளாதாரம் உள்ளிட்ட மனித வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங்களிலும் அபரிமிதமான நிறைவைப் பெற இந்தப் பாதை பெரிதும் உதவுகிறது. ஒவ்வொருவருக்குள்ளும் ஒளிந்திருக்கும் எல்லையில்லாத மனித சக்தியை உணர்த்தி அதைப் பயன்படுத்தி மிகப்பெரிய சாதனைகளைப் புரியவும் வழிகாட்டுகிறது இன்ஃபினிதீயிஸம் என்னும் இந்த மார்க்கம்.

https://telegram.me/aedahamlibrary

• • •

என் அன்பிற்குரிய வாசகர்களே,

இப்புத்தகத்தின் ஏதாவது ஒரு பக்கத்தைத் திறந்து பாருங்கள். விடை தேடுபவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறது விடை.

இப்புத்தகம் உங்களுக்கு சமர்ப்பணம்.
உங்கள் கேள்விகளுக்கான விடைகள் என் வழியாக மலர்ந்தன.
அக்கண்ணோட்டத்தில் பார்த்தால், நீங்களும் இப்புத்தகத்தின் இணை ஆசிரியர்கள்தான்.

எல்லையில்லாத மனித சக்தியை உணர்ந்து கொள்ள உங்களுக்கு உதவக்கூடிய விடைகளை இப்புத்தகத்தின் பக்கங்களுக்குள் நீங்கள் கண்டுபிடிப்பீர்கள்.
ஆன்மீகம், உணர்வுகள், பொருளாதாரம் உள்ளிட்ட மனித வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங்களிலும் அபரிமிதமான நிறைவைப் பெற விரும்பும் உங்களுக்கானது இந்நூல். அபரிமிதமான நிறைவுடன்கூடிய ஒரு வாழ்க்கையை வாழத் தேவையான முக்கியமான வழிகாட்டுதல்களையும் நீங்கள் இதில் கண்டுபிடிப்பீர்கள்.

மஹாத்ரயா ராஜ்

தாயம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தாயம்

பவுலாத்ரயா ரா

தமிழில்: நாகலட்சுமி சண்முகம்

மஞ்சுள் பப்ளிஷிங் ஹவுஸ்

https://telegram.me/aedahamlibrary

First published in India by

Manjul Publishing House
Corporate and Editorial Office
• 2nd Floor, Usha Preet Complex, 42 Malviya Nagar, Bhopal 462 003 - India
Sales and Marketing Office
• 7/32, Ground Floor, Ansari Road, Daryaganj, New Delhi 110 002 - India
Website: www.manjulindia.com

Distribution centres
Ahmedabad, Bengaluru, Bhopal, Kolkata, Chennai, Hyderabad, Mumbai, New Delhi, Pune

Tamil translation of *Unposted Letter* by *Mahatria Ra*

This edition first published in 2011
Eighth impression 2016

Copyright © 2009 by Mahatria Ra

ISBN 978-81-8322-233-4

Translation by Nagalakshmi Shanmugam
Editing by PSV Kumarasamy

All rights reserved. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted, in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise) without the prior written permission of the publisher. Any person who does any unauthorized act in relation to this publication may be liable to criminal prosecution and civil claims for damages.

https://telegram.me/aedahamlibrary

உள்ளடக்கம்

கடவுள் உங்களுக்கு அளித்துள்ள கொடைதான் 'இன்றைய தினம்'

சிகரத்தை அடைவதற்குச் சுலபமான வழி கிடையாது

உங்களுக்கு உன்னதமாகப்படும் ஓர் உறவு

உங்கள் வாழ்வில் உங்களை வந்தடைந்துள்ள அனைத்தையும்விட நீங்கள்தான் முக்கியமானவர்

முக்கியமான சில விஷயங்களும், அற்பமான பல விஷயங்களும்

வழிகாட்டப்படுவதற்கான தேவையைவிடவும் மதிக்கப்படுவதற்கான தேவை அதிகமாக உள்ளது

மரணத்தை வாழ்க்கை தள்ளிப்போடுவதில்லை, நாமும் நம் வாழ்வைத் தள்ளிப்போட வேண்டாம்

மனிதனின் பொறுப்பு முடியுமிடத்தில், பரம்பொருள் பொறுப்பெடுத்துக் கொள்கிறது

அனுபவம் என்ற மாறுவேடத்தில் ஓர் ஆசிரியரை வாழ்க்கை உங்களுக்காக அனுப்பியுள்ளது

உன் வாழ்க்கையும் என் வாழ்க்கையும் நம் வாழ்க்கையான பிறகு ...

உங்களுடைய எந்த வாடிக்கையாளரைத் தூக்கியெறியப் போகிறீர்கள்?

பிறருடன் சரிக்குச் சமமாகப் போட்டியிடாதீர்கள்

உணர்ச்சிகள் - தவறில்லை, உணர்ச்சிக் கொந்தளிப்பான நாடகங்கள் வேண்டாமே!

நல்லவை வெளிச்சத்திற்கு வரட்டும்

https://telegram.me/aedahamlibrary

கவனச் சிதறல்கள் கட்டாயம் தேவை. ஓய்வின்றி உழைத்தால் நாம் ஓய்ந்து போய்விடுவோம்

சரியா தவறா என்பதல்ல விஷயம், இது பொருத்தம் குறித்த ஒன்று

சரியான கரங்களில் வளர்வதற்கு நிகரே இல்லை

எதிர்கொள்ளப்பட வேண்டியவை, எதிர்கொள்ளப்பட்டே ஆக வேண்டும் - தாமதமின்றி!

வேறொருவரின் சிறந்த பரிசாக இருங்கள்

மிகச் சிறந்த வளமான உங்களை நீங்கள் போதுமான அளவு பயன்படுத்திக் கொள்கிறீர்களா?

செய்பவற்றை பக்தியுடன் செய்யுங்கள்

உங்கள் வல்லமையையும் திறனையும் மேம்படுத்துங்கள், அதுதான் முன்னேற்றம்

முடிவு இவ்வளவு அழகாக இருக்கும் என்று மட்டும் தெரிந்திருந்தால் . . .

உங்கள்மீது குத்தப்பட்டுள்ள அடையாளங்களைத் துறந்துவிடுங்கள்

பணத்திற்கு ஞாபகசக்தி கிடையாது, அனுபவத்திற்கு உண்டு

செல்லம் கொடுத்தல் பலவீனப்படுத்தும், அன்பு உருவாக்கும்

ஏற்றுக்கொள்ளுதல் என்பது நேர்மறையான உணர்ச்சி

உங்கள் வருங்காலத்தை உருவாக்குவதற்குத்தான் உங்களுக்கு அறிவு அளிக்கப்பட்டுள்ளது

வெளித்தெரியா விவரங்களே தரம்

கடைசி வார்த்தைத் தங்களுடையதாக இருக்க வேண்டும் என்பதே ஒவ்வொருவருடைய விருப்பமும்

'10 நிமிடம் முன்பு' என்பது 10 வருடக் கூடுதல் ஆயுளுக்குச் சமானம்

https://telegram.me/aedahamlibrary

இருக்குமிடத்திற்கும் இருக்கப்போகும் இடத்திற்கும் நடுவிலுள்ள இடைவெளிதான் கனவுகள்

தொடர்ச்சியான, முடிவற்ற சுயமுன்னேற்றம்தான் ஒரே வழி

கடைசியாக எப்போது நான் ஏதாவது ஒன்றை முதன்முறையாகச் செய்தேன்?

குறைவானது அதை நீண்டதாக்கும், அதிகமானது அதைச் சுருக்கும்

உன்னதம் இருக்கும் பட்சத்தில், விளக்கங்களுக்குத் தேவை இருக்காது

நம்பிக்கையின் ஆணிவேராகவும் உறவுகளின் அடித்தளமாகவும் மாறியிருக்கிறது தகவல்

உலகம் 'தோல்வி' என்றழைப்பதை நான் 'திருப்புமுனை' என்று அழைக்கிறேன்

எதிர்மறையானவற்றிற்கு இரண்டு வார்த்தைகள், நேர்மறையானவற்றிற்கு ஐந்து வார்த்தைகள்

உங்களிடம் சரியான கேள்விகள் இருக்கின்றனவா?

ஒவ்வொருவரும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றனர்

கல்வி என்பது வெறும் ஏட்டுப் படிப்பிற்கு அப்பாற்பட்டது

மகிழ்ச்சியைச் சென்றடையப் பிரத்யேகமான வழியேதும் கிளடயாது, மகிழ்ச்சிதான் அவ்வழி

மனிதர்கள் என் செயல்களை எடைபோடுகின்றனர், கடவுள் என் நோக்கங்களை எடைபோடுகிறார்

ஒன்றை உபயோகப்படுத்தாவிட்டால், நீங்கள் அதை இழப்பீர்கள்

உங்கள் நண்பர்களைக் காட்டுங்கள், நீங்கள் யாரென்று கூறுகிறேன்

காலம் கனிந்துவிட்ட ஒரு கருத்தைவிட சக்திமிக்கது எதுவும்

https://telegram.me/aedahamlibrary

கிடையாது

என் அன்புக்குரியவர்களுடன் இருக்கும்போது நான் எப்போதும் நானாகவே இருக்கிறேன்

அகங்காரம் வெளியேறும்போது பிற அனைத்தும் உள்ளே வருகின்றன

ஆனந்தமான அதிருப்தியுடன் இருங்கள்

ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதற்கான ஆற்றல் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிறது

மனக்காயத்தை மறக்கும்போது மன அமைதி பிறக்கும்

பிறரைப் பின்பற்றுவதற்காக நீங்கள் பிறக்கவில்லை, வழிநடத்துவதற்காகவே அவதரித்துள்ளீர்கள்

பண்புநலனை ஒருபோதும் கைவிடாதீர்கள் - அதற்கு என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி

'என்னால் முடியும்' என்பது வாழ்க்கையின் மொழி

நீங்கள் யாராக மாற விரும்புகிறீர்களோ, அதற்குத் தேவையானவற்றைச் செய்தே ஆக வேண்டும்

மேன்மையான மனங்கள் கருத்துக்களை விவாதிக்கும், குறுகிய மனங்கள் மக்களைப் பற்றி விவாதிக்கும்

நல்ல தகவல் பரிமாற்றம் சிறந்த உறவுகளுக்கு வலு சேர்க்கும்

உள்நோக்கமற்றுச் செய்யப்படும் செயல்கள் கடவுளின் செயல்களாகிவிடும்

ஆசைப்படுவதை நீங்கள் பெறுவதில்லை, தகுதியானவற்றையே பெறுகிறீர்கள்

நீங்கள் எதிர்க்கும் உண்மைதான் உங்களின் போராட்டமாயிருக்கும்

அமைதியின் கதவுகளை நம்பிக்கை என்னும் திறவுகோலால் மட்டுமே

https://telegram.me/aedahamlibrary

திறக்க முடியும்

நாளையப் பக்குவத்துடன் இன்று வாழ வேண்டியது
இன்றியமையாதது

பணம் சேர்ப்பதற்கான தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு நல்ல
மனிதனுக்கும் உண்டு

நம் ஆசிரியர்களின் போதனைகளை நீக்கிவிட்டால், நம்மில் ஒன்றும்
மிஞ்சாது

கண்காணிப்புடன் நீண்டகாலமாகத் தொடரும் மாற்றங்கள்
கலாச்சாரங்களாக மாறும்

https://telegram.me/aedahamlibrary

என் அன்றிற்குரிய வாசகர்களே,

என் வாழ்க்கை எனக்கு வாழக் கற்றுக் கொருத்தது. பரிபூரண மாற்றம் வேண்டி என்னிடம் வரும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வழியில் என்னிடம் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர். என் ஒவ்வொரு மாணாக்கரும் என் ஆசானாக இருந்துள்ளனர். வாழ்க்கை பற்றிய புரிதல் மற்றும் அறிதலை அப்படியே உறைய வைக்க நான் விரும்புகிறேன். அச்சில் உறைந்துள்ள எண்ணங்களே புத்தகங்கள். உங்கள் கரங்களில் இப்போது தவழ்ந்து கொண்டிருக்கும் இந்த 'அனுப்பப்படாத மடல்' புத்தகத்தின் மூலமாக, நான் உங்களது மனத்திலும் இதயத்திலும் நுழைய விரும்புகிறேன். தயவு செய்து என்னை அனுமதியுங்கள் . . .

ஐன்ஸ்டீன் தன் மொத்த வாழ்க்கையையும் அர்ப்பணித்து உலகிற்குச் சில கோட்பாடுகளை வழங்கினார். அதன் பின்னர் உலகம் முன்பு இருந்ததுபோல இருக்கவில்லை. எடிசனின் வாழ்க்கை, உலகின் வாழ்க்கை முறையையே மாற்றி அமைத்தது. மில்டனும் தாகூரும் கவிதைக்குப் புத்தாடை புனைந்தனர். மகாத்மா காந்தியும், நெல்சன் மண்டேலாவும் புதிய கலாச்சாரங்களைப் படைத்தனர். தியாகைய்யா இசைக்கு புது வடிவம் கொடுத்தார். ஜாகீர் உசேன் தபேலாவிற்குப் புதிய அந்தஸ்தை அஸ்த்தார். ரோஜர் பேன்ஸ்டரும் எட்மன்ட் ஹிலாரியும் மனிதத் திறமைகளின் புதிய எல்லைகளைத் தொட்டனர். சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில், பிளேட்டோ ஆகியோர் உலகின் சிந்தனையையே மாற்றினர். ஒவ்வொரு மனித வாழ்வும் தன்னை உயர்த்திக் கொள்கின்ற சக்தியைக் கொண்டிருப்பதோடு, மனிதகுலத்தின் ஒட்டுமெரத்த உணர்வு நிலையை உயர்த்தும் ஆற்றலையும் பெற்றுள்ளது.

நமது முன்னோர் மனிதகுல உணர்வு நிலையின் பரிணாம வளர்ச்சியில் தங்கள் பங்களிப்பை ஏற்கனவே அளித்துள்ளனர். நாம்

https://telegram.me/aedahamlibrary

அதன் ஆக்கபூர்வமான பலனை அனுபதித்துக் கொண்டிருக்கிறோம், அதில் நாம் என்ன பங்காற்றப் போகிறோம்?

என் அன்பிற்குரிய வாசகர்களிடம் ஒரு சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த அந்தத் திசை நோக்கி நான் மேற்கொண்டுள்ள ஓர் எளிய முயற்சிதான் இது.



https://telegram.me/aedahamlibrary

கடவுள் உங்களுக்கு அளித்துள்ள கொடைதான் 'இன்றைய தினம்'

கொடுக்கப்படும் பொருளின் பின்னால் உள்ள இதயத்தை அடையாளம் கண்டுகொள்ளும்போதுதான் அப்பொருள் ஒரு பரிசாகிறது. ஒரு பரிசின் பின்னால் உள்ள இதயத்தைப் பார்க்கத் தவறிவிடும்போது, அப்பரிசு ஒரு சாதாரணப் பொருளாகிவிடுகிறது.

உங்களுக்குப் பேனாவைக் கொடுத்த இதயத்தை அடையாளம் கண்டுகொள்ளும்போதுதான் அது பரிசாகிறது. உங்கள் வளர்ச்சியில் இதயபூர்வமாகச் செயல்பட்ட உங்களது பெற்றோரின் இதயங்களை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ளும்போது நீங்கள், 'என் குழந்தைப் பருவம் எனக்குக் கிடைத்த வெகுமதி,' என்று கூறுகிறீர்கள். அறிவை உங்களுக்குப் பரிமாற்றம் செய்த ஆசிரியரின் இதயத்தை நீங்கள் அறிந்து கொள்ளும்போது, கல்வி ஒரு பரிசாகிறது. உங்களது வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள முதலாளியின் இதயத்தை நீங்கள் புரிந்து கொள்ளும்போது, உங்கள் வாழ்க்கைமுறை ஒரு வெகுமதியாக மாறிவிடுகிறது. உங்களது நிறுவனத்தில் ஈடுபாட்டுடன் வேலை செய்யும் ஊழியர்களின் இதயத்தை அடையாளம் கண்டுகொள்ளும்போது அது ஒரு பரிசாக மாறுகிறது.

பரிசு என்பது ஒரு பொருளல்ல. அது ஒரு கண்ணோட்டம் வழங்கப்பட்டப் பொருளின் பின்னால் உள்ள இதயத்தைத் தரிசிக்கத் துடிக்கும் பார்வை.

அந்த நோக்கில் பார்த்தால், 'இன்றைய தினம்' ஓர் அழியாத பரிசு. ஒவ்வொரு பரிசுக்கும் பின்னால் பலர் இருந்தாலும், 'இன்றைய தினம்'

https://telegram.me/aedahamlibrary

என்ற விலைமதிப்பற்றப் பரிசை நீங்கள் கடவுளிடம் இருந்து மட்டுமே பெற முடியும். அப்படி இல்லாவிட்டால், நீங்கள் ஏற்கனவே உங்களது கடைசி தினத்தை வாழ்ந்துவிட்டீர்கள் என்று பொருள். நேற்றய இரவு படுக்கச் சென்ற அனைவரும் இன்று காலை கண்விழித்து எழவில்லை. நீங்கள் அப்படிக் கண்விழித்திருக்கிறீர்கள் என்றால், நம்மை மீறிய ஏதோ ஒரு சக்தி மற்றுமொரு 'இன்றைய தினத்தை' வாழ நீங்கள் தகுதியானவர்தான் என்று நினைத்திருக்கிறது. இந்த 24 மணிநேர சமாச்சாரத்தின் பின்னால் உள்ள தெய்வீகத்தின் இதயத்தை அடையாளம் கண்டுகொள்ளுங்கள். 'இன்றைய தினம்' ஒரு தெய்வீகப் பரிசு. அப்படிப்பட்ட ஒரு பரிசைத் தவறாகப் பயன்படுத்துவது, பரிசளித்தவரைப் பழிப்பதற்குச் சமானம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்நாளின் ஒரு தினத்தை வீணடிப்பது, இப்பரிசைத் தந்தவரை நிந்திப்பதாகும். வெகுமதியின் மதிப்பை நீங்கள் புரிந்திருத்தால் மட்டுமே உங்களால் வெகுமதியைப் பாராட்ட முடியும். இன்றைய தினத்தை மதியுங்கள். அதை மதிப்புடையதாக ஆக்குங்கள்.

இன்று, உங்கள் வாழ்க்கையின் ஒரு நாளை அதற்குப் பதிலாகக் கிடைக்கும் ஏதோ ஒன்றிற்காகச் செலவிடப் போகிறீர்கள். அதனால் உங்களது இன்றைய தினத்தை உங்களால் முடிந்த அளவு பயனுள்ளதாக ஆக்குங்கள். உங்கள் மீதமுள்ள வாழ்நாட்களின் தொடக்க தினம்தான் இன்றைய தினம். அதனால், கடந்தகாலத்தை உங்களிடமிருந்து பிரித்தெடுக்கும் விதத்தில் ஒரு கோடு வரையுங்கள். நேற்றைய தினம் நேற்றே முடிந்துவிட்டது என்று நம்புங்கன் வருங்காலத்திற்கு விரையும் பொத்தானை அழுத்துங்கள். கடந்தகாலத்தின் வடுக்களைப் பற்றி இன்றைய தினத்திற்குக் கவலை கிடையாது; வருங்காலத்தின் உறுதியற்ற நிலையும் அதைப் பாதிப்பதில்லை. இன்றைய தினம் ஒரு தினம். ஒரு சந்தர்ப்பம். வாழ்வின் ஒர் அங்கம். அதனால் இன்றைய தினங்களைக் கவனமாகக் கையாளுங்கள்.

புத்தர் இவ்வாறு கூறியுள்ளார்: "இன்று நாம் விழித்தெழுந்து நன்றி செலுத்தலாம். இன்று நம்மால் நிறையக் கற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், குறைவாகக் கற்றுக் கொண்டதற்காக; குறைவாகக் கற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் உடல்நலக் குறைவு ஏற்படாமல் இருந்ததற்காக; உடல்நலக் குறைவு ஏற்பட்டாலும் இறந்து போகாமல் இருந்ததற்காக நாம் அனைவரும் நன்றி செலுத்துவோமாக!"

அதனால் இப்படிப் பிரார்த்தியுங்கள்: "கடவுளே, என்னுடைய

https://telegram.me/aedahamlibrary

இன்றைய தினம் நீவிர் எனக்களித்துள்ள கொடை. நான் அதை வாழும் விதம் நான் உமக்களிக்கும் பரிசாக இருக்கட்டும்."

https://telegram.me/aedahamlibrary

சிகரத்தை அடைவதற்குச் சுலபமான வழி கிடையாது

வாகனம் ஒட்டுவது என்று தேர்ந்தெடுத்துவிட்டால், போக்குவரத்து நெரிசலை ஏற்றுக் கொண்டாக வேண்டும். ஆரோக்கியம் குறித்து அக்கறை கொண்டிருந்தால், நாக்கு கேட்டதையெல்லாம் அதற்குக் கொடுக்க முடியாது. வருமானம் என்றால் வருமான வரியும் உடன் வரும்.

வாழ்க்கையில் நீங்கள் எதைத் தேர்ந்தெடுத்தாலும், அதோடு ஒட்டிய பிறந்த நன்மைகளோடும் தீமைகளோடும்தான் அது வரும். முட்களற்ற ரோஜாவைத் தேடுவது எவ்வளவு மடத்தனம்! நாணயத்தின் ஒரு பக்கத்தை நீங்கள் தேர்ந்தெடுத்தால், அதன் மறுபக்கத்தையும் சேர்த்துத்தான் நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள். பிரச்சனைகளற்ற, ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வேண்டும் என்று கேட்காதீர்கள். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை மகாத்மாக்களால்கூட நடத்த முடியாது. அப்படிப்பட்ட வாழ்க்கை எதுவும் கிடையாது.

கனவுகள் பெரிதாகும்போது பிரச்சனைகளும் பெரிதாகும். நீங்கள் நடக்க விரும்பும்போது ஒருசில பிரச்சனைகள் மட்டுமே இருக்கும். ஒரு பெரிய ஒட்டப்பந்தயத்தில் கலந்துகொள்ள நீங்கள் விரும்பினால், அதிகமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டும் என்பது வெளிப்படை. வெறுமனே வாழ்க்கையை ஒட்டினால் மட்டும் போதும் என்று நீங்கள் நினைத்தால், பிரச்சனைகள் குறைவுதான். ஆனால் உங்களது முழுத் திறமையும் வெளிப்படும் விதத்தில் வாழ நினைத்தால், நீங்கள் பெரிய பெரிய பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஒரு

https://telegram.me/aedahamlibrary

குச்சியின் ஒரு முனையைப் பிடித்து நீங்கள் தூக்கும்போது, மறுமுனையை நீங்கள் ஏற்கனவே தூக்கிவிட்டீர்கள். செதுக்கப்பட நீங்கள் தயாராக இருந்தால்தான், துதிக்கப்படும் ஒரு சிலையின் நிலையை அடையும் தகுதியை உங்களால் பெற முடியும். சிகரத்தை அடைவதற்கு சுலபமான வழி ஏதும் கிடையாது. சிகரத்தை அடைந்தவர்கள் அதைச் சுலபமாகச் சென்றடையவில்லை.

என்ன இருந்தாலும், வரலாற்றைப் படிப்பவனுக்கும் வரலாற்றைப் படைப்பவனுக்கும் வித்தியாசம் இருக்கத்தானே வேண்டும்?

பைபிள் வாசிப்புக் குழு ஒன்றில் இப்படி ஒரு வாசகத்தைப் படித்தனர்: "வெள்ளியைச் சுத்தப்படுத்தும், மாசு அகற்றும் நபர்போல அவர் உட்கார்ந்திருப்பார்." கடவுளின் குணம் மற்றும் இயல்பு குறித்து இங்கு கூற முற்படுவது என்ன? அந்த வாரம், அக்குழுவில் இருந்த ஒரு பெண்மணி, வெள்ளி உலோகக் கொல்லன் ஒருவன் வேலை செய்வதைப் பார்க்கச் சென்றாள். அவன் வேலை செய்வதை அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போது, கொல்லன் ஒரு துண்டு வெள்ளியை எடுத்துத் தீயில் வைத்து அது சூடாவதற்காகக் காத்திருந்தான். வெள்ளியைத் தீயின் நடுவில் வைக்க வேண்டும். ஏனெனில், அங்குதான் சூடு அதிகமாக இருக்கும், அது அனைத்து மாசுகளையும் எரித்துவிடும் என்று கொல்லன் எடுத்துரைத்தான். முழுநேரமும் உலையின் முன்னாலேயே உட்கார்ந்து இருக்க வேண்டும் என்று கூறப்படுவது உண்மையா என்று அவள் கேட்டாள். அதை உறுதி செய்த கொல்லன், முழுநேரமும் அங்கு உட்கார்ந்திருக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், வெள்ளியிலிருந்து கண்களை அகற்றவும் கூடாது என்றும் தெரிவித்தான். அதிகப்படியாக ஒரே ஒரு கணம் வெள்ளியை நெருப்பில் விட்டுவிட்டால், அது உருகி ஓடிவிடும். உடனே அப்பெண் இவ்வாறு கேட்டாள்; "வெள்ளி முழுவதும் மாசுகள் அகற்றப்பட்டுவிட்டது என்பது உனக்கு எப்படித் தெரியும்?" அவன் அதற்குப் புன்னகைத்துக் கொண்டே இவ்வாறு பதிலளித்தான்: "ஓ! அது சுலபம் . . . என் உருவத்தை தான் அதில் பார்க்கும்போது!"

வாழ்க்கைப் பிரச்சனைகள் உங்களை அதிகமாகத் தாக்குவதாக நீங்கள் உணர்ந்தால், கடவுள் உங்கள்மீது தான் வைத்தக் கண்ணை எடுக்கவில்லை என்பதையும், அவரது பிம்பம் உங்களிடம் தெரியும்வரை அவர் தனது கண்களை அகற்ற மாட்டார் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனின் உள்ளும் ஒரு தீர்க்கதரிசி

https://telegram.me/aedahamlibrary

உறங்கிக் கொண்டிருக்கிறான். கடவுள் மனிதனாக மாறியதற்குக் காரணம், மனிதன் மீண்டும் கடவுளாக ஆக வேண்டும் என்பதற்காகத்தான். வாழ்க்கை என்பது உங்களை எரித்துக் கொண்டிருக்கும் ஓர் உலை அல்ல. ஜொலிக்கும் வெள்ளியாக உங்களை மாற்றிக் கொண்டிருக்கும் ஓர் உலை.

https://telegram.me/aedahamlibrary

• • •

உங்களுக்கு உன்னதமாகப்படும் ஓர் உறவு

உங்கள் வாழ்க்கையின் இக்கட்டத்தில் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக உணர்ந்தால், அதற்குக் காரணம் உங்கள் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும் சிறப்பாக இருக்கிறது என்பதால் அல்ல. நீங்கள் உன்னதமானதாகக் கருதும் ஓர் உறவு செவ்வனே சென்று கொண்டிருக்கிறது என்பதால்தான்.

உறவுகள் விதைகளைப் போல, அவை பேணி வளர்க்கப்பட வேண்டும். எதிர்பார்ப்புகள் களைகளைப் போல. அவை தானாகவே வளர்கின்றன. ஓர் உறவை வளர்க்க, தேவையான முதலீடுகள் செய்யப்பட்டுவிட்டால், அந்த உறவில் எதிர்பார்க்கப்படும் களைகளைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளலாம். ஓர் உறவு அலட்சியப்படுத்தப்படும்போது, அதிலிருக்கும் எதிர்பார்ப்புகள், அந்த உறவின் வேர்களையே ஆட்டம் காணச் செய்துவிடுகின்றன. வளர்ச்சியுறாது நின்றுவிட்ட உறவுகளில் எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொள்வதுதான் நமது பிரச்சனை.

நாம் சேமிப்பு வங்கிக் கணக்கை இதற்கு உருவகமாக எடுத்துக் கொள்ளலாம். அக்கணக்கில் தொடர்ந்து பணம் போடப்படும்போது அதன் இருப்பு உயர்கிறது. நீங்கள் தேவையானபோது அதிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அது ஒருபோதும் அதில் போடப்பட்டவற்றைவிட அதிகமாக இருக்க முடியாது. அதேபோலத்தான் உறவுகளிலும். நாம் அவ்வுறவில் போட்டுள்ள அளவிற்கே அதிலிருந்து எடுத்துக் கொள்ள முடியும்.

https://telegram.me/aedahamlibrary

ஓர் உறவில் உணர்வுரீதியான இருப்பு அதிகமாக இருக்கும்போது, நம் தவறுகள் பிறரால் பொறுத்துக் கொள்ளப்படுகின்றன. தகவல் பரிமாற்றம் போதுமானதாக இல்லாத சமயங்களில்கூடப் பொருள் புரிந்து கொள்ளப்படுகின்றது. உங்களது செயல்கள் போதுமானவையாக இல்லாத பட்சத்திலும்கூட, உங்களது நோக்கம் பாராட்டப்படுகிறது. மொத்தத்தில் அந்த உறவு நன்றாக இருக்கும்; நீங்கள் நல்லவர் என்று கருதப்படுவதுதான் அதற்குக் காரணம். நீங்கள் நல்லவர் என்று கருதப்படுவதற்கான காரணம், நீங்கள் அந்த உறவில் உணர்வு இருப்புகளை வளர்க்கத் தேவையான முதலீடுகளை ஏற்கனவே இட்டு வைத்திருப்பதுதான்.

ஆனால் சில உறவுகளை நாம் பேணிக் காக்காமல் விட்டுவிடுகிறோம். அது நிலைத்து நிற்கும் என்று நாமாகவே அனுமானித்துக் கொள்கிறோம். அதை வளர்க்க எவ்வித முயற்சிகளையும் நாம் மேற்கொள்வதில்லை. எதிர்பார்ப்புகள் வளர்ந்து கொண்டே போகும்போது, அவற்றை வளர்ப்பதற்குத் தேவையான முதலீடுகள் தொடர்ந்து இடப்படுவதில்லை. உணர்வு இருப்புகள் முழுவதும் தீர்ந்துவிடுகின்றன. அப்படிப்பட்ட ஒரு சூழலில், நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் உங்களைக் குற்றவாளியாகக் காட்டும்; உங்களது ஒவ்வொரு செய்கையும் எடைபோட்டுப் பார்க்கப்படும். வார்த்தை யுத்தங்களும், ஓங்கி அறையப்படும் கதவொலிகளும் அடிக்கடி நிகழும். உங்களது செய்கைகள் போற்றப்படாது; உங்களது நோக்கங்கள் மதிக்கப்படாது. அத்தகைய ஓர் உறவு, கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ள பூமியின்மீது நடப்பது போன்றது. அவை எந்நேரமும் வெடிக்கலாம். எத்தனை முறை வேண்டுமானாலும் வெடிக்கலாம்.

இதன் தீர்வு, நினைப்பதைக் காட்டிலும் எளிது. முதலீடுகளைப் போட வேண்டும். மேலும் மேலும் முதலீடுகளைப் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும். நன்றாகப் போய்க் கொண்டிருக்கும் அனைத்துவிதமான உறவுகளிலும் முதலீடுகளைத் திரும்பப் பெறுதல் தவிர்க்க இயலாதது. ஆனால் போதுமான முதலீடுகளை எப்போது வேண்டுமானாலும் நம்மால் அவற்றில் போட்டுக் கொள்ள முடியும். நீங்கள் உங்கள் நேரத்தை எதில் முதலீடு செய்கிறீர்களோ அது வளரும். தரமான நேரத்தை முதலீடு செய்வதன்மூலம் உறவுகள் பேணி வளர்க்கப்பட வேண்டும். அடுத்தவரைப் புரிந்து கொள்ளவும், காது கொடுத்துக் கவனமாகக் கேட்கவும் நேரத்தைச் செலவிடுங்கள். புரிந்து

https://telegram.me/aedahamlibrary

கொள்ளப்படுவதற்காக, எவ்வளவு முடியுமோ அவ்வளவு அடிக்கடிப் பேசுங்கள். கொடுக்கத் தயாராக இருங்கள். அதே சமயம், கண்ணியத்துடன் பெற்றுக் கொள்ளவும் தயாராக இருங்கள். பெறுதல் என்பது கொடுப்பவரை மதிக்கும் செயலின் வெளிப்பாடு. அதுவும் ஒரு பெரிய முதலீடுதான். முதலீட்டிற்கு மேல் முதலீடாக, ஒரு சிறந்த உறவை வளர்த்தெடுங்கள். அதன் மூலம் வாழ்வில் மகிழ்ச்சியை அறுவடை செய்யுங்கள்.

கடவுள்களுக்குக்கூட உறவுச் சிக்கல்கள் இருந்ததாகப் புராணங்கள் தெரிவிக்கின்றன. கடவுளை நெருங்க இது ஓர் அருமையான வாய்ப்பு.

https://telegram.me/aedahamlibrary

• • •

நமது குழந்தைகளைப் பொறுத்தவரை
நாம்தான்,
தங்கள் வாழ்நாளில் அவர்கள்
வாசிக்கப் போகும் ஒரே குரான்;
பார்க்கப் போகும் ஒரே வேதம்;
அனுபவிக்கப் போகும் ஒரே பைபிள்;
பின்பற்றப் போகும் ஒரே புத்த தர்மம்.

என் வாழ்க்கையும் உங்கள் வாழ்க்கையும்,
ஒன்று, ஓர் உதாரணமாக விளங்கலாம் அல்லது
ஓர் எச்சரிக்கையாக அமையலாம்.

அது ஒரு மலைக்க வைக்கும் பொறுப்பு
என்பதை நான் அறிவேன்.
ஆனால் அவர்களுக்கு முன்பு நீங்கள் ஏன்
இக்கிரகத்திற்கு வந்தீர்கள் என்பதை
வேறு எப்படி உங்களால் விளக்க முடியும்?

https://telegram.me/aedahamlibrary

• • •

உங்கள் வாழ்வில் உங்களை வந்தடைந்துள்ள அனைத்தையும்விட நீங்கள்தான் முக்கியமானவர்

தன் மனைவியின் பிறந்த நாளுக்காக ஒரு கணவன் அவளுக்கு ஒரு காரைப் பரிசளித்தான். முதலில் காரின் சாவியையும், பின்னர், அவளது ஒட்டுனர் உரிமம் உட்பட, தேவையான ஆவணங்கள் அடங்கிய ஒரு சிறு பையையும் அவளிடம் கொடுத்துவிட்டு, அவளை ஆரத் தழுவினான். பின் அவளிடம், குழந்தைகளைத் தான் பார்த்துக் கொள்வதாகவும், அவள் விரும்பினால் நீண்ட தூரம் காரை ஓட்டிச் சென்று வரலாம் என்றும் கூறினான். அவள் ஒரு முத்தத்தால் அவனுக்கு நன்றி தெரிவித்துவிட்டுத் தன் புதிய காரை ஒட்டிச் சென்றாள். ஒரு கிலோமீட்டர் தூரம் செல்வதற்கு உள்ளாகவே, சாலையை இரண்டாக வகுக்கும் நடுப்பகுதியில் காரை மோதிவிட்டாள். அவளுக்குக் காயம் ஏதும் ஏற்படாவிட்டாலும் கார் ஒடுக்காகிவிட்டது. குற்ற உணர்வு அவளைப் பற்றிக் கொண்டது. "அவரிடம் என்ன சொல்வது? அவர் இதை எப்படி எடுத்துக் கொள்வார்?" போன்ற கவலைகள் அவளை மொய்த்தன. விபத்துப் பகுதிக்குக் காவல்துறை விரைந்து வந்து சேர்ந்தது. காவலர், "நான் உங்கள் ஓட்டுனர் உரிமத்தை பார்க்கலாமா?" என்று கேட்டார். நடுங்கும் கைகளுடன் தன் கணவர் கொடுத்த சிறு பையை அவள் திறந்தாள். கண்களில் கண்ணிர் தாரைதாரையாக ஓடிக் கொண்டிருக்க, ஓட்டுனர் உரிமத்தை அவள் எடுத்தாள். அதன் மீது அவளது கணவரின் கையெழுத்தில் ஒரு துண்டுக் காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. அதில், "என் அன்பே, ஒருவேளை நீ ஏதாவது விபத்தில் சிக்கிக் கொள்ள நேர்ந்தால், இதை நினைவில் வைத்துக்கொள்

https://telegram.me/aedahamlibrary

- நான் நேசிப்பது உன்னைத்தான்; காரை அல்ல - அன்புடன்!" என்று எழுதப்பட்டிருந்தது.

பொருட்களை நேசிக்க வேண்டும், மக்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றில்லாமல், மக்களை நேசிக்க வேண்டும், பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் என்று புரிந்து வைத்திருப்பவர்கள் பாக்கியசாலிகள்.

காரில் ஏற்படும் ஒரு கீறல் நம் இரத்தக் கொதிப்பை உயர்த்துகிறது. ஆனால், பிறர் இதயத்தில் நாம் ஏற்படுத்தும் கீறல்கள் பற்றி நாம் கவலைப்படுவதில்லை. விலையுயர்ந்த கலைப் பொருள் ஒன்றை வேண்டுமென்றே கீழே போட்டு உடைத்துவிட்டு, "பதினெட்டு வருடங்களாக இது எனக்குப் பயங்கர மன இறுக்கத்தைக் கொடுத்து வந்துள்ளது... இது விழுந்துவிடுமோ, உடைந்துவிடுமோ என்று பயந்து பயந்து வாழ வேண்டியிருந்தது... யார் உண்மையில் எஜமான் என்று காட்டுவதற்கும் மன நிம்மதியைப் பெறுவதற்குமான வேளை வந்துவிட்டது என்று நான் நினைத்தேன்." என்று கூறிய ஒரு மனிதரை நான் அறிவேன். தன் மெர்சிடிஸ் பென்ஸ் கார் ஒரு விபத்தில் சிக்கி உடைந்து நெளிந்துவிட்டது என்பதற்காக ஒரு விருந்து வைத்த இன்னொரு நபரையும் எனக்குத் தெரியும். தான் அப்படிச் செய்ததற்கான காரணத்தையும் அவர் விளக்கினார்: "கார் முற்றிலுமாக நாசமாகிவிட்டது என்றாலும், காரின் உள்ளே இருந்த எனக்கு ஒன்றும் ஆகவில்லை. நான் இப்போது நன்றாக இருப்பதால் இன்னொரு காரை என்னால் வாங்கிக் கொள்ள முடியும். ஆனால் காருக்கு எவ்விதச் சேதமும் ஆகாமல் இருந்து, நான் இறந்து போயிருந்தால் எவ்வித அர்த்தமும் இருந்திருக்காது."

நமது வாழ்க்கை 60 ரூபாய் பொம்மைக் காரில் துவங்கியது. அது உடைந்தபோது நாம் அழுதோம். பின் 2,000 ரூபாய் மதிப்புள்ள ரிமோட் கன்ட்ரோல் காருக்கு நாம் உயர்ந்தோம். அது நாசமானபோதும் நாம் அழுதோம். பின் நமக்கு 20,000 ரூபாய் மதிப்புள்ள, பேட்டரியில் இயங்கும் கார் பரிசாகக் கிடைத்தது. அது தன் இயக்கத்தை நிறுத்தியதும் நாம் மனமுடைந்தோம். பின் 4 இலட்சம் மதிப்புள்ள கார், 22 இலட்சம் மதிப்புள்ள பெரிய கார், அதன்பின் 86 இலட்சம் மதிப்புள்ள சொகுசுக் கார் என்று ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. ஒவ்வொரு முறையும் இந்த இயந்திரங்களில் ஒரு கீறல் விழுந்தபோதும், அவை லேசாக நெளிந்தபோதும், நமது இரத்தக் கொதிப்பு வானளாவ உயர்ந்தது.

https://telegram.me/aedahamlibrary

கவலை பெருக்கெடுத்து ஓடியது. மொத்தத்தில் நமது பொம்மைகள் வளர்ந்த அளவு நாம் வளரவில்லை. நாம் எவற்றைக் குறித்து அழுகிறோமோ, அவை மாறியுள்ளன. ஆனால் நம் அழுகை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இப்போது நம் அழுகை சற்று நளினமாய் மாறியிருக்கிறது, அவ்வளவுதான். அதற்குப் பல புதிய பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன: கோபம், ஏமாற்றம், வெறுப்பு, மன இறுக்கம், பதற்றம், இன்னும் என்னவெல்லாமோ.

நமக்கு மகிழ்ச்சியூட்டத்தான் பொம்மைகள் இருக்கின்றன. பொம்மைகளுக்கு ஒரே ஒரு நோக்கம்தான் உண்டு. நமக்கு உபயோகமாக இருப்பதுதான் அது உங்களது கடற்கரையோர வீட்டிலிருந்து ஆடம்பரக் கார்வரை, அதிநவீனத் தொழில்நுட்பக் கருவிகள்வரை எல்லாமே உங்கள் வாழ்க்கையை இன்னும் எளிதாக்குவதற்காக மட்டுமே உள்ளன. நீங்கள் சொந்தம் கொண்டாடும் அனைத்துப் பொருட்களையும்விட நீங்கள்தான் மேலானவர். உங்களின் உடமைகள் அனைத்தையும்விட நீங்கள்தான் மதிப்பானவர். வாழ்வில் உங்களை வந்தடைந்துள்ள அனைத்துப் பொருட்களையும் விட நீங்கள்தான் முக்கியமானவர்.

பொம்மை வெறும் சடப் பொருள். பொம்மைகளை வாங்குங்கள். அவற்றை மேலும் மேலும் வாங்கிக் குவியுங்கள். ஆனால் அவற்றிற்கு அளிக்க வேண்டிய சரியான இடத்தை மட்டும் அவற்றிற்கு வழங்குங்கள். உங்களுக்கு உபயோகமாக இருக்க, உங்கள் வாழ்க்கையை சொகுசானதாக ஆக்கிக் கொள்ள, உங்களை மகிழ்விக்க மட்டுமே அவை இருக்கின்றன. உங்களது பொம்மைகள் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானவையாகப்பட்டாலும், அவற்றிற்காக உங்களது விலைமதிப்பற்ற இன்னொரு துளிக் கண்ணீரைச் சிந்தி வீணடிக்காதீர்கள். எல்லாவற்றையும் விட மேலானவர் நீங்கள்தானே?

https://telegram.me/aedahamlibrary

"நம்மால் முடியாது" என்பதல்ல உண்மை,
"நாம் செய்வதில்லை" என்பதுதான் உண்மை.

நம்மிடம் எவ்வளவு இருக்கிறது
என்பது முக்கியமல்ல;
நம்மிடம் இருப்பதைக் கொண்டு நாம்
என்ன செய்கிறோம் என்பதுதான் முக்கியம்.

நம்மிடம் இருப்பவற்றை நம்மால்
அவ்வளவாக மாற்ற முடியாதிருக்கலாம்.
ஆனால் நம்மிடம் இருப்பவற்றை உபயோகிக்கும்
விதத்தை நிச்சயமாக நம்மால் மாற்ற இயலும்.

செம்மையாக உபயோகித்தால்,
ஒரு சிப்பாய்கூட ராணியாக உருமாறும்.

https://telegram.me/aedahamlibrary

• • •

முக்கியமான சில விஷயங்களும், அற்பமான பல விஷயங்களும்

1897இல் இத்தாலியப் பொருளாதார நிபுணரான வில்ஃபெடரோ பேரட்டோ 80/20 என்ற கோட்பாட்டைக் கண்டுபிடித்தார். இன்று அது பேரட்டோ கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது. 20 சதவீத உள்ளீடுகளில் இருந்துதான் 80 சதவீத வெளியீடுகள் கிடைக்கின்றன. 20 சதவீதக் காரணங்களில் இருந்துதான் 80 சதவீதக் காரியங்கள் நிகழ்கின்றன. 20 சதவீத முயற்சிகளில் இருந்துதான் 80 சதவீத வினைவுகள் ஏற்படுகின்றன என்பதை அவர் கண்டுபிடித்தார். ஜோஸப் ஜீரன், 20 சதவீதத்தை 'முக்கியமான சில' என்றும், 80 சதவீதத்தை 'அற்பமான பல' என்றும் குறிப்பிட்டார். சுருக்கெழுத்தைக் கண்டுபிடித்த சர் ஐசக் பிட்மேன், நம்முடைய மொத்த உரையாடல்களில் பெரும்பாலானவை வெறும் 700 வார்த்தைகளில் அடங்கிவிடுகின்றன என்பதைக் கண்டுபிடித்தார். இவ்வார்த்தைகள் சாதாரண உரையாடல்களில் 80 சதவீத இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன என்பதையும் அவர் கண்டறிந்தார்.

மாணவர்கள் தாங்கள் படிக்க வேண்டிய பாடத்தில் 80 சதவீதத்தை 20 சதவீத நேரத்தில் படித்து முடித்துவிடுகின்றனர். மொத்தப் பாடத்திலுள்ள 20 சதவீதப் பகுதிகளில் இருந்துதான் 80 சதவீதக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் இலாபம், வளர்ச்சி, மற்றும் திருப்தியில் 80 சதவீதத்தை, 20 சதவீத வாடிக்கையாளர்கள்தான் அளிக்கின்றனர். ஒரு நிறுவனத்தின் விற்பனையில் 80 சதவீத இடத்தை அதன் 20 சதவீதப் பொருட்கள் மற்றும் சேவைகளே பிடித்துக் கொள்கின்றன. 20 சதவீத ஊழியர்களே ஒரு நிறுவனத்தின் 80 சதவீத

https://telegram.me/aedahamlibrary

உற்பத்தியை உருவாக்குகின்றனர். 20 சதவீத மக்கள் கருத்துதான் சமுதாயத்தை வரையறுக்கின்றது. 20 சதவீத மக்கள்தான் ஒரு நாட்டின் பொருளாதாரத் தலைவிதியை நிர்ணயம் செய்கின்றனர்.

உங்களிடம் 20 விற்பனையாளர்கள் இருந்தால், அதில் நான்கு பேர் சிறப்பாக இருப்பார்கள், ஆறு பேர் சுமாராக இருப்பார்கள், மீதிப் பத்துப் பேர் வெறுமனே சுற்றி வந்து கொண்டிருப்பார்கள். நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை எட்டாத விற்பனையாளார்களுடன் விற்பனை மேலாளர்கள் தங்கள் நேரத்தை வீணடிக்கும் தவறைச் செய்து கொண்டிருக்கின்றனர். அத்தகைய விற்பனையாளர்களின் திறனை உயர்த்த அவர்கள் முயலும்போது, நிறுவனத்தின் சிறந்த விற்பனையாளர்கள் கவனிக்கப்படாமல் விட்டுவிடப்படுகின்றனர். அற்பமான பலருக்காக, மிகச் சிறந்த விற்பனையாளர்களை அசட்டை செய்வது அவர்களை இழப்பதற்கான எளிய வழி. வலிமை மிகுந்தவர்களிடம் கவனம் செலுத்தி அவர்களுக்கு மேலும் வலுவூட்டுவதில் கவனத்தைச் செலுத்துங்கள்.

குறைவானதைக் கொண்டு அதிகமானதைச் சாதிப்பதன் இரகசியம் 80/20 சிந்தனைதான். சராசரி முயற்சியைத் தூக்கிவிடுவதற்குப் பதிலாக, அசாதாரணத் திறனுள்ளவர்களைக் கொண்டாடுங்கள். பல விஷயங்களில் நல்ல செயற்திறனைத் தேடுவதை விட்டுவிட்டு, ஒருசிலவற்றில் உன்னதத்தை அடைய முயலுங்கள்.

எல்லா இடங்களிலும் கழிவுகள் குவிந்து கிடக்கின்றன. உங்கள் வாழ்க்கையில் நிகழ்பவற்றில் 80 சதவீதம் மிகக் குறைந்த பலனையே அளிக்கின்றன. வெறும் 20 சதவீத விளைவுகளை மட்டும் உருவாக்கும் விஷயங்களில் 80 சதவீதக் கவனம் செலுத்தப்படுகிறது. உங்கள் சிந்தனையை ஒட்டுமொத்தமாக மாற்றி, உங்கள் கண்ணோட்டத்தைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். செயற்திறனற்ற, அற்பமான பல விஷயங்களுக்குப் பதில், முக்கியமான சில விஷயங்களுக்கு உங்களது வளங்களைத் திருப்புங்கள். செயற்திறன் என்பது 80 சதவீதத்தை நீங்கள் எப்படி நிர்வகிக்கிறீர்கள் என்பதில் இல்லை. 20 சதவீதத்தை நீங்கள் எவ்வாறு நிர்வகித்து, கட்டுப்படுத்தி உபயோகிக்கிறீர்கள் என்பதில் இருக்கிறது. நீங்கள் யார் என்பதையும், வாழ்க்கையில் நீங்கள் எந்த நிலையை அடையப் போகிறீர்கள் என்பதையும் தீர்மானிக்கப்போவது உங்களது 20 சதவீத நேரம்தான்.

20 சதவீதத்தில் கவனம் செலுத்துங்கள். உங்கள் வாழ்க்கையில் உள்ள

https://telegram.me/aedahamlibrary

80 சதவீத விஷயங்கள் அனைத்தும் தானாகவே கவனித்துக் கொள்ளப்படும்.

https://telegram.me/aedahamlibrary

• • •

வழிகாட்டப்படுவதற்கான தேவையைவிடவும் மதிக்கப்படுவதற்கான தேவை அதிகமாக உள்ளது

தான் ஒரு பொருளைச் சொந்தம் கொண்டாடுவதற்கு முன்பாகவே, அதைப் பகிர்ந்து கொள்ள அவள் கேட்டுக் கொள்ளப்பட்டாள். அவளுக்கு ஐந்து வயதுகூட எட்டியிராதபோது, அவளது இரண்டு வயது தம்பிக்காகத் தியாகம் செய்ய அவன் வேண்டிக் கொள்ளப்பட்டாள். அவளே ஒரு சிறு குழந்தை. ஆனால் அவளது பெற்றோர் பொறுப்பான ஒரு மூத்த சகோதரியின் பாத்திரத்தை அவள் வகிக்க வேண்டும் என்று அவளிடம் எதிர்பார்த்தனர். முப்பது வருடங்களுக்குப் பிறகு, இப்போது அவளுக்கென்று ஒரு குடும்பமும், அவளது தம்பிக்கென்று ஒரு குடும்பமும் உள்ளது. இப்போதும் தன் தம்பிக்குத் தானே பொறுப்பு என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள். இன்றும் அறிவுரைகளைக் கூறி வருகிறாள். அவளது தம்பியின் திருமண வாழ்வில் சச்சரவுகள் தோன்றும்போது அவனது வாழ்வில் குறுக்கிடுகிறாள். குழந்தைக்கு என்ன உணவு கொடுக்க வேண்டும், அதை எப்படி வளர்க்க வேண்டும் என்று தம்பியின் மனைவிக்கு அறிவுரை கூறுகிறாள். இன்னும் அவள் தொடர்ந்து தியாகங்களைச் செய்து வருகிறாள். பதிலுக்கு அவளுக்கு என்ன கிடைக்கிறது?

மன வேதனைகள், தூக்கமற்ற இரவுகள், அலட்சியமாக நடத்தப்படுவது குறித்து வடிக்கும் கண்ணிர் அருவிகள்

https://telegram.me/aedahamlibrary

போன்றவைதான் பரிசாகக் கிடைக்கின்றன. ஏன்? அவளது தம்பி தன் சொந்த முடிவுகளை எடுக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டான். அவன் எடுத்த முடிவுகளில் சில தவறாகப் போனாலும்கூட, அத்தகையத் தவறுகளைச் செய்யும் உரிமை தனக்கு இருப்பதாக அவன் உணர்கிறான். அதுதான் வாழ்க்கைப் பாடம் என்றும் அவன் நினைக்கிறான். தங்களுடைய திருமண வாழ்வில் தேவையற்ற இடையூறாக அவளைக் கருதுகிறாள் அவளது தம்பியின் மனைவி தான் விரும்பும் வழியில் தன் குழந்தைகளை வளர்க்கத் தனக்கு சுதந்திரம் இருக்கிறதென்றும் அவள் நம்பினாள். தன்னைவிட வயதில் மூத்த ஒரே காரணத்திற்காகத் தங்கள் வாழ்வில் பிறர் தலையிடுவதை அவன் வெறுத்தாள்.

தனது முதல் பேச்சிலிருந்து, முதன்முதலாக எழுதிய வார்த்தைவரை, முதன்முதலாக எடுத்துவைத்த அடிவரை, மகனின் வாழ்வில் தந்தை முக்கியமான ஒரு பங்கு வகித்தார். மகனைப் பொறுத்தவரை, தந்தை ஒரு சூப்பர்மேன், ஒரு கதாநாயகன், தான் பின்பற்ற விரும்பும் ஒரு மாதிரி மனிதன். தன் மகனின் வேலைத் தேர்ந்தெடுப்புவரை தந்தைதான் ஆலோசனை வழங்கினார். மகன், முதல் தலைமுறைத் தொழில்முனைவராக ஆனபோதும் தந்தைதான் அவனுக்கு வழிகாட்டியாக இருந்தார். இன்று மகன் ஒரு புகழ்பெற்றத் தொழிலதிபர். இன்றும் வேலையில் அன்றைய தினம் என்ன நடந்தது என்று அறிய அவனது தந்தை மாலையில் காத்திருக்கிறார். மகனுக்கோ தலை சுற்றுகிறது. தன் தந்தை தனக்கு இன்னும் அதிக சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று அவன் உணர்கிறான். மகன் முன்புபோல் தன்மீது அக்கறை செலுத்தாததால், தந்தைக்கு மனச் சோர்வு ஏற்படுகிறது. தான் இனியும் மகனின் வாழ்வில் தேவையில்லை என்று தந்தை உணர்கிறார். இதன் விளைவு அவரது உடல்நலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவர் வேகமாக முதிர்வடைகிறார்.

நீங்கள் எப்போதும் ஒரு சகோதரியாக இருக்கலாம். ஆனால், தொடர்ந்து ஒரு சகோதரியின் பாத்திரத்தை வகித்துக் கொண்டிருக்க முடியாது. பெற்றோர் என்ற முறையில் நீங்கள் எப்போதும் நேசிக்கப்படுவீர்கள். ஆனால் ஒரு பெற்றோரின் பாத்திரமாக என்றும் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. ஒரு கட்டத்திற்குப் பிறகு, 'நான் உன்னைவிடப் பெரியவன்,' என்ற மனப்போக்கை எல்லோராலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

https://telegram.me/aedahamlibrary

ஒரு மூன்று வயதுக் குழந்தை, ஒரு குறிப்பிட்ட வழியில் தான் மதிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும். அதை அப்படி மதிப்பதும் அவசியம்தான். தான் விரும்பும் ஆடையை அணிய மறுக்கப்படும் குழந்தை, தான் மதிக்கப்படவில்லை என்றுதான் அதை எடுத்துக் கொள்ளும் உணவகத்தில் உணவுப் பட்டியலைத் தானே படித்து, தனக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் பத்து வயதில் மகன் விரும்புவான். அவனைப் பொறுத்தவரை, அது அவனது கருத்தை மதிப்பதாகும். பருவ வயதில், அவள் தன் நண்பர் குழாமைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ள விரும்புவாள். அவளது தேர்ந்தெடுப்பைப் பெற்றோர் ஏற்றுக் கொள்வது என்பது அவளைப் பொறுத்தவரை தன்னை மதிப்பதாகும். அவன் உங்களுடன் ஒருசில வருடங்கள் வேலை செய்துவிட்டதால், தானாகவே சில முடிவுகளை எடுக்க விரும்புவான். அதை ஒதுக்கித் தள்ளாமல் இருக்கும் உங்கள் செயலை, தன்னை மதிக்கும் ஒன்றாக அவன் கருதுவான். ஒவ்வொரு வயதும், வாழ்வின் ஒவ்வொரு காலகட்டமும், அதோடு தொடர்புடைய சில மதிப்புகளைக் கொண்டிருக்கும். அதை மதிப்பது அவசியம்.

நம் நோக்கங்கள் மேன்மையானவையாக இருந்தாலும்கூட, மற்றவர்களை வழிநடத்த நாம் செய்யும் முயற்சி, குறிப்பாக, அது கேட்கப்படாத நிலையில் வழங்கப்படும்போது, அவர்களை நாம் மதிப்பதில்லை என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. வழிகாட்டப்படுவதற்கான தேவையைவிட, மதிக்கப்படுவதற்கான தேவை மேலோங்கி நிற்கிறது.

அடுத்தவர்கள் தாங்கள் மதிக்கப்படுவதாக உணரும்வண்ணம் நடந்து கொள்ளுங்கள். அது உங்களது விருப்பத்தேர்வாக இருக்கட்டும். அவர்கள் உங்களது வழிகாட்டுதலை ஏற்றுக் கொள்வார்கள் - அது அவர்களது விருப்பத்தேர்வாக இருக்கட்டும்.

https://telegram.me/aedahamlibrary

• • •

அச்சமின்றி வாழ்வதுதான் வாழ்க்கை.

மறைப்பதற்கு எதுவும் இல்லாமல் இருக்கும்போது
நீங்கள் எதையும் தவிர்க்க விரும்ப மாட்டீர்கள்.

உண்மையான சுதந்திரத்தை வெளிப்படையான
வாழ்க்கை நடத்துவதில்தான் காண முடியும்.

ஒருவன் தனக்குத் தானே
அளித்துக் கொள்ளக்கூடிய
நற்சான்றிதழ்களிலேயே தலைசிறந்தது,
இப்படிப் பிரகடனம் செய்வதுதான்:
"நான் ஒரு திறந்த புத்தகம்."

https://telegram.me/aedahamlibrary

மரணத்தை வாழ்க்கை தள்ளிப்போடுவதில்லை, நாமும் நம் வாழ்வைத் தள்ளிப்போட வேண்டாம்

நிர்வாகத்தில் எது மனஉளைச்சலை ஏற்படுத்துகிறது? ஒரு விஷயம் நடந்து முடிந்திருக்க வேண்டிய கால கட்டத்திற்கும், உண்மையில் நடந்து முடிந்த காலகட்டத்திற்கும் இடையே உள்ள இடைவெளிதான் அதை ஏற்படுத்துகிறது. தொழில் நுணுக்க இடைவெளி என்றால் என்ன? இன்னும் அமல்படுத்தப்படாத, ஆனால், அத்தொழிலுக்குள் ஏற்கனவே வந்துவிட்ட ஒரு மேம்பாடான செயல்முறைதான் அது.

ஒரு காரியம் கண்டிப்பாகச் செய்து முடிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கும்பட்சத்தில், அதை இன்றே செய்து முடித்து மன இறுக்கத்தைக் குறைத்தால் என்ன ? ஒரு விஷயம் இப்போது செய்யப்படுவதைக்காட்டிலும் இன்னும் சிறப்பாகச் செய்யப்படுவதற்கான ஒரு வழி இருக்கும்பட்சத்தில், பிறர் அதை மேற்கொண்டு, அதன் அனுகூலத்தைப் பெறுவதற்குமுன், நீங்கள் ஏன் அதைச் செய்ய முயற்சிக்கக்கடிடாது? ஒரு விஷயம் மோசமானது என்று அறிந்தவுடனேயே அதைக் கைவிட்டுவிட்டால் என்ன? புத்தாண்டு வரும்வரை ஏன் காத்திருக்க வேண்டும்? அல்லது இன்னொரு விசேஷ நாளுக்காக ஏன் காத்திருக்க வேண்டும்?

உலகத்தரமான விஷயங்களை வழங்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியானால் இக்கணத்திலிருந்து

https://telegram.me/aedahamlibrary

உலகத்தரத்திற்குக் குறைவான விஷயங்களைச் செய்வதை நிறுத்துங்கள். நீங்கள் முன்பு எப்போதோ தவறு செய்திருந்து, அதை இப்போதுதான் அறிய வந்துள்ளீர்கள் என்றால், உடனடியாக மன்னிப்பைக் கோருங்கள். இல்லையென்றால், குற்ற உணர்வால் நீங்கள் அவதிப்பட வேண்டியிருக்கும். திடீரென்று ஓர் அற்புதமான கருத்துத் தோன்றியுள்ளதா? அதை வேறு யாரோ செயல்படுத்தும் முன்பு, நீங்கள் உடனடியாக அதைச் செயல்படுத்துங்கள்.

புத்திசாலியும் முட்டாளும் ஒரே விஷயத்தைத்தான் செய்கின்றனர். ஆனால், அதை வெவ்வேறு காலகட்டங்களில் செய்கின்றனர். புத்திசாலிகள் உடனடியாகச் செய்கின்றனர். முட்டாள்கள் கடைசியாகச் செய்கின்றனர். நாளைய தினம்தான் இன்றைய தினம் என்பதுபோல வாழுங்கள்.

உடல் ஆரோக்கியம் மற்றும் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். ஆனால் அத்திசை நோக்கி அடியெடுத்து வைப்பதை நாம் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறோம். நிதி மற்றும் முதலீடு குறித்தத் திட்டமிடுதல்களின் முக்கியத்துவம் குறித்து நாம் அறிவோம். அத்திசை நோக்கிக் காலெடித்து வைப்பதை, தள்ளிப்போடுதல் தடை செய்கிறது. தேர்வுகளின் முக்கியத்துவம் குறித்து நாம் நன்கு அறிவோம். ஆனாலும் அது ஒரு நெருக்கடியாக உருவெடுக்கும்வரை அவற்றிற்குத் தேவையான பயிற்சிகளை நாம் துவக்க மாட்டோம். நிறைவேற்றப்பட வேண்டிய விஷயங்கள் என்ற தலைப்பிட்டக் கோப்பில் எல்லாக் காகிதங்களையும் தூக்கிப் போடுவது நமக்கு மிக எளிதான காரியமாக இருக்கிறது.

வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் மனச் சோர்வுகளும், மன இறுக்கங்களும், ஒரு செயல் செய்து முடிக்கப்பட்டிருக்க வேண்டியக் காலகட்டத்திற்கும், உண்மையில் செய்து முடிக்கப்பட்டக் காலகட்டத்திற்கும் இடையே உள்ள இடைவெளியினால் உண்டாகும் மனரீதியான அழுத்தங்களின் தொகுப்புதான். ஒருவரது ஆயுளைக் குறைக்க, தள்ளிப்போடுவதுதான் நிச்சயமான வழி. சராசரிக்கும் கீழ்நிலையில் செயல்படுவோரின் கையொப்பம்தான் தள்ளிப்போடுதல்.

வாழ்க்கை மரணத்தைத் தள்ளிப் போடுவதில்லை. அதனால் நாமும் வாழ்க்கையைத் தள்ளிப் போடாமல் இருப்போமாக!

https://telegram.me/aedahamlibrary

'என்றேனும் ஒரு நாள்' என்று எதுவும் கிடையாது. இன்றுதான் அந்த நன்னாள். நாளைய தினம் என்னை சந்திக்கும்போது, அதனிடம் கூறிக் கொள்வேன் - நான் நேற்றே முடித்துவிட்டேனென்று!

https://telegram.me/aedahamlibrary

• • •

மனிதனின் பொறுப்பு முடியுமிடத்தில், பரம்பொருள் பொறுப்பெடுத்துக் கொள்கிறது

காத்திருத்தலுக்கும், 'ஏதோ ஒன்றிற்காக'க் காத்துக் கொண்டிருப்பதற்கும் இடையே நூலிழைதான் வித்தியாசம். அமைதியான முன்னேற்றத்திற்கும், மனஅழுத்தத்துடன்கூடிய வெற்றிக்கும் இடையே உள்ள வித்தியாசம் அதில்தான் அடங்கியுள்ளது.

விவசாயி தன் நிலத்தை உழுது, விதையும் விதைத்தாகிவிட்டது. இப்போது அவன் காத்திருக்க வேண்டும், அவ்வளவுதான். மனிதனின் பொறுப்பு முடியுமிடத்தில் பரம்பொருளின் பொறுப்பு தலைதூக்குகிறது. காத்திருத்தல் கலையை அந்த விவசாயி அறிந்திருந்தால், அவன் பொறுமையுடன் காத்திருப்பான். மாறாக, பொறுமையின்றி இருப்பானெனில், காத்திருக்கும் ஒவ்வொரு கணமும் அவனது பதற்றமும் மன அழுத்தமும் அதிகரிக்கும். "ஏன் இது நடைபெறவில்லை?" மற்றும், "ஏன் இது இன்னும் முளைவிடவில்லை?" போன்ற கேள்விகளால் அவன் மனம் அலைக்கழிக்கப்படும். விதை ஒருவழியாக முளைவிடும்போது, அவன் ஏற்கனவே வெற்றிக்காகத் தன் மன அமைதியை அடகு வைத்திருப்பான், பாதிப்பு ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

லிஃப்ட் வருவதற்கான பொத்தானை அழுத்திவிட்டீர்களா? காத்திருங்கள். அது வரும்போது வரும். ஆனால் லிஃப்டுக்காகக் காத்துக் கொண்டிருந்தால், நீங்கள் அங்கும் இங்கும் நடைபோடுவீர்கள். கண்கள்

https://telegram.me/aedahamlibrary

மேலும் கீழும் பார்க்கும் - அப்படிச் செய்தால் அது லிஃப்டை வேகப்படுத்தி, உங்களிடம் விரைவாகக் கொண்டுவந்து சேர்த்துவிடும் என்பதுபோல! சர்வரிடம் உங்களுக்கு வேண்டிய உணவு வகைகளைக் கூறியாகிவிட்டதா? காத்திருங்கள். ஆனால் சர்வருக்காகக் காத்துக் கொண்டிருப்பது அதை மோசமான அனுபவமாக்கிவிடும். எடுக்கப்பட வேண்டிய முடிவுகளை எடுத்துவிட்டீர்களா? செய்யப்பட வேண்டிய செயல்களைச் செய்துவிட்டீர்களா? மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டீர்களா? வெறுமனே காத்திருங்கள்.'இதற்காக' அல்லது 'அதற்காக'க் காத்திருக்காதீர்கள். வெறுமனே காத்திருங்கள். சாந்தமான முன்னேற்றத்திற்கான திறவுகோல் அதிலிருப்பதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். ஏதாவது ஒன்றிற்காகக் காத்துக் கொண்டிருப்பது வெற்றியைக் கொண்டுவரும். ஆனால், அது மன அழுத்தத்தோடு வரும். வெற்றியை அடைய அமைதியான வழி இருக்கும்போது, ஏன் மன அழுத்தம் ஏற்படுத்தும் வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

ஆன்மீக முன்னேற்றம் அடையத் தேவையான மிக அடிப்படையான குணநலன், தன் கடமையைச் செய்துவிட்டு வெறுமனே காத்திருப்பதுதான். ஆன்மீக அனுபவத்திற்காக, கைகளில் பிடிபடாமல் வழுக்கிக் கொண்டிருக்கும் மௌனத்திற்காகக் காத்திருப்பவர்கள், உண்மையில், காத்துக் கொண்டிருத்தல் என்ற மனப்போக்கு நோயால்தான் அதை அடைய முடியாமல் அவதிப்படுகின்றனர். நீங்கள் அனுபவத்திற்காகக் காத்திருக்கும்போது, அனுபவத்தின் சாட்சியாக மாறாமல், உங்களுக்கெதிரான சாட்சியாக மாறிவிடுகிறீர்கள். பொறுமையுடன்கூடிய காத்திருத்தல் ஊடாகத்தான் ஆன்மீக அனுபவம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.

காத்துக் கொண்டிருத்தலை விட்டொழியுங்கள். அதன் மூலம், மன அழுத்தத்துடன்கூடிய வெற்றியையும் நீங்கள் களைந்துவிடலாம். உங்கள் கடமையைச் செய்யுங்கள். உங்கள் பங்கை வழங்குங்கள். வெறுமனே காத்திருங்கள். அதுதான் அமைதியான முன்னேற்றத்திற்கான பாதை.

https://telegram.me/aedahamlibrary

அனுபவம் என்ற மாறுவேடத்தில் ஓர் ஆசிரியரை வாழ்க்கை உங்களுக்காக அனுப்பியுள்ளது

வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் புதிய அனுபவம் ஒன்வொன்றையும்விட, நமது மனப்பக்குவம் ஒருபடி குறைவாகவே உள்ளது. வாழ்க்கையின் நோக்கமே, அந்த மனப்பக்குவத்தை வழங்குவதுதான். ஆனால், ஒவ்வோர் அனுபவத்தின்போதும், நமது மனப்பக்குவத்தின் அளவு உயர்வதோடு, நாம் எதிர்கொள்ளும் சவால்களின் அளவும் உயர்ந்துவிடுகிறது. இப்படித்தான் மேல்நோக்கிய வளர்ச்சிச் சுற்று செல்கிறது.

நாம் எவ்வளவு அறிவாளியாக இருக்கிறோம் என்பதோ, நாம் வாழ்க்கையை எவ்வளவு பார்த்திருக்கிறோம் என்பதோ, நாம் செய்பவற்றில் நாம்தான் தலைசிறந்தவர்கள் என்பதோ இங்கு ஒரு பொருட்டே அல்ல. வாழ்க்கைக் களஞ்சியமாகவே நாம் இருந்தாலும்கூட, ஒரு சரிவு, வீழ்ச்சி, அல்லது தொய்வு எப்போதும் மறுமுனையில் காத்திருக்கும். வாழ்க்கையின் ஒட்டத்தை, அதன் சந்தத்தைக் குலைக்கும் குறுக்கீடுகள் எப்போதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும்.

வாழ்க்கையின் வளர்ச்சிப் பாதையில், எட்டாம் வகுப்பு வெற்றியைக் காட்டிலும் பத்தாம் வகுப்புத் தோல்வி மேலானது என்பதை நினைவில் வைத்திருங்கள். எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைய முயற்சித்து சில நூறு அடிகளில் தோல்வி அடைவது, உள்ளூர்ச் சிறு குன்றின்

https://telegram.me/aedahamlibrary

உச்சியை அடைவதைக் காட்டிலும் மேலானது. மனப்பக்குவம் அதிகமாகும்போது சவால்களும் தீவிரமாக இருக்கும். வாழ்க்கை இப்படித்தான் மனிதனைச் செதுக்குகிறது.

ஓரடி முன்னே, ஈரடி பின்னே என்ற ரீதியில் நடைபெறும் பயணமல்ல வாழ்க்கை ஒருவன் விழிப்புணர்வு இல்லாமலும், தனது அனுபவங்களில் இருந்து கற்றுக் கொள்ளாமலும் இருக்கும்போதுதான் அது நிகழ்கிறது. தனது ஒவ்வோர் அனுபவத்திலிருந்தும் கற்றுக் கொள்ள ஒருவனைத் தூண்டும் விழிப்புணர்வைப் பெற்றுள்ள ஒருவன், டிராம்போலினில் இருப்பது போன்ற நிலையை அடைகிறான். உயரே சென்று கீழே விழுகிறான், மீண்டும் உயரே செல்கிறான். ஆனால், விழுந்தபின் மேலே எழும்பும் ஒவ்வோர் எழுச்சியும் முன்பைவிட உயரமாக இருக்கும். அவனது மனப்பக்குவமும், அவன் எதிர்கொள்ளும் சவால்களும் அடுத்தக் கட்டத்திற்கு உயர்ந்துவிடும்.

உங்கள் வெற்றிக்கான காரணம் எது? "சரியான தீர்மானங்கள்." அத்தகைய சரியான தீர்மானங்களை எடுக்க உங்களுக்கு எது உதவியது? "வாழ்க்கை அனுபவங்கள்." வாழ்க்கை அனுபவத்தை எப்படிப் பெறுவது? "தவறான தீர்மானங்கள் மூலமாக."

வாழ்க்கை என்னும் டிராம்போலினில், அனுபவங்களின் ஊடாக நான் வளர்ந்து கொண்டே இருக்கிறேன். ஒவ்வோர் அனுபவமும் நான் விரும்புபவற்றை எனக்குத் தருகின்றது. அல்லது நான் விரும்புபவை எனக்கு ஏன் கிட்டவில்லை என்ற விழிப்புணர்வை எனக்குத் தருகின்றது.

அடுத்த முறை ஒரு தடங்கல் உங்கள் வாழ்க்கையின் மைய ஆதாரத்தை நிலைகுலையச் செய்யும்போது, உங்கள் மனப்பக்குவத்தின் அளவை உயர்த்த உங்களுக்கு உதவுவதற்காக, அனுபவம் என்ற மாறுவேடம் அணிந்துள்ள ஓர் ஆசிரியரை வாழ்க்கை உங்களுக்கு அனுப்பியுள்ளது என்பதை நினைவில் வைத்திருங்கள். அந்த அனுபவத்திலிருந்து மேலும் மனப்பக்குவம் பெறுவதற்கு மட்டுமல்லாமல், உங்கள் மைய ஆதாரத்தை நீங்கள் மீட்டெடுக்கவும் உங்கள் விழிப்புணர்வு உங்களுக்கு உதவும். அடுத்த சவாலுக்குத் தயாராகிக் கொள்ளுங்கள். மானுடர்களாகிய நாம், உயர்வதற்காக வீழ்கிறோம். ஒவ்வொரு முறையும் முன்பைவிட உயரே செல்கிறோம் என்பதுதான் அதிலுள்ள வரப்பிரசாதம்.

https://telegram.me/aedahamlibrary

● ● ●

உன் வாழ்க்கையும் என் வாழ்க்கையும் நம் வாழ்க்கையான பிறகு ...

ஆணும் பெண்ணும் ஒரளவு முழுமையற்றே படைக்கப்பட்டிருக்கின்றனர். அது இருவரும் ஒன்றிணைந்து ஒரு முழுமையை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால், நூற்றாண்டுகளாக இறுகிப் போய்விட்டக் கருத்துக்கள் கணவன், மனைவி என்ற வார்த்தைகளுக்குக் குறுகிய அர்த்தத்தைக் கொடுத்துள்ளன. இந்த உறவின் விசாலத்தை அவை சுருக்கிவிட்டன. கணவன், மனைவி என்ற வார்த்தைகளை உங்கள் அகராதியிலிருந்து எடுத்துவிட்டு, 'வாழ்நாள் நண்பர்கள்' என்ற வார்த்தையை அதில் இட்டு நிரப்புங்கள். பின் ஆணும் பெண்ணும் சில சமயம் அன்னை, தந்தை என்ற பாத்திரங்களையும், சில சமயம் அடம் பிடிக்கும் குழந்தையின் பாத்திரத்தையும், பின் பயிற்சி அளிப்பவர், ஆசிரியர் ஆகிய பாத்திரங்களையும் வகிப்பர். சில சமயம் கணவன் மனைவி பாத்திரங்களையும் வகிப்பர் என்பதைத் தனியாகக் கூறத் தேவையில்லை. இந்த உறவின் வரையறையை விரிவாக்கிக் கொள்ளுங்கள், திறந்த மனத்துடன் இருங்கள்.

உங்கள் கணவரையோ அல்லது மனைவியையோ வெறும் உடலாகப் பார்க்காமல், முழுமையான மனிதராகப் பார்க்கும்போது, திருமண உறவில் கண்ணியம் தலைதூக்கும். அவ்வுறவில் இருவரும் மற்றவருடைய சிந்தனை முறையை உற்றுக் கவனியுங்கள். தனிப்பட்ட மதிப்புகள், நிலைபாடுகள், மற்றும் பற்றுறுதிகள் குறித்து விவாதியுங்கள். அடுத்தவருடைய உணர்வுக்கு மதிப்பளியுங்கள். ஒருவருடைய உணர்வை மற்றவருடைய உணர்வோடு ஐக்கியப்படுத்திக்

https://telegram.me/aedahamlibrary

கொள்ளுங்கள். ஆன்மீகத் தொடர்பை வளர்த்துக் கொள்ளும் விதத்தில், அமைதியாக, சேர்ந்து உட்கார்ந்திருக்க நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள். அடுத்தவருடைய புறத்தோற்றத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்காமல், அவருடைய முழுமைக்கும் மதிப்பளியுங்கள்.

பத்தாண்டுகளில் செய்ய வேண்டியதை ஒரே ஆண்டில் செய்ய முயலாதீர்கள். ஒரு வருடத்தில் செய்ய வேண்டியதை ஒரே மாதத்தில் செய்யாதீர்கள். பெரும்பாலான தம்பதிகள், மணமான ஒருசில மாதங்களுக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் அதிகமாகத் திருப்திப்படுத்துவதற்காக எல்லாவற்றிலும் மிகையாக நடந்து கொள்வதால், அதன் பிறகு அந்த உறவில் ஜீவனே இல்லாமல் போய்விடுகிறது. உயிரற்ற ஓர் உறவில் அவர்கள் இருவரும் வெறுமனே இயங்கிக் கொண்டிருப்பார்கள். மரமாக வளர வேண்டிய ஒன்று செடியாகப் பட்டுவிடக்கூடாது. உறவுகள் நிதானமாகத் துவங்கி, நிலைத்து நிற்கட்டும்.

வாழ்க்கையிலும் சரி, நல்ல உறவுகளிலும் சரி, கடந்தகாலம் அர்த்தமற்றது. நிகழ்காலம்தான் கட்டி எழுப்பப்பட வேண்டிய செங்கற்களாகத் திகழ்கின்றன. வருங்காலம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் நீங்கள் இருவரும் சேர்ந்து பயணிக்க இருப்பது அதை நோக்கித்தான். அன்றாட அற்ப விஷயங்களைப் பற்றி மட்டுமே கலந்தாலோசிப்பது, இருவரையும் ஒருவர்மீது ஒருவர் காதல் கொள்ள மட்டும்தான் செய்யும். வருங்காலம் பற்றிப் பேசுங்கள். கனவுகள் குறித்து விவாதியுங்கள். சாதிக்க விரும்பும் இலக்குகள் குறித்து அலகங்கள், தலையீடு இல்லாத விதத்தில் அடுத்தவருடைய வளர்ச்சியில் நானும் ஒரு பங்கு வகிப்பேன் என்று உறுதி பூணுங்கள். அதுதான் காதலில் பூத்துக் குலுங்குவதற்கான வழி.

திருமணத்திற்குப் பிறகு இருவருடைய வாழ்வும் ஒன்றோடு ஒன்று ஐக்கியமாகி, அதன் பிறகு அவர்கள் இருவரும் ஒரே வாழ்வாக வாழ வேண்டும் என்ற உலகளாவியக் கருத்து உள்ளது. அதன் விளைவாக, திருமணம் என்ற பெயரில், பெரும்பாலான சமயங்களில் பெண்கள் தங்கள் கணவனின் நிழலில் வாழக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அவர்கள் அந்த உறவில் ஒட்டிக் கொண்டிருந்தாலும், விரக்தியடைந்துள்ள, சுயபச்சாதாபத்துடன் கூடிய, பலிகடாவாக ஆக்கப்பட்டுள்ள ஒரு நபராகவே உணர்கின்றனர். 'என்' வாழ்வும் 'உன்'

https://telegram.me/aedahamlibrary

வாழ்வும் நம் வாழ்வாக மலர்ந்த பிறகும், இன்னமும் 'என்' வாழ்வு "உன்' வாழ்வு என்று இருக்கிறது என்பதே உண்மை. 'நம்' வாழ்வு என்பது திருமணத்தில் இருவரது வாழ்வும் சேர்ந்து சந்திக்கும் ஓர் இடம். அந்த 'நம்' இடத்தைத் தம்பதியர் இருவரும் எப்படிப் பார்க்கின்றனர் என்பதிலும், வருடங்கள் செல்லச் செல்ல அந்த இடம் எப்படி விரிவாகிக் கொண்டே டோகிறது என்பதிலும் தான் மகிழ்ச்சி நிலைகொண்டுள்ளது. அதே சமயம், அவன் தனது வாழ்க்கையையும், அவள் தனது வாழ்க்கையையும் தொடர்ந்து கொண்டிருப்பர். அவள் 'நம்' இடத்தில் இருக்கும்போதும் சரி, 'அவள்' இடத்திற்குச் செல்லும்போதும் சரி, மீண்டும் 'நம்' இடத்திற்கு வரும்போதும் சரி, சிறப்பாகவே இயங்குவாள். அவனுக்கும் அது அப்படியே பொருந்தும். ஒருவர் மற்றவருடைய 'இடத்தை' மதிப்பது, மற்றவருடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், மற்றும் முன்னுரிமைகளை ஆராதிப்பது ஆகியவற்றை இது உறுதி செய்யும். அதைவிட முக்கியமாக, காதல் என்ற பெயரில் ஒருவரை ஒருவர் மூச்சுத் திணற வைக்காமல் இருக்க, இது மட்டுமே உதவும்.

உண்மையான திருமணம் என்பது தம்பதியர் இருவரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். திருமணம் என்பது வாழ்வின் நீட்சியாக இருக்க வேண்டும். இருவரின் வாய்ப்புகளையும் பெருக்குவதாக இருக்க வேண்டும்.

நல்ல திருமணத்தைப் பேணி வளர்க்க வேண்டும். மேன்மையான திருமணத்தைக் கட்டி எழுப்புவது ஒரு கலை. அப்படிப்பட்ட ஒரு கலைஞனாக உருவெடுங்கள்.

https://telegram.me/aedahamlibrary

• • •

உறவில் யாருடைய தவறு இது என்பதல்ல கேள்வி:
யாருடைய வாழ்க்கை என்பதுதான் கேள்வி!

நீ உன்னை அப்படியே ஏற்றுக் கொண்டு
உலகம் மாற வேண்டுமென்று எதிர்பார்ப்பதற்குப் பதில்,
உலகத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு, உலகம் குறித்த
உன் அணுகுமுறையை மாற்றத் துவங்கு.

உலகம் இப்படி இருப்பதால்
வாழ்க்கை அழகானதாக இருக்கட்டும்.

உலகம் இப்படி இருந்தாலும்
வாழ்க்கை அழகானதாக இருக்கட்டும்.

https://telegram.me/aedahamlibrary

உங்களுடைய எந்த வாடிக்கையாளரைத் தூக்கியெறியப் போகிறீர்கள்?

எந்த ஒரு நிறுவனமும் மிகப் பிரமாதமாக வெற்றிநடை போட்டுக் கொண்டிருந்தாலும், அதிலுள்ள எல்லா ஊழியர்களும் திறமைசாலிகளாகவோ, அர்ப்பணிப்பு உள்ளவர்களாகவோ இருக்க மாட்டார்கள், சிலர் சராசரியானவர்களாக இருப்பார்கள். ஒருசிலர் பிரச்சனைகளைத் தோற்றுவிப்பவர்களாகவும் இருப்பார்கள். அது எப்போதும் அப்படி ஒரு கதம்பமாகத்தான் இருக்கும். துரதிர்ஷ்டவசமாக, அந்த ஒருசில பிரச்சனையாளர்களை நிர்வகிக்கச் செலவிடப்படும் நேரம், சக்தி, மற்றும் முயற்சி ஆகியவை, பெரும்பான்மையானவர்களாக இருக்கும் திறமைமிக்க, அர்ப்பணிப்புள்ள ஊழியர்களை முன்னெடுத்துச் செல்வதற்குச் செலவழிக்கப்படும் நேரம், சக்தி, மற்றும் முயற்சிக்கு ஒரு சிறிதும் குறைவானதல்ல, அப்படியானால் ஏன் உங்களுடைய சக்தியை அச்சிறிய கும்பலுக்காகச் செலவழிக்க வேண்டும்? அவர்களைத் துரத்திவிட்டு, அதன் மூலம் சேமிக்கப்படும் வளங்களை, முன்னேற்றத்திற்காக உழைப்பவர்கள்மீது ஏன் செலவிடக்கூடாது?

ஓர் அழுகிய தக்காளி ஒருகூடைத் தக்காளி முழுவதையும் அழுகச் செய்துவிடும். வேலைத் திறனற்ற ஒருவர், விரைவில் வேலைத் திறனற்ற ஒரு கும்பலை உருவாக்குவதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா ? அவர்களைத் திருத்த முடியவில்லையென்றால் தூக்கி எறியுங்கள். அழுகிய தக்காளியைத் தூர எறிந்து நல்ல தக்காளிகளைக்

https://telegram.me/aedahamlibrary

காப்பாற்றுங்கள். நான் இதயமற்ற முறையில் பேசுவதாக உங்களுக்குத் தோன்றுகிறதா? வேலைத் திறனற்றவர்கள்மீது இரக்கம் காட்டும் எந்தவொரு நிறுவனமும் வெகு விரைவில் அடுத்தவர்களுடைய பரிதாபத்தைச் சம்பாதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

இது ஒன்றும் பெரிய புரட்சிகரமான ஒரு கருத்து அல்ல. பல நிறுவனங்கள் ஏற்கனவே இதைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றன.

இப்போது என் கேள்வி இதுதான்: "உங்களுடைய வாடிக்கையாளர்களில் ஏன் நீங்கள் ஒருசிலரைத் தூக்கி எறியக்கூடாது?" உங்களுக்கு உண்மையுடன், நன்றியுடன் இருக்கும் பெரிய வாடிக்கையாளர்களுக்குச் செலவிடும் நேரம், சக்தி, மற்றும் முயற்சிக்கு ஈடான நேரம், சக்தி, மற்றும் முயற்சியை நீங்கள் பிரச்சனைகளை ஏற்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கும் செலவிடுகிறீர்கள் என்பது உண்மைதானே? நீங்கள் என்ன செய்தாலும் சரி, ஒருசிலரை உங்களால் திருப்திப்படுத்தவே முடியாது. நீங்கள் எவ்வளவு சிறப்பான சேவையை அளித்தாலும், அப்படிப்பட்டவர்கள் உங்கள் பொருட்களையும் சேவையையும் மோசமாக விமர்சித்துக் கொண்டுதான் இருப்பார்கள். அதேபோல, உங்களுக்கு வர வேண்டிய பாக்கியை ஒவ்வொரு முறையும் நீங்கள் மண்டியிட்டுக் கேட்க வேண்டும் என்று ஒருசிலர் எதிர்பார்ப்பார்கள், கடைசியில் அந்தப் பணம் வரும்போது, கூட்டிக் கழித்துப் பார்த்தால், அந்த விற்பனை மூலம் நீங்கள் எவ்விதப் பணமும் சம்பாதித்து இருக்க மாட்டீர்கள். கால தாமதத்திற்கு உள்ளான காலகட்டத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய வட்டியைக் கணக்கிட்டால், நீங்கள் நஷ்டம் அடைந்திருக்கவும்கூடும். அப்படிப்பட்ட ஒருசில வாடிக்கையாளர்களைத் தூக்கி எறிந்துவிட்டு, அதன் மூலம் சேமிக்கப்படும் வளங்களை நீங்கள் ஏன் சிறந்த வாடிக்கையாளர்கள் ஒருசிலரிடம் செலவழிக்கக்கூடாது?

நியாயம் எப்போதும் வாடிக்கையாளர்கள் பக்கம்தான் இருக்கும், சரிதானே? முற்றிலும் தவறு. வாடிக்கையாளர்தான் ராஜா, அப்படித்தானே? எப்போதும் அப்படி அல்ல. அது யார் வாடிக்கையாளர் என்பதைப் பொறுத்தது.

தேடல் வெறும் வாடிக்கையாளர்களைப் பெறுவதாக இருக்கக்கூடாது. சிறந்த வாடிக்கையாளர்களைப் பெறுவதாக இருக்க வேண்டும். நல்ல வாடிக்கையாளர்களின் குறைகளை மட்டுமே தீர்த்து வைப்பவராக நீங்கள் மாற வேண்டும். அவர்கள் உங்கள் வளர்ச்சியில்

https://telegram.me/aedahamlibrary

பங்குதாரராக ஆவார்கள். இது உண்மையிலேயே 'உனக்கும் வெற்றி — எனக்கும் வெற்றி' என்ற நிலை.

ஆமாம், உங்களுடைய வாடிக்கையாளர்களில் யாரை நீங்கள் உடனடியாகத் தூக்கி எறியப் போகிறீர்கள்? ஓ, என்ன ஒரு புரட்சிகரமான கருத்து!

https://telegram.me/aedahamlibrary

பிறருடன் சரிக்குச் சமமாகப் போட்டியிடாதீர்கள்

அனாதைக் குழந்தைகள் இல்லம் ஒன்றிற்கு நானும் எனது நண்பர் ஒருவரும் சமீபத்தில் சென்றிருந்தோம். அங்கிருந்த, இயல்பாகவே நன்றாகப் பழகும் குணமுடைய ஊழியர் ஒருவரிடம் நாங்கள் பொருளாக ஏதாவது நன்கொடை அளிக்க விரும்புவதாகக் கூறினோம். நன்கொடைகளைப் பெறும் பொறுப்பில் உள்ள சமூக சேவகர் ஒருவரோடு இது குறித்து நாங்கள் பேச வேண்டும் என்று அவர் தெரிவித்தார். நாங்கள் காத்துக் கொண்டிருந்தபோது ஒரு பெண்மணி வந்தார். ஹிட்லரைத் தோற்கடிக்கும் அதிகாரத் தொனியில் அப்பெண்மணி, 'ஓ! உங்களுக்கு நன்கொடை அளிக்க விருப்பமா? எனக்கு 500 கிலோ அரிசி வேண்டும். அதுதான் இப்போது தேவை. வேறு எதிலும் எனக்கு விருப்பமில்லை. உங்களுக்கு அதைக் கொடுக்கும் அளவு பண வசதி இல்லையென்றால் 5 கிலோ அரிசி கொடுங்கள். ஆனால் எனக்கு அரிசி மட்டும்தான் வேண்டும். நான் போகிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். விசாரிப்புகள் கிடையாது. வரவேற்பு கிடையாது. புன்னகை கிடையாது. அப்பெண்மணி வந்தார். வேகவேகமாகச் சில வார்த்தைகளை உதிர்த்தார். போய்விட்டார். "இவர்தான் நன்கொடைகளைப் பெறும் பொறுப்பில் உள்ளவரா? கடவுள்தான் இக்காப்பகத்தில் உள்ள குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும்," என்று நான் நினைத்துக் கொண்டேன்.

நானும் என் நண்பரும் கொஞ்ச நேரத்திற்குப் பேசாமல் அப்படியே அமர்ந்திருந்தோம். மரியாதையற்ற, அலட்சியப்படுத்தப்பட்ட அந்த அனுபவத்தில் இருந்து நாங்கள் இன்னும் மீண்டு எழவில்லை. பின் நான்

https://telegram.me/aedahamlibrary

என் நண்பரிடம் இவ்வாறு கூறினேன்: "நாம் 500 கிலோ அரிசியைக் கொடுத்துவிடுவோம். நாம் உதவ நினைத்தது குழந்தைகளுக்குத்தான், அப்பெண்மணிக்கு அல்ல. நம் இதயங்களுக்கும் அக்குழந்தைகளின் வயிற்றுக்கும் இடையே ஒரு சுவராக அப்பெண்மணியின் நடத்தை இருக்க நாம் அனுமதிக்க வேண்டாம்."

நீங்கள் ஒரு வியாதியிலிருந்து குணமாகி வரும்போது மருத்துவர் உங்களிடம், "இந்த மருந்து உங்களிடம் நேர்மறையாகச் செயலாற்றியுள்ளது," என்று கூறுவார். உங்கள் உடல்நிலை தேறாவிட்டால் அவர், "இந்த மருந்து உங்களிடம் எதிர்மறையாகச் செயலாற்றியுள்ளதால், உங்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை," என்று கூறுவார். நம் வாழ்க்கையில் எந்தவொரு சூழ்நிலையிலும் எதிர்மறையாகச் செயலாற்றாமல், நேர்மறையாகச் செயலாற்றுவதைத் தேர்ந்தெடுப்போம். வெளியில் இருக்கும் சக்திகளால் நமது நடத்தை தீர்மானிக்கப்படாமல், நம்முள் நாம் வளர்த்துக் கொண்டிருக்கும் மதிப்பீடுகளால் தீர்மானிக்கப்படுமாறு பார்த்துக் கொள்வோம். நாம் சுவீகரித்திருக்கும் நற்குணங்களை, வெளியில் இருக்கும் யாரோ ஒருவர் ஏறி மிதிக்காமல் இருக்குமாறு நாம் பார்த்துக் கொள்வோம்.

உலகம் எப்படி நடந்து கொள்கிறது என்பது குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை. உங்கள் கண்முன் நீங்கள் தலைநிமிர்ந்து நிற்பதுதான் பெருமைக்குரிய விஷயம். எவ்வளவு தூரம் சோதிக்கப்பட்டாலும், எங்கு சென்றாலும், எதைச் செய்தாலும், உங்கள் பண்புநலன்களை ஒருபோதும் விட்டுக்கொடுக்காதீர்கள்.

அடுத்தவர்களின் குறைபாடுகள் நம்மைக் குறுக்கிவிட நாம் அனுமதிக்கக்கூடாது. வேறு ஒருவர் தவறு செய்துள்ளார் என்பதைக் கொண்டு, நாம் நம் தவறை நியாயப்படுத்த முடியாது. தவறுக்குத் தவறே விடையாக இருக்க முடியாது. நமது மேன்மையை நாம் அடகு வைக்க வேண்டாம். எல்லா சந்தர்ப்பங்களிலும் நாம் பிறருடன் சரிக்குச் சமமாகப் போட்டியிடாமல், அவர்களைத் தாண்டிச் செல்வோம்.

https://telegram.me/aedahamlibrary

உணர்ச்சிகள் - தவறில்லை, உணர்ச்சிக் கொந்தளிப்பான நாடகங்கள் வேண்டாமே!

தங்களுடைய முதல் திருமண நாளைக் கொண்டாட ஒரு கணவனும் மனைவியும் ஒரு புதிய காரை வாங்கினர். காரில் நகரை வலம்வந்து, கடற்கரைச் சாலையில் பறந்து, டிரைவ்—இன் தியேட்டரில் படம் பார்த்துவிட்டு வீடு திரும்பினர். அவர்கள் வீட்டில் கார் நிறுத்துமிடம் இல்லாததால், காரைத் தெருவோரம் நிறுத்தினர். அடுத்த நாள் காலையில் கண்விழித்துப் பார்த்தபோது காரைக் காணவில்லை. அவர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். கார் திருடு போய்விட்டது. வாங்கி முழுதாக ஒரு நாள்கூட அனுபவிக்காத அவர்களுடைய முதல் கார் திருடு போய்விட்டது. மனைவியால் தாங்க முடியவில்லை. கண்கள் குளமாக, சோபாவில் அப்படியே அவள் சரிகிறாள். அவளது கணவனுக்கும் பயங்கர அதிர்ச்சிதான். ஆனால் அக்கணத்தில் அவனுக்குத் தன் மனைவிமீது இருந்த அக்கறைதான் மேலோங்கி இருந்தது. அவன் அவளைக் கட்டியணைத்து, "கார் காணாமல் போய்விட்டது. ஒன்று, நீ அது குறித்துக் கவலைப்படலாம். அல்லது அதை எளிதாக எடுத்துக் கொள்ளலாம். எப்படிப் பார்த்தாலும், கார் போனது போனதுதான். அப்படி இருக்கும்போது, எளிதாக எடுத்துக் கொண்டால் என்ன?" என்று கேட்டான். அவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

இது நடந்து இரண்டு மாதங்கள் கழித்து, கார்களைக் கடத்தும் கும்பல் ஒன்றிடமிருந்து காவல்துறை அவர்கள் காரைக் கைப்பற்றிக் கணவரிடம் ஒப்படைத்தது. அன்று மாலை காவல் நிலையத்திலிருந்து கணவன்

https://telegram.me/aedahamlibrary

அக்காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, ஒரு லாரிமீது காரை மோதிவிட்டான். அவனால் அதைத் தாங்க முடியவில்லை. கண்கள் குளமாக, சோபாவில் அவன் அப்படியே சரிகிறான். அவனது மனைவிக்கும் பயங்கர அதிர்ச்சிதான். ஆனால் அக்கணத்தில் அவளுக்குத் தன் கணவன்மீது இருந்த கரிசனம்தான் மேலோங்கி இருந்தது. இம்முறை அவள் அவனைக் கட்டியணைத்து, "கார் மோதிவிட்டது. ஒன்று, நீங்கள் அது குறித்துக் கவலையுடன் இருக்கலாம். அல்லது நீங்கள் அதை எளிதாக எடுத்துக் கொள்ளலாம். எப்படிப் பார்த்தாலும், கார் மோதியது மோதியதுதான். அப்படி இருக்கும்போது, எளிதாக எடுத்துக் கொண்டால் என்ன?" என்று கேட்டாள்.

அறிவுபூர்வமான ஒரு கேள்வி: "உங்கள் கார் தொலைந்து போகும்போதோ, மோதலுக்கு உள்ளாகும்போதோ, எப்படி அதை எளிதாக எடுத்துக் கொள்ள முடியும்? வேறு என்ன செய்யலாம்? கவலையால் இடிந்துபோய் உட்கார்ந்திருக்கலாமா? நீங்கள் விரும்பினால் அப்படிச் செய்யலாம். எளிதாக எடுத்துக் கொள்ளலாமா? நீங்கள் விரும்பினால் அப்படியும் செய்யலாம். எப்படியிருந்தாலும் செய்யப்பட வேண்டியவை செய்யப்பட்டே ஆக வேண்டும். காவல்துறையில் புகார் செய்துதான் ஆக வேண்டும். காரைப் பழுது பார்க்க, பட்டறைக்கு அனுப்பித்தான் ஆக வேண்டும். காப்பீடு கோரி விண்ணப்பிக்கத்தான் வேண்டும். செய்யப்பட வேண்டியவை செய்யப்பட்டே ஆக வேண்டும்".

ஒரு சிறுவன் ஒரு பாடத்தில் மிகக் குறைந்த மதிப்பெண் பெற்றதால் தேர்ச்சி பெறவில்லை. தந்தை அவனை நாலைந்து முறை அறைந்துவிட்டார். தாயோ தன் தலையில் அடித்துக் கொண்டு அழுதார். இந்த உணர்ச்சிக் கொந்தளிப்பான நாடகங்கள் நடந்தேறிய பிறகு அடுத்தது என்ன? அச்சிறுவனுக்கு அந்தக் குறிப்பிட்டப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்கும்போது, இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கலாம். ஒருவேளை தனிப்பட்ட, சிறப்புப் பயிற்சி அவனுக்குத் தேவைப்படலாம். எது செய்யப்பட வேண்டுமோ அது செய்யப்பட்டே ஆக வேண்டும். அடுப்பில் தேவைக்கு அதிகமான நேரம் பாலை வைத்துவிட்டீர்கள். பால் பொங்கி எல்லாப் பக்கங்களிலும் வழியத் துவங்குகிறது. கத்துங்கள், திட்டுங்கள், கண்ணீர் வடியுங்கள், இரத்தக் கொதிப்பு உயர அனுமதியுங்கள். இந்த உணர்ச்சிக் கொந்தளிப்பான நாடகங்கள் நடந்தேறிய பிறகு அடுத்து என்ன ?

https://telegram.me/aedahamlibrary

அடுப்பை அணைக்க வேண்டும். பாத்திரத்தைக் கீழே இறக்கி வைக்க வேண்டும். அடுப்பு வைக்கப்பட்டுள்ள மேடையைக் கழுவ வேண்டும். எப்படியும் எவை செய்யப்பட வேண்டுமோ அவற்றைச் செய்துதானே ஆக வேண்டும்?

பங்குச் சந்தைச் சரிவிலிருந்து, முக்கிய ஊழியர்களின் பதவி விலகல்வரை, பிரியமானவரின் இறப்புவரை, உணர்ச்சிக் கொந்தளிப்பான நாடக அரங்கேற்றத்திற்குப் பிறகு, எவை செய்யப்பட வேண்டுமோ அவற்றைச் செய்துதான் ஆக வேண்டும். இங்கு நாம் உணர்ச்சிவசப்படுதல் பற்றிப் பேசவில்லை. உணர்ச்சிக் கொந்தளிப்பான நாடக அரங்கேற்றங்களைத் தவிர்ப்பது பற்றித்தான் பேசுகிறோம். காரைக் காணோம் என்றால் ஒரு நிமிடம் இதயம் நின்றுதான் போகும். தேர்வில் மகன் தோல்வியுற்றால், கைவிடப்பட்ட ஒரு நிலையில் நாம் மூழ்கத்தான் செய்வோம். அன்புக்குரியவர் இறந்து போனால் நியாயமான கண்ணீர்த் துளிகள் துளிர்க்கத்தான் செய்யும். உணர்ச்சிவசப்படுதல் இருந்துவிட்டுப் போகட்டும். உணர்ச்சிக் கொந்தளிப்பான நாடகங்கள் தேவையில்லை.

உணர்ச்சிவசப்படுதல் குறித்த மனப்பக்குவம் என்பது உணர்ச்சியைத் தவிர்ப்பதல்ல. உணர்ச்சிக் கொந்தளிப்பான நாடகங்களைத் தவிர்ப்பது என்பதுதான். எப்படியிருந்தாலும், செய்யப்பட வேண்டியவை செய்யப்பட்டே ஆக வேண்டும். அப்படி இருக்கும்போது இந்த நாடகம் எதற்காக?

https://telegram.me/aedahamlibrary

● ● ●

ஒரு சுவற்றின்மீது எவ்வளவு காலம்தான்
முட்டிக் கொண்டிருப்பீர்கள்?
உங்களுக்கு இரத்தம் வரலாம்.
ஆனால் சுவர் ஒருபோதும் விலகப் போவதில்லை.

எவ்வளவு காலம்தான்
உங்களது துரதிர்ஷ்டத்தை நொந்துகொண்டு
மாமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு
ஆரஞ்சுப் பழங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள்?
ஒருவேளை சோர்வடைந்து நீங்கள் கீழே விழலாம்.
ஆனால் ஒருபோதும் ஓர் ஆரஞ்சுப் பழம்கூட
அந்த மாமரத்திலிருந்து கீழே விழப் போவதில்லை.

அது எதுவோ, அது அதுதான்.
எது அதுவல்லவோ, அது அதுவல்ல.

எதைப் பற்றிக்கொள்ள வேண்டும்,
எதை விட்டுவிட வேண்டும்
என்று அறிந்திருப்பதுதான் மேதமை!

https://telegram.me/aedahamlibrary

நல்லவை வெளிச்சத்திற்கு வரட்டும்

முன்னேற வேண்டும் என்ற துடிப்புடன் இருந்த இளைஞன் ஒருவன் ஒரு நாளிதழில் வேலை கற்றுக் கொள்ளும் உதவியாளராகச் சேர்ந்தான். தொடர்ந்து மூன்று நாட்கள் தீவிரப் பயிற்சிக்குப் பின், களத்திற்குச் சென்று, பிரசுரிக்கத் தகுந்த தரத்துடன்கூடிய கதை ஒன்றுடன் வருமாறு அவனிடம் தெரிவிக்கப்பட்டது. சுட்டெரிக்கும் வெயிலைப் பொருட்படுத்தாது அவனும் ஆறு மணிநேரம் தெருத்தெருவாகச் சுற்றினான். நல்ல கதை எதுவும் கிடைக்காத தோல்வி உணர்வோடு அவன் அலுவலகத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். மூன்று சாலைகள் 'ஸீ' வடிவத்தில் சந்திக்கும் ஒரு முச்சந்திக்கு வந்தான். அப்போது இரண்டு பேருந்துகள் நேர் எதிரெதிர்ச் சாலையில் இருந்து சந்திப்பை நோக்கி, தாம் போகும் திசையறியாமல் வேகமாக வந்து கொண்டிருப்பதை அவன் கவனித்தான். ஒரு விபத்து கண்டிப்பாக நிகழக்கூடிய வாய்ப்பு அங்கு இருந்தது. அந்த இளைஞன் சமயோசிதப் புத்தியுடன் அவ்விரு சாலைகளின் சந்திப்பிற்குச் சென்று, இரண்டு கைகளையும் வேகமாக ஆட்டிக் கொண்டு, உச்சக் குரலில் பேருந்துகளை நிறுத்துமாறு கத்திக் கொண்டிருந்தான். கடைசியில் பேருந்துகளை நிறுத்துவதில் வெற்றியும் பெற்றுவிட்டான். அப்பேருந்துகளில் பயணித்த அனைத்துப் பயணிகளும் இறங்கி வந்து அந்த இளைஞனின் கைகளைக் குலுக்கி நன்றி தெரிவித்தனர். ஒருசிலர் அவனுக்கு முத்தம்கூடக் கொடுத்தனர். ஆனால் அந்த வீரப்பிரதாபக் கதையைக் கேட்டப் பத்திரிகை ஆசிரியர், "தலைப்புச் செய்திகளில் இடம்பெற இருந்த ஒரு நல்ல கதையை அநியாயமாக நழுவ விட்டுவிட்டாய்," என்று கூறி அவனை வேலையிலிருந்து துரத்திவிட்டார்.

https://telegram.me/aedahamlibrary

நாம் ஒரு மோசமான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. ஆனால் மோசமான விஷயங்களே செய்திகளாக வலம் வருகின்றன. மோசமான விஷயங்கள் நமது கவனத்தை ஈர்க்க உச்சக் குரலில் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் இவ்வுலகில், நல்ல விஷயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கு மேலும் பல வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். நாம் இனியும் வாயை மூடிக் கொண்டு வெறும் பார்வையாளர்களாக இருக்கக்கூடாது. புகைப் பழக்கம், குடிப் பழக்கம் போன்ற பல கெட்டப் பழக்கங்கள் குறித்துப் போதுமான அளவு விளம்பரங்கள் செய்தாகிவிட்டது. நல்ல செயல்கள் குறித்த செய்திகளை உலக மக்களுக்கு எதன் மூலம் எடுத்துரைப்பது?

வரி ஏய்ப்பவர்கள் தலைப்புச் செய்திகளை அலங்கரிக்கின்றனர். ஒழுங்காக வரி செலுத்துபவர்கள் பற்றிய செய்தியை முதல் பக்கத்தில் போட்டால் என்ன? கொலையாளிகளின் புகைப்படங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. பிறர் உயிரைக் காப்பாற்றுபவர்களின் படங்களை வெளியிட்டால் என்ன? இல்லையெனில், ஒவ்வொரு நாளும் ஓர் இராணுவ வீரனின் கதையை வெளியிட்டால்தான் என்ன ?

உங்களுக்குத் தெரிந்த மக்களிடம் சென்று, உங்களுக்குத் தெரிந்த நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள். உங்கள் பெற்றோரின் நற்குணங்களைப் பற்றி நண்பர்களிடம் எடுத்துரையுங்கள். உங்கள் குழந்தைகள் குறித்து உங்களுக்கு எவ்வளவு பெருமை என்பதை உங்கள் கிளப்பில் உள்ள அனைவரும் அறிந்து கொள்ளட்டும். உங்கள் ஆசிரியரிடம் நீங்கள் போற்றி வியந்த அனைத்துக் குணங்களையும் அச்சடித்து ஆங்காங்கே ஒட்டுங்கள். சாதாரண மனிதர்கள் ஒவ்வொரு நாளும் எவ்வளவு அசாதாரணமான விஷயங்களைச் செய்கிறார்கள் என்பது பற்றிப் பேசுங்கள். அவர்களது குழந்தையை உங்கள் வாழ்க்கைத் துணையாகப் பெற்றது எவ்வளவு பாக்கியம் என்று உங்கள் மாமனார் மாமியாருக்கு எழுதுங்கள். நீங்கள் பார்க்கும் மற்றும் கேட்கும் அனைத்து நல்ல விஷயங்களைப் பற்றியும் கூச்சலிடுங்கள், எழுதுங்கள், பேசுங்கள், முழக்கமிடுங்கள், அவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டு வாருங்கள்.

நமது உலகம் உண்மையில் ஒரு நல்ல உலகம் என்பதை உலகிற்கு எடுத்துரைக்கலாம், வாருங்கள்!

https://telegram.me/aedahamlibrary

• • •

கவனச் சிதறல்கள் கட்டாயம் தேவை, ஓய்வின்றி உழைத்தால் நாம் ஓய்ந்து போய்விடுவோம்

காலையில் நீங்கள் கண் விழித்ததும், படுக்கையைவிட்டு எழுந்திருக்கும் முன்பு உங்கள் இதயம் துடிக்கும் துடிப்பை, ஓய்வெடுக்கும் இதயத்துடிப்பு என்று அழைக்கின்றனர். அது குறைவாக இருந்தால், இரண்டு அடுத்தடுத்தத் துடிப்புகளுக்கிடையே, இதயம் நன்றாக ஓய்வெடுத்திருக்கிறது என்று பொருள். அது அதிகமாக இருந்தால், இரண்டு அடுத்தடுத்தத் துடிப்புகளுக்கிடையே, இதயம் சரியாக ஓய்வெடுத்திருக்கவில்லை என்று அர்த்தம். அதனால், அது குறைவாக இருப்பது உங்கள் இதயம் ஆரோக்கியமாக இருப்பதற்கான அறிகுறி. தொட்டில் முதல் சுடுகாடுவரை ஓய்வின்றி உழைக்கும் இதயம் என்று நாம் புகழும் இதயம்கூட, துடிப்புகளுக்கிடையே ஓய்வெடுத்துக் கொள்கிறது.

துரதிர்ஷ்டவசமாக, விடுமுறை என்பது பணக்காரர்களுக்கும் வசதி படைத்தவர்களுக்கும் மட்டுமே சொந்தம் என்ற எண்ணமும், அல்லது அது பொறுப்பு ஏற்க வேண்டிய வயதை எட்டியிராத குழந்தைகளுக்கு மட்டுமே ஏற்றது என்ற தவறான கருத்தும் நமக்கு இருக்கிறது. விடுமுறைக்குச் செல்வது என்பது செலவு என்ற எண்ணம் இன்றும் நம்மிடம் உள்ளது. பெரும்பாலானவர்களுக்கு விடுமுறை என்பது மதரீதியான புனித நாட்கள் என்ற நிலையில், அன்று வேலைக்குச் செல்ல வேண்டாம் என்ற பொருளிலேயே இருந்து வருகின்றது.

https://telegram.me/aedahamlibrary

உடலும் சரி, உள்ளமும் சரி, ஓர் உச்சகட்டத்தை எட்டும்போது, அதன் செயற்திறன் குறைகிறது. ஒவ்வொரு நாளின் இறுதியிலும் நாம் எடுக்கும் ஓய்வு எவ்வாறு நமது சக்தியை மீண்டும் இட்டு நிரப்புகிறதோ, அதேபோல, விடுமுறைகளும் நமது மனம், அறிவுத் திறன், மற்றும் உணர்ச்சிகளுக்குப் புத்துணர்ச்சி அளிக்கின்றன. அதன்மூலம் ஆன்மாவும் புத்துணர்வு பெறுகிறது.

அப்படியே தப்பித் தவறி விடுமுறைக்குச் சென்றாலும், ஒருநாள் பொழுதிலேயே பல இடங்களையும் சுற்றிப் பார்த்து, நம்மைச் சோர்வடைய வைத்து விடுகிறோம். அதில் ஏகப்பட்டப் பயணங்கள், பார்க்கும் இடங்கள், வழிபாட்டுத் தலங்கள், கடைகளுக்குச் செல்லுதல் போன்றவை திணிக்கப்படும். அப்படிப்பட்ட விடுமுறைகள் உங்களுக்குத் தெம்பூட்டுவதற்குப் பதிலாக உங்கள் முதுகெலும்பைத்தான் முறிக்கும். தேன்நிலவின்போதுகூட இப்படிப்பட்ட விஷயங்களை மேற்கொள்ளும் இளம் தம்பதியரைப் பற்றி என்ன சொல்வது?

குடும்ப உறவுகளை மேம்படுத்த ஒருவர் மேற்கொள்ளும் சிறப்பான முதலீடு, குடும்ப விடுமுறைகள்தான். அதேபோல, நிறுவனத்தில் உள்ளவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக விடுமுறைக்கு அழைத்துச் செல்வது, ஊழியர்களுக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்தும். அது இடையூறுகள் இன்றி ஒருவருக்கு ஒருவர் மனம்விட்டுப் பேச வழிவகுப்பதால், குவித்து வைக்கப்பட்டிருக்கும் உணர்வுச் சுமைகளை இறக்கி வைக்க உதவுகிறது. அது சலிப்பான தினசரி நடைமுறையிலிருந்து உங்களுக்கு விடுதலை அளிப்பதால், கேளிக்கையை வழங்குவதோடு உங்கள் ஆன்மாவிற்கும் புத்துணர்வு அளிக்கிறது.

உங்களது மொபைல் ஃபோன், லேப்டாப், மற்றும் இறுக்கமான உடைகள் ஆகியவற்றை வீட்டில் விட்டுவிட்டு விடுமுறைக்குச் செல்லுங்கள். அடுத்தவர்களுக்காக ஆடை அணியாமல், சௌகரியமான ஆடை அணிந்து கொள்ளுங்கள். விடுமுறை முடியும்வரை அலுவலகத்தைத் தொடர்பு கொள்வதில்லை என்று உறுதியெடுத்துக் கொள்ளுங்கள். எக்காரணம் கொண்டும் அங்கு போய் உங்கள் உணவை நீங்கள் சமைத்துக் கொள்ளாதீர்கள். புதிய ருசிகளுக்கு உங்கள் நாவைப் பழக்குங்கள். உலகம் உங்கள் தலைமீது ஒன்றும் இயங்கிக் கொண்டிருக்கவில்லை. நீங்கள் இல்லாவிட்டாலும் அது தொடர்ந்து

https://telegram.me/aedahamlibrary

இயங்கிக் கொண்டுதான் இருக்கும் என்பதை உணருங்கள்.

மன இறுக்கத்தைக் குறைக்க ஒரு விடுமுறை, வழக்கமான சிந்தனை மற்றும் வேலைகளை மறக்க ஒரு விடுமுறை, புதிய காற்றை சுவாசிக்க ஒரு விடுமுறை, கடந்தகாலத்தை அசைபோட, எதிர்காலத்தை அலச ஒரு விடுமுறை, குடும்பத்திற்காக உங்களை அர்ப்பணிக்க ஒரு விடுமுறை, முழுநேர வாழ்க்கைத் துணைவராக இருக்க, முழுநேரப் பெற்றோராக இருக்க, முழுநேர மகனாக இருக்க ஒரு விடுமுறை. உங்கள்மீது குத்தப்பட்டிருக்கும் முத்திரைகளிலிருந்து விடுதலை பெற ஒரு விடுமுறை.

எல்லாக் கவனக் குவிப்புகளுக்கும் அவ்வப்போது கவனச் சிதறல்கள் தேவை. விடுமுறைகள் கட்டாயம் எடுக்கப்பட வேண்டியவை. ஓய்வுகள் இல்லையெனில் நீங்கள் ஓய்ந்துபோய் விடுவீர்கள். கடவுள்கூட விடுமுறை எடுக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? "ஆறு நாட்களுக்குப் பரமபிதா பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தார். ஏழாம் நாள் அவர் ஓய்வெடுத்துக் கொண்டார். புத்துணர்ச்சி அடைந்தார்." - எக்ஸோடஸ் **31:17**

https://telegram.me/aedahamlibrary

• • •

கவனச் சிதறல்கள் கவன ஈர்ப்பிற்குக்
கட்டாயம் தேவை.

ஒவ்வொரு முறையும் நீங்கள் ஈடுபட்டிருக்கும்
முதல் நடவடிக்கையிலிருந்து
இரண்டாவது நடவடிக்கைக்கு மாறி,
பின் மீண்டும் முதல் நடவடிக்கைக்கு வரும்போது
முதல் நடவடிக்கையின் செயற்திறன் அதிகரிக்கும்.

எந்த வடிவத்தில் இருந்தாலும்
சலிப்பை உதறித் தள்ளத்தான் வேண்டும்.
எந்த விதத்தில் ஏற்பட்டாலும்
மாறுதல்கள் உங்கள் மன இறுக்கத்தைத் தளர்த்தும்.
சஞ்சலமற்ற மனம் எப்போதும் சிறப்பாகச் சிந்திக்கும்.

ஒருவரது கவன ஈர்ப்பைக் கூர்தீட்டத் தேவையான
படைப்புரீதியான கவனச் சிதறல்கள் அனைத்தையும்
இயற்கை நமக்கு அளிப்பதால்,
இயற்கை அன்னையின் மடியில் சாய்ந்திருக்கும்போது
மக்கள் நன்றாகச் சிந்திக்கின்றனர்

https://telegram.me/aedahamlibrary

சரியா தவறா என்பதல்ல விஷயம், இது பொருத்தம் குறித்த ஒன்று

இருபது அடி நீளமும் பதினாறு அடி அகலமும் கொண்ட ஓர் அறை வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். ஆனால் உங்களது கட்டிட வடிவமைப்பாளர் பதினாறுக்கு பதினாறு அடி இருந்தால் போதும் என்று நினைக்கிறார். ஒரு கருத்து மற்றொரு கருத்தைவிடச் சிறந்ததா இல்லையா என்பது இங்கு முக்கியமல்ல. நீங்கள் எதை விரும்பினீர்கள், உங்களுக்கு எது கிடைத்தது என்பதுதான் முக்கியம். ஒரு கட்டிட வடிவமைப்பாளர் என்ற முறையில் அவர் கொடுக்க விரும்பியதற்கும், வாடிக்கையாளர் என்ற முறையில் நீங்கள் அமைத்துக் கொள்ள விரும்பியதற்கும் இடையே இருந்த முரண்பாடு குறித்த விஷயம் இது. சரி அல்லது தவறு, நல்லது அல்லது மோசமானது, சிறந்தது அல்லது மிகச் சிறந்தது என்பது குறித்த விஷயமல்ல இது. கச்சிதமான பொருத்தம் மற்றும் இணைந்து இயங்குதல் குறித்த விஷயம் இது.

ஒரு சதுரம் எவ்வளவு சிறந்ததோ, வட்டமும் அதே அளவு சிறந்ததே. ஒரு சதுர மரக்கட்டை ஒரு சதுரக் குழியில் இருப்பதற்கும், ஒரு வட்ட மரக்கட்டை ஒரு வட்டக் குழியில் இருப்பதற்கும் இடையே பெரிய வித்தியாசம் எதுவும் கிடையாது. ஆனால் ஒரு சதுர மரக்கட்டையை, ஒரு வட்டக் குழியில் நுழைக்க முற்படும்போது பிரச்சனை தலைதூக்குகிறது. பல் குத்த உதவும் குச்சி செய்யக்கூடியதை ஒரு புல்டோசரால் செய்ய முடியாது. சில சமயங்களில் மிகச் சிறந்ததுகூடப் போதுமானதாக இல்லாமல் போய்விடலாம். சூரியகாந்திப்பூ கொள்ளை அழகுதான். ஆனால் ஒரு ரோஜாத் தோட்டத்தில் அது ஒரு களையாகவே கருதப்படும்.

https://telegram.me/aedahamlibrary

அமைப்புரீதியாக நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்த ஒருவனை, வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்த்துக் கொண்டால், அவனால் தாக்குப்பிடிக்க முடியாது. பதவி, அதிகாரம், மற்றும் நிர்வாகக் கொள்கைகளுக்குப் பழகிவிட்ட ஒருவனால் அமைப்புரீதியற்று இயங்கும் நிறுவனத்தில் சரியாக ஒட்டிக் கொள்ள முடியாது. அப்படிப்பட்டவர்களால் பலர் வேலையைவிட்டு விலக நேரிடும். கடைசியாக அவர்களும் வேலையை விட்டுவிட்டு ஓடிவிடுவர். அவர்களுடைய திறமைகளில் எந்தவிதமான குற்றமும் கண்டுபிடிக்க முடியாது. சதுரமான குழியில் வட்டமான ஆணி பொருந்தாது, அவ்வளவுதான்.

நாம் யாரேனும் ஒருவரை வேலைக்கு அமர்த்துமுன், அவருடைய படிப்புத் தகுதி, அனுபவம், புத்திசாலித்தனம், திறன்கள், மனப்போக்கு, செயற்திறன், அனுபவம், வயது, பாலினம் போன்றவற்றைப் பார்ப்போம். ஆனால் அதற்குப் பதிலாக, "என் நிறுவனத்தின் கலாச்சாரத்தோடு இவரால் பொருந்திப் போக முடியுமா?" என்ற கேள்வியைத்தான் நாம் கேட்டிருக்க வேண்டும்.

திருமணத்திற்குப் பெண் பார்க்கப் போகும்போது, பெண்ணின் தோற்றம், குடும்பப் பின்னணி, கல்விப் பின்னணி, மதம், சாதி போன்றவற்றை நாம் பார்க்கிறோம். அதற்குப் பதிலாக, "நமது குடும்பத்தோடு அப்பெண்ணால் ஒத்துப் போக முடியுமா?" என்றுதான் நாம் கேட்டிருக்க வேண்டும். அவன் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை செய்பவனாக இருக்கலாம், அதிகம் படித்தவனாக இருக்கலாம், ஆறடி இரண்டு அங்குலம் உயரம் கொண்டவனாக இருக்கலாம். இருந்தால் என்ன ? அவனுக்குத் தேவையெல்லாம் வீட்டிலிருந்து குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளக்கூடிய ஒரு பெண். ஆனால் நீங்கள் வேலையில் முன்னேறத் துடிக்கும் ஒரு பெண். இந்த ஒரு பொருத்தமற்றத் தன்மையால் பிற அனைத்து விஷயங்களும் தவறாகப் போய்விடுகின்றன. நீங்கள் 'நாக்கு ருசிக்காக அல்ல, உடல் ஆரோக்கியத்திற்கே உணவு' என்ற கொள்கையைக் கொண்டு ஆரோக்கிய உணவை மட்டுமே விரும்புபவர். நீங்கள் மணமுடித்தப் பெண்ணோ, இரவுச் சாப்பாடு என்ற பேச்சை எடுத்தவுடனேயே 'பீட்சா ஹட்' மெனுக் கார்டைத் தூக்குபவளாக இருக்கிறாள்.

தனிப்பட்ட அறிவுக்கூர்மை என்பது கூட்டான

https://telegram.me/aedahamlibrary

அறிவுக்கூர்மையிலிருந்து வேறுபட்டது. சதுரங்க விளையாட்டில், காலாட்படை வீரரைவிடவும் குதிரை அதிக பலம் வாய்ந்தது என்பது உண்மைதான். ஆனால் நீங்கள் வெள்ளைக் காயை வைத்து விளையாடுகையில் கறுப்புக் குதிரையைவிட வெள்ளைக் காலாட்படை வீரன் பலசாலிதானே ?

கச்சிதமான பொருத்தம் இருக்கும்போது, 1 + 1 என்பது மூன்று ஆகும். இல்லையெனில் 1 + 1 என்பது பூஜ்யம் ஆகிவிடும்.

https://telegram.me/aedahamlibrary

சரியான கரங்களில் வளர்வதற்கு நிகரே இல்லை

பிராந்திய மொழியில் பள்ளிப் பாடங்களைக் கற்றுக் கொண்டதற்காகத் தங்களைத் திட்டிக் கொண்டேயிருக்கும் மக்களை நீங்கள் அடிக்கடி சந்தித்திருக்கலாம். திட்டமிட்ட முறையில் ஒரு வருட காலம் அவர்கள் முறைப்படிப் பயிற்சி செய்தால், தாங்கள் விரும்பும் மொழியைக் கற்றுக் கொண்டு தங்களுடைய பலவீனத்தை அவர்களால் தூக்கியெறிய முடியும். தன் வாகன ஓட்டுனர் வேலைக்கு வராததால் ஏற்படும் அசௌகரியத்தை எவ்வளவு அடிக்கடி மக்கள் தாங்கிக் கொள்ள நேர்கிறது. தங்களுக்கென்று சொந்தமாக ஒரு கார் இருந்தும் வீட்டைவிட்டு நகர முடியாமல் அவர்கள் இருப்பர். முறைப்படியான ஒரு மாதப் பயிற்சி எடுத்தால் போதும், காரோட்டக் கற்றுக் கொண்டு, தங்கள் பலவீனத்தை எளிதாக அவர்கள் அகற்றிவிடலாம். மரண பயத்திற்கு அடுத்து இருப்பதாகக் கருதப்படுவது மேடைப் பேச்சு குறித்த பயம். இருந்தாலும், முறைப்படியான பயிற்சியின் மூலம் மேடைப் பேச்சை ஒருசில வாரங்களுக்குள் ஒருவர் தங்கள் கைவசப்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு பலவீனத்தையும் ஒரு குறைபாட்டையும் எளிதாகத் தூக்கியெறிய முடியும்போது, ஏன் மௌனமாக அதை வாழ்நாள் முழுவதும் சகித்துக் கொள்ள வேண்டும்? பயிற்சியில் சில காலம் ஈடுபட்டு, அப்பலவீனத்தைத் தூக்கி எறிந்து, அதன் பலனை வாழ்நாள் பூராவும் அனுபவிக்கலாம் இல்லையா?

முறைப்படியான, திட்டமிடப்பட்டப் பயிற்சி நமது பலவீனங்களிலிருந்து நாம் மீள்வதற்கு மட்டும் வழி வகுப்பதில்லை. நாம்

https://telegram.me/aedahamlibrary

ஏற்கனவே நன்றாகச் செய்து கொண்டிருக்கும் விஷயங்களை மேலும் சிறப்பாகச் செய்யவும் உதவும்.

எவரொருவராலும் ஓட முடியும். ஆனால் ஓர் ஓட்டப் பந்தய வீரனாக ஆக வேண்டும் என்றால் அதற்கு முறைப்படியான, திட்டமிடப்பட்டப் பயிற்சிக்கு நீங்கள் உங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். முறைப்படியான, திட்டமிடப்பட்டப் பயிற்சிக்குப் பின், அர்த்தமற்றக் கிறுக்கல்கள் படைப்புரீதியான எழுத்துக்களாக மலரும்; சாதாரணப் பேச்சு, தகவல் பரிமாற்றக் கலையாகப் பரிணமிக்கும்; உடற்பயிற்சி, உடல்நல மேம்பாட்டுத் திட்டமாக உருவெடுக்கும். உங்களுக்குச் சதுரங்க விளையாட்டு விளையாட வேண்டும் என்றால், அதை யாரிடமிருந்து வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் அதில் ஒரு சாதனையாளராக ஆக வேண்டும் என்றால், பயிற்றுவிக்கப்பட்ட ஒரு பயிற்சியாளரிடம் பயிற்சியெடுத்துக் கொள்வது அவசியம். வெறும் பொழுதுபோக்குகளுக்கும் மேலாக வேண்டுமெனில், யோகாவையும் தியானத்தையும் ஒரு குருவிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

நமது பாட்டியின் கை வைத்தியத்தைபோல வேறு எதுவும் வேலை செய்வதில்லை. ஆனாலும் அந்தப் பாட்டிக்கு உடம்பு சரியில்லை எனில், நாம் அவரைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடுகிறோம். முறைப்படியான, திட்டமிட்டப் பயிற்சிக்கு மாற்றே கிடையாது. பெரும்பாலான சமயங்களில், நல்லது, சிறந்தது, மிகச் சிறந்தது ஆகியவற்றுக்கு இடையேயான வித்தியாசம் அதன் பின்னால் உள்ள பயிற்சியின் தரத்தில் அடங்கி இருக்கும்.

பிரபல குத்துச் சண்டை வீரர் முகமது அலி, "பயிற்சியின்போது ஒவ்வொரு நிமிடத்தையும் நான் வெறுத்தேன். ஆனால் 'ஒருபோதும் விலகிவிடாதே . . . இப்போது சிரமப்பட்டாலும், வாழ்நாள் முழுவதும் சாதனையாளனாக வாழலாம்' என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன்," என்று கூறியுள்ளார்.

முறைப்படியான, திட்டமிடப்பட்டப் பயிற்சிக்குப் பின், திறன், ஆழ்ந்த புலமையாக வெளிப்படுகிறது. ஒன்றில் தலைசிறந்து விளங்குவதற்கு வேறு வழி ஏதுமில்லை. சரியான கரங்களில் வளர்வதற்கு நிகரே இல்லை.

https://telegram.me/aedahamlibrary

எதிர்கொள்ளப்பட வேண்டியவை, எதிர்கொள்ளப்பட்டே ஆக வேண்டும் - தாமதமின்றி!

"நீங்கள் எப்பொழுது கடைசி முறையாக முழு உடற்பரிசோதனையை மேற்கொண்டீர்கள் ?" என்று மருத்துவர் வினவினார். "நான் அதை ஒருபோதும் செய்துகொண்டது இல்லை," என்று அவர் கூறினார். ஆச்சரியம் அடைந்த மருத்துவர் அவரிடம், "ஏன் செய்யவில்லை? நாற்டது வயதைக் கடந்துவிட்டால், இரண்டு வருடத்திற்கு ஒரு முறை முழு உடற்பரிசோதனை செய்துகொள்வது அவசியம்," என்று கூறினார். அதற்கு அந்த நபர், "நான் அப்பரிசோதனையைச் செய்து கொள்ள விரும்பவில்லை. அவர்கள் எனக்குக் கொழுப்புச் சத்து அதிகமாக இருக்கிறது, சர்க்கரை வியாதி இருக்கிறது, அல்லது அதைவிடப் பயங்கரமான நோய் ஒன்று இருக்கிறது என்ற அறிக்கையுடன் வருவார்கள். நான் இப்பொழுது நன்றாக இருக்கிறேன். ஒரே ஒருமுறை உடல் பரிசோதனைக்குச் சென்றுவிட்டேன் என்றால், நான் ஒரு நோயாளி போல உணர்வேன்," என்று கூறினார்.

தப்பித்தல் தற்காலிகமானது என்பதையும், வாழ்க்கையில் எதிலிருந்தும் முற்றிலுமாகத் தப்பித்துவிட முடியாது என்பதையும் நன்றாக அறிந்திருந்தாலும்கூட, நீங்கள் ஏன் தொடர்ந்து தப்பிக்க முயன்றுகொண்டே இருக்கிறீர்கள்? நம்பிக்கை வைக்கமுடியாத ஒன்றின்மீது ஏன் நீங்கள் நம்பிக்கை வைக்கிறீர்கள்? நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றை ஏன் தெரிந்து கொள்ள விரும்புவதில்லை? நீங்கள் கண்களை மூடிக்கொண்டால் உலகம்

https://telegram.me/aedahamlibrary

இருண்டுவிடுமா என்ன ? எப்படியிருந்தாலும், எதிர்கொள்ள வேண்டியவற்றை எதிர்கொண்டுதானே ஆகவேண்டும்? ஏன் அதைத் தள்ளிப்போட வேண்டும்? ஏன் அதைத் தவிர்க்க வேண்டும்? நாளை நீங்கள் எதிர்கொள்ள இருக்கும் ஒரு காட்டுத்தீ, நேற்று நீங்கள் தப்பிக்க முனைந்த ஒரு சிறு தீப்பொறியாக இருந்திருக்கும்.

நம்மில் பெரும்பாலானோர், வாழ்வின் யதார்த்தங்களைச் சந்திக்கும் தைரியம் இல்லாதவர்கள் என்பதுதான் நிஜம். இந்தக் கசப்பான உண்மையை நாம் எதிர்கொண்டே ஆக வேண்டும்.

என் நண்பன் என்னிடம் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறான் என்று நான் நினைக்கிறேன். இந்த உண்மையை நீங்கள் எதிர்கொண்டால்தான் அது குறித்து ஏதாவது செய்ய முடியும். பெற்றோர் என்ற முறையில் எங்கள் மகனிடம் நாங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட அவனது நண்பர்கள் அவன்மீது அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர் என்று நான் நினைக்கிறேன். கசப்பான உண்மைதான். ஆனால் அதை எதிர்கொள்ளும்போதுதான் அது குறித்து ஏதாவது செய்ய முடியும். என் திருமண வாழ்வு ஆட்டம் கண்டுகொண்டு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இது கசப்பான, இதயவலியை ஏற்படுத்தக்கூடிய உண்மை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த உண்மையைச் சந்திக்க உங்களுக்கு விருப்பம் இல்லையெனில், அதைத் தீர்க்க உங்களால் எவ்வித நடவடிக்கையையும் எடுக்க முடியாது. சந்தையில் நிலவும் போட்டி எங்கன் விற்பனையைக் கணிசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். போட்டியாளரின் நிறுவனத்தில் வேலைக்குச் சேரும் ஆசையை, என் ஊழியர்களில் பலர் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். என் வேலை எனக்கு நண்பர்களை மட்டுமல்லாது, எதிரிகளையும் உருவாக்கிக் கொடுத்துள்ளது என்று நான் நினைக்கிறேன். அது அவனது தவறு என்று எப்போதும் நான் அவனிடம் கூறிக்கொண்டிருந்தாலும், அடிமனத்தில், அது சரியல்ல என்பதை நான் அறிந்திருந்தேன். இப்பட்டியலுக்கு முடிவே கிடையாது.

உண்மையை எதிர்கொண்டால் மட்டுமே ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க முடியும். உண்மையை நீங்கள் தவிர்க்கும்போது, நிலைமை இன்னும் மோசமாகிவிடுகிறது. அது மீண்டும் வந்து உங்கள் காலைச் சுற்றிக் கொண்டுவிடும். தவிர்க்கிறீர்கள் என்பதால் அது உங்களைவிட்டுப் போய்விடாது. நீங்கள் எதிர்கொள்ளாமல் தவிர்க்கும்

https://telegram.me/aedahamlibrary

ஒவ்வொரு விஷயமும் வருங்காலத்தில், "நான் அப்படிச் செய்திருக்க வேண்டும், இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும், அல்லது இப்படிச் செய்யாமல் விட்டிருக்கக்கூடாது," போன்ற ரூபங்களில் உங்கள்முன் தோன்றி உங்களை வாட்டி வதைக்கும்.

எப்பொழுதுமே சரியான மருத்துவத் தீர்வையோ, சரியான உடற்பயிற்சியையோ, அல்லது சரியான உணவுப் பழக்கத்தையோ உங்களால் கண்டுபிடிக்க முடியும். மனம் திறந்து பேசுவதன் மூலம் உங்கள் நண்பருடன் ஏற்பட்டக் கருத்து முரண்பாடுகளைக் களைய முடியும். உங்கள் மகனின் நெருங்கிய தோழனாக ஆக உங்களால் முயற்சி எடுக்க முடியும். புதிய சந்தைகளைக் கண்டுபிடிக்க முடியும். உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் கலங்கரை விளக்காகச் செயல்படக்கூடிய ஒரு மனிதரைக் கண்டுபிடிக்க முடியும். 'மன்னியுங்கள்' என்ற சிறிய, மந்திரசக்தி வாய்ந்த வார்த்தையை உபயோகிக்கும் துணிச்சலை வரவழைத்துக் கொள்ள முடியும். கண்டிப்பாக ஏதாவது ஒரு நடவடிக்கையில் இறங்க முடியும். வாழ்க்கையின் நிதர்சனங்களைத் தைரியமாக எதிர்கொள்ளுங்கள். அப்படிச் செய்வதன் மூலம் மட்டுமே ஏதாவது ஒரு நடவடிக்கையில் இறங்க முடியும்.

இதுவரை தீர்க்கப்பட்டவை அனைத்தும் தீர்க்கப்பட்டதற்கு, யாரோ ஒருவர் அவற்றை எதிர்கொள்ளத் துணிந்ததுதான் காரணம். அவை ஒவ்வொன்றும் உண்மைகளை எதிர்கொள்ளக்கூடிய துணிச்சலில்தான் துவங்கின. நீங்கள் எப்போதும் தவிர்க்க முயன்ற உண்மைகளை நேரடியாக எதிர்கொள்ளத் துணிந்தவுடன், நீங்கள் முதன்முறையாக வாழ்க்கையை நேருக்கு நேர் சந்திக்கிறீர்கள். தப்பித்தல் உங்களுக்கும் எனக்கும் உதவாது. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் வாழ்வின் நிதர்சனங்களை நாம் எதிர்கொள்வோம்.

https://telegram.me/aedahamlibrary

• • •

வாழ்க்கை என்பது
ஒரு சதுரங்க ஆட்டத்தைப் போன்றது,
இதில் நீங்கள் ஆடப் போவது ஆண்டவனுடன்.

உங்களுடைய நகர்த்தலுக்குப் பிறகு
அவர் தன் காயை நகர்த்துவார்.
உங்களுடைய நகர்த்தல்களுக்குத்
'விருப்பத்தேர்வுகள்' என்று பெயர்.
அவருடைய நகர்த்தல்களுக்கு
'விளைவுகள்' என்று பெயர்.

நீங்கள் சோதிக்கப்படுவீர்கள்.
சவாலுக்கு அழைக்கப்படுவீர்கள்.
விளிம்புவரை தள்ளப்படுவீர்கள்.

ஆட்டத்தை நன்றாக ஆட
நீங்கள் கற்றுக் கொண்டால்,
உங்களை வெற்றியடைய அனுமதிப்பதன் மூலம்
'அவர்' வெற்றி பெறுவார்.

https://telegram.me/aedahamlibrary

• • •

வேறொருவரின் சிறந்த பரிசாக இருங்கள்

நான் தொடர்ந்து என்னைப் பற்றி விளக்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லாத ஓர் உறவு எனக்குத் தேவை. அதைவிடச் சோர்வடையச் செய்யக்கூடிய விஷயம் வேறு எதுவும் இருக்க முடியாது. உடற்சோர்வைவிட உளச்சோர்வு உங்களை மிகவும் அயர்த்திவிடும். அதனால் என்னைக் குறித்து அனைத்தையும் விவரித்துக் கொண்டிருக்கத் தேவையில்லாத, நம்பிக்கை சுதந்திரத்தை அனுபவிக்கக்கூடிய ஓர் உறவை நான் தேடிக் கொண்டிருந்தேன்.

என்னையே எனக்கு எதிராகத் திருப்பும் சாத்தியமற்ற ஓர் உறவு எனக்குத் தேவை. என்னிடம் குறைகளும் உண்டு, கொண்டாடப்படக்கூடிய விஷயங்களும் உண்டு. என்னுடைய குறைகளே எப்போதும் தொடர்ந்து கிளரப்பட்டுக் கொண்டிருக்காத சூழல் உள்ள உறவையே நான் தேடிக் கொண்டிருக்கிறேன். என்னிடம் இருக்கும் சிறப்பான அம்சங்களை எப்போதும் வெளிக் கொணரக்கூடிய அந்த உறவே எனக்குத் தேவை.

என் நேற்றைய தவறுகளை மனத்தில் வைத்து இன்றைக்கு என்னைப் பார்க்காமல் இருக்கும் ஓர் உறவு வேண்டும். ஒரு மனிதன் என்ற முறையில் அவ்வப்போது நானும் தவறுகள் செய்யத்தான் செய்வேன். என் குற்றங்குறைகளைப் பட்டியலிட்டு வைக்காத ஒரு நபர் எனக்குத் தேவை. நேற்றைய சண்டைச் சச்சரவுகள் இன்றைய உரையாடலைப் பாதிக்காத ஓர் உறவு குறித்தத் தேடல் தொடர்கிறது. அவ்வுறவில் நேற்று, நேற்றே காலாவதியாகி இருக்க வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

எல்லா நேரங்களிலும் நானே முதலில் செயலில் இறங்க வேண்டும் என்று இல்லாத ஓர் உறவு தேவை. நான் மூடுமறைவின்றி வெளிப்படையாக இருக்கத்தக்க ஓர் உறவு தேவை. ஓர் உறவைப் பெறுவதற்கும், அதைத் தக்க வைத்துக் கொள்வதற்கும், அவற்றிற்கு ஏற்றால்போல் என் விருப்பு வெறுப்புகளை மாற்றி அமைக்கத் தேவையில்லாத ஓர் உறவு தேவை. என் சுயஉருவத்தில் எந்தக் கீறலையும் ஏற்படுத்தாத ஓர் உறவு தேவை. நான் வேறொருவராக இருக்க வேண்டியக் கட்டாயத்திற்கு ஆளாகாத ஓர் உறவு எனக்கு தேவை. என்னுடன் இருக்கும்போது எவ்வாறு நான் நானாகவே இருக்கிறேனோ, அதைவிட அதிகமாக நான் முற்றிலும் நானாகவே உணரும்படியான ஓர் உறவு வேண்டும்.

நான் மீண்டும் என் தாயின் கருவறைக்குள் இருக்கும் உணர்வைக் கொடுக்கும் ஓர் உறவு வேண்டும். இப்போதுதான் நான் மீண்டும் பிறந்துள்ளதாக என் இதயம் எப்போதும் உணரும் ஓர் உறவு எனக்குத் தேவை.

என் அன்பிற்குரிய வாசகர்களே, அப்படிப்பட்ட ஓர் உறவை நீங்கள் ஏற்கனவே பெற்றிருந்தால், மண்டியிட்டு நன்றி தெரிவியுங்கள். ஏனெனில், இதைவிடச் சிறந்த மாபெரும் பரிசு வாழ்வில் வேறெதுவும் கிடையாது. இப்படிப்பட்ட உறவுதான் வாழ்க்கை உங்களுக்கு அளிக்கும் மாபெரும் பரிசு.

அப்படிப்பட்ட ஓர் உறவு இப்போது உங்களுக்குக் கிடைத்திருக்கவில்லை என்றால், வருந்த வேண்டாம். மலைப் பிரசங்கத்தின்போது இயேசு, "பிறர் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதையே நீங்கள் பிறருக்குச் செய்யுங்கள்," என்று கூறினார் அல்லவா? நீங்கள் அப்படிப்பட்ட ஒரு நபராக இருக்க முடியுமா? வேறொருவருடைய வாழ்வில் நீங்கள் உங்களைப் பரிசாக வழங்குங்கள். வேறொருவருடைய வாழ்வில் அவரது மிகச் சிறந்த பரிசாக இருப்பதற்குத் தகுதி வாய்ந்தவராக நீங்கள் மாறுவதற்கு ஏற்றவாறு, அவர்மீது பரிபூரணமாக அன்பு செலுத்துங்கள்.

அவர்களுடன் இருக்கும்போது நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதன் மூலம் மக்கள் உங்கள் அன்பை உணர்வதில்லை. மாறாக, அவர்கள் உங்களுடன் இருக்கும்போது அவர்கள் என்னவாக இருக்க முடிகிறதோ, அதைக் கொண்டே நீங்கள் அவர்கள்மீது கொண்டுள்ள

https://telegram.me/aedahamlibrary

அன்பை அவர்கள் உணர்கின்றனர். உங்கள் அன்பின் வெளிப்பாட்டிலும் நறுமணத்திலும், உங்கள் அன்புக்குரியவர் மலரட்டும்.

https://telegram.me/aedahamlibrary

மிகச் சிறந்த வளமான உங்களை நீங்கள் போதுமான அளவு பயன்படுத்திக் கொள்கிறீர்களா?

1960களின் துவக்கத்தில் ஜப்பான் எஃகு உற்பத்தியில் ஈடுபடத் தீர்மானித்தது. இரும்புத்தாதும் நிலக்கரியும் எஃகு உற்பத்திக்குத் தேவையான இரண்டு அடிப்படைக் கச்சாப் பொருட்கள். இவை இரண்டுமே ஜப்பானில் அப்போது கிடையாது. ஆனால், அவற்றை எங்கிருந்து இறக்குமதி செய்யலாம், அவை எங்கு அபரிமிதமாக உள்ளன, உற்பத்தி செய்யப்பட்ட எஃகை எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம், அதன் தேவை எங்கு அதிகமாக உள்ளது ஆகியவற்றை ஜப்பான் அறிந்திருந்தது. இதன் விளைவு, 1960களின் பிற்பகுதியில், அந்நாடு எஃகு ஏற்றுமதியில் உலகிலேயே முதலிடம் வகித்தது. வெறும் பத்து ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் ஒரு தொழிற்புரட்சி எப்படி நிகழ்ந்தது? வளங்களைச் சிறப்பான முறையில் நிர்வாகம் செய்ததால்தான்.

ஒரு பொருளைத் தயாரிப்பதற்குப் பத்து ரூபாய் ஆகிறது என்று வைத்துக் கொள்வோம். அது பதினோரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதிலிருந்து ஒரு ரூபாய் இலாபம் கிடைக்கிறது. கூடுதல் இலாபமாக இன்னும் ஒரு ரூபாயைப் பெறுவதற்கான ஒரு வழி, கூடுதலாகப் பதினோரு ரூபாய்க்கான விற்பனையைச் செய்வது. அதாவது விற்பனையை நூறு சதவீதமாக அதிகரிப்பது. இலாபத்தைக் கூட்டுவதற்கு இன்னொரு வழி, அதே பொருளை எப்படி ஒன்பது ரூபாய்க்குத் தயாரிப்பது என்பதைக் கண்டுபிடிப்பது. அதாவது, அந்தக்

https://telegram.me/aedahamlibrary

கூடுதல் ஒரு ரூபாய் இலாபத்தை, அதே அளவு விற்பனையில், ஆனால் உற்பத்தித் திறனைக் கூடுதலாகப் பத்து சதவீதம் மேம்படுத்துவன்மூலம் பெறலாம். செலவைச் சுருக்கிக் கொள்வதையோ அல்லது தரத்தை விட்டுக் கொடுப்பதையோ நான் இங்கு பரிந்துரைக்கவில்லை. நான் வலியுறுத்துவதெல்லாம் 'வளங்களைச் சிறந்த முறையில் நிர்வாகம் செய்யுங்கள்' என்பதைத்தான்.

ஆரம்ப நிலையில் இருக்கும் மற்றும் நடுத்தர அளவிலான தொழில் அமைப்புகள் பெரும்பாலானவற்றில், தொழிலைத் துவங்குவதற்கோ அல்லது தொடர்ந்து நடத்துவதற்கோ வாங்கிய கடனுக்குச் செலுத்தப்படும் வட்டித் தொகை, அவற்றிலிருந்து கிடைக்கும் இலாபத்தை விழுங்கிவிடுகிறது. அவற்றின் செயல்பாட்டை நீங்கள் மதிப்பீடு செய்தால், அங்குப் பிரச்சனை பணப் பற்றாக்குறை அல்ல என்பதையும், மோசமான, திறமையற்ற நிதி நிர்வாகம்தான் நெருக்கடிக்குக் காரணம் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். பணத்தைப் பெருக்குவதில் திறனற்று இருப்பதும், செலவுகளை நிர்வகிப்பதில் கவனக் குறைவாக இருப்பதும், அவர்களை ஒரு நெருக்கடியான சூழ்நிலைக்கு இட்டுச் செல்கின்றன. இதன் விளைவாக, அதிக வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுவதால், அது அவர்களது இலாபத்தைச் சுரண்டிவிடுகிறது. வருடா வருடம் கொள்முதல் அதிகரிக்கிறது. ஆனால் அது இலாபங்களை ஏன் அதிகரிப்பதில்லை என்பதற்குப் போதுமான விளக்கம் இல்லை. அதே நேரத்தில், சிறப்பாக நிர்வகிக்கப்படும், திறமையோடு வழிநடத்தப்படும் மாபெரும் நிறுவனங்களைக் கவனித்துப் பாருங்கள். ஒவ்வொரு வருடமும் அவர்களது கொள்முதல் மற்றும் இலாபங்கள் அதிகரித்திருப்பதை உங்களால் காண முடியும். அது எப்படி நிகழ்கிறது? வளங்களைச் சிறந்த முறையில் நிர்வகிப்பதால்தான்.

மக்கட்தொகைதான் நம் நாட்டின் முக்கியப் பிரச்சனை என்று நாம் கூச்சலிடுகிறோம். உலகம் அதை எப்படிப் பார்க்கிறது? இதே மக்கட்தொகையை, குறைந்த செலவில் சிறந்த மனித ஆற்றலுக்கான ஒரு வளமாக அது கருதுகிறது. உலகின் பிற நாடுகள் தங்கள் செயல்பாடுகளின் பெரும் பகுதியை இந்தியாவிற்கு வெளிக் கொள்முதல் செய்து, தங்கள் இலாபங்களை அதிகரித்துக் கொண்டிருக்கின்றன; அதாவது, கிடைக்கும் வளங்களைச் சிறந்த முறையில் நிர்வகித்துக் கொண்டிருக்கின்றன. துபாயிலும் அதைச் சுற்றியும் தங்கள் கிளைகளை நிறுவி, அவற்றின் வழியாகச் செயல்படுவதற்குப் பன்னாட்டு

https://telegram.me/aedahamlibrary

நிறுவங்களைக் கவர்ந்ததன் மூலம், துபாய், வறண்ட பாலைவனங்களை ஒரு முக்கியப் பொருளாதார மையமாக மாற்றியது. மெச்சக்கூடிய ஒரு வள நிர்வாகம் அது.

உங்களிடம் தேவையான நேரம் இருக்கிறது. ஆனால் நேரம் என்னும் வளத்தை நீங்கள் திறமையாக நிர்வாகம் செய்கிறீர்களா என்பதுதான் கேள்வி. உங்களிடம் போதுமான இடம் இருக்கிறது. ஆனால் இடம் என்னும் வளத்தை நீங்கள் திறமையாக நிர்வாகம் செய்கிறீர்களா என்பதுதான் கேள்வி உங்களிடம் போதுமான பணம் இல்லாததால் நீங்கள் செல்வந்தராக இல்லை என்பதல்ல விஷயம். பணம் என்னும் வளத்தை, நீங்கள் திறமையாக நிர்வாகம் செய்கிறீர்களா என்பதுதான் பேச்சு.

இரும்புத்தாதும் நிலக்கரியும் இல்லாமல், 1960களில் ஜப்பான் எஃகு ஏற்றுமதியில் உலகில் முதலிடம் வகித்தது. எதுவுமே இல்லாமல், அந்நாடு ஏதோ ஒன்றை உற்பத்தி செய்தது. அப்படியானால், ஏதோ ஒன்றை வைத்து அனைத்தையும் அடைந்துவிட முடியும் என்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

உங்கள் வாழ்வின் எங்கோ ஒரு பகுதியில், ஏதோ ஒரு வளம் வீணடிக்கப்படுகிறது அல்லது திறனின்றி நிர்வகிக்கப்படுகிறது. அது என்ன என்பதைக் கண்டறிந்து, அதை மேம்படுத்துங்கள். உங்களது மிக முக்கியமான வளம் நீங்கள்தான் என்பது உறுதி. நீங்கள் உங்களைப் போதுமான அளவு பயன்படுத்திக் கொள்கிறீர்களா?

https://telegram.me/aedahamlibrary

• • •

வாழ்வில் நிறைவு என்ற ஒன்று கிடையாது
நிறைவடைந்த மனங்கள் மட்டுமே உண்டு.
வாழ்வில் தேக்க நிலை என்ற ஒன்று கிடையாது
தேக்கமடைந்த மக்கள் மட்டுமே உண்டு.

வாழ்க்கை என்பது வேலியில்லாத் திறந்த வெளி,
வேண்டியமட்டும் அதில் நிரப்பிக் கொள்ளுங்கள்.

உங்கள் இதயத்தால் எவ்வளவு உருவாக்க முடியுமோ,
மனத்தால் எவ்வளவு நம்ப முடியுமோ,
மனப்போக்கால் எவ்வளவு விசாலமாக்க முடியுமோ,
அந்த அளவிற்கு அதில் இடமிருக்கின்றது!

வாழ்வைப் பொருத்தமாக விவரிக்கும் ஒரே வார்த்தை
'அதிகம்' என்பதுதான்.

https://telegram.me/aedahamlibrary

செய்பவற்றை பக்தியுடன் செய்யுங்கள்

ஓர் எலுமிச்சம் பழத்தை எடுத்து இரண்டாக வெட்டி, அதன் சாற்றை ஒரு டம்ளரில் பிழிந்து வைத்துக் கொள்ளுங்கள். தேவையான அளவு சர்க்கரையையும், ஒரு துளி உப்பையும் அதில் சேர்த்துக் கொள்ளுங்கள். வெறும் உப்பிற்குப் பதிலாக மிளகும் உப்பும் சேர்ந்த கலவையாக இருந்தால் நல்லது. டம்ளரில் குளிர்ந்த நீரை நிரப்பி நன்றாகக் கலக்குங்கள். எலுமிச்சம்பழ ஜூஸ் தயாராகிவிட்டது. இது ஒரு சாதாரணத் தயாரிப்பு. இருந்தாலும், இரு வெவ்வேறு நபர்கள் தயாரிக்கும் எலுமிச்சம்பழ ஜூஸ் ஒரே ருசியைக் கொண்டிருப்பதில்லை. எலுமிச்சம் பழம், சர்க்கரை, உப்பு, மற்றும் தண்ணீர் ஆகியவற்றைத் தாண்டி, கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஓர் அம்சம் அத்தயாரிப்பில் இருக்கிறது. கண்ணுக்குப் புலப்படாத இந்த அம்சம்தான் எல்லா வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறது.

நான் உருவாக்கும், தயாரிக்கும், மற்றும் படைக்கும் அனைத்திலும், கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஓர் அம்சம் இருக்கிறது. சிறந்தவற்றுக்கும் மிகச் சிறந்தவற்றுக்கும், சாதாரணமானவற்றுக்கும் அசாதாரணமானவற்றுக்கும், நல்லவற்றுக்கும் அற்புதமானவற்றுக்கும் இடையே நிலவும் வேறுபாட்டிற்கு, கண்ணுக்குப் புலப்படாத இந்த அம்சம்தான் காரணம். செய்யப்பட்ட வேலை அன்போடும் மகிழ்ச்சியாகவும் செய்யப்பட்டதா அல்லது அக்கறையின்றியும் தயக்கத்தோடும் செய்யப்பட்டதா? செய்யப்படும் எந்தவொரு செயலிலும், நம் இதயத்தின் அர்ப்பணிப்புதான் கண்ணுக்குப் புலப்படாத அந்த அம்சம். ஒரு செயலில் நம் இதயம் 101% இருந்ததா

https://telegram.me/aedahamlibrary

இல்லையா என்பதுதான் கேட்கப்பட வேண்டிய முக்கியமான கேள்வி.

ஒருமுறை நான் என் மகளிடம், "குட்டி, ஒன்று, அன்போடு சமையல் செய் அல்லது சமையலே செய்யாதே. உணவின் ருசியில் என்னால் வித்தியாசத்தை உணர முடியும். பரிமாறப்படும் உணவுக்கு உயிர் இருக்கும் அல்லது அது இறந்து போயிருக்கும். அந்த உணவைத் தயாரிப்பதில் நீ எவ்வளவு இதயபூர்வமாக ஈடுபட்டிருந்தாய் என்பதுதான் வித்தியாசத்தை ஏற்படுத்தும் அம்சம்," என்று கூறினேன்.

பக்தி என்பது வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கடவுளின் உருவச் சிலைகளிடம் மட்டுமே காட்டப்படும் ஒரு பண்புநலன் அல்ல. நாம் செய்யும் அனைத்திலும் நம் இதயம் 101% முழுமையாக ஐக்கியமாகியிருப்பதுதான் பக்தி. அர்ப்பணிப்பு என்று வரும்போது, உங்களிடம் இருப்பதையும் உங்களால் முடிந்ததையும் நீங்கள் கொடுக்கிறீர்கள். பக்தி என்று வரும்போது, நீங்கள் உங்களையே கொடுக்கிறீர்கள். புனிதமான பக்தியுடன் செய்யப்படும் எந்தவொரு வேலையும் ஒரு பிராத்தனைதான்.

ஒருமித்தக் கவனம், மகிழ்ச்சி, மற்றும் அன்பு ஆகியவை பக்தியோடு ஒரு செயலைச் செய்யும்போது உடன் வருபவை. துல்லியம், நளினம், முன்னுணர்வு ஆகியவற்றை பக்தியின் மூலம்தான் அடைய முடியும்.

சோர்வும் பக்தியும் எதிரெதிர் விதத்தில் இயங்குபவை. நம் ஒவ்வொரு செயலையும் நாம் பக்தியுடன் செய்யத் துவங்கும்போதுதான், 'மனிதன் சோர்வுற்றிருப்பதற்காக வடிவமைக்கப்படவில்லை,' என்ற பேசப்படாத இயற்கை விதியை நாம் உணர்வோம். சோர்வை அறியாத ஒருவரை உங்களுக்குத் தெரிந்திருந்தால், அவரைப் பொறுத்தவரை அனைத்தும் பக்தியின் வெளிப்பாடு என்பதையும், அவரது அனைத்துச் செயல்களும் பிரார்த்தனைகளே என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

ஒன்று, செய்யவே செய்யாதீர்கள். அல்லது முழு பக்தியுடன் செய்யுங்கள். இரண்டுக்கும் நடுவில் வேண்டவே வேண்டாம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

• • •

பிரார்த்தனையில் நீங்கள்
பரம்பொருளுடன் பேசுகிறீர்கள்.
தியானத்தில் நீங்கள்
பரம்பொருளுக்குச் செவிமடுக்கிறீர்கள்.

பிரார்த்தனையில் நீங்கள்
உங்களுடைய குரலைக் கேட்கிறீர்கள்.
தியானத்தில் அதற்கு
அப்பாற்பட்டவற்றையும் கேட்கிறீர்கள்.

பிரார்த்தனை என்பது
பரம்பொருளுடனான தகவல் தொடர்பு.
தியானம் என்பது
பரம்பொருளுடனான ஐக்கியம்.

https://telegram.me/aedahamlibrary

உங்கள் வல்லமையையும் திறனையும் மேம்படுத்துங்கள், அதுதான் முன்னேற்றம்

"இம்முறையில்தான் நாங்கள் இதுவரை செய்து வந்துள்ளோம். எனவே, அதை இப்படித்தான் செய்ய வேண்டும்," என்று சிந்திப்பதை நிறுத்துங்கள். சம்பிரதாயங்களால் முடக்கப்பட்டுவிடாதீர்கள். பனிக்கட்டியில் எதுவும் வளர்வதில்லை. நம் கடந்தகாலம் நம் மனத்தை உறையவைத்து விட்டால், புதிய யோசனைகள் முளைக்காது. பின்னோக்கிய, பின்தங்கிய சிந்தனைகளை நிறுத்திவிட்டு, முன்னோக்கிய, முன்னேற்றமான சிந்தனையைத் துவங்குங்கள். செயற்கைக்கோள்களை வடிவமைப்பது முதல், குழந்தைகளை வளர்ப்பதுவரை, எந்தவொரு மனித முயற்சியிலும் கச்சிதத்தை அடைவது என்பது இயலாத காரியம். மேம்பாட்டிற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. வெற்றிகரமான மனிதர்கள் இதை நன்றாக அறிந்துள்ளனர். அதனால்தான், "என்னால் இதைச்சிறப்பாகச் செய்ய முடியுமா?" என்று அவர்கள் கேட்பதில்லை. மாறாக, "இதை இன்னும் சிறப்பாக எப்படிச் செய்யலாம்?" என்று கேட்கின்றனர்.

மனிதன் எங்கு சென்றடைய விரும்புகிறானோ, அதுவே அவனுக்கு ஏற்ற இடம். நீங்கள் மேற்கொள்ளும் அனைத்துச் செயல்களையும் மேம்பாட்டோடும் உயர் தரத்தோடும் எப்படிச் செய்யலாம் என்று சிந்தியுங்கள். அதைச் செய்வது சாத்தியம் என்று நம்புங்கள். ஒரு விஷயத்தைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை, அதைச் செய்வதற்கான ஒரு வழியைக் கண்டுபிடிக்க உங்கள் மனத்தை முடுக்கிவிடும். ஒரு வழி

https://telegram.me/aedahamlibrary

உள்ளது. அதைவிடச் சிறந்த ஒரு வழியும் உள்ளது. ஒரு விஷயத்தைச் செய்வது இயலாத காரியம் என்று நீங்கள் நம்பினால், அதை ஏன் செய்ய முடியாது என்பதை நிரூபிக்கும் வேலையில் உங்கள் மனம் இறங்கிவிடும். ஆனால், ஒன்றைச் செய்ய முடியும் என்று உண்மையிலேயே நீங்கள் நம்பினால், அதைச் செய்யும் வழிகளைக் கண்டறிய உங்கள் மனம் உங்களுக்கு உதவும் வேலையில் இறங்கிவிடும். நீங்கள் அனுமதியளிக்கும் பட்சத்தில், உங்கள் மனம் ஒரு வழியைக் கண்டுபிடிக்கும். நம்மில் பலர் நம் விருப்பங்களை அடித்துத் துரத்திவிடுவதற்கான காரணம், நம்மால் அதை ஏன் செய்ய முடியாது என்பதில் கவனம் செலுத்துவதால்தான். உண்மையில் நாம் கவனம் செலுத்த வேண்டியது, ஏன் அதைச் செய்ய வேண்டும், எப்படி அதைச் செய்ய வேண்டும் என்பதில்தான்.

வேலைமுதல், வீடு மற்றும் சமூக மேம்பாடுவரை, நம் வாழ்வில் வெற்றிக்கான சூத்திரம் இதுதான்: 'நீங்கள் செய்பவற்றை இன்னும் சிறப்பாகச் செய்யுங்கள்' (உங்கள் வேலையின் தரத்தை மேம்படுத்துங்கள்); 'நீங்கள் செய்பவற்றை இன்னும் அதிகரியுங்கள்' (நீங்கள் செய்யும் வேலையின் அளவைக் கூட்டுங்கள்). தரத்தில் உயர்வும், அளவில் வளர்ச்சியும் ஏற்படுவதுதான் முன்னேற்றம்.

நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பதைவிட நீங்கள் இன்னும் சிறப்பானவர்; எனவே, நீங்கள் ஏற்கனவே செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும் இன்னும் சிறப்பாகச் செய்யக்கூடியவர் என்பதை நீங்கள் உங்களுக்குத் தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டேயிருங்கள். மேலும், நீங்கள் செய்ய முடிவதைக் காட்டிலும் குறைவாகவே செய்கிறீர்கள்; எனவே, நீங்கள் ஏற்கனவே செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும் உங்களது அனைத்துச் செயல்களையும் உங்களால் இன்னும் அதிகமான அளவில் செய்ய முடியும் என்பதையும் தொடர்ந்து நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

திறன் என்பது நீங்கள் ஏற்கனவே செய்து கொண்டிருப்பவற்றை மேலும் சிறப்பாகச் செய்வது. வல்லமை என்பது நீங்கள் ஏற்கனவே செய்து கொண்டிருப்பவற்றைக் காட்டிலும் இன்னும் அதிகமாகச் செய்வது.

உங்கள் திறனை மேம்படுத்துங்கள். உங்கள் வல்லமையை உயர்த்துங்கள். அதுதான் முன்னேற்றம்.

https://telegram.me/aedahamlibrary

• • •

முடிவு இவ்வளவு அழகாக இருக்கும் என்று மட்டும் தெரிந்திருந்தால் . . .

ஒரு விபத்தில் அவனுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. அதனால் அவனால் எழுந்து நடமாட முடியவில்லை. பல மாதங்கள் அவன் படுத்தப் படுக்கையாக இருக்க வேண்டிய நிலைக்கு ஆளானான். ஒரு முன்னணிப் பன்னாட்டு நிறுவனத்தில் அவன் ஒரு நல்ல பதவியில் வேலையில் இருந்தான். இப்போது அது பழைய நினைவாகிவிட்டது. அவன் கவனித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்த அவனது வயதான தாயார், இப்போது அவனைக் கவனித்துக் கொண்டிருந்தார். இது கொடுமையான நிலை என்று நினைக்கிறீர்களா? இல்லை! இந்தக் காலகட்டம், நடமாட முடியாத அந்த ஆத்மாவிற்கு எல்லையில்லா நேரத்தைக் கொடுத்தது. அவன் அதை அற்புதமாகப் பயன்படுத்திக் கொண்டான். அந்த நேரம் முழுவதையும் அவன் படிப்பதற்குச் செலவிட்டான். அப்புத்தகங்களில் உறைந்து கிடந்த, மாபெரும் மனிதர்களின் சிந்தனைகளில் அடங்கியிருந்த செம்மையான அறிவைக்கொண்டு, தன் உள்ளார்ந்த இருத்தலுக்கு ஊட்டமளித்தான். அந்த நேரத்தில் அவன் ஓர் ஆன்மீக பந்தத்தை உருவாக்கினான். தன் வாழ்வை ஒரு குறிக்கோளுக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்று உணர்ந்தான். அவனது வாழ்வில் அனைத்தும் காலாகாலத்திற்குமாக மாறியது. இன்று அவன் தன் வாழ்வின் நோக்கத்திற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறான். இன்று அவனது வாழ்வு ஆன்மீகம் பக்கம் சாய்ந்துள்ளது. இன்று அவனது வாழ்க்கையை, எலும்பு முறிவுக்கு முன், எலும்பு முறிவுக்குப் பின் என்று வேறுபடுத்திப் பார்க்கலாம். அவனது நாட்குறிப்பின் ஒரு பக்கத்தில் அவன் இவ்வாறு எழுதியிருந்தான்: "முடிவு இவ்வளவு அழகாக இருக்கும் என்பது எனக்குத்

https://telegram.me/aedahamlibrary

தெரிந்திருந்தால், நான் துவக்கத்திலிருந்தே அதை அனுபவித்திருப்பேன்."

நான் உங்களிடம் கேட்கிறேன்: "ஒரு மகிழ்ச்சியான முடிவைக் கொண்டிராத ஒரு புத்தகத்தை எந்தவொரு அன்பான பெற்றோராவது தன் குழந்தை படிப்பதற்குத் தருவாரா?"

சகித்துக் கொண்ட அனைத்து விஷயங்களுக்காகவும், அந்த ஆத்மாவை நாம் 'மகாத்மா' என்று அழைக்கிறோம். துணிந்து எதிர்கொண்டமைக்காக, அந்த முன்னாள் பள்ளி ஆசிரியையை 'அன்னை' என்று விளிக்கிறோம். சிலுவையைச் சுமந்ததால், அவர் நம்பிக்கையின் ஓர் அடையாளமாக விளங்கினார். சிறையில் பிறந்தாலும் விசுவாசத்திற்குரிய கடவுளாக அவர் வாழ்ந்தார். முடிவு எப்போதும் அழகாக இருப்பதாகத் தோன்றுகிறது. வரம்பிற்குட்பட்ட நம் புரிதலைத் தாண்டிய 'ஒரு திரைக்கதை' எப்போதும் இருக்கிறது.

திடீர்த் திருப்பங்கள் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? எதிர்பார்ப்புகளும் ஆச்சரியங்களும் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? அதைச் சிரமமான நேரங்கள் என்று அழைக்கலாம். நம்மைப் பரிசோதிக்கும் கணங்களாகக் கருதலாம். ஆனால், "எனக்கு ஏன் இப்படி நிகழ்கிறது?" என்று தன் துன்பங்களைக் கண்டு வருந்தும் ஒவ்வொரு மனிதனும், "ஆஹா, எனக்கா இப்படி நிகழ்கிறது?" என்று தன் ஆசீர்வாதங்களைக் கண்டு கேள்வி கேட்கும் நாட்கள் வரத்தான் போகின்றன.

ஒரு வண்ணத்துப்பூச்சி ஆக வேண்டும் என்ற அடக்க முடியாத ஆவலில் ஒரு கம்பளிப் புழு தன் இறக்கைகளை வளர்த்துக் கொள்வதற்காக தன்னைச் சுற்றி ஒரு கூட்டை நெய்து கொள்கிறது. சில நேரங்களில் நீங்கள் வண்ணமயமாக வெளிவருவதற்காக வாழ்க்கை உங்களை ஒரு கூட்டிற்குள் தள்ளிவிடும். ஒரு புல்லாங்குழலாக உருவாவதற்காக மூங்கில் வெட்டப்படுகிறது. ஒரு சிலையாக உருவாவதற்காகக் கல் செதுக்கப்படுகிறது. ஓர் அணிகலனாக உருவாவதற்காகத் தங்கம் உருக்கப்படுகிறது. நீங்கள் உருவாக்கப்படுவதற்காகத்தான் பரிசோதிக்கப்படுகிறீர்கள். உங்கள் எதிர்காலக் கதை மிகவும் அழகானது. நீங்கள் அதை நம்பித்தான் ஆக வேண்டும். உங்கள் விசுவாசம் பரிசோதிக்கப்படலாம், ஆனால் அதற்குப் பதிலாக உங்களுக்குக் கிடைக்கும் பரிசு ஒரு தரமான வாழ்வாக இருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

நீங்கள் என்னவாக ஆக முடியுமோ, அதுவாக நீங்கள் இறுதியில் ஆக முடிந்தால், வாழ்வில் உங்களால் எதையும் பொறுத்துக் கொள்ள முடியும்.

https://telegram.me/aedahamlibrary

உங்கள்மீது குத்தப்பட்டுள்ள அடையாளங்களைத் துறந்துவிடுங்கள்

"நீ ஏன் உன் உடல்நலத்தில் அக்கறையெடுத்துக் கொள்ளக்கூடாது?" என்று உங்கள் மனைவிக்கு அறிவுரை வழங்கிப் பாருங்கள். அவர் அதை நீங்கள் காட்டும் அன்பு என்று எடுத்துக் கொள்வார். "ஒரு கணவன் என்ற முறையில், உன் ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள் என்று கூறுவதற்கு எனக்கு உரிமை உண்டு என்று நான் நினைக்கிறேன்," என்று கூறிப் பாருங்கள். அவர்மீது நீங்கள் ஆதிக்கம் செலுத்துவதாக அவர் எடுத்துக் கொள்வார். குறித்த நேரத்தில் உணவருந்துமாறு உங்கள் கணவரிடம் கூறிப் பாருங்கள். உங்கள் கரிசனத்தை அவர் பாராட்டுவார். மாறாக, "நான் என் தந்தை வேலை செய்வதையும் பார்த்திருக்கிறேன், ஆனால் அவர் உங்களைப் போல அல்ல. உங்களால் ஏன் சரியான நேரத்தில் சாப்பிட முடியவில்லை?" என்று சொல்லிப் பாருங்கள். உங்கள் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்க வேண்டியதாகிவிடும்.

உங்கள் அடையாளங்களைத் தங்கள் உரையாடலில் புகுத்துவதை மக்கள் விரும்புவதில்லை. முத்திரைகளை மக்கள் தங்கள் சுயமதிப்புடன் தொடர்புபடுத்துகின்றனர். முத்திரைகள் மக்கள் மனத்தை மூடிவிடும். ஒரு முத்திரையின் வாயிலாகக் கூறப்படும் எதுவும் ஒருபோதும் நல்ல முறையில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

"பச்சை இலைக் காய்கறிகள் உங்களுக்கு நல்லது." என்று அவரிடம்

https://telegram.me/aedahamlibrary

கூறுங்கள். அதை அவர் ஏற்றுக் கொள்வார். அதற்கு மாறாக, "சைவ உணவை உண்பவர் என்ற முறையில், பச்சை இலைக் காய்கறிகளைச் சாப்பிடுமாறு நான் உங்களுக்குப் பரிந்துரைக்கிறேன்," என்று அவரிடம் கூறுங்கள். விவாதம் வெடிக்கும். 'சைவ உணவை உண்பவர்' என்ற முத்திரைதான் இங்கு பிரச்சனை.

"அவளை மன்னித்துவிடுங்கள். உங்களைக் காயப்படுத்தியவர்கள்மீதும் அன்பு செலுத்துங்கள்," என்று அவரிடம் கூறுங்கள். நீங்கள் கூறுவதை ஒருவேளை அவர் கவனிக்கக்கூடும். "உண்மையான கிறித்தவன் என்ற முறையில், அவளை மன்னிக்குமாறும், உன் எதிரிகளையும் நேசிக்குமாறும் நான் உன்னைக் கேட்டுக் கொள்கிறேன்," என்று கூறிப் பாருங்கள். நீங்கள்தான் அவரது அடுத்த எதிரி. "கிறித்தவன்' என்ற முத்திரைதான் பிரச்சனை.

"நம் விமான நிலையங்கள் அதிக ஒழுங்குடன் செயல்பட்டால் நன்றாக இருக்கும்," என்று அவளிடம் கூறுங்கள். அவள் உங்கள் கண்ணோட்டத்தை ஆமோதிக்கக்கூடும். "நான் சிங்கப்பூரில் வாழ்ந்திருக்கிறேன். விஷயங்களை எவ்வளவு ஒழுங்காக வைத்துக் கொள்ள முடியும் என்பதைப் பற்றி நான் அறிவேன். நமது விமான நிலையங்களும் அதிக ஒழுங்குடன் செயல்பட்டால் நன்றாக இருக்கும்," என்று கூறினால், நீங்கள் தேசத் துரோகியாகக் கருதப்படுவீர்கள்.

நீங்கள் ரோட்டரி கிளப்பில் இருப்பது அவளுக்கு ஒரு பிரச்சனையாக உள்ளது. அதில் உள்ள ஒருவர் பிராமணர்களுக்கு எதிரானவர்; மற்றொருவர் அசாமில் இருந்து வரும் மக்களை நம்பாதவர். "அனைத்து மார்வாடிகளும் அப்படித்தான்," என்பது அவனது முட்டாள்தனமான பொதுக் கருத்து.

இது மனிதனின் ஒரு பலவீனம். முத்திரை குத்தப்பட்டால், எப்படியோ அவன் தன்னைப் பற்றிக் குறைவாக உணர்கிறான். எனவே, தன் வலிமை முழுவதையும் ஒன்றுதிரட்டித் தன்னைக் காத்துக் கொள்ள முயற்சிக்கிறான். வினோதமாக, முத்திரைகள் மனிதர்களிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துகின்றன. அவருக்கு உங்களிடம் பிரச்சனை இல்லை. அவருக்குப் பிரச்சனை நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நாற்காலி, பதவி, மதம் ஆகியவற்றிடம்தான்.

நமக்கு முத்திரைகள் ஏன் தேவைப்படுகின்றன? பதவி உங்களுக்குப் புகழ் சேர்க்கிறதா அல்லது நீங்கள் உங்கள் பதவிக்குப் புகழ்

https://telegram.me/aedahamlibrary

சேர்க்கிறீர்களா? நாற்காலிக்கு நீங்கள் தேவையா அல்லது உங்களுக்கு நாற்காலி தேவைப்படுகிறதா ? முத்திரைகள் மட்டும்தான் உங்களை வரையறுக்கிறது என்றால், முத்திரைகள் இன்றி உங்களால் எதுவும் செய்ய முடியாது. முத்திரைகளின் வலிமையால் வாழும் எவரொருவராலும் ஆழ்ந்த உறவுகளைக் கொண்டிருக்க முடியாது. உங்கள் முத்திரைகளின் மதிப்பை நீங்கள்தான் கூட்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், உங்களுக்கு முத்திரைகள் தேவையில்லை. அதுதான் ஆழ்ந்த உறவுகளின் துவக்கம்.

"குருவே, தயவு செய்து என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்," என்று ஒருவர் கூறினார். "நீ யார் என்பதை எனக்குச் சொல்," என்று குரு கேட்டார். "ராமசந்திர ராவ்," என்று அவர் பதிலளித்தார். "அது உன் பெயர். அதை உதறிவிட்டு நீ யார் என்பதை எனக்குச் சொல்," என்று குரு மீண்டும் கேட்டார். "நான் ஒரு தொழிலதிபர்," என்று அவர் கூறினார். "அது உன் தொழில், அதை விட்டுவிட்டு, நீ யார் என்பதைக் கூறு." "நான் ஓர் ஆண்." "அது உன் பாலினம். அதை அகற்றிவிட்டு நீ யார் என்பதைக் கூறு." "குருவே, இப்போது நான் யார் என்பது எனக்குத் தெரியவில்லை!" "மிகவும் நல்லது, இதுதான் தேடுபவனுக்கான துவக்கப் புள்ளி. உன் முத்திரைகள் அனைத்தையும் களைந்துவிட்டு, நீ நீயாக மட்டும் வருகிறாய் அல்லவா, அதுதான் தேடுபவனின் துவக்கப் புள்ளி. உன் பெயர் அச்சிடப்பட்ட அட்டை பூசாரிகளிடம் வேலை செய்யும், ஆனால் கடவுளிடம் அதற்கு எந்த மதிப்பும் கிடையாது," என்று குரு வலியுறுத்தினார்.

உங்கள் முத்திரைகளை விட்டொழிப்பதன் மூலம் நீங்கள் உங்களுக்கும் பிறருக்கும் உதவுங்கள். நீங்கள் போதுமானவர்தான் . . . போதுமானதற்கும் மேலானவர்தான். வெறுமனே தனியாக இருக்கும் நீங்கள்தான் அனைத்திற்குமான துவக்கப் புள்ளி. நீங்கள் நீங்களாகவே உங்களுக்குப் போதுமானவராக இருப்பதுதான் சுதந்திரம். அதில்தான் உண்மையான விடுதலை அடங்கியுள்ளது.

https://telegram.me/aedahamlibrary

• • •

ஓர் இரும்புத் துண்டின் விலை **250** ரூபாய்!

அதை ஒரு குதிரை லாடமாக உருவாக்கும்போது
அதன் மதிப்பு **1000** ரூபாய்;

ஊசிகளாக மாற்றும்போது
அதன் மதிப்பு **10,000** ரூபாய்;

கடிகாரத்திற்கான கம்பிச் சுருளாக மாற்றும்போது
அதன் மதிப்பு **1,00,000** ரூபாய்.

உங்கள் சொந்த மதிப்பு
நீங்கள் எதுவாக இருக்கிறீர்களோ
அதைக் கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை.
ஆனால், உங்களிலிருந்து நீங்கள்
எதை உருவாக்குகிறீர்களோ
அதைக் கொண்டுதான் தீர்மானிக்கப்படுகிறது.

https://telegram.me/aedahamlibrary

பணத்திற்கு ஞாபகசக்தி கிடையாது, அனுபவத்திற்கு உண்டு

உங்கள் கல்விக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகையைப் பற்றி நீங்கள் ஒருபோதும் அறியப் போவதில்லை. ஆனால், உங்கள் பள்ளி மற்றும் கல்லூரி நினைவுகளை உங்கள் வாழ்நாள் முழுதும் நினைவுபடுத்தி, உங்கள் மனத்தில் அதை மீண்டும் மீண்டும் வாழ்ந்து பார்ப்பீர்கள். இன்றிலிருந்து ஒருசில வருடங்களில், மருத்துவமனைக்கு நீங்கள் கட்டிய பணத்தை நீங்கள் மறந்துவிடுவீர்கள். ஆனால், உங்கள் தாயாரின் உயிரைக் காப்பாற்றிய நினைவுகளையோ அல்லது புதிதாகப் பிறந்த குழந்தையுடன் நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதையோ எப்போதும் நீங்கள் மகிழ்ச்சியுடன் அசைபோட்டுக் கொண்டிருப்பீர்கள். உங்கள் தேனிலவிற்குச் செலவான தொகையை நீங்கள் நினைவில் வைத்திருக்கப் போவதில்லை, ஆனால் இருவரும் இணைந்திருந்த நேரத்தில் நீங்கள் அனுபவித்த மகிழ்ச்சியை உங்கள் கடைசி மூச்சுவரை நினைவில் வைத்திருப்பீர்கள். பணத்திற்கு ஞாபக சக்தி கிடையாது, அனுபவத்திற்கு உண்டு.

நல்ல காலம் மற்றும் மோசமான காலம், செழிப்பான நேரங்கள் மற்றும் ஏழ்மையான நேரங்கள், எதிர்காலம் பாதுகாப்பாகத் தோன்றிய தருணங்கள், எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்று நீங்கள் அறியாத கணங்கள் என்று, வாழ்க்கை ஏதோ ஒரு வழியில் அனைவருக்கும் ஒரு மிகப் பெரிய ரங்கராட்டினத்தைப்போல் மேலும் கீழும் அலைக்கழிக்கப்படுவதாகவே அமைந்துள்ளது. அந்த அனைத்து அபரிமிதத்தையும் தாண்டி, அந்த அனைத்துப் பற்றாக்குறையையும் தாண்டி எஞ்சியிருப்பது அனுபவங்களின் நினைவுகள்தான். சில

https://telegram.me/aedahamlibrary

சமயங்களில் பர்ஸ் நிறைந்திருந்தது . . . சில நேரங்களில் சட்டைப்பைகூடக் காலியாக இருந்தது. போதுமான அளவு இருந்தும், நீங்கள் கவலைப்பட்ட நேரம் உண்டு. போதுமான அளவு இல்லாதபோதும், நீங்கள் புன்னகை பூத்ததற்கான காரணங்கள் உண்டு. இன்று உங்கள் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்து, நீங்கள் பிறருடன் இணைந்து சிரித்து மகிழ்ந்த நேரங்களுக்காக நன்றிப்பெருக்குடன் ஆனந்தக் கண்ணீர் வடிக்கலாம்; நீங்கள் தனிமையில் அழுத நேரங்களை நினைத்து ஒரு புன்னகை சிந்தலாம். மொத்தத்தில், உங்கள் வாழ்க்கை உங்கள் சொந்த வரலாற்றை உருவாக்குவதற்கான அனுபவங்களால் நிறைந்துள்ளது. உங்களால் மட்டுமே அவற்றையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியும்.

முதன்முறையாக யாருடைய உதவியும் இன்றி உங்கள் சைக்கிளை நீங்கள் கீழே விழாமல் ஓட்டியது . . .

உங்களைத் திருமணம் செய்து கொள்ளுமாறு நீங்கள் அவளிடம் கேட்ட இரண்டு வருடங்களுக்குப் பிறகு, அவள் முதன்முறையாக உங்களிடம் 'சரி' என்று கூறியது . . .

முதல் அழுகை . . . முதல் காலடி . . . முதல் முத்தம் . . . முதல் வார்த்தை . . . உங்கள் குழந்தைகள். . .

உங்களுக்கு உங்கள் மகள் கொடுத்த முதல் பரிசு. . . உங்கள் பெற்றோருக்கு நீங்கள் கொடுத்த முதல் பரிசு . . .

முதல் விருது . . . முதல் சமூகப் பாராட்டு . . . முதன்முறையாக மேடையில் தோன்றியது . . .

பட்டியல் நீண்டுகொண்டே போகும் . . . காலாகாலத்திற்கும் நினைவில் நிலைத்து நிற்கும் அனுபவங்கள்.

பௌதீகப் பொருட்களுக்குப் பணத்தால் விலை கொடுத்தாக வேண்டும் என்பதை மறுப்பதற்கு இல்லை. ஆனால் உண்மை என்னவென்றால், இறுதியில், அனுபவத்தின் விலை மறக்கப்பட்டுவிடும், ஆனால் அனுபவம் என்றும் நினைவில் நிலைத்திருக்கும்.

திடீரென்று பணவீழ்ச்சி ஏற்பட்டால் என்ன செய்வது?

https://telegram.me/aedahamlibrary

ஏற்பட்டுவிட்டுப் போகட்டும், ஆனால் உங்கள் வாழ்க்கைத் தரத்தில் எந்த வீழ்ச்சியும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பெற்றோரை ஆன்மீகச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்ல முடியாவிட்டால் பரவாயில்லை, அருகில் உள்ள ஒரு கோவிலுக்காவது அழைத்துச் செல்லுங்கள். ஒரு சர்வதேச விடுமுறைக்கு உங்கள் குழந்தைகளை அழைத்துச் சென்று அவர்களோடு விளையாட முடியாவிட்டால் பரவாயில்லை, உங்கள் உள்ளூர்ப் பூங்காவிலாவது அவர்களோடு விளையாடுங்கள்.

உங்கள் அன்பிற்குரிய குழந்தையை மடியில் இருத்திக் கொஞ்சுவதற்குப் பணம் தேவையில்லை. உங்கள் ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், தலைமைத்துவப் பண்புகளை அவர்களிடம் உருவாக்குவதற்கும், இனி வரவிருக்கும் அற்புதமான நேரத்திற்குத் தயாராவதற்குமான சரியான நேரம் இது! உங்கள் ஆரோக்கியம், அறிவுப் பெருக்கம், மற்றும் ஆன்மீக வளர்ச்சி ஆகிய அம்சங்கள் பொருளாதாரத்தைச் சார்ந்தவை அல்ல.

காலம் உருண்டோடும் . . . பொருளாதாரம் மேம்படும் . . . பணப்புழக்கம் மீண்டும் அதிகரிக்கும் . . . இவற்றுக்கிடையில், நீங்கள் பின்னோக்கிப் பார்த்து, அந்தப் பணவீழ்ச்சிக் காலத்தில் இருளில் நிலை தடுமாறியதைத் தவிர நீங்கள் வேறெதுவும் செய்யவில்லை என்று உணரக்கூடாது என்பது என் விருப்பம். பணவீழ்ச்சியினால் நீங்கள் பணத்தை இழக்கக்கூடும். ஆனால், அவை உங்கள் அனுபவ இழப்புக்குக் காரணமாக அமைய அனுமதிக்காதீர்கள். உங்களிடம் இருப்பதைக் கொண்டு உங்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்றால், இன்னும் எவ்வளவு அதிகமாக இருந்தாலும், உங்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது.

உங்கள் வாழ்க்கையின் மூலம் ஒரு செய்தியை உலகிற்கு வெளிப்படுத்துங்கள்: நான் எவ்வாறு உணர்கிறேன் என்பதற்கும், என்னிடம் எவ்வளவு இருக்கிறது என்பதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

https://telegram.me/aedahamlibrary

• • •

பிறக்கும்போது, உங்கள் வாழ்க்கை
ஒரு வெற்று ஓவியத் துணியாய் இருந்தது.
உங்கள் ஆற்றல்கள் வண்ணங்களாகவும்,
தேர்வுகள் தூரிகைத் தீட்டல்களாகவும் விளங்கின.

இறக்கும்போது, ஒன்று, இத்துணி
விலைமதிப்பற்றப் பொக்கிஷமாகப் பாதுகாக்கப்படலாம்
அல்லது யாரும் கண்டுகொள்ளாத
ஒரு கிறுக்கலாய் முடியலாம்

உங்கள் வாழ்க்கையைத் தீட்டுவதில்
நீங்கள் எவ்வளவு சிறந்த ஓவியராக இருந்தீர்கள்
என்பதற்குத் தீர்ப்பு வழங்கப்படும் நாள் அதுதான்.

https://telegram.me/aedahamlibrary

• • •

செல்லம் கொடுத்தல் பலவீனப்படுத்தும், அன்பு உருவாக்கும்

அன்பு காட்டப்படுவதைவிட, செல்லம் கொடுக்கப்படுவதை மக்கள் அதிகமாக விரும்புவதுபோல் தோன்றுகிறது. இவற்றுக்கிடையே என்ன வேறுபாடு உள்ளது? பெரும்பாலான மக்களைப் பொறுத்தவரை, அன்பு செலுத்தப்படுவது என்றால் தங்கள் அன்புக்குரியவர்கள் எப்போதும் தங்களிடம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும், தாங்கள் கூறுவதை எப்போதும் ஒப்புக் கொள்ள வேண்டும், தங்களை ஒருபோதும் குறை கூறவோ விமர்சிக்கவோ கூடாது, சவாலான முயற்சிகளை மேற்கொள்ள ஒருபோதும் அவர்கள் தங்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது, மொத்தத்தில், தங்கள் இஷ்டப்படியே தங்களை விட்டுவிட வேண்டும், தாங்கள் மாற வேண்டும் என்பதற்கான எந்த அறிகுறியையும் தங்களிடம் காட்டக்கூடாது என்று நினைக்கின்றனர். செல்லம் கொடுத்தல் என்பது என்மீது எவ்வாறு அன்பு காட்டப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ அவ்வாறு என்மீது நீங்கள் அன்பு செலுத்துவதாகும்.

அன்பு என்பது செல்லம் கொடுக்கும் விஷயம் அல்ல. அன்பு என்பது ஆக்கபூர்வமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவது. செல்லம் கொடுத்தல் உங்களை பலவீனப்படுத்தும். அன்பு உங்களை உருவாக்கும்.

எந்தவொரு மனிதனும் கச்சிதமானவன் அல்ல. மேம்படுவதற்கு எல்லையற்ற வாய்ப்புகள் உள்ளன. நீங்கள் மேம்படுகிறீர்களா

https://telegram.me/aedahamlibrary

இல்லையா என்பதைப் பற்றி, உங்களை நேசிப்பவர்களைத் தவிர, வேறு எவருக்கும் அக்கறை கிடையாது. சகித்துக் கொள்ளுதல் என்ற பெயரில் கொடுக்கப்படும் செல்லம், உங்களது குறைபாடுகளைக் களையாது. உங்கள் சுயமதிப்பைக் காயப்படுத்துவதாக இருந்தாலும்கூட, உங்களிடம் ஆக்கபூர்வமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்த, அன்பு உங்களுக்கு ஆலோசனை வழங்கும். செல்லம் கொடுத்தல் உங்கள் ஆணவத்தைத் தூண்டும் ஒன்று. அன்பு உங்கள்மீது காட்டப்படும் ஒன்று.

எந்தவொரு மனிதனும் எல்லா நேரங்களிலும் சரியாக இருக்க முடியாது. எது சரியில்லையோ அது சரியாகத்தான் உள்ளது என்ற மாயையை, செல்லம் கொடுத்தல் தோற்றுவிக்கும். அன்பு ஒரு கண்ணாடிபோலச் செயல்படும். அது நீங்கள் உங்களை எப்படிப் பார்க்க விரும்புகிறீர்களோ அப்படியில்லாமல், நீங்கள் உண்மையில் எப்படி இருக்கிறீர்களோ அப்படி உங்களை உங்களுக்குப் பிரதிபலித்துக் காட்டும். செல்லம் கொடுத்தல் என்பது நல்லவராகத் தோற்றமளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்கொள்ளப்படும் வெளிவேஷம். தவறாகக் கருத்தப்படக்கூடிய வாய்ப்பு இருந்தாலும், அன்பு ஓர் ஆக்கபூர்வமான விமர்சகராகச் செயல்படும்.

ஊக்குவிப்பைப் பொறுத்தவரை, பலரது நிலை சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. உங்களுக்கு வெளியே உள்ள ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் உங்களை உத்வேகப்படுத்துவது உங்களுக்கு அவசியம். செல்லம் கொடுத்தல் உங்களை உங்கள் ஆற்றலுக்கும் கீழே செயல்பட வைத்துவிடும். உங்கள் பாதுகாப்பு வட்டத்தைவிட்டு நீங்கள் வெளியே வந்து துணிச்சலான காரியங்களை மேற்கொள்வதிலிருந்து உங்களைத் தடுத்துவிடும். நண்பனை ஆக்கபூர்வமாக உருவாக்குவதற்கு, நட்பையே பணயம் வைக்க அன்பு துணியும். 'வாழ்விற்கு உன்னை இன்னும் அதிகமாக அர்ப்பணி,' என்பது ஆழமான அன்பின் வெளிப்பாடு. நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ, உங்களை அப்படியே விட்டுவிட முடியாது. மாற்றத்திற்கு உட்படாத எதுவும் வளர்வதில்லை. ஒருவனை அவனது உறக்கத்திலிருந்து எழுப்புவது வெறும் தூய்மையான, சிறப்பான அன்பு.

செல்லம் கொடுக்கப்படுவது மது அருந்துவது போன்றது. அது ஓர் இனிமையான மாலைப் பொழுதை உங்களுக்குக் கொடுக்கலாம்; ஆனால் உங்களிடம் வேறு எந்த மாற்றமும் ஏற்படாது. அன்பு

https://telegram.me/aedahamlibrary

தியானத்தைப் போன்றது. அங்கு எதுவும் ஏற்படாததுபோல் தோன்றும். ஆனால், உங்களிடம் பரிபூரண மாற்றம் நிகழும். நேசிக்கப்படுவதற்கும் உருவாக்கப்படுவதற்கும் ஆவலோடு இருங்கள். செல்லம் கொடுக்கப்பட்டு, தேக்கத்திற்கு ஆளாவதற்கு அனுமதிக்காதீர்கள்.

என் அன்புக்குரியவர்களே! நான் உங்களிடம் கூறுவது இதுதான்: "நீங்கள் விரும்பும் வடிவத்தில் என் அன்பு உங்களிடம் வராமல் இருக்கலாம். ஆனாலும், என் அன்பு ஒரு குறிக்கோளை நோக்கிச் செயல்படுகிறது. அது உங்களை உருவாக்கும்."

https://telegram.me/aedahamlibrary

• • •

ஏற்றுக்கொள்ளுதல் என்பது நேர்மறையான உணர்ச்சி

ஒருவர் ஏதோ ஒரு காரியத்தை எனக்கு விருப்பமில்லாத வழியில் செய்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனும்போது நான் கோபப்படுகிறேன். அதே சமயம், ஒருவர் ஏதோ ஒரு காரியத்தை எனக்கு விருப்பமில்லாத வழியில் செய்தாலும், அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியும்போது நான் அதைப் பொறுத்துக் கொள்கிறேன்.

என்னிடம் இல்லாத ஒன்றை ஒருவர் வைத்திருக்கிறார் அல்லது என்னால் ஏற்படுத்த முடியாத விளைவுகளை ஒருவரால் ஏற்படுத்த முடிகிறது, ஆனால் அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று வரும்போது நான் பொறாமைப்படுகிறேன். அதே சமயம், அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடிந்தால் நான் உத்வேகம் பெறுகிறேன்.

நிச்சயமற்ற நிலையை நான் எதிர்கொள்ள வேண்டியிருந்து, அதை நான் எவ்வாறு சமாளிக்கப் போகிறேன் என்பது குறித்து நான் உறுதியின்றி இருந்து, அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதபோது, அது எனக்குள் பயத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் அதையே என்னால் ஏற்றுக் கொள்ள முடியும்போது, அது எனக்குள் துணிச்சலை ஏற்படுத்துகிறது.

என்னை உணர்ச்சிரீதியாகக் காயப்படுத்திய ஏதோ ஒன்றை ஒருவர் செய்ததை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதபோது, அது எனக்குள் பகைமை உணர்வை உருவாக்குகிறது. அந்த விஷயத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியும்போது, அவர்களை மன்னிப்பதற்கு அது எனக்கு

https://telegram.me/aedahamlibrary

உதவுகிறது.

என் கண்முன் இல்லாத ஒருவர் என் நினைவில் குடிகொண்டிருக்கிறார், ஆனால் அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்ற நிலையில், "நீங்கள் என்னுடன் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்," என்று நான் கூறுகிறேன். ஆனால் அதையே என்னால் ஏற்றுக் கொள்ள முடியும் என்ற நிலையில், "நான் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறேன்," என்று கூறுகிறேன்.

உணர்ச்சிச் சமன்பாடு மிகவும் எளிதான ஒன்று.

ஏதோ ஒன்று + ஏற்றுக் கொள்ளுதல்= நேர்மறையான உணர்ச்சி

ஏதோ ஒன்று + மறுத்தல் = எதிர்மறையான உணர்ச்சி

எனவே, "யாரோ ஒருவர்' அல்லது 'ஏதோ ஒன்று' என்னை நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ உணரச் செய்வதில்லை. ஏதோ ஒன்றை அல்லது யாரோ ஒருவரை நான் 'ஏற்றுக் கொள்வதும்' அல்லது "ஏற்றுக் கொள்ளாததும்'தான் என்னை நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ உணரச் செய்கிறது. என் உணர்ச்சிகளின் தரத்தைத் தீர்மானிப்பது இந்த உலகம் அல்ல, மாறாக, உலகிற்கு நான் அளிக்கும் செயல்விடையின் (ஏற்றுக் கொள்ளுதல் அல்லது ஏற்றுக் கொள்ள மறுத்தல்) தரம்தான் அதைத் தீர்மானிக்கிறது.

அடுத்த முறை ஏதோ ஓர் எதிர்மறையான உணர்ச்சியால் நான் சலனப்படும்போது, யாரால் அல்லது எதனால் நான் தொந்தரவுக்கு ஆளாகியுள்ளேன் என்று கேட்காமல், யாரை அல்லது எதை நான் தடுக்கிறேன் (ஏற்றுக் கொள்ள மறுத்தல்) என்று நான் ஆராய்வேன். தடுப்பதற்கு மாறாக அதை நான் ஏற்றுக் கொள்வேன். அப்போது அந்த எதிர்மறை எண்ணம் நேர்மறையான ஒன்றாக மாறிவிடும்.

'ஏதோ ஒன்று' அல்லது 'யாரோ ஒருவ'ரைக் குறைகூறுவதை நிறுத்திவிட்டு, 'ஏற்றுக் கொள்ளும் தன்மை'யைக் கொண்டு வாழ்விற்குச் செயல்விடை அளிக்கும் பொறுப்பை எடுத்துக் கொள்ளத் துவங்கும்போது, நாம் நம் உணர்ச்சிகளை நிர்வகிக்கத் துவங்குகிறோம்.

https://telegram.me/aedahamlibrary

• • •

உங்கள் வருங்காலத்தை உருவாக்குவதற்குத்தான் உங்களுக்கு அறிவு அளிக்கப்பட்டுள்ளது

தோல்விகளுக்குமேல் ஏற்பட்டத் தோல்விகளுடனும், பத்தொன்பது வருட மிகச் சாதாரண வாழ்க்கை அனுபவச் கமையுடனும் இருந்த நான், என் நண்பர் விஜயராகவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்: "ஒரு ஸ்பிரிங்கை எவ்வளவு தூரம் அழுத்திப் பிடிக்கிறாயோ, அதை நீ விடுவிக்கும்போது அவ்வளவு வேகத்துடன் அது பாய்ந்து மேலெழும். உன் வாழ்வில் 19 வருடங்கள் தோல்விகளால் நிறைந்திருந்தால் என்ன? இப்போது எம்பிக் குதி. உன் வாழ்க்கைக் கதையை எழுது." அது எனக்கேற்பட்ட முதல் விழிப்பு. அதன் பிறகு, நான் என் வாழ்வைப் பின்னால் திரும்பிப் பார்க்கவேயில்லை. அதற்கான அவசியம் இருக்கவில்லை. "நீ இப்போது கூறியதை, ஐந்து வருடங்களுக்கு முன் என்னிடம் வந்து கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்," என்று நான் விஜயராகவனிடம் கூறவில்லை என்பதை நினைத்து மகிழ்ந்தேன்.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அறிவு கைவரப் பெறும்போது நீங்கள் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் — உங்கள் கடந்த காலத்தையா அல்லது எதிர்காலத்தையா என்பதுதான்.

"எனக்கு ஆங்கிலம் அவ்வளவு நன்றாகப் பேச வராது," என்று நான் கூறலாம் அல்லது "என் ஆங்கிலத்தை இன்னும் சிறப்பாக்கிக் கொள்ள விரும்புகிறேன்," என்று கூறலாம். உங்களுடைய இன்றைய நாளின்மீது நின்றுகொண்டு, உங்களது நாளைய தினத்தைப் பாருங்கள், நேற்றைய

https://telegram.me/aedahamlibrary

தினத்தை அல்ல. அறிவு கிட்டும்போது, முன்னோக்கிப் பாருங்கள், பின்னோக்கி அல்ல. "எனக்கு மட்டும் அது தெரிந்திருந்தால் . . ." என்ற வார்த்தைகளை உபயோகிக்கும் மக்கள், அறிவைப் பெறுகையில் தங்கள் கடந்தகாலத்தைப் பார்ப்பர். உங்கள் எதிர்காலத்தை உருவாக்குவதற்காகத்தான் நீங்கள் விழிப்புணர்வைப் பெற்றிருக்கிறீர்கள். உங்கள் கடந்தகாலத்தை மறுசீரமைக்க வீணாக முயற்சிக்காதீர்கள்.

எந்தவோர் அறிவும் உங்களிடம் தாமதமாக வருவதில்லை. அது எப்போது வர வேண்டுமோ, மிகச் சரியாக அந்த நேரத்தில்தான் வரும் — அதற்கு நீங்கள் தயாராக இருக்கும் பட்சத்தில். விஜயராகவனின் அதே செய்தி ஒருசில வருடங்களுக்கு முன் எனக்குக் கிடைத்திருந்தால், அது என் மீது எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்காது. காலநேரத்தைப் பற்றி ஒருபோதும் கேள்வி கேட்காதீர்கள்.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி முன்னோக்கிப் பார்த்தபோது ஒரு மகாத்மா காந்தி தோன்றினார். நரேந்திரன் முன்னோக்கிப் பார்த்ததால் ஒரு சுவாமி விவேகானந்தர் தோன்றினார். நம் எதிர்காலம் நம் கடந்தகாலத்திற்குச் சமம் அல்ல. 'சிறப்பானவை அனைத்தும் இனிமேல்தான் நம்மிடம் வரவிருக்கின்றன,' என்பதை உணர்வதில்தான், நாம் முன்னோக்கிப் பார்ப்பதற்கான மாபெரும் உத்வேகம் அடங்கியுள்ளது. ஒவ்வோர் அறிவுத்துளியோடும், ஒவ்வொரு புதிய உணர்தலோடும், ஒவ்வோர் ஆழ்ந்த விழிப்புணர்வோடும், நமக்கு விருப்பமான எதிர்காலத்தை உருவாக்குவதில் நாம் ஈடுபடலாம்.

உங்களுக்கு அறிவு வழங்கப்பட்டுள்ளதற்குக் காரணம், உங்கள் கடந்தகாலத்தைக் கூறுபோட்டுப் பார்ப்பதற்கல்ல, உங்கள் எதிர்காலத்தை ஆக்கபூர்வமாக உருவாக்குவதற்குத்தான்.

முன்னோக்கிப் பாருங்கள் . . . நீங்கள் என்னவாக ஆவீர்கள் என்பது உங்களுக்கே தெரியாது. நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்களோ, அந்த நபர், எதிர்காலத்தில் ஏதோ ஓரிடத்தில் ஏற்கனவே உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். போய் அவரைச் சந்தியுங்கள்!

https://telegram.me/aedahamlibrary

வெளித்தெரியா விவரங்களே தரம்

அந்தப் பிரபலமான பேச்சாளர் தன் அழுக்குக் காரிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்து நான் திடுக்கிட்டேன். கையுறையுடன்கூட நான் அதைத் தொட விரும்பாத அளவுக்கு அது அழுக்காக இருந்தது. அவரது காரின் உட்புறம் ஒரு குப்பை மேட்டிற்குச் சமமாக இருந்தது. அவர் பேசவிருந்த தலைப்பு, 'தரமான வாழ்வு.' கண்களில் உள்ள அழுக்கைத் துடைத்தவாறு ஆன்மீகச் சொற்பொழிவிலிருந்து வரும் சீடர்களை நான் பார்த்திருக்கிறேன். தங்கள் உடலின் தூய்மையைப் பற்றி அக்கறையற்றவர்கள் தங்கள் ஆன்மாவின் துய்மையை நாடுகின்றனர் என்பதற்கு ஆதாரம் இவர்கள். என்னவோர் அறியாமை! அவர்கள் குளிப்பதுகூட இல்லை, ஆனால் தங்கள் குரு தங்கள் வாழ்வைத் தூய்மையாக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். சவரம் செய்யாத முகத்துடன், பளிச்சூட்டப்படாத காலணிகளுடன், மோசமாக அணியப்பட்ட 'டை'யுடன் கூடிய விற்பனையாளர்கள், தங்கள் பொருட்கள் மற்றும் சேவைகளின் 'உலகத் தர'த்தைப் பற்றிக் கூச்சலிடுவதை நான் கண்டிருக்கிறேன்.

தரம் என்பது உள்ளிருந்து துவங்கி, வெளியே வெளிப்படுகிறது என்பதை நாம் உணர வேண்டும். நாம் கொடுப்பவற்றின் தரம் நம்மிடம் இருப்பவற்றின் தரத்தைச் சார்ந்துள்ளது. நம்மிடம் இருப்பவற்றின் தரம் நாம் செய்பவற்றின் தரத்தைச் சார்ந்துள்ளது. நாம் செய்பவற்றின் தரம் நம்முடைய தரத்தைச் சார்ந்துள்ளது.

தரம் குறித்த விழிப்புணர்வு என்பது உங்களிடமிருந்து மற்றவர்கள் எதிர்பார்ப்பதைவிட அதிகமாக, நீங்களே உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது; உலகம் உங்களுக்கு நிர்ணயித்துள்ள தரத்தைவிட

https://telegram.me/aedahamlibrary

உயர்ந்த தரங்களை உங்களுக்கு நீங்களே நிர்ணயித்துக் கொள்வது; அனைத்தையும் மேம்படுத்த முடியும், அனைத்தும் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற நம்பிக்கைதான் தரம் குறித்த விழிப்புணர்வு.

தரம் என்பது உங்கள் காலுறைகளில் ஓட்டைகள் இல்லாமல் இருப்பது, கதவுகள் 'கிறீச்' என்று கத்தாமல் இருப்பது, வீட்டிலுள்ள அனைத்துக் கடிகாரங்களும் ஒரே நேரத்தைக் காட்டுவது, சோபாக்களின் உறைகளில் கிழிசல் இல்லாதிருப்பது, மின்விசிறிகள் சுத்தமாக இருப்பது, சுவர்கள் ஒட்டடைகள் இன்றி இருப்பது, தண்ணீர்க் குழாய்கள் ஒழுகாமல் இருப்பது, தொலைபேசியை ஐந்து அழைப்புகளுக்குள் எடுத்துப் பதிலளிப்பது, வீட்டில் எந்த இடத்திலும் வர்ணப்பூச்சு பிய்ந்து வராமல் இருப்பது, அலுவலகத்தில் கை கழுவும் இடங்கள் ஒருவர் கீழே படுக்கும் அளவுக்கு சுத்தமாக இருப்பது, கதவின் தாழ்ப்பாள் சரியாக வேலை செய்வது . . .

தரத்தின் இருத்தல் எப்போதாவதுதான் கவனிக்கப்படுகிறது, ஆனால் அதன் இல்லாமை ஒருபோதும் கவனிக்கப்படத் தவறுவதில்லை. தரம் என்பது பிறரது கண்களில் படாத பகுதிகளிலும் சிறப்புற்று இருப்பது. நறுமணம் இருக்கிறதோ இல்லையோ, ஒரு பூ எப்போதும் ஒரு பூவாகத்தான் இருக்கும். ஆனால், அதன் நறுமணம் அனைத்து வித்தியாசங்களையும் ஏற்படுத்துகிறது. வெளித்தெரியா விவரங்களே தரம். அதன் இருத்தல்தான் அனைத்து வித்தியாசங்களையும் ஏற்படுத்துகிறது.

https://telegram.me/aedahamlibrary

• • •

கடைசி வார்த்தைத் தங்களுடையதாக இருக்க வேண்டும் என்பதே ஒவ்வொருவருடைய விருப்பமும்

நான் செய்தது தவறு என்று என் தோழி உறுதியாக நம்பினாள். அவள் அவ்வாறு நினைத்ததற்கான விளக்கம் அவளிடம் இருந்தது. நான் செய்த காரியத்திற்கான காரணத்தை நான் அவளுக்குத் தெளிவுபடுத்தினேன். நான் தவறு செய்ததாக உணராததற்கு என்னிடம் ஒரு விளக்கம் இருந்தது. என் விளக்கம் என் கருத்தை விளக்கும் விதத்தில் இல்லை என்று அவள் நினைத்ததற்கு அவளிடம் ஒரு விளக்கம் இருந்தது. நான் செய்தது தவறு என்பதற்கு அவள் கூடுதல் விளக்கம் அளித்தாள். என் விளக்கத்தை அவள் சரியான கண்ணோட்டத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று நான் அவளுக்கு விளக்கினேன். நான் செய்தது சரிதான் என்று அவளிடம் விளக்கிக் கூறினேன். நான் செய்தது தவறு என்று நிரூபிப்பதில் அவள் குறியாக இருந்தாள். நான் செய்தது சரி என்று நிரூபிப்பதில் நான் குறியாக இருந்தேன். எங்கள் கண்ணோட்டங்களுக்குச் சாதகமான போதுமான விளக்கங்கள் எங்கள் இருவரிடமும் இருந்தன.

என்னைப் பற்றி விமர்சித்து அவன் ஒரு மின்னஞ்சல் அனுப்புகிறான். அவனது குற்றச்சாட்டை மறுத்து நான் அவனுக்குப் பதிலஞ்சல் அனுப்புகிறேன். அவன் தன் கருத்தை வலியுறுத்த எனக்கு மீண்டும் எழுதுகிறான். நான் அதை ஒப்புக் கொள்ளாததற்கான காரணத்தை விளக்கி அவனுக்கு எழுதுகிறேன்.

https://telegram.me/aedahamlibrary

இரண்டு விஷயங்களை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். எல்லோரிடமும் எல்லாவற்றுக்கும் ஒரு விளக்கம் உள்ளது. மிக முக்கியமாக, கடைசி வார்த்தைத் தங்களுடையதாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புகின்றனர்.

மகாத்மா காந்தியைப் படுகொலை செய்ததற்கு நாதுராம் கோட்சேயிடம் ஒரு விளக்கம் இருந்தது. அமெரிக்காவின் வேர்ல்டு டிரேட் சென்டர்மீது தீவிரவாதத் தாக்குதல் நடத்தியதற்கு ஒசாமா பின்லாடனிடம் ஒரு விளக்கம் இருந்தது. திரைப்படத்தில் புகை பிடிப்பதற்கான விளக்கம் நடிகர்களிடம் உள்ளது. சாம்பாரில் உப்புப் போட மறந்ததற்கு என் மனைவியிடம் ஒரு விளக்கம் இருந்தது. என் கோபத்தை நியாயப்படுத்தும் விளக்கம் என்னிடம் இருந்தது.

அனைவரிடமும் ஒரு விளக்கம் உள்ளது. கடைசி வார்த்தைத் தங்களுடையதாக இருக்க வேண்டும் என்று அனைவரும் விரும்புகின்றனர். உண்மையைக் கூறினால், என் செயல்கள் அனைத்திற்கும் விளக்கம் அளித்துக் கொண்டு, என் வாழ்நாள் முழுவதும் என் வார்த்தையே எல்லோரும் ஒப்புக் கொள்ளும் 'கடைசி வார்த்தை'யாக இருக்க வேண்டும் என்று நான் முயற்சித்துக் கொண்டிருந்ததை நினைத்தால் சற்று சங்கடமாகத்தான் இருக்கிறது.

வாழ்வின் அனைத்து அற்பமான விஷயங்களிலும் பிறரது வார்த்தைக் கடைசி வார்த்தையாக இருக்க நான் அனுமதிக்கப் போகிறேன், அதன் மூலம் நான் என் நேரத்தையும், ஆற்றலையும், முயற்சியையும், இடத்தையும் மிச்சப்படுத்தப் போகிறேன் என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். எல்லாவற்றுக்கும் ஒரு விளக்கத்தைக் கொடுக்கத் தூண்டும் இந்த உணர்வைக் கட்டுப்படுத்தி, பிறரது வார்த்தையைக் கடைசி வார்த்தையாக ஏற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கும்போது அது நமக்கு ஏராளமான சுதந்திரத்தைக் கொடுக்கிறது. அதிர்ஷ்டவசமாக, 90 சதவீத விஷயங்கள் அற்பமானவையாகவே இருக்கின்றன.

இதில் நீங்கள் வேறொரு வித்தியாசமான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறீர்களா? அது உங்கள் உரிமை. நான் சொல்வதற்கு ஏதும் இல்லை. உங்கள் வார்த்தையே கடைசி வார்த்தை.

https://telegram.me/aedahamlibrary

• • •

'10 நிமிடம் முன்பு' என்பது 10 வருடக் கூடுதல் ஆயுளுக்குச் சமானம்

ஒரு விமான நிலையத்தைச் சென்றடைவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. நீங்கள் அடிக்கடி விமானத்தில் பயணிப்பவர் என்றால், நீங்கள் பரவலாகக் காணப்படும் இப்பிரிவைச் சேர்ந்தவராக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். ஆமை வேகத்தில் நகரும் போக்குவரத்தால் மன அழுத்தம், இன்னும் சற்று வேகமாகச் செல்லுமாறு ஓட்டுனரை விரட்டுதல், போக்குவரத்து சிக்னலை மீறிச் செல்வதற்கான எண்ணம், கைக்கடிகாரத்தை அடிக்கடிப் பார்த்தல், மற்றும் வேக வேகமாக விமான நிலையத்திற்குள் நுழைதல். உங்கள் பொருட்களை ஸ்கேன் செய்வதலிருந்து, விமானத்தில் ஏறுவதற்கான போர்டிங் பாஸை வாங்கி, பாதுகாப்புப் பரிசோதனை வரை, உங்கள் விமானம் இன்னும் சற்று நேரத்தில் கிளம்பப் போவதாகவும், நீங்கள் விரைவாகச் செல்ல வேண்டும் என்றும் எல்லோரிடமும் கூறி வரிசையில் முந்தப் பார்ப்பது... சற்று வேகமாக நடக்கத் துவங்கி, பின் விமானத்தைப் பிடிப்பதற்காக ஓடுவது ஓர் இறுகிய முகம்... இருந்தாலும், உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள் என்ற ஆசையில், விமானப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு புன்னகையை உதிர்ப்பது... இறுதியில், ஒரு வழியாக விமானத்தை அடைவது.

இரண்டாவது வழி, விமான நிலையத்திற்குப் பத்து நிமிடம் முன்னதாகக் கிளம்புவது.

ஒவ்வொரு வீட்டிலும் காலை நேரத்தை இரண்டு வழிகளில் துவங்கலாம். முதல் வழி, மூன்றாம் உலகப் போருக்கு ஒத்திகை

https://telegram.me/aedahamlibrary

பார்ப்பது. அனைவரும் ஓடிக் கொண்டிருக்கின்றனர்... ஒவ்வொருவரும் பிறரிடம் வேலையை ஒப்படைக்கின்றனர்... தொலைபேசி ஒலித்துக் கொண்டிருக்கிறது, ஒவ்வொருவரும் வேறு யாரேனும் அதற்குப் பதிலளிப்பார்கள் என்று நம்புவது. வீட்டு வாசலில் யாரோ ஒருவர் அழைப்பு மணியை அழுத்துகிறார், அனைவருமே காது கேளாததுபோல் நடந்து கொள்வது. பள்ளிக்கூடப் பேருந்து, சாலை முனையை ஏற்கனவே கடந்துவிட்டது... சாப்பாட்டுப் பை எங்கே... இதோ, தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொள், புத்தகப் பை சரியாக மூடப்படவில்லை, பேருந்திற்குள் சென்று உன் காலணியைச் சரிசெய்து கொள்... ஒரு ராக்கெட் விண்ணில் ஏவப்படுவதற்குத் தயார்படுத்தப்படுவதுபோல் தோன்றுகிறது . . . 10 . . . 9 . . . 8.

இன்னொரு வழி, பத்து நிமிடம் முன்னதாகவே எழுந்திருப்பது.

அனைத்து அடிமைப் பழக்கங்களிலும் மிகவும் அபாயகரமான பழக்கம் அவசரப்படுதல். பொதுவாக நாம் எடுக்காத முடிவுகளை எடுக்க 'அவசரம்' நம்மைக் கட்டாயப்படுத்தும். பொதுவாக நாம் நடந்து கொள்ளாத விதத்தில் நடந்து கொள்ள அது நம்மைக் கட்டாயப்படுத்தும். தவறு சூழ்நிலையின்மீதுதான் உள்ளது, நம்மிடம் அல்ல என்று அது நம்மை நம்ப வைத்து ஏமாற்றும். அரைகுறையான வேலைக்கும், அக்கறையற்றத் தீர்மானங்களுக்கும் அது ஒரு சாக்குப் போக்காக அமையும். வரிசையில் நிற்காமல் முந்திப் போக முயற்சிப்பது, விமானத்தைப் பிடிப்பதற்கு முட்டாள்தனமாக ஓடுவது போன்று நாம் செய்யும் அனைத்துச் செயல்களுக்கும் நியாயம் கற்பிக்கும் ஒரு சூழ்நிலையை அது உருவாக்கும்.

கடினமான தீர்மானங்கள் பெரும்பாலும் நல்ல தீர்மானங்களாக இருக்கும். துவக்கத்தில் '10 நிமிடம் முன்னதாக என்பது முட்டாள்தனமாகப் படலாம், ஆனால் இன்றைய இயந்திரத்தனமான ஓட்டத்திற்கு அதுதான் நிவாரணம். அது இன்றைய மனிதன் சந்திக்கும் பெரும்பாலான மன அழுத்தப் பிரச்சனைகளுக்கான ஒரு சிறந்த மருந்து. நீங்கள் நெருக்கடியைச் சந்திக்காமல் இருப்பதை அது உறுதி செய்யும்.

'10 நிமிடம் முன்னதாக' என்பது என் இதயம் பத்து முறை குறைவாகத் துடிக்கும் என்று பொருள்படும். அதாவது, என்னால் கூடுதலாகப் பத்து வருடங்கள் வாழ முடியும்.

https://telegram.me/aedahamlibrary

இருக்குமிடத்திற்கும் இருக்கப்போகும் இடத்திற்கும் நடுவிலுள்ள இடைவெளிதான் கனவுகள்

"எனக்கு ஒரு கனவு இருக்கிறது," என்று தொடங்கும், வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு சொற்பொழிவில் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் இவ்வாறு குறிப்பிட்டார்: "ஒருநாள் இந்த தேசம் விழித்தெழுந்து, 'அனைத்து மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டவர்கள் என்ற உண்மை தானாகவே வெளிப்படையாகத் தெரியும்படி நாம் நடந்து கொள்வோம்' என்ற தன் கோட்பாட்டின் உண்மையான அர்த்தத்தை வாழ்ந்து காட்டும் என்று எனக்கு ஒரு கனவு இருக்கிறது. ஜார்ஜியாவின் செங்குன்றுகளில், முன்னாள் அடிமைகளின் மகன்களும், அடிமைகளின் உடமையாளர்களின் மகன்களும் சகோதரத்துவம் என்ற மேசையில் ஒன்றாக அமர முடியும் என்று எனக்கு ஒரு கனவு இருக்கிறது. தங்கள் தோலின் நிறத்தால் சீர்தூக்கிப் பார்க்கப்படாமல், தங்கள் நடத்தையின் தரத்தால் சீர்தூக்கிப் பார்க்கப்படும் ஒரு தேசத்தில் ஒருநாள் என் நான்கு சிறு குழந்தைகளும் வாழ்வார்கள் என்று ஒரு கனவு எனக்கு இருக்கிறது. இந்த விசுவாசத்துடன், என்றேனும் ஒருநாள் நாம் சுந்தந்திரமாக இருப்போம் என்ற அறிதலில், நம்மால் இணைந்து வேலை செய்ய முடியும், பிரார்த்திக்க முடியும், போராட முடியும், இணைந்து சிறைக்குச் செல்ல முடியும், விடுதலைக்காக இணைந்து நிற்க முடியும். அமெரிக்கா ஒரு தலைசிறந்த நாடாக விளங்க வேண்டுமென்றால், இது கண்டிப்பாக உண்மையாக வேண்டும்." நாற்பது வருடங்களுக்குப் பிறகு, முதன்

https://telegram.me/aedahamlibrary

முறையாக, பாராக் ஒபாமா என்ற ஆப்பிரிக்க-அமெரிக்கரைத் தன் அதிபராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம், அமெரிக்கா ஒரு புதிய வரலாற்றைத் தோற்றுவித்தது.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அவரது இக்கனவு, ஒரு வளமான காலகட்டத்தில் சமூகத்தின் விழிப்புணர்வில் பதிக்கப்படவில்லை. மாறாக, கறுப்பின மக்களுக்கு வாக்களிக்கக்கூட உரிமை இல்லாத மோசமான காலத்தில் அவர்கள் மனங்களில் இக்கனவு விதைக்கப்பட்டது.

படிப்பறிவின்மை என்ற சாபக்கேட்டிலிருந்து மீள்வதற்கு உதவும் தகவல் தொடர்புகள் சாதாரண மனிதனுக்கும் சுலபமாக, மலிவாகக் கிடைக்கும் வகையில் ஒரு டிஜிட்டல் இந்தியாவை உருவாக்க திருபாய் அம்பானி கனவு கண்டார். விரைவில் அது நிஜமானது. இதிலுள்ள முக்கியமான விஷயம், 1999இல் அடிப்படைத் தகவல் தொடர்புக் கட்டமைப்புகள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருந்தபோது இக்கனவு ரிலையன்ஸ் நிறுவனத்தில் இருந்த நிர்வாகிகளின் மனங்களில் விதைக்கப்பட்டது. ஒவ்வொரு பொருளும், சேவையும், வர்த்தகப் பொருட்களும் நாளுக்கு நாள் விலையேறிக் கொண்டிருக்கும் இக்காலகட்ட த்தில், ஒரு இலட்ச ரூபாய்க் கார் ஒன்றை ரத்தன் டாட்டா கனவுகண்டார். 'நானோ' என்ற கார் மூலம் அவரது கனவு நனவாகியது.

மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக அயல்நாட்டவர்களின் ஆதிக்கத்தில் நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில், மகாத்மா காந்தி ஒரு சுதந்திர இந்தியாவைக் கனவு கண்டார். உலகத் தரம் வாய்ந்த விமானங்களைக்கூட உருவாக்க முடியாத நிலையில் இந்தியா இருந்தபோது, 'இந்தியாவின் ஏவுகணை மனிதர்' என்று பிரபலமாக அழைக்கப்பட்ட ஏபிஜே அப்துல் கலாம் அவர்கள், "இந்தியாவின் 3,000 ஆண்டு வரலாற்றில், 600 ஆண்டுகளைத் தவிர, இந்நாடு பிறரால் ஆளப்பட்டு வந்துள்ளது. வளர்ச்சி வேண்டுமென்றால், நாடு அமைதியைச் சந்திக்க வேண்டும். அமைதி, வலிமையால் உறுதி செய்யப்படும்," என்று கனவு கண்டார். நாட்டை பலப்படுத்த ஏவுகணைகள் உருவாக்கப்பட்டன. இந்தியா விண்வெளியிலும் சந்திரனிலும் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டது.

நாம் கனவு காண வேண்டும் என்பது நாம் அனைவரும் அறிந்த விஷயம்தான். இங்கு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், கனவு கண்ட மாபெரும் மனிதர்கள் அனைவரின் மனங்களிலும் சிறப்பான,

https://telegram.me/aedahamlibrary

சாதகமான நேரங்களில் மட்டும் கனவுகள் உதிக்கவில்லை; கடினமான, மோசமான சமயங்களிலும், ஒட்டுமொத்த சமூக விழிப்புணர்வு நேர்மறையாக இல்லாத சமயங்களிலும் அவர்கள் கனவுகளைக் கொண்டிருந்தனர். எல்லாக் காலங்களிலும் அவர்கள் கனவு கண்டனர். அவர்களது கனவுகளின் வலிமைகளின் மூலம் மட்டுமே நிறுவனங்களும் தேசங்களும், மனிதகுலமும் உயர்ந்து நின்றது.

சிரமமான சூழ்நிலைகளை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். கடினமான காலங்களை நீங்கள் சந்திக்க நேரிடலாம். ஆனால், நீங்கள் நிச்சயம் கனவு காண வேண்டும். நீங்கள் இருக்கும் இடத்திற்கும், நீங்கள் சென்றடைய வேண்டிய இடத்திற்கும் இடையே உள்ள இடைவெளிதான் உங்கள் கனவுகள் ஒருபோதும், "நான் அடைவேனா?" என்பதல்ல கேள்வி. பெரிதாகக் கனவு காண்பவர்களின் மாபெருங்கனவுகள் எப்போதும் நிறைவேறும். ஒருவரது மனம் எதை நினைத்து அதன்மீது நம்பிக்கை கொள்கிறதோ, அதை நிச்சயமாக அடையும். ஒன்றைச் சாதிக்கக்கூடிய சக்தியை உங்களுக்கு வழங்காமல், கடவுள் உங்களுக்கு எந்தவொரு யோசனையையும் கொடுப்பதில்லை. கனவு காண்பவரது கேள்வி, "எப்போது நான் அடைவேன்?" என்பதாகத்தான் இருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

• • •

தண்ணீரால் செய்ய முடிவதைப்
பெட்ரோலால் செய்ய முடியாது.
துத்தநாகத்தால் செய்ய முடிவதைத்
தங்கத்தால் செய்ய முடியாது.

எறும்பின் மெல்லிய உடல்வாகு
அது எளிதாக நகர்வதற்கு உதவுகிறது.
மரத்தின் வளைந்து கொடுக்காத தன்மை
அது நிலத்தில் உறுதியாக நிற்க உதவுகிறது.

அனைத்து விஷயங்களும் அனைத்து மக்களும்
ஒரு குறிக்கோளை அடைவதற்காகத்
தனித்துவமாக வடிவமைக்கப்பட்டுள்ளனர்.

என்னைத் தவிர வேறு யாராக நானிருக்க முடியும்,
எனக்கென்று பலவீனங்கள் இருந்தாலும்?
வேறொருவராக மாற நான் ஏன் முயல வேண்டும்,
அவரது வலிமைகள் என் மனத்தைக் கவர்ந்திழுத்தாலும்?

நான் இங்கு இருப்பது
நானாகவே இருப்பதற்குத்தான்.

https://telegram.me/aedahamlibrary

• • •

தொடர்ச்சியான, முடிவற்ற சுயமுன்னேற்றம்தான் ஒரே வழி

பள்ளிக்கூடத்தில் சாதாரணக் கட்டுரைகளைக்கூட நான் சரியாக எழுதியதில்லை. இருந்தாலும், ஒரு பேச்சாளர் என்ற முறையில், மிகவும் சிக்கலான விஷயங்களையும் மிகவும் எளிய வடிவங்களில் எடுத்துரைக்கும் ஓர் அரிய திறனால் நான் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். வாழ்வின் உள்ளார்ந்த உண்மைகளைக்கூட எல்லோருக்கும் புரியும் ஒரு மொழியில் மிக எளிமையாகக் கருத்துருவாக்கி, என்னால் அவற்றைக் கற்பிக்க முடியும். வாழ்வு மற்றும் வாழ்க்கையைப் பற்றி என்னிடம் போதுமான விஷயங்கள் இருந்தன. எனவே நான் எழுதுவதற்கு முயற்சி செய்யத் தீர்மானித்தேன். ஆனால் என் எழுத்தை யார் பிரசுரிப்பார்கள்? எனவே, நானே ஒரு பத்திரிகையைத் துவக்க முடிவு செய்தேன். அப்படித்தான் 'ஃபுரோஸன் தாட்ஸ்' பிறந்தது.

2000ஆம் ஆண்டு முதன்முறையாக நான் ஃபுரோஸன் தாட்ஸில் எழுதியபோது, எனக்கே என் கட்டுரைகள் அவ்வளவு சுவாரசியமாக இருக்கவில்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். என் ஆங்கில இலக்கணமும் சரியில்லை என்பதை நான் விரைவில் உணர்ந்து கொண்டேன். என் பத்திரிகையின் முதல் இதழை ஒரு வாசகர் என் முகத்தில் வீசி எறிந்து, "அருவருப்பான, சிக்கலான வாக்கிய அமைப்புகள். மோசமான வார்த்தைகள், கொடுமையான இலக்கணம், அடிக்க வரும் வண்ணக் கலவைகள், நூற்றுக்கணக்கான எழுத்துப் பிழைகள். இப்படிப்பட்ட ஒரு பத்திரிகை ஒன்றுக்கும் உதவாது," என்று என்னிடம் கத்திவிட்டுச் சென்றார். காயப்படுதல் ஒருவரது உத்வேகத்தை வெகுவாகத் தூண்டும். எனக்கும் அது அப்படித்தான்

https://telegram.me/aedahamlibrary

அமைந்தது. ஒரு கூரிய கத்தியை நீங்கள் என்னை நோக்கி எறிந்தால், நான் அதனை அதன் கைப்பிடியைக் கொண்டு பிடிப்பேன், கூரிய முனையைக் கொண்டு அல்ல. இப்போது அந்த வாள் என் ஆயுதக் குவியலில் மற்றுமோர் ஆயுதமாகிவிட்டது. உங்களிடம் இருக்கும் வளங்கள் நீங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலையைக் காட்டிலும் சிறந்ததாக இருக்குமென்றால், அந்தச் சூழ்நிலை ஒரு வாய்ப்பாக மாறிவிடும். நான் ஒரு வாய்ப்பைக் கண்டேன். அதிர்ஷ்டம் என்பது உங்கள் வசப்படுவதற்காக உங்களையும் உங்கள் விழிப்புணர்வையும் கடந்து செல்லும் அனைத்து வாய்ப்புகளும் சந்திக்கும் ஓர் இடம். என் அதிர்ஷ்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினேன். எனவே, இப்பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கு ஒரு குழுவை ஒன்றிணைத்தேன். போதுமான அறிவாளிகளை உங்களைச் சூழ்ந்திருக்கச் செய்வது எப்படி என்பதை நீங்கள் அறிந்திருந்தால், நீங்கள் அவ்வளவு புத்திசாலியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. என்னைச் சுற்றி ஒரு புத்திசாலிக் குழுவை நான் உருவாக்கினேன். மக்களை ஒரு விஷயத்தில் வழிநடத்துவதற்கு முதலில் உங்களுக்கு அந்த விஷயம் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். எனவே, நான் என் எழுத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன். இலக்கணத்தின் அடிப்படைகளைக் கற்றுக் கொள்ளத் துவங்கினேன். வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கற்றுக் கொண்டேன். பொறுப்பை ஏற்பதற்கான தகுதிகளை வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்தையும் நான் செய்தேன்.

ஒரு பத்திரிகையைத் திருத்துவதும், பிரசுரிப்பதும், விநியோகிப்பதும் மிகவும் சிக்கலானது என்று நான் கூறவில்லை. ஆனால், அந்தப் பொறுப்புகளை அமல்படுத்தத் தேவையான தகுதிகள் என்னிடம் இல்லாத காரணத்தால் அது எனக்குச் சிக்கலானதாக இருந்தது. நீங்கள் எதிர்கொள்ளும் ஒரு சூழ்நிலை உங்களிடம் இருக்கும் வளங்களைக் காட்டிலும் பெரிதாக இருந்தால், அச்சூழ்நிலை ஒரு சவாலாக மாறிவிடும். ஒரு சவாலைச் சமாளிக்க வேண்டிய நிலையில் நான் இருந்தேன். நான் வகித்தப் பொறுப்பிற்கு நான் தகுதியானவனாக இல்லை. எனவே, தொடர்ச்சியான, முடிவற்ற சுயமுன்னேற்றத்திற்கு நான் என்னை அர்ப்பணித்துக் கொண்டேன். நான் எவற்றில் எல்லாம் சிறப்பாக இருக்க வேண்டுமோ, அவை அனைத்திலும் சிறப்புப் பெற்றேன்.

பொறுப்புகள் தேங்கிவிடுவதில்லை, அவை மாறிக் கொண்டேயிருக்கும். எனவே உங்களது தனிப்பட்ட வளர்ச்சி அதன்

https://telegram.me/aedahamlibrary

வேகத்திற்கு ஈடு கொடுக்க வேண்டும். ஒரு பத்திரிகையின் பதிப்பாசிரியர் பதவி எனக்குக் கிடைத்த மகுடம் அல்ல, அது நான் ஏற்றுக் கொண்டுள்ள ஒரு பொறுப்பு. இன்று, ஃபுரோஸன் தாட்ஸ் பத்திரிகைக்கு உலக அளவில் 65 நாடுகளிலும், இந்தியாவில் 450 இடங்களிலும் வாசகர்கள் இருக்கின்றனர். இன்று யாரும் அப்பத்திரிகையைத் தூக்கி எறிவதில்லை என்பதை நினைக்கும்போது நெஞ்சம் நெகிழ்கிறது. உங்கள் கைகளில் தவழந்து கொண்டிருக்கும் 'அனுப்பப்படாத மடல்' புத்தகமும் ஃபுப்ரோசன் தாட்ஸின் கருவறையிலிருந்து உருவானது என்பதும் மனத்திற்கு நிறைவளிக்கிறது.

ஒரு மனிதர் ஏற்றுக் கொண்டுள்ள பாத்திரம் அவரைக் காட்டிலும் வேகமாக வளர்வது இன்றைய உலகில் ஒரு பெரும் சவாலாக இருக்கிறது. மனிதன் தன் பாத்திரத்தின் வேகத்திற்கு ஈடு கொடுத்து வளரும்போது அவனது ஆற்றலும் செயற்திறனும் மேம்படுகின்றன. தொடர்ச்சியான, முடிவற்ற சுயமுன்னேற்றம்தான் ஒரே வழி.

https://telegram.me/aedahamlibrary

• • •

எல்லோரும் எல்லா நேரங்களிலும்
வெற்றி பெறுவதில்லை.
யாரும் நிரந்தரத் தோல்வியாளராக
இருப்பதற்கும் விதிக்கப்படவில்லை.

வெற்றி என்பது தாமதமாகியுள்ள தோல்வி,
தோல்வி என்பது தாமதமாகியுள்ள வெற்றி.
தோல்வி இறுதியல்ல
வெற்றி நிரந்தரமானதுமல்ல.

இன்றைய வெற்றிகளும் தோல்விகளும்
நெடிய வாழ்க்கைப் பயணத்தில் மற்றுமோர் அடிதான்.
வாழ்க்கை ஒரு விளையாட்டு.
நீண்டகாலம் விளையாடினால் தாக்குப்பிடிக்கலாம்.

பாதியிலேயே விலகி விடாதீர்கள்.
இறுதிவரை விளையாடுங்கள்.
நீண்டகாலம் விளையாடுங்கள்.
இறுதியில், வெற்றிக் கோட்டை அடைவீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

கடைசியாக எப்போது நான் ஏதாவது ஒன்றை முதன்முறையாகச் செய்தேன்?

பெரும்பாலான மக்களுக்கு வாழ்க்கை என்பது மீண்டும் மீண்டும் நிகழும் ஓர் அலுப்பான நிகழ்ச்சியாக உள்ளது. தினமும் காலையில் அதே நேரத்தில் எழுந்திருப்பது, அதேபோல் பல் துலக்குவது, அதே காஃபியைக் குடிப்பது, அதே செய்தித்தாளைப் படிப்பது, ஒரு காக்கைக் குளியல், அவசரமான காலை உணவிற்குப் பின் அடித்துப் பிடித்து வேலைக்குச் செல்வது, அதே அலுவலகம், அதே வேலை, அதே அரட்டை, அதே மதிய உணவு, அதே பேச்சு, வீட்டிற்குத் திரும்பி வருகையில் அதே வழி, அதே தொலைக்காட்சித் தொடர்கள், அதே விவாதங்கள், வழக்கமான இரவு உணவு, அதே படுக்கை, கண் அயர்ந்து மீண்டும் அடுத்த நாள் அதே போன்ற ஒரு நிகழ்ச்சிக்குத் தயாராவது.

வாழ்க்கை இப்படி இயந்திரத்தனமாக இருக்க வேண்டியதில்லை. அது சலிப்பூட்டுவதாக இருக்க வேண்டியதில்லை. ஒரே மாதிரியான விஷயங்கள் தொடர்ந்து எண்ணற்ற முறை நிகழ வேண்டும் என்ற அவசியமில்லை. வாழ்க்கை ஒரு சுமை அல்ல. அது வாழ்நாள் முழுவதும் நாம் அடைபட்டுக் கிடக்கும் சிறையாக இருக்க வேண்டியதுமில்லை. வெறுமனே நாளை ஓட்டிக் கொண்டிருப்பதையும் தாண்டி, வாழ்க்கையில் இன்னும் ஏராளமானவை இருக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். அதன்பின் வாழ்க்கை எவ்வளவு சுவாரசியமானதாக

https://telegram.me/aedahamlibrary

இருக்கிறது என்பதைப் பாருங்கள். நீங்கள் ஒரு சுறுசுறுப்பான மாணவனாக இல்லாத ஒரு காலகட்டம் உங்கள் வாழ்வில் நிகழ அனுமதிக்காதீர்கள். இசைப் பயிற்சி, இசைக் கருவிகளை இசைத்தல், நடன வகுப்புகள், மாற்றுமுறை மருத்துவம், புதிய உடற்பயிற்சி முறைகள், யோகா, புதிய மொழிகள், முதுநிலை இலக்கணப் பயிற்சி, படைப்பு எழுத்து, மேடைப் பேச்சு, சமையல் வகுப்புகள், வண்ணம் தீட்டுதல், புதிய கலை வடிவங்கள், கார் ஒட்டுதல், நீச்சல் வகுப்புகள், ஒரு புதிய விளையாட்டு, தொழில்நுட்பக் கல்வி, ஆன்மீகக் கல்விக் குழுக்கள், தோட்டக் கலை, வீட்டில் செல்லப் பறவைகளையும் விலங்குகளையும் வளர்த்தல், தொட்டியில் மீன்களை வளர்த்தல், புகைப்படம் எடுத்தல் என்று உண்மையில் இப்பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, தொடர்ந்து ஒரு சுறுசுறுப்பான மாணவராக இருங்கள்.

வாழ்வில் எப்போதும் புதியவற்றை ஆராய்ந்து கொண்டே இருங்கள். பரிசோதியுங்கள் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். உங்கள் அளவில்லா ஆர்வத்திற்குத் தீனி போடுங்கள். முன்பு முயற்சிக்கப்படாத ஏதோ ஒன்றை முயற்சித்துப் பாருங்கள். புதிய உணவு வகைகளை ருசித்துப் பாருங்கள். நீங்கள் அணிய வெட்கப்படும் உடைகளை அணிந்து பாருங்கள். புதிய சிகை அலங்காரத்தை முயற்சித்துப் பாருங்கள். நீங்கள் வழக்கமாகச் செல்லாத இடங்களுக்குச் செல்லுங்கள். ஆண்களே, சமையலறை வேலையை ஒருநாள் முயன்று பாருங்கள். ஒரு ஞாயிற்றுக்கிழமை, கணவர்கள் அனைவரும் ஒன்றுகூடி உங்கள் மனைவியருக்குச் சேவை செய்யுங்கள். ஒரு நாள் முழுவதும் கண்ணைக் கட்டிக் கொண்டு இருந்து பாருங்கள். இன்னொரு நாள் பேசாமல் இருங்கள். ஒருநாள் அரசாங்கப் போக்குவரத்தைப் பயன்படுத்திப் பாருங்கள். உங்கள் அலுவலகத்தில் வேறொருவரின் வேலையைச் செய்து பாருங்கள் - ஒரே ஒருநாள் முழுவதும், அலுவலக வரவேற்பறையில் அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் இருந்து அந்த வேலையைச் செய்தால் எப்படி இருக்கும்? இங்கும் பட்டியல் மிகவும் நீளம்தான். வாழ்க்கையில் உங்கள் படைப்புத் திறனைப் பயன்படுத்துங்கள். தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருங்கள்.

உங்களது வெற்றிகள் மற்றும் சாதனைகள் அனைத்திற்கும் மேலாக, சுவாரசியமான, உயிரோட்டமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கான சூத்திரம், தொடர்ந்து இக்கேள்விக்கு விடையளித்துக் கொண்டிருப்பதுதான்: கடைசியாக எப்போது நான் ஏதாவது ஒன்றை

https://telegram.me/aedahamlibrary

முதன்முறையாகச் செய்தேன்?

வாழ்க்கையைக் கொண்டாடுங்கள். ஒவ்வொரு நாளும் நீங்கள் இப்புவியில் இருந்ததற்கான முத்திரையைப் பதியுங்கள். உயிர்த்துடிப்புடன் இருப்பது குறித்துப் பரவசப்படுங்கள்.

https://telegram.me/aedahamlibrary

குறைவானது அதை நீண்டதாக்கும், அதிகமானது அதைச் சுருக்கம்

நிறுவனங்கள் மிகவும் வேகமாக வளர்ந்து அதே வேகத்தில் தரைமட்டமாவது நாம் அடிக்கடிப் பார்க்கும் நிகழ்வுதான். பங்குச் சந்தையில் அத்தகைய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்து பணத்தை இழந்தவர்களிடமும், அத்தகைய நிதி நிறுவனங்களில் தங்கன் மொத்தப் பணத்தையும் இழந்து தவிக்கும் மக்கள் கூட்டத்திடமும் நீங்கள் கேட்டுப் பார்த்தால், கூறுவதற்கு அவர்களிடம் ஏகப்பட்டக் கண்ணிர்க் கதைகள் இருக்கும்.

அதே நேரத்தில், தங்கள் அடித்தளத்தைக் கவனமாக அமைத்து, வெற்றிகரமான வியாபார உத்திகளை ஏற்படுத்தி, தங்கள் அடிப்புடைகளைச் சரியாக வகுத்து, தங்கள் தொழிலுக்குத் தேவையான அனைத்துக் கட்டுமான வசதிகளையும் அமைப்புகளையும் நிறுவி முறையாக வளரும் நிறுவனங்களையும் நாம் பார்க்கிறோம். இத்தகைய நிறுவனங்களின் வளர்ச்சி முதலில் மெதுவாக இருந்தாலும், காலப்போக்கில் அவை பிரம்மாண்ட வளர்ச்சியைச் சந்திக்கின்றன. தொழில்நுட்பரீதியாக ஆரோக்கியமாக உள்ள இத்தகைய நிறுவனங்களில் முதலீடு செய்ததன் மூலம் பெரும் சொத்துக்களைக் குவித்தவர்களிடம் கேட்டுப் பாருங்கள், ஏராளமான வெற்றிக் கதைகள் அவர்களிடம் இருக்கும்.

'ரோம் நகரம் ஒடு நாளில் கட்டி முடிக்கப்படவில்லை,' என்பது கூற்று. அது ஒரு நாளில் கட்டப்பட்டிருந்தால், அடுத்த நாள் அது இடிந்து விழுந்திருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

உறவுகளில்கூட, மிகக் குறுகிய காலத்திற்குள் பிறருடன் மிகையாகப் பழகும் மக்கள், ஒரே ஒரு தவறான புரிதல், ஒரே ஒரு நிகழ்ச்சி, அல்லது ஒரே ஒரு விவாதத்தின் காரணமாகப் பிரிந்து அவரவர் வழியே சென்றுவிடுவதை நான் பார்த்திருக்கிறேன். காலப்போக்கில் வலிமை, உறுதியான நம்பிக்கை, ஒளிவுமறைவின்மை, மற்றும் நெருக்கத்தைப் பெறும் உறவுகள்தான் நிலைத்து நிற்பதற்கான உறுதியான தன்மையையும் ஆழத்தையும் உருவாக்குகின்றன.

எது அதிக உறுதியுடன் நிற்கும் — தன் பரந்த அடித்தளத்தில் நிற்கும் ஒரு கூம்பா அல்லது தலைகீழாக நிற்கும் கூம்பா? அடித்தளத்தை அமைப்பதற்கு அதிக நேரம் பிடிக்கும். துவக்கத்தில் சரியான அடித்தளத்தை அமைப்பதில் நேரத்தை முதலீடு செய்வது நல்லது. இல்லையென்றால், பின்னர் ஏற்படும் நிலைகுலைவைச் சரிசெய்ய இன்னும் அதிக நேரம் பிடிக்கும்.

"எனக்கு சாப்பிடப் பிடிக்கும்," என்று நீங்கள் கூறுகிறீர்கள். துல்லியமாக அதே காரணத்திற்காக குறைவாக உண்ணுங்கள். அப்போது அதிக நாட்கள் வாழ்ந்து உணவை அனுபவிக்கலாம். "எனக்கு உறங்கப் பிடிக்கும்," என்று கூறுகிறீர்கள். துல்லியமாக அதே காரணத்திற்காகக் குறைவாகத் துரங்குங்கள். அப்போது அதிக நாட்கள் வாழ்ந்து உறக்கத்தை அனுபவிக்கலாம். "நான் அவனை மிகவும் நேசிக்கிறேன்," என்று கூறுகிறீர்கள். துல்லியமாக அதே காராணத்திற்காக அவனுக்குத் தேவையான இடைவெளியைக் கொடுங்கள். "நான் சிகரத்தை அடைய வேண்டும்," என்று கூறுகிறீர்கள். துல்லியமாக அதே காரணத்திற்காக அடித்தளத்தைச் சரியாக அமைப்பதற்குப் போதுமான நேரத்தை முதலீடு செய்யுங்கள். அப்போது நீங்கள் உயரத்தில் நிலைத்து நிற்க உங்கள் அடித்தளம் உங்களுக்கு உதவும்.

குறைவானது அதை நீண்டதாக்கும். அதிகமானது அதைச் சுருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

உன்னதம் இருக்கும் பட்சத்தில், விளக்கங்களுக்குத் தேவை இருக்காது

உன்னதம் சுயமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். உன்னதம் இருக்கும் பட்சத்தில் விளக்கங்களுக்குத் தேவை இருக்காது. விளக்கங்கள் தேவைப்படும் இடத்தில், உன்னதம் மிக அரிதாகவே காணப்படும்.

சரியானவை சரியானவையே, சரியில்லாதவை சரியில்லாதவையே. இருந்தாலும், சரியில்லாதவற்றைச் சரியானவை என்று விளக்கவும், நியாயப்படுத்தவும், காரணப்படுத்தவும், பகுத்தறிவுபூர்வமாக விளக்கவும் நாம் முற்படுகிறோம். சரியில்லாதவற்றைச் சரியானவையாக ஆக்குவதற்கு உங்கள் மனத்தைப் பயன்படுத்தும் போக்கை நீங்கள் உருவாக்கினால், அது உங்கள் சுய அழிவிற்கு வழிவகுக்கும். உன்னதமின்மையை நியாயப்படுத்துவதற்குப் பழக்கப்படுத்தப்பட்ட மனம், தரக்குறைவானவற்றை ஏற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்கிறது; தரக்குறைவான விஷயங்களுடன் வாழக் கற்றுக் கொள்கிறது.

நீங்கள் 100க்கு 88 மதிப்பெண்கள் பெற்றிருந்தால், 12 மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றுள்ளீர்கள் என்பதுதான் உண்மை. அதில் மாற்றமில்லை. நீங்கள் எவ்வளவுதான் விளக்கிக் கூறினாலும், 12 மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றதை மாற்ற முடியாது. உங்கள் விளக்கம் அந்த 12 மதிப்பெண்களை ஈடு செய்யாது. 88 என்பது 88தான் என்பதை நீங்கள் அறிந்திருந்தாலும், அதை 100ஆக நியாயப்படுத்த முயற்சிக்கிறீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

'ஓராயிரம் முறைகள் கூறப்படும் ஒரு பொய் உண்மையாகிவிடும்,' என்பது ஒரு கூற்று. பிறருக்கு அது உண்மையாகத் தோன்றினாலும், அது பொய் என்பது உங்களுக்குத் தெரியும் எவ்வளவு காலம்தான் ஒரு பூனையை சிங்கம்போல் தோன்ற வைக்க முடியும்? உண்மையை உங்களிடமிருந்து மறைக்க முடியாது, நீங்களும் அதிலிருந்து தப்ப முடியாது விளக்கங்களால் குறைபாட்டை ஒருநாளும் ஈடு செய்ய முடியாது.

40 இலட்சம் உங்கள் இலக்காக இருந்து, 36 இலட்சத்தை மட்டுமே உங்களால் அடைய முடிந்தால், உங்கள் இலக்கிலிருந்து சற்றுத் தள்ளியிருக்கிறீர்கள் என்பதுதான் உண்மை. 11:00 மணிக்கு நீங்கள் ஒருவரைச் சந்திக்க வேண்டியிருந்து, 11:15க்கு நீங்கள் அவர் இருக்கும் இடத்திற்குச் சென்றால், நீங்கள் தாமதமாகச் சென்றிருக்கிறீர்கள். உங்களால் முடிந்த அளவு அனைத்து விளக்கங்களையும் நீங்கள் கொடுத்தப் பிறகும், நீங்கள் உங்கள் இலக்கை எட்டவில்லை, நேரம் தவறாமையை நீங்கள் மதிக்கவில்லை என்பதுதான் உண்மை.

உங்களிடம் உன்னதம் இல்லாததற்கு நீங்கள் சுய ஆறுதல் கூறிக் கொள்வது, வாழ்வில் உங்களை வெகுவாகப் பாதிக்கும். மீண்டும் மீண்டும் அது உங்கள் இலக்கை நெருங்க விடாமல் பார்த்துக் கொள்ளும். இறுதியில், உங்கள் திறனுக்குக் குறைவாகவே நீங்கள் செயல்படுவீர்கள். விழித்தெழுங்கள். எவை சரியில்லையோ, அவை சரியல்ல. 6:01 மணி என்பது 6:00 மணி ஆகிவிடாது. திங்கட்கிழமை திங்கட்கிழமைதான்.

'பழுதற்ற நிலை' சாத்தியம்தான். துல்லியம் சாத்தியம்தான். நிரந்தரமான உன்னதமும் சாத்தியமே. சிறந்தவற்றைத் தவிர எதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் மனப்போக்குதான் அதற்கான துவக்கம். வாழ்வில் உள்ள விசேஷம் என்னவென்றால், நீங்கள் சிறந்தவற்றைத் தவிர எதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கும்போது, அது சிறந்தவற்றை மட்டுமே உங்களுக்கு அளிக்கின்றது.

உன்னதமின்மை உங்களைக் காயப்படுத்தும். காயப்படுத்துவது அறிவுறுத்தும். அறிவுறுத்துவது உருவாக்கும். உருவாகுங்கள். உன்னதத்தை உருவாக்குங்கள். உங்கள் செயல் உங்களுக்காகப் பேசட்டும். நீங்கள் அதற்காகப் பேசாதீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

நம்பிக்கையின் ஆணிவேராகவும் உறவுகளின் அடித்தளமாகவும் மாறியிருக்கிறது தகவல்

"நான் என் பெற்றோரை ஒருபோதும் கேள்வி கேட்டதில்லை. அவர்கள் என்னிடம் செய்யும் படிக் கூறியதை நான் வெறுமனே செய்தேன். என் பெற்றோரிடம் எனக்கு நிபந்தனையற்ற மரியாதை உண்டு. ஆனால் என் மகன் அப்படியல்ல. நான் அவனை ஏதாவது செய்யும்படிக் கூறும்போதெல்லாம், அவனுடைய 'ஏன், என்ன, எப்படி, மற்றும் ஏன் கூடாது,' போன்ற கேள்விகளுக்கு நான் பதிலளித்தாக வேண்டும். இத்தலைமுறைக் குழந்தைகள் பெற்றோரை மதிப்பதில்லை," என்று ஒரு நடுத்தர வயதுக்காரர் குறை கூறுகிறார்.

அது உண்மையல்ல. உறவுமுறைகளின் வரையறைகள் மட்டுமே மாறிவிட்டிருக்கின்றன. முந்தையக் காலங்களில், உணர்ச்சிகள் உறவுமுறைகளின் அடித்தளமாக அமைந்தன. இன்று தகவல், உறவுகளின் அடித்தளமாக அமைந்துள்ளது.

ஒருசில வருடங்களுக்கு முன், ஒரு குழு உறுப்பினரிடம் ஒரு வேலையைச் செய்யுமாறு அவரது மேலதிகாரி கூறினால், 'செய்து முடித்தாகிவிட்டது,' என்பதுதான் உடனடி விடையாக இருந்திருக்கும். இன்று ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன், குழு உறுப்பினர்கள் தங்கள் மேலதிகாரியிடம், "அதை ஏன் செய்ய வேண்டும், எதற்காகச் செய்ய வேண்டும்..." போன்ற கேள்விகளைக் கேட்கின்றனர். இன்றையக் குழு உறுப்பினர்கள் மரியாதையற்றவர்கள் என்பது அதன் பொருள் அல்ல.

https://telegram.me/aedahamlibrary

ஆனால், அவர்களுக்குப் போதுமான தகவல்கள் தேவைப்படுகின்றன. அவ்வளவுதான். அந்த வகையில் பார்த்தால், கேள்விகளற்றச் சரணாகதி இன்றைய உறவு முறைகளில் இல்லை. ஆனாலும், உறவுகளின் தரம் தாழ்ந்துவிடவில்லை என்று நான் இன்னும் நம்புகிறேன். இன்றைய அறிவு வெறுமனே இதைத்தான் கூறுகிறது — ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் எனக்குக் கொடு, அல்லது நான் கீழ்ப் படிந்து நடக்க வேண்டிய இத்தீர்மானம் எடுக்கப்படுவதற்கு வழிவகுத்த அனைத்துத் தகவல்களையும் எனக்குக் கொடு.

எந்தக் கேள்வியும் கேட்காமல் நீங்கள் உங்கள் தந்தைக்குத் தண்ணிர் கொண்டுவந்து கொடுத்திருப்பீர்கள். ஆனால், அதே வேலையை உங்களுக்குச் செய்வதற்கு முன், உங்கள் மகன் ஒருசில கேள்விகளைக் கேட்பான். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், அவனுக்குப் போதுமான தகவல்களைக் கொடுத்தவுடன், அவனும் உங்களுக்குத் தண்ணீரைக் கொண்டுவந்து கொடுப்பான். அந்த வகையில் பார்த்தால், பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கு இடையேயான உறவில் தரம் தாழ்ந்துவிடவில்லை, உறவிற்கான வரையறைதான் மாறியுள்ளது. தன்னுடன் மூன்று பேர் மதிய உணவிற்காகத் தன்னுடன் வீட்டிற்கு வருகின்றனர் என்று உங்கள் அப்பா உங்கள் அம்மாவிடம் கூறியிருந்தால், அவர் அதை வெறுமனே ஒப்புக் கொண்டிருப்பார். இன்று நீங்கள் அதே விஷயத்தை உங்கள் மனைவியிடம் கூறினால், யார் வருகிறார்கள், எத்தனை மணிக்கு வருவார்கள், அவர்களுக்கு விருப்பமான உணவு எது, எவ்வளவு நேரம் இருப்பார்கள் போன்ற கேள்விகளை உங்கள் மனைவி கேட்பார். ஆனால், அவரும் உணவைத் தயார்படுத்தி வைத்திருப்பார். அந்த வகையில், திருமணத்தில் உள்ள அர்ப்பணிப்பு குறையவில்லை, உறவின் வரையறைதான் மாறியுள்ளது. உறவுகளின் அடித்தளம் உணர்ச்சிகளிலிருந்து தகவலுக்கு மாறியுள்ளது.

ஓர் ஆசிரியர் என்ற முறையில், ஆன்மீகத் தளத்தில்கூடச் சரணாகதியின் தரம் குறைந்துவிட்டது என்று நான் நினைக்கவில்லை. கேள்விகள் கேட்கப்படாத சரணாகதியிலிருந்து, போதுமான கேள்விகளுக்கும் பதில்களுக்கும் பிறகு சரணாகதி என்று நிலைமை மாறியுள்ளது. ஆனால், அர்ஜுனன் மட்டும் இதிலிருந்து வேறுபட்டு இருந்தானா?

உறவுகளின் தரம் குறையவில்லை, ஆனால், தகவல்கள் மற்றும்

https://telegram.me/aedahamlibrary

கருத்துப் பரிமாற்றத்தின் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. கருத்துப் பரிமாற்றங்களும், தகவல் பரிமாற்றங்களும் உறவுகளின் உயிர்நாடியாக மாறியுள்ளன. விளக்கங்கள் தேவைப்படுகின்றன, தெளிவுகள் கட்டாயமாகிவிட்டன. இந்த மாற்றம் நல்லதற்கோ அல்லது கெட்டதற்கோ அல்ல; இது ஒரு புதிய பாணி. அவ்வளவுதான். மாறிக் கொண்டிருக்கும் ஓர் உலகத்தில், இத்தகைய மாற்றங்களை எதிர்பார்க்கத்தான் வேண்டும். 'செய்,' என்று கூறுவது இன்று போதாது. போதுமான விளக்கங்களைக் கொடுத்தப் பிறகு, 'செய்', என்று கூறினால், அது செய்து முடிக்கப்படும்.

நம்பிக்கைதான் உறவுகளின் அடித்தளம். இருந்தாலும், இங்கு நம்பிக்கை கண்டிப்பாக இருக்கும் என்று யாரும் எடுத்துக்கொள்வதுமில்லை, அனுமானிப்பதுமில்லை. தகவல், நம்பிக்கையின் அடித்தளமாக மாறியுள்ளது. அதனால் அதுவே உறவுகளின் அடித்தளமாகவும் மாறியுள்ளது.

https://telegram.me/aedahamlibrary

• • •

அனைத்து உறவுகளும் மேலோட்டமாகவே இருக்கின்றன.
உங்கள் மனத்தின் ஆழத்தில் நீங்கள் எப்போதும்
தனிமையிலேயே இருக்கிறீர்கள்.

ஓராயிரம் மக்கள் உங்களைச் சூழ்ந்திருக்கலாம்,
ஆனாலும் உங்களின் ஒரு பகுதி
எப்போதும் தனித்தே இருக்கிறது.
உங்கள் அன்புக்குரியவரை நீங்கள் தழுவும்போதும்
உங்களின் ஒரு பகுதி எப்போதும் தனித்தேயிருக்கிறது.

இங்கு வரும்போதும் நீங்கள் தனித்தே வந்தீர்கள்,
இங்கிருந்து போகும்போதும் தனித்தே போவீர்கள்.

'இருத்தலின் தனிமை'தான் உங்களின் இயல்பு
என்ற அறிதலிலிருந்து விடுதலை வருகிறது.

இந்தத் தளத்திலிருந்து பார்த்தால்,
நீங்கள் நம்பிக்கைக்கு உரியவராக இருப்பீர்கள்;
இல்லையெனில் பிறரை நம்பி இருப்பீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

• • •

உலகம் 'தோல்வி' என்றழைப்பதை நான் 'திருப்புமுனை' என்றழைக்கிறேன்

எனக்குப் பதினேழு வயதாக இருக்கும்போது, ஒரு பொறியியல் வல்லுனராக வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால், பன்னிரண்டாம் வகுப்பில் நான் பெற்ற மதிப்பெண்கள் காரணமாக, கணிதப் பட்டப் படிப்பு மட்டுமே பெற முடிந்தது. வெறும் பட்டப் படிப்பு ஒரு சிறந்த எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அளிக்காது என்ற காரணத்தால், கூடுதலாக, கணினி தொடர்பான வகுப்புகளில் சேர்ந்து பயின்றேன். நான் விரும்பியதும், எனக்குக் கிடைத்ததும் வெவ்வேறானவை. ஆனாலும் என்ன? 25 வயதில் நான் என் சொந்த மென்பொருள் ஆலோசனை நிறுவனத்தைத் துவக்கினேன். பல பொறியியல் வல்லுனர்களும் கணினிப் பட்டதாரிகளும் என்கீழ் வேலை பார்த்தனர். பதினேழு வயதில் நான் விரும்பிய விளைவைப் பெற முடியாததால் உலகம் என்னைத் தோல்வியுற்றவனாகப் பார்த்தது. ஆனால் யதார்த்தத்தில், நான் எதிர்பார்க்காத அந்த மோசமான விளைவுதான் என்னை ஒரு வெற்றியாளனாக மாற்றியமைத்தது.

என் நீண்டகால இலக்குகள் அனைத்தும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்தே இருந்தன. ஆனாலும் முற்றிலும் தற்செயலான காரணங்களுக்காக, என் முப்பதாவது வயதில் 'அல்மா மாட்டர்' என்ற நிறுவனத்தையும், முப்பத்தைந்தாவது வயதில் 'ஃபுரோஸன் தாட்ஸ்' பத்திரிகையையும் துவங்கினேன். என் இலக்குகளை நோக்கிய திசையில் என்னால் பயணிக்க முடியவில்லை. ஆனால், நான்

https://telegram.me/aedahamlibrary

தீர்மானிக்காத திசைகளில் வாழ்க்கை என்னை இழுத்துச் சென்று, என் வாழ்விற்கான முக்கியக் குறிக்கோளை எனக்கு வெளிப்படுத்தியது.

கல்கத்தாவில் ஒரு கான்வென்ட் பள்ளியில் கற்பிப்பதற்காகத் தற்செயலாக யுகோஸ்லாவியாவிலிருந்து ஏக்னஸ் ஜோன்சா போஜாக்சூ என்ற பெண்மணி இந்தியாவிற்கு வந்தார்; ஆனால், அன்னை தெரசாவின் இதயம் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. சாதுக்கள் அனைவரும் வெட்டிப் பேச்சாளர்கள் என்று கருதிய, 'த நேஷனல் ஹெரால்டு' பத்திரிகையின் ஆசிரியர்குழு உறுப்பினர் பாலகிருஷ்ண மேனன், ஒரு கட்டுரை எழுதுவதற்காகத் தற்செயலாக சுவாமி சிவானந்தாவை அணுகியபோது, ஒரு சுவாமி சின்மயானந்தா இவ்வுலகிற்கு வெளிப்படுத்தப்பட்டார். கிறிஸ்படர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததும் ஒரு தற்செயலான நிகழ்வே.

தங்கள் இலக்குகளை நிர்ணயம் செய்து, அவற்றை அடைந்தவர்களைக் காட்டிலும், தீர்மானிக்கப்படாத, தற்செயலான காரணங்களின் மூலம் மாபெரும் சாதனைகளைப் படைத்தவர்கள் இவ்வுலகில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

எனவே, நீங்கள் விரும்பியது உங்கள் வாழ்வில் உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், உங்களுடைய அனைத்து முயற்சிகளுக்குப் பின்னும் விளைவுகள் நீங்கள் எதிர்பார்த்தபடி அமையவில்லை என்றால், உங்கள் விருப்பத்தேர்வின் விளைவுகள் நீங்கள் விரும்பியபடி இல்லையென்றால், மனத்தைத் தளரவிடாதீர்கள்.

தீர்மானிக்கப்படாத, தற்செயலான விளைவுகள் மூலம், நீங்கள் சிந்தித்திராத சாத்தியக்கூறுகளை உங்களுக்கு வாழ்க்கை படம்பிடித்துக் காட்டுகிறது. தீர்மானிக்கப்படாத, தற்செயலான விளைவுகள் மூலம், தான் ஒரு வித்தியாசமான திட்டத்தை வைத்திருப்பதைப் பரம்பொருள் உங்களுக்குத் தெரிவிக்கிறது. அது நீங்கள் எதிர்பார்த்ததைவிடப் பெரிய திட்டம். சில சமயங்களில் கடவுள் உங்களுக்காக வைத்திருக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, உங்கள் திட்டங்களைத் தடம் புரட்டுகிறார்.

உலகம் 'தோல்வி' என்றழைப்பதை நான் 'திருப்புமுனை' என்று அழைக்கிறேன்.

https://telegram.me/aedahamlibrary

எதிர்மறையானவற்றிற்கு இரண்டு வார்த்தைகள், நேர்மறையானவற்றிற்கு ஐந்து வார்த்தைகள்

நமது ஆழ்மனம் உணர்ச்சிகளின் ஆழத்தைத் தேடுகிறது. நமது ஆழ்மனத்தின் விருப்பத்தேர்வு நேர்மறையான உணர்ச்சிகளுக்கும் எதிர்மறையான உணர்ச்சிகளுக்கும் இடையேயானது அல்ல. மாறாக, ஆழ்ந்த உணர்ச்சிகளுக்கும் மேலோட்டமான உணர்ச்சிகளுக்கும் இடையேயான ஒன்று. நேர்மறையான உணர்ச்சிகளைக் காட்டிலும் எதிர்மறையான உணர்ச்சிகள்மீது நாம் அதிக கவனம் செலுத்துவதால், பெரும்பாலான மனிதர்கள் ஆழமான எதிர்மறை உணர்ச்சிகளுக்குள் எந்த முயற்சியுமின்றி எளிதாக மூழ்கிவிடுகின்றனர். அதற்கு மாறாக, நேர்மறையான உணர்ச்சிகளை அவர்கள் மேலோட்டமாகவே அனுபவிக்கின்றனர். உங்கள் விஷயத்தில் நீங்கள் எப்படி என்பதை நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு குழந்தை தன் வீட்டில் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருக்கிறது. வீட்டிலுள்ள மீதி அனைவரும் அவரவரது சொந்த வேலையில் ஈடுபட்டுள்ளனர். குழந்தையின் மகிழ்ச்சி பாருடைய ஆழ்ந்த கவனத்தையும் ஈர்ப்பதில்லை. ஆனால், குழந்தைக்கு அடிபட்டுவிட்டால், குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் அக்குழந்தையிடம் வந்து, "என்ன நிகழ்ந்தது?" என்று விசாரிப்பார்கள். மகிழ்ச்சியாக இருப்பதைக் காட்டிலும், அழுதால் அனைவரின் கவனத்தையும் எளிதில் ஈர்க்க

https://telegram.me/aedahamlibrary

முடியும் என்பதை நம்மையும் அறியாமல் நாம் அக்குழந்தையின் ஆழ்மனத்திற்குப் பயிற்றுவிக்கிறோம். எதிர்காலத்தில் அக்குழந்தை பெரியவளாக வளர்ந்தும்கூட, தனக்குக் கவனம் தேவைப்படும்போதெல்லாம் ஏதோ ஒருவித அழுகையைத் தேர்ந்தெடுப்பாள் — அது வெறும் கண்ணீராக இருக்கலாம், மனச்சோர்வாக இருக்கலாம், அல்லது பிடிவாதமாக இருக்கலாம். அவளது உணர்ச்சிகள் அவளுக்கு நியாயமானதாகப்படும். ஆனால் மற்றவர்களுக்கு அதிலுள்ள முரண்பாடு தென்படும். இது ஆழ்மனத்தின் விருப்பத்தேர்வு தனக்குள் இருக்கும் ஏதோ ஒன்று (அவளது ஆழ்மனம்) தன் உணர்ச்சிகளை மட்டும் விருப்பத்தேர்வு செய்வதில்லை, ஆனால் அந்த உணர்ச்சிகளுக்கு ஏற்றாற்போல் தன் வாழ்வின் சூழ்நிலைகளை யும் தேர்ந்தெடுக்கிறது என்பதைப் பற்றிய விழிப்புணர்வுகூட அவளுக்கு இல்லை. ஆழ்ந்த உணர்ச்சிகளுக்காக ஏங்கும் ஓர் ஆழ்மனம் அவளை ஆட்டுவிக்கிறது.

ஆழமான பகைமைக்கும் மேலோட்டமான அன்பிற்கும் இடையே, உங்கள் ஆழ்மனம் பகைமையைத்தான் தேர்ந்தெடுக்கும். அதனால்தான், வருடக்கணக்கில் காயங்களையும் பகையுணர்ச்சியையும் கொண்டிருந்தாலும், அவ்வப்போது அன்பின் வெளிப்பாட்டைப் புதுப்பித்துக் கொள்வதும் அவசியமாகிறது. இல்லையென்றால், அது காயப்படுத்தும். இதிலுள்ள வேடிக்கையைக் கவனியுங்கள்! உங்களுக்குள் இருக்கும் பகைமை உணர்ச்சியை நிலைத்திருக்கச் செய்வதற்கு உங்களுக்கு யாருடைய உதவியும் தேவைப்படுவதில்லை. ஆனால், உங்கள் அன்பை நிலைக்கச் செய்வதற்கு உங்களுக்கு வேறொருவரின் உதவி தேவைப்படுகிறது. இதற்கான தீர்வு, ஆழமான அன்பை அனுபவிப்பதுதான். உங்கள் அன்பின் வெளிப்பாடுகளைத் தீவிரப்படுத்துங்கள். அன்பில் அமிழ்ந்திருங்கள். அன்பில் மூழ்குங்கள். அன்பின் கச்சிதமான எடுத்துக்காட்டாக இருங்கள். மிக முக்கியமாக, காயத்தையும் பகையையும் மன்னிப்பின் மூலம் அமைதிப்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். இறுதியில், உங்கள் ஆழ்மனம் பகைமைக்குப் பதில் அன்பைத் தேர்ந்தெடுக்கும். அன்பின் ஆழம் அதிகரிப்பதுதான் அதற்குக் காரணம். மேலும், அந்த அன்போடு ஒத்திசையும் சூழ்நிலைகளை அது உங்கள் வாழ்க்கையில் தேர்ந்தெடுக்கத் துவங்கும்.

உங்கள் தோல்விகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள், அதோடு தோல்விகளை மறந்துவிடுங்கள். அது குறித்து அதிகம் உணர்ச்சிவசப்படாதீர்கள். உங்கள் ஆழ்மனத்தைச் சீரழிக்காதீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

உங்கள் வெற்றியைக் கொண்டாடுங்கள். உங்களது ஒவ்வோர் உயிரணுவையும் அதில் ஈடுபடுத்துங்கள். உங்கள் ஆழ்மனத்தைச் சீராட்டுங்கள். உடல்நலக் குறைவு ஏற்பட்டால் அதை அதிகம் கண்டு கொள்ளாதீர்கள். மாறாக, உங்கள் ஆரோக்கியத்தையும் உடல் உறுதியையும் பற்றிப் பெருமையாகப் பேசுங்கள். உங்கள் விருப்பம் என்ன என்பதை உங்கள் ஆழ்மனம் அறியட்டும்.

தீர்வு மிகவும் எளிது. எதிர்மறையானவற்றைப் பற்றி இரண்டு வார்த்தைகளும் நேர்மறையானவற்றைப் பற்றிக் குறைந்தது ஐந்து வார்த்தைகளும் பேசுங்கள். உங்கள் எதிர்மறையான உணர்ச்சிகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்; நேர்மறையான உணர்ச்சிகளை வெள்ளமாய்ப் பெருக்குங்கள். அதுதான் பரிபூரணமான மாற்றம்.

ஒரு சோகமான இதயம்தான் மிக அழகிய கவிதையைப் படைக்கிறது என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். அப்படியெனில், இந்த அழகிய உலகைப் படைக்கும்போது கடவுள் சோகமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அவர் என்னுடைய கடவுளைப் பார்த்ததில்லை. ஆழமான பேரானந்தத்தை அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். இனியும் நீங்கள் கவிதை எழுதத் தேவையிருக்காது. அது வெறுமனே உங்கள் மூலமாக நிகழும். உங்கள் வாழ்க்கையே ஒரு கவிதையாக மாறும்.

https://telegram.me/aedahamlibrary

நாம் ஏன் பொய் சொல்கிறோம்?

ஓர் இனிமையற்ற சூழ்நிலையிலிருந்து
தப்பித்துக் கொள்வதற்காக.

பொய் சொல்லும் பழக்கத்தினால் வரும் சாபம்,
தப்பிக்கும் மனப்போக்கைத் தோற்றுவிக்கும்.
நேர்மையாக இருப்பதால் கிடைக்கும் ஆசீர்வாதம்,
எதிர்கொள்ளும் மனப்போக்கை உருவாக்கும்.

நீங்கள் சிகரத்தை அடைய வேண்டுமென்றால்,
வாழ்வில் அனைத்தையும் 'எதிர்கொள்ளும் மனப்போக்கு'
உங்களுக்குத் தேவை.

எது உங்களிடம் அந்த மனப்போக்கை உருவாக்கும்?
நேர்மை!

https://telegram.me/aedahamlibrary

உங்களிடம் சரியான கேள்விகள் இருக்கின்றனவா?

"நல்லவர்களுக்கு ஏன் மோசமான விஷயங்கள் நடக்கின்றன?" என்று ஒருவர் கேட்டார். அதற்குப் பாதிரியார், "கேள்வியே தவறாக இருக்கும்போது, அதற்கு நான் விடையளிக்க வேண்டும் என்று எப்படி நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?" என்று பதிலளித்தார். கேள்வி இப்படியாகத்தான் இருந்திருக்க வேண்டும்: "நல்லவர்களுக்கு மோசமான விஷயங்கள் நடக்கும்போது, அவர்களுக்கு என்ன நிகழ்கிறது?" அட்போது, "அவர்கள் சிறந்தவர்கள் ஆகின்றனர்," என்பது பதிலாக இருந்திருக்கும்.

நம் முன்னேற்றத்தின் வேகத்தைத் தீர்மானிப்பது நம் அறிவு அல்ல, மாறாக, அந்த அறிவை நாம் உபயோகிக்கும் விதம்தான் அதைத் தீர்மானிக்கிறது. சரியான கேள்விகளை எப்படிக் கேட்க வேண்டும் என்பது நமக்குத் தெரியும்போதுதான் நம் அறிவை நம்மால் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். உங்களது அனைத்துப் பிரச்சனைகளுக்கும், "எனக்கு ஏன் இவ்வாறு நிகழ்கிறது?" என்று கேளுங்கள். உங்கள் அறிவின் பதிலைக் கூர்ந்து கவனியுங்கள். உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள எண்ணற்ற ஆசீர்வாதங்களுக்காக, "ஏன் எனக்கு இவ்வாறு நிகழ்கிறது?" என்று மீண்டும் கேளுங்கள். இப்போதும் உங்கள் அறிவின் குரலைக் கேளுங்கள். இரண்டு பதில்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கவனியுங்கள். கேள்விகளின் சக்தியை அனுபவியுங்கள். கேள்விகள் பெரும் சக்தி வாய்ந்தவை. சரியான நேரத்தில் கேட்கப்படும் ஒரு சரியான கேள்வி நம் அறிவின் போக்கை மாற்றிவிடும். அதோடு, நம் வாழ்வின் போக்கையும் மாற்றிவிடும்.

https://telegram.me/aedahamlibrary

"ஏன் எனக்குப் போய் இப்படி நிகழ்கிறது?" என்ற கேள்வி உங்களை சுயபச்சாதாபத்திற்கு இட்டுச் செல்லும் திசையில் உங்கள் அறிவை இயக்கும். அப்போது, "இதிலிருந்து நான் எதைக் கற்றுக் கொள்ளலாம்?" என்று கேளுங்கள். உயர்ந்த பக்குவத்திற்கு அது உங்களை வழிநடத்தும். "அவள் ஏன் என்னைப் புரிந்து கொள்ளவில்லை?" என்ற கேள்வி, அடுத்தவரைக் குற்றப்படுத்தி, உங்களையும் பலியானவராக உணரச் செய்யும் போக்கில் உங்கள் அறிவை இயக்கும். மாறாக, "அவள் என்னைப் புரிந்து கொள்வதற்கு அவளை நான் எவ்வாறு அணுக வேண்டும்?" என்று கேளுங்கள். சூழ்நிலை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக உணர்வீர்கள். அது உங்களை இன்னும் அதிக வளங்கள் நிறைந்த, பொறுப்பான நிலைக்கு இட்டுச் செல்வதை அறிவீர்கள்.

தேக்கமடைந்துள்ளதாக நீங்கள் உணர்ந்தால், உங்களால் இயன்ற வேகத்தில் நீங்கள் வளரவில்லை என்றால், உங்கள் இலக்குகளுக்கு இட்டுச் செல்லும் திசையில் நீங்கள் செல்லாவிட்டால், ஒரே மாதிரியான பிரச்சனைகளை நீங்கள் மீண்டும் மீண்டும் சந்தித்துக் கொண்டிருந்தால், அப்போது நீங்கள் சரியான கேள்விகளைக் கேட்பதில்லை என்று உறுதியாகக் கூறலாம். எனவே, உங்கள் அறிவை நீங்கள் சரியாக இயக்கவில்லை என்று கருதலாம்.

"அடுத்தது என்னவாக இருக்கக்கூடும்?", "நான் ஏற்கனவே செய்து கொண்டிருப்பதை இன்னும் சிறப்பாக எப்படிச் செய்யலாம்?", "மிஞ்சி மிஞ்சிப் போனால் பெரிதாக என்ன நடந்துவிடும்?" போன்ற கேள்விகள் வாழ்வு குறித்து நீங்கள் கொண்டுள்ள கண்ணோட்டத்தை முற்றிலுமாக மாற்றிவிடும். நீங்களோ அல்லது இவ்வுலகமோ உங்கள் அறிவிடம் கேட்கும் எந்தக் கேள்விக்கும் விடையளிக்க வேண்டிய இயல்பான கட்டாயம் நம் அறிவிற்கு உண்டு. எனவே, சரியான கேள்விகளைத் தேர்ந்தெடுத்து, உங்கள் அறிவை ஆக்கபூர்வமான வழிகளில் இயக்குங்கள்.

நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் இசிடார் ஐசக் ராபி, "பெரிதாக எதுவும் திட்டமிடாமலேயே என் தாயார்தான் என்னை ஓர் அறிவியலறிஞராக ஆக்கினார். புரூக்லினில் உள்ள ஒவ்வொரு யூதத் தாயாரும் தன் குழந்தை, பள்ளியிலிருந்து திரும்பியவுடன், 'இன்று ஏதேனும் கற்றுக் கொண்டாயா? என்று கேட்பதுதான் வழக்கம். ஆனால் என் தாயாரோ 'இஸ்லி, இன்று ஏதேனும் ஒரு நல்ல கேள்வியைக் கேட்டாயா?' என்று என்னிடம் கேட்பார். அந்த வித்தியாசம் — நல்ல

https://telegram.me/aedahamlibrary

கேள்விகளைக் கேட்டதுதான் என்னை ஓர் அறிவியலறிஞர் ஆக்கியது," என்று கூறினார்.

"ஆப்பிள் ஏன் கீழே விழுகிறது?" என்று ஒருவர் கேட்டார். அன்றிலிருந்து உலகம் முற்றிலுமாக மாறியது. உண்மையில், அனைத்துக் கண்டுபிடிப்புகளும் கண்டறிதல்களும் ஒரு கேள்வியில்தான் துவங்குகின்றன. அர்ஜுனன் தன் கேள்விகளால் கிருஷ்ணரின் அறிவுக்கு ஒரு திசையைக் காட்டினான். அதை நாம் பகவத் கீதை என்ற பெயரில் அழைக்கிறோம்.

எல்லா விடைகளும் உங்களிடம் இல்லாவிட்டால் பரவாயில்லை. இங்கு முக்கியமான விஷயம், உங்களிடம் சரியான கேள்விகள் இருக்கின்றனவா என்பதுதான். உங்கள் அறிவு காத்துக் கொண்டிருக்கிறது. கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்.

https://telegram.me/aedahamlibrary

• • •

யாரும் உங்களிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்காதபோது
நீங்கள் உங்கள்மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.
உங்களால் முடியும் என்று ஒருவரும் நம்பாதபோதும்கூட
உங்களால் முடியும் என்று நீங்கள் நம்ப வேண்டும்.
உங்களை நீங்கள் நேசிக்கக் கற்றுக்கொள்ளும்போதுதான்
உங்கள்மீது நீங்கள் நம்பிக்கை கொள்வீர்கள்.

எனவே, ஒருவரும் உங்களை நேசிக்காதபோதும்,
நீங்கள் உங்கள்மீது அன்பு செலுத்த வேண்டும்.
உங்களை நீங்கள் நேசிக்கக் கற்றுக்கொள்ளும்போதுதான்,
உலகம் உங்களை நேசிக்கத் துவங்கும்.

உலகம் உங்களை எப்படிப் பார்க்கிறது என்பது
உங்களிடம் சிறு வித்தியாசத்தைத்தான் ஏற்படுத்தும்.
நீங்கள் உங்களை எப்படிப் பார்க்கிறீர்கள் என்பதுதான்
எல்லா வித்தியாசத்தையும் உங்களிடத்தில் ஏற்படுத்தும்.

https://telegram.me/aedahamlibrary

ஒவ்வொருவரும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றனர்

"அவரது புகைப்பழக்கம் மற்றும் புகையிலைப் பழக்கத்தை ஒதுக்கிவிட்டால், என் தந்தை ஒரு மாபெரும் மனிதர்தான்," என்று எத்தனை நாட்களுக்குத்தான் நாம் நம்மையே அமைதிப்படுத்திக் கொள்ளப் போகிறோம்? நாம் நம் ஆசிரியரின் நடத்தையைப் பார்க்கத் தேவையில்லை, அவரது போதனைகளை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதியை விட்டுவிட வேண்டும் என்று எத்தனைக் காலம்தான் நம்மையே திருப்திப்படுத்திக் கொள்வோம்?

எது சரி, எது தவறு என்று தீர்மானிப்பதற்கு நான் உலகளாவிய நீதிபதி அல்ல. உலகளவில் சரியானவையும் தவறானவையும் கிடையாது என்பதையும் நான் அறிவேன். விருப்பத்தேர்வு செய்ய மற்றொருவருக்கு இருக்கும் சுதந்திரத்தைத் தடுப்பதற்கு நான் யார்? ஆனால், "எனக்குச் சரி என்று தோன்றும் விஷயத்தை என் குழந்தைகள் தேர்ந்தெடுத்தால் நான் மகிழ்ச்சி அடைவேனா? என்னிடம் இருக்கும் பழக்கங்களுக்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன் என்று எப்போதேனும் என்னால் கூற முடியுமா? பிறர் என் நடத்தையைப் பின்பற்றும் அளவுக்கு என் நடத்தை சரியானதாக இருக்கிறதா? குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் அல்லாமல், ஒட்டுமொத்தமாக என் வாழ்க்கை அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறதா அல்லது எச்சரிக்கையாக அமைந்துள்ளதா?" போன்ற துணிச்சலான கேள்விகளை நீங்களே உங்களைக் கேளுங்கள்.

https://telegram.me/aedahamlibrary

நம் குழந்தைகள் நம்மை எப்போதும் கவனித்துக் கொண்டே இருக்கிறார்கள். தாங்கள் கேட்பதைக் காட்டிலும், தாங்கள் பார்ப்பதிலிருந்து அவர்கள் அதிகம் கற்றுக் கொள்கின்றனர். ஒழுக்க நெறிகள் புத்தகங்களில் இருந்து கற்றுக் கொள்ளப்படுவதில்லை. மாறாக அவை, நம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருப்பவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளப்படுகின்றன. உலகம் உங்கள் எடுத்துக்காட்டைத்தான் பின்பற்றும், உங்கள் அறிவுரையை அல்ல.

உண்மை என்னவென்றால், ஒரு குரு மௌன நிலையை அடைந்தவுடன், தியானத்தின் குறிக்கோளை அடைந்துவிடுகிறார். எனவே, அவர் தினமும் தியானப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அறியாமையில் உழலும் மனிதன், "குரு தினமும் தியானிக்காதபோது, நானும் செய்ய வேண்டியதில்லை," என்று விவாதிப்பான். பகவத் கீதை நமக்கு இவ்வாறு நினைவூட்டுகிறது: "மாபெரும் மனிதர்கள் செய்யும் செயல்களை, அவரைப் பார்த்துப் பிறரும் செய்வர். அவர் எந்தத் தரங்களை நிர்ணயிக்கிறாரோ, உலகம் அவற்றைப் பின்பற்றும்." பிறரை உத்வேகப்படுத்துவதற்காக நாம் சில விஷயங்களைச் செய்தாக வேண்டும், நம் காரணங்கள் எதுவாக இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல. நமக்கென்று ஒரு சமூகப் பொறுப்பு உள்ளது. ஓர் ஒப்பற்ற முன்மாதிரியாக நாம் இருக்க வேண்டும். எது செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்யுங்கள். எது செய்யப்படக்கூடாதோ அதைச் செய்யாதீர்கள்.

ஓர் ஆசிரியராக, ஒரு மேலாளராக, ஒரு துறையில் முன்னோடியாக, ஒரு பெற்றோராக, குடும்பத் தலைவராக, அரசாங்கப் பொறுப்பு வகிப்பவராக, நாம் அனைவரும் பிறர் பின்பற்றக்கூடிய தரங்களை நிர்ணயம் செய்யும் வழிகளில் வாழ வேண்டும். பிறர் எப்படிச் சிந்திக்க வேண்டும், பேச வேண்டும், நடந்து கொள்ள வேண்டும், வாழ வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, முதலில் நாம் அவ்வாறு சிந்திக்கவும், பேசவும், நடந்து கொள்ளவும், வாழ்ந்து காட்டவும் வேண்டும். நம்மிடமிருந்து நாம் எதிர்பார்க்க விரும்பாதவற்றை உலகத்தாரிடமிருந்து நம்மால் எதிர்பார்க்க முடியாது.

காலப்போக்கில், உங்களைச் சுற்றி இருக்கும் உலகம் உங்களை நகலெடுக்கத் துவங்கிவிடும். அப்போது, நகலெடுக்கத் தகுதி வாய்ந்த ஒரு சிறந்த முன்மாதிரியாக நீங்கள் இருக்க வேண்டியது அவசியம்.

"யாரும் பார்க்காதபோது எப்படி ஆடுவீர்களோ, அப்படி ஆடுங்கள்,"

https://telegram.me/aedahamlibrary

என்று மார்க் டுவெயின் கூறினார்.

"எல்லோரும் பார்க்கிறார்கள் என்ற நினைப்பில் வாழுங்கள்," என்று நான் உங்களிடம் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

https://telegram.me/aedahamlibrary

கல்வி என்பது வெறும் ஏட்டுப் படிப்பிற்கு அப்பாற்பட்டது

"கல்வி என்பது உங்கள் மூளைக்குள் போடப்பட்ட, உங்கள் வாழ்நாள் முழுவதும் அங்கு பிரளயங்களை உருவாக்கி, செரிமானம் ஆகாமல் இருக்கும் எண்ணிக்கையற்றத் தகவல்கள் அல்ல. வாழ்வைப் படைக்கும், மனிதனை உருவாக்கும், நடத்தையை மேம்படுத்தும் யோசனைகளின் தொகுப்புதான் நமக்குத் தேவை. நீங்கள் ஐந்து யோசனைகளைத் தொகுத்து, அவற்றை உங்கள் வாழ்வாகவும் நடத்தையாகவும் அமைத்துக் கொண்டுவிட்டீர்கள் என்றால், ஒரு மொத்தப் புத்தகசாலையையும் மனப்பாடம் செய்துள்ள ஒருவரைக் காட்டிலும் நீங்கள் அதிகமாகக் கற்றுள்ளீர்கள் என்று அர்த்தம். நடத்தையை உருவாக்கும், மன வலிமையை அதிகரிக்கும், அறிவைப் பெருக்கும், ஒருவனைத் தன் சொந்தக் காலில் நிற்கத் தகுதி வாய்ந்தவனாக ஆக்கும் கல்விதான் நமக்குத் தேவையான கல்வி," என்று சுவாமி விவேகானந்தர் கூறினார்.

ஏட்டுக் கல்விதான் உண்மையான கல்வி என்று நாம் எப்படியோ தவறாகப் புரிந்து கொண்டுள்ளோம். பெற்றோரிலிருந்து ஆசிரியர்கள்வரை, அனைவரின் கவனமும் ஏட்டுப் படிப்பை நோக்கியே அதிகம் சரிந்துவிட்டது. வாழ்க்கையின் அறிவியலைப் புரிந்து கொள்ள முடியாவிட்டால், பாடத்திட்ட அறிவியலை வைத்துக் கொண்டு ஒரு குழந்தை என்ன செய்யும்? வரலாற்றைப் படித்து

மனப்பாடம் செய்ய நாம் நம் குழந்தைகளுக்குக் கற்றுத் தருகிறோம். ஆனால், வரலாற்றைப் படைக்க நாம் அவர்களுக்குக் கற்றுக்

https://telegram.me/aedahamlibrary

கொடுப்பதில்லை. ஒரு குழந்தையால் சரிவரக் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ள முடியவில்லை என்றால், அது மூன்று மொழிகளைக் கற்று கொண்டு என்ன பிரயோஜனம்?

என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். ஏட்டுப் படிப்பு எதற்கும் உதவாது என்று நான் கூறவில்லை. ஏட்டுப் படிப்பு மட்டுமே கல்வியைப் பூர்த்தி செய்வதில்லை என்றுதான் நான் வலியுறுத்துகிறேன். ஏட்டுப் படிப்பு என்பது ஒரு குழந்தையின் உருவாக்கத்தில் ஓர் அம்சம்தான், அது மட்டுமே ஒரே அம்சம் அல்ல. ஏட்டுப் படிப்பு வாழ்க்கைக்கு உதவும், ஆனால் அது மட்டுமே வாழ்க்கை அல்ல. வாழ்க்கைக்கு இன்னும் அதிகமான பரிமாணங்கள் உள்ளன. வகுப்பில் முதலாவதாக வந்த ஒவ்வொருவரும் வாழ்வில் முதலாவதாக வர வேண்டும் என்ற அவசியமில்லை. படிப்பில் சற்றுப் பின்தங்கியிருந்த அனைவரும் வாழ்வில் பின்னடைவைச் சந்திக்க வேண்டிய அவசியமும் இல்லை. உண்மையில், 'வாழ்வு குறித்த சராசரிப் புரிதல் கொண்ட 98 சதவீத மக்கள்,' 'வாழ்க்கையைப் பற்றி விரிவான புரிதல் கொண்ட 72 சதவீத மக்க'ளிடம் வேலை செய்கின்றனர்.

உறவுகள்தான் வாழ்வின் நூலிழைகள். கருத்துப் பரிமாற்றங்கள்தான் உறவுகளின் உயிர்நாடிகள். வெற்றி என்பது தலைமைத்துவத்தைப் பற்றியது. ஒன்று, நீங்கள் வழிநடத்துவீர்கள் அல்லது வழிநடத்தப்படுவீர்கள். உங்கள் நேரம் செலவிடப்படும் இடத்தில்தான் உங்கள் எதிர்காலம் உருவாகிறது. சுருங்கக் கூறினால், நேர நிர்வாகத் திறமைகள்தான் வாழ்வு நிர்வாகத் திறமைகள். நீங்கள் பிறரது நம்பிக்கைக்கு உகந்தவராக இருக்கலாம், அல்லது பிறரை நம்பி இருக்கலாம். அது நீங்கள் உங்களை எப்படிப் பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்த விஷயம். வாழ்விற்கு இன்றியமையாத இவற்றில் ஒன்றுகூட நம் கல்வித் திட்டத்தில் அங்கம் வகிக்கவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

எனவே, பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்குப் பொறுப்பேற்பவர்கள் அனைவரும் தயவு செய்து நம் குழந்தைகளை ஒரு குறிப்பிட்டப் பாடத் திட்டத்திற்குள் சிறைப்படுத்த வேண்டாம். ஏட்டுக் கல்வியுடன் சேர்த்து, வாழ்க்கைக் கல்வியோடு கைகுலுக்கவும் அவர்களை அனுமதியுங்கள். அவர்களது மதிப்பெண்களை மட்டும் பார்க்காமல், அவர்கள் வாழ்வும் மதிப்பாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்வோம்.

https://telegram.me/aedahamlibrary

மகிழ்ச்சியைச் சென்றடையப் பிரத்யேகமான வழியேதும் கிடையாது, மகிழ்ச்சிதான் அவ்வழி

ஒரு வேலையை நீங்களாக விரும்பித் தேர்ந்தெடுத்துச் செய்தால், அதை நீங்கள் அனுபவிப்பீர்கள். இறுதியில், அவ்வேலை நிறைவேற்றப்பட்டவுடன் ஒரு மனநிறைவைப் பெறுவீர்கள். உங்களுக்கு எது மனநிறைவைத் தருகிறதோ, அதை மீண்டும் மீண்டும் செய்யத் துடித்துக் கொண்டிருப்பீர்கள்.

அதற்கு மாறாக, கட்டாயத்தின்கீழ் நீங்கள் ஒரு வேலையை மேற்கொண்டால், அதைச் செய்வதில் நீங்கள் போராட வேண்டியிருக்கும். இறுதியில், அவ்வேலை செய்து முடிக்கப்பட்டவுடன் நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள். வெறும் நிம்மதியைத் தரும் எந்தவொரு செயலையும் எதிர்காலத்தில் நீங்கள் தவிர்த்துவிடுவீர்கள். அதை நீங்கள் மீண்டும் செய்தாலும், மிகவும் தயக்கத்துடனேயே செய்வீர்கள்.

தங்கள் விருப்பப்படி அனைத்தையும் செய்யும் மக்கள் எப்போதும் தங்கள் வாழ்வில் நிறைவுடன் இருப்பார்கள். எனவே, வாழ்க்கையைக் குறித்தத் தாகம் அவர்களிடம் அதிகமாக இருக்கும். கட்டாயத்தின் காரணமாகச் செயல்படும் மக்களுக்கு வாழ்வில் அலுப்பு ஏற்படும். எனவே, சில சமயங்களில், வாழ்க்கையிலிருந்தே விலகி ஓடிவிட நினைக்கும் அளவுக்கு அவர்கள் துணிகின்றனர்.

தங்கள் அன்றாட வேலைகளைச் செய்வதற்குக்கூட மக்கள் விரும்புவதில்லை. அவர்கள் சமைக்கத் தயங்குகின்றனர். முன்னதாகவே

https://telegram.me/aedahamlibrary

சமைக்கப்பட்ட உணவுகள், துரித உணவுகள், குளிர்பதனப்படுத்தப்பட்ட உணவுகள், மற்றும் ஆயத்த உணவுகள் ஆகியவை ஒவ்வொரு சமையலறையையும் நோக்கிப் படையெடுக்கவில்லையா? ஆர அமர்ந்து தங்கள் உணவை அனுபவிக்கவும் மக்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. காலை உணவைத் தவிர்ப்பதும், மதிய உணவுக்கு நேரமின்றித் தவிப்பதும் பொதுவான விஷயங்களாகி வருகின்றன அல்லவா? பள்ளிக்குச் செல்வதற்குக் குழந்தைகள் தயங்குவதைக் காட்டிலும், வேலைக்குச் செல்வதற்குப் பெரியவர்கள் அதிகமாகத் தயங்குகின்றனர். திங்கட்கிழமைக் காலை நேரங்களில் ஏற்படும் மாரடைப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு உங்களால் வேறு என்ன விளக்கங்களைக் கொடுக்க முடியும்?

வாழ்வில் இன்றியமையாத அனைத்து விஷயங்களும் கட்டாயப்படுத்துதலாகக் கருதப்பட்டால், ஒவ்வொரு விஷயமும் செய்து முடிக்கப்பட்டவுடன் நிம்மதிப் பெருமூச்சு விடவேண்டியிருந்தால், நம் வாழ்வின் தரத்தை நம்மால் எவ்வாறு மேம்படுத்த முடியும்?

நாம் செய்யும் அனைத்திலும் கொண்டாட்டத்தைச் சேர்த்துக் கொள்வது நல்லது. "நான் அதைச் செய்ய வேண்டும், நான் அதைச் செய்தே ஆக வேண்டும்," என்ற மனப்போக்கிலிருந்து, "நான் அதைச் செய்ய விரும்புகிறேன்," என்ற மனப்போக்கிற்கு மாற வேண்டும். நம் ஒவ்வொரு நடவடிக்கையும் நம் விருப்பத்தேர்வாக இருக்க வேண்டும், குதூகலமும் நிறைவும் நிறைந்ததாக இருக்க வேண்டும். ஒரு விஷயம் கண்டிப்பாகச் செய்யப்பட்டே ஆக வேண்டும் என்ற பட்சத்தில், அதை மகிழ்ச்சியுடன் அனுபவித்துச் செய்வதே சிறந்தது.

"குருவே, ஞானோதயம் பெறுவதற்கு முன்னும், ஞானோதயம் பெற்றப் பிறகும் நீங்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டும், மரங்களை வெட்டிக் கொண்டும்தான் இருக்கிறீர்கள். உங்கள் நடவடிக்கைகளில் எந்தவொரு மாற்றமும் எனக்குத் தென்படவில்லையே," என்று சீடன் கேட்டான். அதற்கு, "என் நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், அவற்றின் தரம் மாறிவிட்டது," என்று குரு பதிலளித்தார்.

"நீங்கள் நேசிக்கும் ஒரு வேலையைத் தேர்ந்தெடுங்கள். அதன் பிறகு உங்கள் வாழ்வில் ஒருநாள்கூட நீங்கள் வேலை பார்க்க வேண்டிய அவசியம் இருக்காது," என்று கன்பூசியஸ் மிகப் பொருத்தமாகக் கூறினார்.

https://telegram.me/aedahamlibrary

மகிழ்ச்சியைச் சென்றடையப் பிரத்யேகமான வழியேதும் கிடையாது. மகிழ்ச்சிதான் அவ்வழி.

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

• • •

மனிதர்கள் என் செயல்களை எடைபோடுகின்றனர், கடவுள் என் நோக்கங்களை எடைபோடுகிறார்

ஒரு பையனும் ஒரு பெண்ணும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். சற்று நேரத்திற்குப் பின் அவர்களிடம் பேச எனக்கு வாய்ப்புக் கிடைத்தபோது, "அவளைத் தழுவியபோது என் சகோதரியின் பாசத்தை அனுபவித்தேன்," என்று அவன் கூறினான். அவளோ, "அவன்தான் என் வாழ்க்கைத் துணைவன்," என்று கூறினாள். இருவரது நடவடிக்கையும் ஒன்றுதான், ஆனால் அவர்களது நோக்கங்கள் வெவ்வேறாக இருந்தன.

போரில் ஒருவன் மற்றொருவனைக் கொன்றால், அவன் தேசிய அளவில் கொண்டாடப்படுகின்றான். ஆனால், ஒரு நாட்டிற்குள் ஒருவன் மற்றொருவனைக் கொன்றால், கொலையாளி என்று அழைக்கப்படுகிறான். கொலை செய்வது குற்றம்; ஆனால், நீதிமன்ற உத்தரவுப்படிக் கொலையாளியைத் தூக்கிலிடுவது தூக்கிலிடுபவனின் கடமை. தேசத்திற்காக உயிர்நீக்கும் ஒருவன் தியாகியாகிறான்; ஆனால் தற்கொலை செய்து தன் வாழ்வை முடித்துக் கொள்பவன் ஒரு கோழையாகப் பார்க்கப்படுகிறான். ஒரு கத்தியைத் திருடனும் பயன்படுத்துகிறான், ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணரும் பயன்படுத்துகிறார்.

நடவடிக்கையில் எந்தப் பாவமும் இல்லை; பாவம் என்பது அந்த நடவடிக்கைக்குப் பின்னால் உள்ள நோக்கத்தில்தான் இருக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

இதைப் புரிந்து கொள்வது உறவுகளை எளிதாக்கும். நீங்கள் பிறரை மன்னிப்பதை எளிதாக்கும்; நீங்கள் மக்களை வளர்க்க உதவும்; முக்கியமாக, மக்களைப் பற்றிய அனைத்து விஷயங்களையும் சரியான கண்ணோட்டத்துடன் அணுக உங்களுக்கு உதவும். கிட்டத்தட்ட என்னைச் சுற்றிலும் உள்ள அனைத்து மக்களையும் நேர்மறையான கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு அது எனக்குத் தனிப்பட்ட முறையில் உதவியுள்ளது. அவர்களது நடவடிக்கைகள் எப்போதும் சரியானவையாக இல்லாவிட்டாலும்கூட, அந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் உள்ள அவர்களது நோக்கங்கள் எப்போதும் தவறானவையாக இருப்பதில்லை என்பதை என்னால் கண்டுகொள்ள முடிந்தது.

இருந்தாலும், என்னைச் சூழ்ந்திருக்கும் உலகம் என்னை என் நடவடிக்கைகளைக் கொண்டுதான் எடை போடுகிறது என்ற விழிப்புணர்வுடன் நான் இருப்பது அவசியம். உங்கள் நடவடிக்கைகளால் ஏற்படும் விளைவுகள், அவற்றுக்குப் பின்னால் இருக்கும் உங்கள் உன்னதமான நோக்கங்களைக் காட்டிலும் அதிகமாக மதிப்பீடு பெறுவதற்கு அதுதான் காரணம். அதனால்தான், மக்கள் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளனர் என்பதை நீங்கள் அறிந்திருந்தாலும், அதை அவர்கள் சொல்லி நீங்கள் கேட்க வேண்டியது அவசியமாகிறது. தங்கள் உள்ளங்கையை அறிந்து வைத்திருப்பதைக் காட்டிலும் நம்மை நன்றாக அறிந்திருப்பதாக நாம் நம்பும் பிறரிடம்கூட மீண்டும் மீண்டும் நாம் நம்மைப் பற்றிய விளக்கங்களைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதற்குக் காரணம் அதுதான்.

"நடவடிக்கையில் எந்தப் பாவமும் இல்லை; பாவம் என்பது அந்த நடவடிக்கைக்குப் பின்னால் உள்ள நோக்கத்தில்தான் இருக்கிறது," என்ற புரிதலில் நாம் உலகத்தைப் பார்க்க வேண்டும் என்றபோதிலும், உலகம் நம்மை நம் செயல்களைக் கொண்டே எடை போடுகிறது என்ற விழிப்புணர்வுடன் நாம் இருக்க வேண்டும் — நமது நோக்கங்கள் எதுவாக இருந்தாலும் சரி.

நம் குறிக்கோள்களின் அடிப்படையில் நாம் நம் பரம்பொருளால் தண்டிக்கப்பட்டாலும் சரி, கொண்டாடப்பட்டாலும் சரி, மனிதன் நம்மை நம் செயல்களின் அடிப்படையில்தான் தண்டிப்பான் அல்லது அதற்கு வெகுமதி அளிப்பான். நாம் அந்த இரண்டிலுமே சிறப்பாக இருக்க முயற்சித்து, இரண்டு உலகிலும் வெற்றி பெற முயலலாமா ?

https://telegram.me/aedahamlibrary

உன்னதமான நோக்கங்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் சிறந்த நடவடிக்கைகள் ஒரு முழுமையான மனிதனை உருவாக்கும்.

https://telegram.me/aedahamlibrary

ஒன்றை உபயோகப்படுத்தாவிட்டால், நீங்கள் அதை இழப்பீர்கள்

நீண்டகாலமாக மேடையேறியிராத தலைசிறந்த மேடைப் பேச்சாளார்கள் பலர், மக்களிடம் தாங்கள் முன்பு ஏற்படுத்தியத் தாக்கத்தை இப்போது ஏற்படுத்த முடியாமல் போராடுவதை நான் பார்த்திருக்கிறேன். சிறப்பான கல்வியறிவைப் பெற்றப் பல பெண்கள், குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு நான்கு சுவர்களுக்குள் அடைபட்டப் பின், சரளமாகப் பேச முடியாமல் தவிப்பதை நான் பார்த்திருக்கிறேன். தனித்துவமிக்கப் பல பாடகர்கள் தங்கள் பயிற்சியை நிறுத்திவிட்டதால் தங்களால் எட்டக்கூடிய உயரத்தை எட்டாமலிருப்பதையும் நான் கண்டிருக்கிறேன்.

என் வலது கை வளைந்து கொடுக்கும் அளவுக்கு என் இடது கை ஏன் வளைந்து கொடுப்பதில்லை? இதற்கான காரணம் மிகவும் எளிது. நான் என் இடது கையைவிட என் வலது கையை அதிகமாகப் பயன்படுத்துகிறேன். நீங்கள் உங்களுடைய தசைகளைப் பயன்படுத்தும்போது அவற்றை உருவாக்குகிறீர்கள், பயன்படுத்தாதவற்றை இழக்கிறீர்கள். பெரும்பாலான இதய நோய்கள், இதயத்தின் தசைகளை அவற்றின் உச்சபட்சத் திறனை அடையும் அளவுக்கு நீங்கள் செயல்படுத்தாத காரணத்தின் விளைவுகளே. வேலை வாங்கப்படும் இதயத் தசைகள் வேலை செய்து கொண்டே இருக்கும். உங்கள் உடலின் ஒவ்வோர் உறுப்பும் அப்படித்தான். ஒரு பிறவிவரை தாங்கும் அளவுக்கு மனித உடல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால்

https://telegram.me/aedahamlibrary

நாம் நம் உடலை ஒழுங்காகப் பயன்படுத்தாமல் அதைத் துருப்பிடிக்க விட்டுவிடுவதன் மூலம் நம் வாழ்நாளைச் சுருக்கிவிடுகிறோம்.

நீங்கள் ஒன்றைப் பயன்படுத்தவில்லை என்றால், அதை இழக்கத்தான் வேண்டும்.

பயன்படுத்தப்படாத பணம் அதன் மதிப்பை இழக்கிறது. பயன்படுத்தப்படாத திறமை மங்கிப் போகிறது. பயன்படுத்தப்படாத ஆற்றல் குறைந்துவிடுகிறது. பயன்படுத்தப்படாத கருவிகள் துருப்பிடித்துவிடுகின்றன. பயன்படுத்தப்படாத நேரம் காணாமல் போய்விடுகிறது. பயன்படுத்தப்படாத அறிவு ஒரு சுமையாகிவிடுகிறது. பயன்படுத்தப்படாத அனைத்தும் முறைதவறிப் பயன்படுத்தப்படுகின்றன.

இது பைபிளில் கூறப்பட்டுள்ள ஒரு கதையை எனக்கு நினைவூட்டுகிறது. ஒரு நீண்டகாலப் பயணம் மேற்கொள்வதற்கு முன் ஒரு பணக்காரர் தன் மூன்று வேலைக்காரர்களையும் அழைத்து, ஒவ்வொருவரிடமும் சில திறமைகளைக் கொடுத்து, அவற்றைப் பத்திரமாக வைத்திருக்கும்படிக் கூறினார். அவர் திரும்பி வந்தபோது, தன்னிடம் கொடுக்கப்பட்ட ஐந்து திறமைகளைப் பத்தாக மாற்றியுள்ளதாக முதல் வேலையாள் கூறினான். தன்னிடம் கொடுக்கப்பட்ட இரண்டு திறமைகளை நான்காக மாற்றியுள்ளதாக இரண்டாவது வேலையாள் கூறினான். இவற்றைக் கேட்டு மகிழ்ந்த முதலாளி, "நீங்கள் இருவரும் சில பொருட்களை விசுவாசத்துடன் பாதுகாத்து அதைப் பெருக்கியுள்ளதால், உங்களுக்கு இன்னும் பல கூடுதலான பொறுப்புகளைக் கொடுக்கிறேன்," என்று கூறினார். தன்னிடம் கொடுக்கப்பட்டிருந்த திறமைகளைப் பெருக்காமல் அப்படியே வைத்திருந்த மூன்றாவது வேலைக்காரனிடம் இருந்து அதைப் பிடுங்கிக்கொண்ட அந்தப் பணக்காரர், அவனை வேலையைவிட்டும் துரத்திவிட்டார்.

பைபிளில் மத்தேயுவின் அதிகாரம் 25:29 இவ்வாறு கூறுகிறது: "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான், இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்."

இறப்பு என்பது வாழ்வின் அவல நிலை அல்ல, ஆனால், நீங்கள் இன்னும் உயிரோடு இருக்கும்போது உங்களுக்குள் இருக்கும் வளங்கள்

https://telegram.me/aedahamlibrary

மடிந்துபோவதுதான் பெருந்துன்பமான நிலை. நாம் இன்னும் சுவாசித்துக் கொண்டிருக்கும்போது மடிந்துவிட வேண்டாம்.

ஒன்றைப் பயன்படுத்துங்கள், இல்லையேல் நீங்கள் அதை இழப்பீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

உங்கள் நண்பர்களைக் காட்டுங்கள், நீங்கள் யாரென்று கூறுகிறேன்

ஒருநாள் ஓர் அலுவலகத்தில் இருந்த இளம் பெண் ஒருத்தி, தன் வாழ்வின் குறிக்கோள், தன் எதிர்காலத் திட்டங்கள், இலக்குகள், மற்றும் சாதனைகளைப் பற்றிப் பரவசமாகப் பேசிக் கொண்டிருந்தாள். தன் நேரத்தையும் ஆற்றலையும் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதில் அவள் தெளிவாக இருந்தாள். அடுத்த நாள் காலையில், சமீபத்தில் வெளிவந்துள்ள, தான் பார்த்திராத திரைப்படங்களைப் பற்றியும், நீண்ட நாட்களாகத் தான் ருசித்திராத இனிப்புகளைப் பற்றியும், கடைவீதிக்குச் சென்று பொழுதைக் கழித்து எத்தனை நாட்களாகின்றன என்பதைப் பற்றியும் மட்டுமே அவள் பேசிக் கொண்டிருந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை. எது சரி, எது தவறு என்பது இங்கு பிரச்சனை அல்ல. ஆனால், இருபத்து நான்கு மணிநேரத்தில் நிகழ்ந்த மாற்றம்தான் விவாதத்திற்குரியது. முதல் நாள் அவளைச் சூழ்ந்திருந்தவர்களும், இரண்டாம் நாள் அவள் சந்தித்தவர்களும்தான் அனைத்து வித்தியாசங்களையும் ஏற்படுத்தினர்.

நீங்கள் கலந்து பழகும் கூட்டம் இரு முனைகளைக் கொண்ட வாள் போன்றது. அதற்கு உங்களை உருவாக்கும் சக்தியும் உண்டு, அழிக்கும் சக்தியும் உண்டு. நம்மைச் சூழ்ந்திருக்கும் மக்கள், நாம் சிந்திக்கும் விதம், உணரும் விதம், பிறரை நாம் பார்க்கும் விதம், நம்மை நாம் பார்க்கும் விதம், நமது நிகழ்காலம், மற்றும் நாம் உருவாக்கவிருக்கும் எதிர்காலம் ஆகியவற்றின்மீது மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்துவர். தங்கள் கற்றுச்சூழல்களைத் தாண்டியும் வெற்றி பெற்ற மக்கள் இருக்கின்றனர். நாம் விதிவிலக்குகளைப் பற்றி இங்கு விவாதிக்கப் போவதில்லை.

https://telegram.me/aedahamlibrary

பெரும்பாலான மனிதர்கள் தங்கள் சூழ்நிலைகளால் உருவாக்கப்படுகிறார்கள். சரியாகக் கூறவேண்டும் என்றால், தங்கள் சூழ்நிலையின் காரணமாகவே அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

உங்களது இன்றைய தினம் வெறுமனே உங்கள் நேற்றைய தினத்தால் வடிவமைக்கப்படுவதில்லை. நேற்று நீங்கள் யாருடன் உங்கள் நேரத்தைச் செலவிட்டீர்களோ அல்லது முதலீடு செய்தீர்களோ, அவர்களால் உங்களது இன்றைய தினம் உருவாக்கப்படுகிறது. இன்று நீங்கள் யாருடன் உங்கள் நேரத்தைச் செலவிடுகிறீர்களோ, அவர்களால் உங்களது நாளைய தினம் உருவாக்கப்படும்.

தேவாலயத்தில் நடக்கும் ஆராதனைக் கூட்டங்களில் கலந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்த, ஒரு குறிப்பிட்ட தேவாலயத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர், ஆராதனைக் கூட்டங்களுக்கு வருவதைத் திடீரென்று நிறுத்திவிட்டார். ஒருசில வாரங்களுக்குப் பிறகு, அந்த தேவாலயத்தின் பாதிரியார் அவரைப் பார்க்கச் சென்றார். அது ஒரு குளிரான மாலைப் பொழுது. கொழுந்துவிட்டெரியும் நெருப்பிற்கு முன், தன் வீட்டில் அந்த உறுப்பினர் தனியாக அமர்ந்திருந்தார். பாதிரியாரைக் கண்டவுடன் அவரை வரவேற்று, நெருப்பிற்கு அருகில் ஒரு நாற்காலியில் அமரச் செய்து காத்திருந்தார். பாதிரியாரும் எதுவும் பேசவில்லை. ஒருசில நிமிடங்களுக்குப் பின், பாதிரியார் ஓர் இடுக்கியால் நெருப்பிலிருந்து ஓர் எரியும் தணலை எடுத்து ஓர் ஓரமாக வைத்தார். பிறகு தன் நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டார். அப்போதும் அவர் எதுவும் பேசவில்லை. இதை ஆச்சரியத்துடன் அந்த உறுப்பினர் பார்த்துக் கொண்டிருந்தார். தனியாக வைக்கப்பட்ட அந்தத் தணலின் ஒளி சற்று நேரத்தில் குறைந்து, பிறகு குளிர்ந்து, முற்றிலுமாக நின்றுவிட்டது. பாதிரியாருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிற்குப் பின் ஒரு வார்த்தைகூடப் பேசப்படவில்லை. கிளம்பும் முன், மீண்டும் அந்தக் குளிர்ந்த தணலை எடுத்து எரியும் நெருப்பின் நடுவில் பாதிரியார் வைத்தார். உடனடியாக, அது தன்னைச் சூழ்ந்திருந்த, எரிந்து கொண்டிருக்கும் கரிகளின் ஒளி மற்றும் வெப்பத்தோடு தானும் சேர்ந்து எரியத் துவங்கியது. பாதிரியார் விடைபெற்றுக் கொண்டபோது, "நீங்கள் வந்ததற்கு நன்றி. குறிப்பாக, உங்கள் அனல் தெறித்தப் பிரசங்கத்திற்கு நன்றி. அடுத்த ஞாயிற்றுக்கிழமை நான் தேவாலயத்திற்கு வருவேன்," என்று அந்த உறுப்பினர் கூறினார்.

https://telegram.me/aedahamlibrary

"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்: மூடருக்குத் தோழனோ நாசமடைவான்." - நீதிமொழிகள் 13:20.

தத்தெடுக்கப்பட்ட ஒரு குழந்தை, காலப்போக்கில் அக்குடும்பத்தில் உள்ளவர்களைப்போல் ஆகிவிடுகிறது என்று கூறப்படுகிறது. உண்மைதான். நாம் யாருடன் பழகுகிறோமோ, அவர்களைப் போலவே ஆகிவிடுகிறோம். நாம் வளர வேண்டிய வேகத்தில் வளரவில்லை என்றால், வேண்டிய மதிப்போடும் பொலிவோடும் வாழவில்லை என்றால், நாம் ஒரு துணிச்சலான முடிவை எடுக்க வேண்டியிருக்கும். நாம் வேலை பார்க்கும் நிறுவனமோ, நாம் பழகும் நண்பர்கள் கூட்டமோ, அல்லது நாம் வாழும் குடும்பமோ, நம்மை உருவாக்கவில்லை என்றால், நாம் வளர்வதற்கு ஏற்ற வேறோர் இடத்திற்கு நம்மை இடப்பெயர்ச்சி செய்ய வேண்டும். அது ஒரு கடினமான முடிவுதான், ஆனால், தேவையான ஒன்று. ஒரு விதையை ஒரு குப்பை மேட்டில் போட்டு வைப்பதால் என்ன பிரயோஜனம்?

https://telegram.me/aedahamlibrary

• • •

அனைத்தையும் அசாதாரண ஆர்வத்துடன் செய்த
சாதாரண மக்கள்தான் அசாதாரண மக்கள்.

உங்கள் சொந்த வாழ்க்கையைக் காட்டிலும்
பெரிதான ஒரு குறிக்கோளை,
உங்கள் கடைசி மூச்சு உள்ளவரை
ஒவ்வொரு மூச்சையும் முதலீடு செய்யத்
தயாராக இருக்கும் வகையிலான
ஒரு குறிக்கோளை அடையாளம் காண்பதில்தான்
மகத்தான வாழ்வு அடங்கியுள்ளது.

காலையில் சற்று முன்னதாகவே எழச் செய்து,
இரவு சற்று அதிக நேரம் கண்விழிக்கச் செய்து,
இடையே உள்ள ஒவ்வொரு நிமிடத்தையும்
ஆழ்விருப்பத்தால் நிறைக்கும்,
உங்களை உத்வேகப்படுத்தும்
ஒரு குறிக்கோள் உங்களிடம் இருக்கும்போது
நீங்கள் ஒரு வரலாற்றைப் படைக்கிறீர்கள்.

ஒவ்வொரு விஷயத்திலும்,
உங்களால் இயன்றதைக் காட்டிலும்
சற்று அதிகமாகக் கொடுங்கள்,
ஓர் அசாதாரண வாழ்க்கையை வாழுங்கள்.

https://telegram.me/aedahamlibrary

காலம் கனிந்துவிட்ட ஒரு கருத்தைவிட சக்திமிக்கது எதுவும் கிடையாது

நிலத்திருந்து 100 அடிக்கு மேல் உள்ள ஒரு சாரத்திலிருந்து ஒருவன் தொங்கிக் கொண்டிருக்கிறான். தினக்கூலிக்காக அவன் சுவர்களுக்கு வர்ணம் பூசுகிறான். அவனைப் பொறுத்த அளவில், அது அன்றாட ஜீவனம் நடத்த அவனுக்குத் தெரிந்த ஒரு வழி. அவனைப் போன்ற மற்றொருவன், தன் வர்ணப் பூச்சுத் திறமைகளைச் சற்று பட்டைதீட்டி, ஓர் ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்க்கிறான். அவனைப் பொறுத்த அளவில், அது அன்றாட ஜீவனம் நடத்த அவனுக்குத் தெரிந்த மற்றொரு வழி. இன்னொருவன் காரோட்டக் கற்றுக் கொண்டு, ஒரு தொழிலதிபரின் வீட்டில் கார் ஓட்டுனராகப் பணியாற்றுகிறான். ஒரு நியாயமான மாதச் சம்பளத்தில், ஒரு நாளைக்குப் பதினான்கு மணிநேரங்கள் வேலை பார்க்கிறான். அது வாழ்க்கையை ஓட்டுவதற்கான அவனது யோசனை. சற்று சாமர்த்தியமான ஒருவன் ஒரு பெரும் நிறுவனத்தில் ஓட்டுனராக வேலைக்குச் சேர்ந்து, கூடுதல் அனுகூலங்களையும் ஆதாயங்களையும் பெறும் தகுதியைப் பெற்றுக் கொள்கிறான். அதுவும் வாழ்க்கையை ஓட்டுவதற்கான இன்னொரு வழி. தன் சமையல் திறமைகளைக் கொண்டு ஒருவன் ஒரு வீட்டில், மாதச் சம்பளத்தில் சமையற்காரனாக வேலைக்குச் சேர்கிறான். மற்றொருவன் சாலையோரக் கடை வைத்து, தினமும் இலாபம் சம்பாதிக்கிறான். இவையும் வாழ்க்கை நடத்துவதற்கான இரு வேறு யோசனைகளே. மேற்கூறப்பட்ட அனைத்து மக்களிடமும் ஒரு வாழ்க்கையை நடத்துவதற்கான யோசனைகள் இருந்தன. அதற்கு எவ்விதமான

https://telegram.me/aedahamlibrary

கல்வியோ அல்லது முதலிடோ தேவைப்படவில்லை.

உங்களைப் பொறுத்தவரை, ஒரு விற்பனையாளராக அல்லது ஒரு மென்பொருள் வல்லுனராக இருப்பது, வாழ்க்கை நடத்துவதற்கான ஒரு வழியாக இருக்கக்கூடும். இன்னொருவருக்கு, ஒரு தொழில்முனைவராக இருப்பதோ அல்லது தன் குடும்பத் தொழிலில் ஈடுபடுவதோ ஜீவனத்திற்கான வழியாக இருக்கலாம். வாழ்க்கை நடத்துவதற்கு வழியே இல்லை என்று நம்புவோரும் இவ்வுலகில் இருக்கத்தான் செய்கின்றனர்.

மிகப்பெரிய நிறுவனங்கள்கூட ஒரு சமயம் வெறும் கருத்தாக மட்டுமே இருந்துள்ளன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு புரட்சியும், ஒவ்வொரு சமூக நிறுவனங்களும் ஒரு சமயத்தில் வெறும் ஒரு கருத்தாகவே இருந்துள்ளன. உங்கள் கரங்களில் தவழும் இப்புத்தகம்கூட ஒரு சமயம் வெறும் ஒரு கருத்தாகவே இருந்தது.

காலம் கனிந்துவிட்ட ஒரு கருத்தைவிட சக்திமிக்கது எதுவும் கிடையாது.

இருந்தாலும், அது கோடிக்கணக்கானவர்களின் பசியை ஆற்றுமா அல்லது உங்கள் சொந்த ஆறு அங்குல வயிற்றை மட்டும் நிரப்புமா? உங்கள் யோசனை சொற்பப் பணத்தை ஈட்டித் தருமா அல்லது பல கோடிகளை உருவாக்குமா? இவை அனைத்தும், ஒரு யோசனை யார் மனத்தில் தோன்றுகிறதோ அவரது மனநிலையையும், அந்த யோசனையைக் கொண்டு அவர் என்ன செய்கிறார் என்பதையும் பொறுத்தது.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், நீங்களும் உங்கள் யோசனையும் கைகோர்த்துக் கொண்டால், உங்களால் உங்கள் உலகத்தை மாற்ற முடியும்.

https://telegram.me/aedahamlibrary

என் அன்புக்குரியவர்களுடன் இருக்கும்போது, நான் எப்போதும் நானாகவே இருக்கிறேன்

"உங்கள் வாழ்வைச் சாதனைகளால் நிறைத்து, 'எனக்குக் கிடைத்த விளைவுகள் என் இருத்தலின் மையத்தைச் சீரழிக்கவில்லை. என் மையத்தில் நான் எப்போதும் நானாகவே இருக்கிறேன்,' என்று கூற முடிவதுதான் இருப்பதிலேயே சிறந்த நிறைவைத் தரும் விஷயம். அனைவரிலும் மேலானவராகத் திகழ்ந்து, ஆனாலும் மனிதர்களோடு மனிதராக நடக்க முடிவதுதான் வாழ்வின் மாபெரும் மகிழ்ச்சிகளில் ஒன்று. வெளியுலகில் உள்ள எதுவும் உங்களுக்குள் இருக்கும் அடிப்படையைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்," என்ற வார்த்தைகளுடன் வருடாந்திர ஆன்மீக முகாமில் நான் என் பேச்சை நிறைவு செய்தேன்.

ஒருசில மணிநேரங்களுக்குப் பிறகு, நாங்கள் மும்பாய் விமான நிலையத்தை வந்தடைந்தோம், நாங்கள் 30 பேர் அடங்கிய ஒரு குழுவாக இருந்தோம். நீண்ட காலம் தொடர்பு கொள்ளாத ஒரு நண்பரைத் தற்செயலாக அங்கு நான் சந்திக்க நேரிட்டது. நாங்கள் சந்தித்து சுமார் 10 வருடங்கள் ஆகியிருந்தன. எனவே என் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. நாங்கள் ஓர் ஆன்மீக முகாமில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறோம் என்பதைக் கேட்டவுடன், அவருக்கு ஒரு பைத்தியக்காரத்தனமான யோசனை தோன்றியது. "நீ இன்னும் அதே பழைய நண்பன்தான் என்பதை எனக்கு சலாம் போட்டு நிரூபித்துக் காட்டு," என்று என்னிடம்

https://telegram.me/aedahamlibrary

கூறினார். பிறர் என்ன நினைப்பார்களோ என்று கவலைப்படுபவன் நானல்ல. எனவே, உடனடியாக நான் அவருக்கு சலாம் போட்டேன். என்னுடன் வந்திருந்த என் 30 நண்பர்களும் என்மீது எவ்வளவு அன்பும் மரியாதையும் வைத்துள்ளனர் என்பதை நான் அறிவேன். எனவே, அவர்கள் முகங்களில் தென்பட்ட வேதனையின் வெளிப்பாடுகளைப் பார்த்ததில் எனக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை. இருந்தாலும், என் பழைய நண்பனுக்கு அது ஒரு மாபெரும் வெற்றிக் கணம். அவருக்குத் தேவையாக இருந்ததெல்லாம் அவரது அதே பழைய நண்பன்தான், ஓர் ஆன்மீகவாதியல்ல. அவரது முகத்தில் தென்பட்ட மகிழ்ச்சி அதைத் தெரிவித்தது.

ஒருநாள் என் மகன் என்னை அழைத்து, அன்றிரவு உணவருந்துவதற்குத் தன்னை வெளியே கூட்டிச் செல்ல முடியுமா என்று என்னிடம் கேட்டான். அன்று மாலைக்குள் ஃபுரோஸன் தாட்ஸ் பத்திரிகைக்கு 'விழிப்புணர்வு' என்ற தலைப்பில் என் வழக்கமான கட்டுரையை எழுதி முடிக்க வேண்டியிருந்ததால் வெளியே செல்ல இயலாது என்று நான் அவனிடம் விளக்கிக் கூறினேன். சிறிதுகூட யோசிக்காமல், "நாளை உங்கள் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள். இன்று என்னை வெளியே கூட்டிச் செல்லுங்கள்," என்று அவன் பதிலளித்தான்.

உங்கள் பெற்றோருக்குத் தேவை ஒரு மகன்; நிர்வாகத்தைப் பற்றிக் கற்பிக்கும் ஒரு போதகர் அல்ல. உங்கள் பலவீனங்களுடன் சேர்த்து உங்களை ஏற்றுக் கொள்ள உங்கள் வாழ்க்கைத் துணைவர் தயாராக இருப்பார்; பலவீனமற்ற ஒரு முழுமையான மனிதன் அவருக்குத் தேவையில்லை. உங்கள் குழந்தைகளுக்குத் தேவை ஒரு தந்தை; தேசத் தந்தையல்ல.

'சூப்பர்மேன்,' 'ஸ்பைடர் மேன்' போன்ற கதாபாத்திரங்கள் இதை நமக்குக் கற்றுக் கொடுத்து இருக்கின்றன அல்லவா? இரண்டு கதாநாயகர்களுமே தத்தம் பலவீனங்களைக் கொண்டிருந்தனர். தாங்கள் விரும்பிய பெண்களிடம் தங்களைத் திருமணம் செய்து கொள்ளும்படிக் கேட்கக்கூட அவர்கள் தயங்கினர். இருந்தாலும், தேவைப்பட்ட நேரத்தில், அவர்கள் தங்கள் செயலில் உயர்ந்து நின்றனர்.

என் சீருடையை அணிந்து கொண்டு என் தொழில்முறை வாழ்வில் நான் உயர்ந்து நிற்பேன். ஆனால் சீருடையைக் கழற்றி வைக்கும் நேரம் ஒன்று உண்டு என்பதை நான் எப்போதும் நினைவில் கொள்வேன்.

https://telegram.me/aedahamlibrary

கடைசியில், வீட்டில் இருப்பவர்களுக்குத் தேவை ஓர் ஆன்மாதான்; பரிணாம வளர்ச்சி பெற்ற ஆன்மா அல்ல.

என் அன்புக்குரியவர்களுடன் இருக்கும்போது நான் எப்போதும் நானாகவே இருக்கிறேன்.

https://telegram.me/aedahamlibrary

• • •

அகங்காரம் வெளியேறும்போது பிற அனைத்தும் உள்ளே வருகின்றன

சைக்கின் ஓட்டக் கற்றுக் கொண்ட பிறகு, அடுத்து ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய சிலிர்ப்பூட்டும் அனுபவம், சைக்கிளிலிருந்து இரண்டு கைகளையும் எடுத்துவிட்டு ஓட்டுவது. ஒரு செயலைக் காட்டிலும், அந்தச் செயலை நாம் செய்வதை மற்றவர்கள் பார்ப்பதுதான் நமக்கு முக்கியம். உண்மையில், நீங்கள் செய்வதை மற்றவர்கள் கவனிக்கின்றனரா என்று பார்க்க உங்கள் கண்கள் அலைபாயும். விடலைப் பருவத்தில், ஒரு பேருந்து அல்லது புகை வண்டியின் படிக்கட்டில் நின்றுகொண்டு பயணம் செய்வது துணிச்சலை வெளிப்படுத்தும் ஒரு காரியமாகப் படும். ஆர்வம் அந்தச் செயலைச் செய்வதில் அல்ல; மாறாக, பிறரால் கண்டுகொள்ளப்படுவதைத்தான் மக்கள் விரும்புகின்றனர்.

பிறர் நம்மைக் கண்டுகொள்ள வேண்டும், அங்கீகரிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, நம் அகங்காரம் நம்மைப் பல காரியங்களைச் செய்யத் தூண்டும். அந்த நிலையை நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்நாளில் அனுபவித்திருப்போம். அந்த நிலையில், பிறரது கவனத்தை ஈர்த்தால் மட்டுமே நல்லவை நல்லவையாகக் கருதப்படும்; பிறரது கவனத்தை ஈர்க்க முடிந்தால், கெட்டவையும் நல்லவையாகக் கருதப்படும். இதில் வேடிக்கை என்னவென்றால், பிறரது கவனத்தை ஈர்க்கத் தவறினால், நல்லவையும் மோசமானவையாகக் கருதப்படும். பிறரது கவனத்தைப் பெறுவதன் மூலம் அகங்காரம் உயிர் வாழ்கிறது. ஆனால், ஒருவர் அந்த அகங்கார நிலையைக் கடந்தாக வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

அதன் இயல்பின் காரணமாக, அகங்காரத்திற்குத் தீனி போட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அது ஒரு நிரந்தரப் பிச்சைக்காரன், அகங்காரத்தின் பிரச்சனை என்னவென்றால், அதற்குத் தீனி போடப்பட்டவுடன், நீங்கள் உயர்வு மனப்பான்மையுடன் போராட வேண்டியிருக்கும்; அகங்காரத்தைப் பட்டினி போட்டால், தாழ்வு மனப்பான்மையுடன் துன்புற வேண்டியிருக்கும். எப்படிப் பார்த்தாலும், அது உங்கள் மன அமைதியைப் பறித்துவிடும்.

அகங்காரம் வரும்போது பிற அனைத்தும் போய்விடும். அகங்காரம் நம்மைவிட்டுப் போகும்போது, மற்ற அனைத்தும் வந்து சேரும்.

ஒருவரது அகங்காரத்தைத் திருப்திப்படுத்துவதற்காக எத்தனை உறவுகள் பலியாக்கப்பட்டுள்ளன ? அகங்காரத்தை உதறிவிட்டு உறவுகளைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக, உறவுகளைத் தூக்கியெறிந்துவிட்டு நீங்கள் அகங்காரத்தைக் காப்பாற்றுகிறீர்கள். உங்கள் இழப்புகளை உங்கள் அகங்காரத்தால் ஈடுகட்ட முடியாது.

உங்கள் அகங்காரத்திற்கு முனைப்பாகச் சேவை செய்வதில் நீங்கள் ஈடுபட்டிருந்தபோது, எத்தனை நல்ல வாய்ப்புகளை நீங்கள் தவறவிட்டிருப்பீர்கள்? ஒவ்வொரு கணமும் கனமானது, ஒவ்வொரு சூழ்நிலையும் நரம்புகளைத் தெறிக்கச் செய்வது, ஒவ்வொரு பேச்சுவார்த்தையும் இறுக்கமானது. அகங்காரம் நிறைந்த ஓர் இதயம் எப்போதும் நெருப்பின்மேல் நடந்து கொண்டிருக்கிறது. அகங்காரமும் எளிமையும் ஒருபோதும் ஒத்துப் போகாதவை.

ஒரு கறித் துண்டைக் கவ்விக் கொண்டு பறந்த ஒரு காகத்தை, மற்ற எல்லாப் பறவைகளும் சேர்ந்து துரத்திக் கொண்டிருந்தன. அது கறித் துண்டைக் கீழே போட்டவுடன், அப்பறவைகள் அனைத்தும் அந்தக் கறித் துண்டை நோக்கிச் சென்றன. இப்போது, வானில் தனியாகப் பறந்து கொண்டிருந்த காகம், "அந்தக் கறித் துண்டை இழந்ததால், சுதந்திர வானம் பெற்றேன்," என்று குறிப்பிட்டது.

உங்கள் அகங்காரத்தை விட்டொழிப்பதில் மாபெரும் சுதந்திரம் உள்ளது.

https://telegram.me/aedahamlibrary

• • •

ஆனந்தமான அதிருப்தியுடன் இருங்கள்

அவளது தந்தையிடமிருந்த கட்டுப்பாடு அவளது மனத்தைக் கவர்ந்தது. அவளுக்கு இப்போது திருமணமாகிவிட்டது. தன் கணவன் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்று அவள் எதிர்பார்க்கிறாள். கட்டுப்பாடு ஓர் இன்றியமையாத பண்புநலன் என்று அவள் நம்புகிறாள். அவளது கணவனிடம் அப்பண்பு சொல்லிக் கொள்ளும்படியாக இருக்கவில்லை. அவள் அவனிடம் அதிருப்தியுடன் நடந்து கொள்கிறாள். அவனும் அவள்மீது வெறுப்பைக் காட்டுகிறான்.

"என் தாயார் எப்போதும் நேர்மையுடனும், வெளிப்படையாகவும் நடந்து கொள்பவர். உன் வாழ்வில் உள்ள அனைத்தையும் பற்றி என்னிடம் நீ கூற மறுப்பதுதான் உன்னிடமுள்ள பிரச்சனை," என்று கணவன் மனைவிமீது குறை கூறுகிறான். "உன் சகோதரனின் கையெழுத்தைப் பார். அது ஒரு கலைப் படைப்பைப்போல் காட்சியளிக்கிறது. உன் கையெழுத்தையும் பார்," என்று தன் மகளை நச்சரிக்கிறார் தாயார். "என் முந்தைய நிறுவனத்தில், நாங்கள் இவ்வாறு செயல்பட்டதேயில்லை," என்று புதிய பொது மேலாளர் அலுத்துக் கொள்கிறார். "அமெரிக்காவில் எங்களுக்கு இது போன்ற பிரச்சனைகள் இருப்பதில்லை," என்று கூச்சலிடுகிறார் அமெரிக்காவில் வாழும் இந்தியர் ஒருவர்.

எதிர்ப்பார்ப்பில் பிரச்சனை இல்லை; எதிர்பார்ப்பின் தர அளவீட்டை நிர்ணயிப்பதில்தான் பிரச்சனை.

https://telegram.me/aedahamlibrary

கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை, அவள் தன் தந்தைக்குப் பத்துக்குப் பத்து மதிப்பெண் களைக் கொடுக்கிறாள். 4 அல்லது 5 மதிப்பெண்களைப் பெறவே தடுமாறிக் கொண்டிருக்கும் தன் கணவனைக் குறித்து அவள் அதிருப்தி கொள்கிறாள். 5 என்பது அவனைப் பொறுத்தவரை 100% மதிப்பெண் ஆகும். அவனது இயல்பு, மனப்போக்கு, வளர்ப்பு ஆகியவற்றைக் கொண்டு பார்க்கும்போது, கட்டுப்பாட்டில் அவனால் ஐந்தைத் தாண்ட முடியாது. இதுதான் அவன். அவன் அப்படித்தான் இருப்பான். வேறு ஏதேனும் ஒரு பண்புநலனில் அக்கணவன் ஒரு கச்சிதமான 10ஐப் பெற முடியும். ஆனால், அதில் அவளது தந்தையால் தேர்ச்சி பெற முடியாது. தன் தாயாரைப்போல் தன் மனைவியால் வெளிப்படையாக இருக்க முடியாமல் போகலாம், ஆனால், குடும்பத்தின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் அவள் சுயநலமின்றிச் செயல்படக்கூடும். அவரது மகனைவிட அவரது மகள் மிகவும் நன்றாகப் பாடக்கூடும். உங்கள் முந்தைய நிறுவனத்தைவிட நீங்கள் தற்போது பணியாற்றும் நிறுவனத்தில் வளர்ச்சி வாய்ப்புகள் அதிகம் என்று நீங்கள் கருதியதால்தான் நீங்கள் இங்கு இருக்கிறீர்கள். உலகில் உள்ள பல பிரச்சனைகள் இந்தியாவில் இல்லை.

ஒருவர் எல்லா விஷயங்களிலும் மற்றவர்களைவிடத் தாழ்ந்தவராகவும் இருப்பதில்லை, உயர்ந்தவராகவும் இருப்பதில்லை. நம் அனைவரிடமும் நேர்மறையான விஷயங்களும் இருக்கின்றன, எதிர்மறையான விஷயங்களும் இருக்கின்றன. யாரும் கச்சிதமானவர்கள் அல்ல. யாரும் முற்றிலும் குறை கொண்டவர்களும் அல்ல. தனித்து நிற்கும் சில பண்புநலன்களில் கவனம் செலுத்துவதை நிறுத்துங்கள். மொத்தமாகப் பார்க்கத் துவங்குங்கள்.

இருந்தாலும், இதில் ஒரு சுவாரசியமான திருப்பம் இருக்கிறது. பிறரிடம் நான் அதிருப்தியுடன் இருப்பது என்னை மகிழ்ச்சியற்றவனாக வைத்திருந்தாலும், என்னிடம் நான் திருப்தி கொள்ளாமல் இருப்பது என் வளர்ச்சிக்கு உதவுகிறது. பிறரை என் எதிர்பார்ப்புகளைக் கொண்டு அளவிடும்போது, நான் அவர்களிடம் அதிருப்தி கொள்கிறேன். அது என் மகிழ்ச்சியைப் பாதிக்கிறது. என் எதிர்பார்ப்புகளால் என்னை மதிப்பீடு செய்யும்போது ஏற்படும் அதிருப்தி, என் வளர்ச்சியையும் உருவாக்கத்தையும் அதிகரிக்கிறது. உன்னதம், நாணயம், குறிக்கோள், நடத்தை, செயற்திறன் ஆகியவற்றில் பத்துக்குப் பத்து மதிப்பெண்களை என்னிடம் நான் எதிர்பார்க்கும்போது, நான் எந்த நிலையில் இருக்கிறேன், எங்கே செல்ல வேண்டும் ஆகியவற்றை அது எனக்கு

https://telegram.me/aedahamlibrary

விளக்கிக் காட்டுகிறது. பத்துக்குப் பத்து மதிப்பெண்களை நான் உலகத்திடம் எதிர்பார்க்கும்போது, உலகத்துடனான என் உறவின் தரத்தை அது பாதிக்கிறது.

எனவே, அனைத்து விஷயங்களிலும் உலகை ஐந்திற்கும் உங்களைப் பத்துக்கும் மதிப்பீடு செய்யுங்கள். உலகம் உங்களைவிடக் குறைந்த திறன் கொண்டது அல்லது நீங்கள் ஓர் அசாதாரண மனிதர் என்பதற்காக அல்ல. மகிழ்ச்சி இல்லாமல் வாழ்க்கை இல்லை. எனவே உலகை ஐந்திற்கு மதிப்பீடு செய்யுங்கள். அதிருப்தி இல்லாமல் வளர்ச்சி இல்லை. எனவே உங்களைப் பத்துக்கு மதிப்பீடு செய்யுங்கள். அப்போது நீங்கள் ஆனந்தமான அதிருப்தியுடன் இருப்பீர்கள்.

நீங்கள் என்னிடம் அன்பு செலுத்தும் விதம் குறித்து எனக்கு மகிழ்ச்சிதான். என்னளவில், உங்களை நேசிக்க நான் இன்னும் அதிகமான வழிகளைக் கண்டறிவேன்.

https://telegram.me/aedahamlibrary

• • •

பெருங்கடலின் உவர்ப்பு நீர்,
மாசடைந்த சாக்கடைகள்,
துர்நாற்றம் வீசும் குளங்கள்,
தேங்கிக் கிடக்கும் ஏரிகள்
போன்றவற்றிலிருந்து
நீர் ஆவியாகி மேலே சென்று
மழையாகக் கீழே வரும்போது,
அது சுத்தமான குடிநீர்தான்.

அதேபோல், மேலே இருக்கும் சக்தியுடன்
மனிதன் தன்னை இணைத்துக் கொள்ளும்போது,
சுய தூய்மையாதல் நடைபெறுகிறது.

தெய்வீகத்துடன் தன்னை இணைத்து கொள்ளும்போது
மனிதனது எண்ணங்களும், உணர்வுகளும்,
ஏன், இருத்தலும்கூடத் தூய்மையடைகின்றன.

பிரார்த்தனைகள் மேலே செல்லும்போது,
ஆசீர்வாதங்கள் கீழே வருகின்றன.

https://telegram.me/aedahamlibrary

• • •

ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதற்கான ஆற்றல் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிறது

நான் ஒரு மரத்தைப் பார்க்கும்போது, வெறுமனே ஒரு மரத்தை மட்டும் தான் பார்ப்பதில்லை. அம்மரத்திற்குப் பின்னால் உள்ள வரலாற்றையும் பார்க்கிறேன். அது காற்றில் மிதந்து வந்து, ஒரு சரக்குக் கப்பலில் விழுந்து, அதன் மூலமாக ஜோஹேனஸ்பர்க்கிலிருந்து சென்னைக்கு வந்த ஒரு விதையாக இருக்கலாம்.

அன்னை பூமி ஒருபோதும் செல்லம் கொடுப்பதில்லை. முதலில் அந்த விதை நிலத்திற்குள் ஊடுருவி, வேர்விட்டு வளர்ந்து, பின் பூமிக்கு மேலே முளைத்து வர வேண்டும். அது எளிதில் வளையக்கூடிய ஒரு பலவீனமான செடியாக இருக்கும்போது, ஏதேனும் ஒரு விலங்கால் அதை உணவாக உட்கொண்டிருக்க முடியும், ஏதேனும் ஒரு குழந்தையால் அதைப் பிடுங்கி எறிந்திருக்க முடியும். பிறகு வறட்சி, வெள்ளம், பூச்சிகள் என்று இன்னும் பிறவற்றால் அது அழிக்கப்பட்டிருக்க முடியும். இப்போது கம்பீரமாக நிற்கும் ஒரு மரமாக ஆவதற்கு அது காலத்தையும் சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு, அவற்றைச் சமாளிக்க வேண்டியிருந்து. அது வெறும் மரமல்ல, ஓர் ஆழ்ந்த வரலாறு.

ஒரு மரத்திற்குப் பின்னால் இவ்வளவு விஷயங்கள் இருக்க முடியும் என்றால், என் உடன்பிறவா சகோதரர்களைப் பற்றி என்ன கூறுவது? ஓர் ஆணின் உடலிலிருந்து வெளியேறி, ஒரு பெண்ணின் உடலுக்குள்

https://telegram.me/aedahamlibrary

இருக்கும் ஒரு நிலையான சினை முட்டையை நோக்கி 70 கோடி விந்தணுக்கள் செல்கின்றன. ஆனால், மிகவும் ஆரோக்கியமான, அதி வேகமான விந்தணு மட்டுமே சினை முட்டையுடன் இணைகிறது. வாழ்வின் துவக்கம்கூட, 'வலியது வாழும்' என்ற கோட்பாட்டை ஆதரிக்கிறது. எனவே, ஒவ்வொரு மனிதனும், 70 கோடி விந்தணுக்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றுத் தன் வழியில் சென்று இலக்கை அடைந்த ஒரு விந்தணுதான். ஒரு மனித உயிரின் பிறப்பு, வெற்றியின் செயல்பாட்டைத் தன்னுள்ளே கொண்டுள்ளது.

கருவறைக்குள் வளர்வது, கருவறையிலிருந்து வெளியேறுவதிலுள்ள வேதனை, குழப்பங்கள், படிப்பினை, சவால்கள், முரண்பாடுகள், கட்டாயங்கள், தியாகங்கள், சமரசங்கள், கண்ணீர்த் துளிகள், தீர்வுகள், வளர்தல், மகிழ்ச்சி, ஆற்றலின் வெளிப்பாடு, கற்றதை விட்டொழித்தல் என்று ஒவ்வொரு மனித உயிரும் தன் சொந்த வழியில், ஒன்றுமில்லாததிலிருந்து ஏதோ ஒன்றாக ஆகி, பின் அனைத்துமாகப் பரிபூரண மாற்றம் அடைகிறது. ஒரு மனித உயிர் வெறும் மனித உயிர் அல்ல, ஆனால், தன் சொந்த வழியில் ஓர் ஆழ்ந்த வரலாறு.

ஒரு வேலைக்காரி, தனக்குக் கிடைக்காத கல்வி தன் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்று அவர்களைப் படிக்க வைக்க முயற்சிக்கும்போது, தான் ஒருவித வரலாறு என்பதை அவள் தனக்குத் தெரிந்த வழியில் காட்டுகிறாள். நீங்கள் பார்ப்பவற்றையும் கேட்பவற்றையும் தாண்டிப் பாருங்கள். தன் சொந்தத் தனிப்பட்ட வரலாற்றைச் சுமந்துகொண்டு திரியும் மனித குலத்தால் நீங்கள் சூழப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். உண்மையில், நீங்களும் அவர்களில் ஒருவர்.

ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதற்கான ஆற்றலை ஒவ்வொரு மனிதனும் தனக்குள் கொண்டிருக்கிறான். உங்களிலிருந்து உங்கள் தலைமுறை துவங்குகிறது, அதன் மூலம் உங்கள் சமூகம் உருவாகிறது. நீங்கள் ஒரு நீண்ட வரலாறு.

https://telegram.me/aedahamlibrary

மனக்காயத்தை மறக்கும்போது மன அமைதி பிறக்கும்

எந்தவொரு தனி மனிதனுக்கும், எந்தவொரு தனி நிகழ்வுக்கும், எந்தவொரு தனி அனுபவத்திற்கும் உங்கள் தலைக்குள் இருந்துகொண்டு, தொடர்ந்து உங்கள் மன அமைதிக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய உரிமை இல்லை. உங்கள் மன அமைதியைக் குலைக்கும் சக்தியும் அதிகாரமும் எவருக்கும், எந்த விஷயத்திற்கும் அளிக்கப்படக்கூடாது. உங்கள் மன அமைதியின் பொருட்டு, உங்களுக்குள் இருந்து உங்களை ஆட்டிப் படைக்கும் அனைத்து விஷயங்களையும் மக்களையும் வெளியேற்றுங்கள். உங்கள் மனமும் இதயமும் அமைதியின் இருப்பிடமாக விளங்க வேண்டும்; உங்களைத் தொந்தரவு செய்யும் எதற்கும், எவருக்கும் அங்கு இடமிருக்கக்கூடாது. உங்கள் மன அமைதிக்கு எதுவும் சேதம் விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். எல்லாம் உங்கள் மன அமைதிக்காகத்தான். ஒன்றைத் துறக்கக் கற்றுக் கொள்ளுங்கள் - பௌதீகரீதியாக அல்ல, உணர்ச்சிரீதியாக. இடையூறு விளைவிக்கும் எவற்றிலிருந்தும் உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். எதை வேண்டுமானாலும் விட்டுத் தள்ளுங்கள். யாரை வேண்டுமானாலும் விட்டுத் தள்ளுங்கள். உங்கள் மன அமைதியை எல்லாவற்றிற்கும் மேலான நிலையில் வைத்திடுங்கள்.

உங்களுக்குள் இருப்பது நறுமண மலர்கள் நிறைந்த ஒரு கூடையாக இருக்கலாம் அல்லது அமிலம் நிறைந்த ஒரு கலயமாக இருக்கலாம். உங்கள் மனக்காயத்திற்கான மூல காரணத்தை நீங்கள் துறந்தால், ஓர் உள்ளார்ந்த மலர்ச்சியை அனுபவிப்பீர்கள். இல்லையேல், அமிலம்

https://telegram.me/aedahamlibrary

எப்படித் தான் இருக்கும் கலயத்தை அழிக்குமோ, அதுபோல் நீங்கள் உங்களையே அழித்துக் கொண்டிருப்பீர்கள்.

தங்கள் அறியாமையாலும் பக்குவமின்மையாலும் மக்கள் உங்களைக் காயப்படுத்துகின்றனர். உங்கள் சொந்த அறியாமையாலும் பக்குவமின்மையாலும் மக்கள் உங்களைக் காயப்படுத்த நீங்கள் அனுமதிக்கிறீர்கள். இவ்விஷயத்தில் உள்ள உண்மை உங்களுக்குத் தெரியுமா? வெறுப்பவர் மற்றும் வெறுக்கப்படுவருக்கு இடையே பார்த்தால், எப்போதும் அதிகமாகக் காயப்படுவது வெறுப்பவர்தான். உங்கள் வெறுப்பு அடுத்தவருக்கு எதுவும் செய்வதில்லை என்றாலும், அது நிச்சயமாக உங்களுக்குப் பல உறக்கமற்ற இரவுகளைக் கொடுக்கும், குடற்புண் மற்றும் அமிலத்தன்மையை உங்களுக்குள் ஏற்படுத்தும். அனைத்திற்கும் மேலாக, உங்கள் அமைதியைக் குலைக்கும். மனக்காயத்துடன் வாழ்வதால் உங்களுக்கு என்ன பலன்? யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லை. ஒன்று மட்டும் நிச்சயம் — நீங்கள் கண்டிப்பாக எதையோ இழக்கிறீர்கள். நீங்கள் ஏன் ஒன்றுக்கும் உதவாத இந்த மனக்காயத்துடன் சேர்ந்து வாழ வேண்டும்?

பௌதீகரீதியாகப் பார்த்தால், உங்களைக் காயப்படுத்தும் மக்களோ அல்லது நிகழ்வுகளோ ஒருமுறை மட்டுமே நிகழ்கின்றன. ஆனால், அக்காயத்தை நீங்கள் உங்கள் மனத்திற்குள் எண்ணற்ற முறை மீண்டும் மீண்டும் ஓட்டிப் பார்க்கிறீர்கள். எவ்வளவு அதிகம் அதை நீங்கள் நினைத்துப் பார்க்கிறீர்களோ, அவ்வளவு ஆழமாக அது உங்களைக் காயப்படுத்துகிறது. உங்களை எது தொந்தரவு செய்கிறதோ, அதற்கு உங்கள் சொந்த அமைதியைக் காட்டிலும் உயர்ந்த நிலையை உங்களுக்குள் நீங்கள் கொடுத்துள்ளிர்கள்.

ஒருவேளை யாரோ ஒருவர் தவறானவராகவே இருக்கட்டும். ஆனால் அவர் உங்களுக்கு வெளியே வாழ அனுமதியுங்கள். உங்களுக்குள் ஓர் இடத்தை அவருக்குக் கொடுக்காதீர்கள். உங்கள் அமைதிக்குப் பங்களிப்போருக்கு மட்டுமே உங்கள் மனத்திலும் இதயத்திலும் இடம் கொடுங்கள். மீதி அனைத்தையும் துறந்துவிடுங்கள்.

மனக்காயத்தைத் துறக்கும்போது, மன அமைதி உங்களுக்குள் தலைதூக்கும். ஓர் அமைதியான நீங்கள்தான், அழகான நீங்கள். நல்ல செய்தி என்னவென்றால், உங்களால் அழகாக இருக்க முடியும். மிகவும் நல்ல செய்தி என்னவென்றால், அது உங்கள் கைகளில்தான் இருக்கிறது. 'துறந்துவிடு' என்ற எண்ணமே உங்கள் முகத்தில்

https://telegram.me/aedahamlibrary

புன்னைகையை ஏற்படுத்துவதைப் பாருங்கள்.

https://telegram.me/aedahamlibrary

● ● ●

பிறரைப் பின்பற்றுவதற்காக நீங்கள் பிறக்கவில்லை, வழிநடத்துவதற்காகவே அவதரித்துள்ளீர்கள்

ஒரு பூனையின் மீதுள்ள பயத்தின் காரணமாக ஓர் எலி நிரந்தரமான மன இறுக்கத்துடன் இருந்தது. ஒரு சாது அதன்மீது இரக்கம் கொண்டு அதை ஒரு பூனையாக மாற்றினார். இப்போது அது நாயைக் கண்டு பயந்தது. எனவே சாது அதை ஒரு நாயாக மாற்றினார். இப்போது அது மனிதனைக் கண்டு பயந்தது. எனவே அதை அவர் ஒரு மனிதனாக மாற்றினார். இப்போது அவன் கடவுளைக் கண்டு பயந்தான். சோர்ந்து போன சாது அவனை மீண்டும் ஓர் எலியாக மாற்றிவிட்டு, "நான் செய்யும் எதுவும் உனக்கு உதவப் போவதில்லை. ஏனெனில், நீ ஓர் எலியின் இதயத்தைக் கொண்டுள்ளாய்," என்று கூறினார்.

இயல்பாகவே, பல மக்கள் அடுத்தவர்களைப் பின்பற்றுபவர்களாகவே உள்ளனர். சிறந்த மனிதர்களை முன்மாதிரியானவர்களாகப் பார்த்து, நாமும் அதுபோல் ஆக முயற்சிப்பது ஒரு நேர்மறையான பண்புதான். ஆனால், அவரிடம் நீங்கள் அடிபணியும்போது, அதுவே ஒரு பலவீனமாகிவிடுகிறது.

ஒருவரைப் பின்பற்றுபவரை வேறு எவரும் பின்பற்றுவதில்லை. நீங்கள் பார்த்துப் பிரமிக்கும் ஒருவர், உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களைவிடச் சிறந்தவராக இருப்பார் என்று நீங்கள் நம்பினால், நீங்கள் ஒட்டுமொத்தமாக உங்களைக் குறைவாக மதிப்பிட்டுள்ளீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

உங்கள் சொந்த சாத்தியக்கூறுகள் உங்கள் கண்களுக்குப் புலப்படுவதில்லை. ஒரு நிறுவனம் என்ற முறையிலும் சரி, ஒரு தனிநபர் என்ற முறையிலும் சரி, முதல் சுற்றில் யார் வேண்டுமானாலும் என்னை வழிநடத்திச் செல்லட்டும். இரண்டாம் சுற்று, மூன்றாம் சுற்று,... என்று எத்தனை சுற்றுக்கள் வேண்டுமானாலும் அவர்கள் என்னை வழிநடத்தட்டும். ஆனால் ஏதோ ஒரு சுற்றில் நான் முன்னேறிச் சென்று, அதுவரை என்னை வழிநடத்தியவர்களை அச்சுற்றிலிருந்து தான் வழிநடத்துவேன் என்று நான் நம்ப வேண்டும்.

நம் மேலதிகாரிகளைக் காட்டிலும் நாம் சிறந்தவர்களாக ஆக முடியும். 'நம் வாழ்வின் ஆளுமை'யாக விளங்குபவர்களுக்கு நாம் 'அவர்கள் வாழ்வின் ஆளுமை'யாக மாற முடியும். நாம் பார்த்துப் பிரமிக்கும் ஒருவருக்கு எத்தனை வாய்ப்புகளும் சாத்தியக்கூறுகளும் ஏற்படுகின்றனவோ, நமக்கும் அத்தனை சாத்தியக்கூறுகளும் அவற்றுக்கு அதிகமானவையும் வெளிப்படும். ஒருவருக்குச் சாத்தியப்படுவது அனைவருக்கும் சாத்தியம். ஒருவன் செய்ய முடிவதை எல்லோராலும் செய்ய முடியும். இன்னும் சொல்லப் போனால், சிறப்பாகவே செய்ய முடியும்.

பல அம்சங்களில் பலரால் உங்களை விடச் சிறந்தவர்களாக இருக்க முடியும். ஒரே ஒரு பண்பில் மட்டுமே சிறந்து விளங்குபவர்களால் இவ்வுலகம் நிறைந்துள்ளது. எல்லாக் குணநலன்களும் பொருந்தியவராக மாறுவதை இலக்காக்கிக் கொள்ளுங்கள். முழுமையை நாடுங்கள். பிறரைப் பார்த்துப் பிரமியுங்கள், ஆனால் அடிபணிந்துவிடாதீர்கள்.

நீங்கள் பின்பற்றுவதற்காகப் பிறக்கவில்லை. வழிநடத்துவதற்காக அவதரித்துள்ளீர்கள். முன்னிலை வகித்த விந்தணு நீங்கள்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு விந்தணுவாக இருந்தபோதுகூட நீங்கள் அடுத்தவரைப் பின்பற்றவில்லை. உங்கள் பரம்பரைப் பெயரைக் காப்பாற்றுங்கள்.

https://telegram.me/aedahamlibrary

பண்புநலனை ஒருபோதும் கைவிடாதீர்கள், அதற்கு என்ன விலை கொடுக்க வேண்டியிருந்தாலும் சரி

ஒருவர் கோபப்படும்போது பதிலுக்குக் கோபப்படுவது அதிகமான கோபத்தை விளைவிக்கும். மோசமானவற்றிற்கு மோசமானவை பதிலாகக் கொடுக்கப்படும்போது, அதிக மோசமானவைதான் நிகழும். தவறுக்கு தவறே பதிலாகக் கிடைக்கும்போது, அது சரியாகிவிடாது. வாழ்வில் இரண்டு எதிர்மறையான விஷயங்கள் ஒரு நேர்மறையான விஷயத்தை உருவாக்காது. 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்ற பழிவாங்கும் குணம் நம்மை எங்கு கொண்டுபோய்ச் சேர்க்கும்?

எதிரிகளின் பண்புநலன்களை நாம் எப்போதும் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருப்பதால், இறுதியில் நாமும் அவற்றை சுவீகரித்துக் கொண்டுவிடுகிறோம். தொடர்ந்து எப்போதும் எதிரிகளை எதிர்கொள்ள நேரிடுவதன் காரணமாக நாம் அவர்களைப் போலவே ஆகிவிடுவது எவ்வளவு சகஜமாக நிகழ்கிறது!

நேர்மையின் மொத்த உருவம் அவர். இருந்தாலும், அவரது நேர்மை பல சூழ்நிலைகளில் பிறரைக் காயப்படுத்துவதை அவர் பார்க்கிறார். எனவே, பிறருக்குத் தான் இடையூறாக அமைந்துவிடக்கூடாது என்ற நோக்கத்தில் அவர் பொய் சொல்லத் துவங்குகிறார். நேர்மையை எதிர்கொள்ள முடியாதது பிறரது பலவீனம். இப்போது, பிறரது பலவீனத்தை எதிர்கொள்வதற்காக அவர் ஒரு பலவீனத்தை வளர்த்துக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டார். பலவீனத்திற்கு விடை பலவீனம் என்பது ஒரு சிறந்த உலகை உருவாக்குமா?

அவள் எப்போதுமே மிகவும் இயல்பானவள், எளிமையானவள். கடந்த சில நாட்களாக, தன் கணவன் அவனது சில நடவடிக்கைகளைத் தன்னிடம் கூறுவதில்லையோ என்ற சந்தேகம் அவளுக்குள் வளரத் துவங்கியிருந்தது. எனவே, அவள் அவனைக் கண்காணிக்கத் துவங்கினாள். அவனைக் கையும் களவுமாகப் பிடிக்கத் தந்திரமான திட்டங்களை யோசித்துக் கொண்டிருந்தாள். இக்குணநலன்கள் எதுவும் முன்பு அவளிடம் இருந்ததில்லை. அவளது கணவன் தவறு செய்துள்ளதாகவே இருக்கட்டும். அவனுடைய தவறுகளைக் கண்டுபிடிப்பதாக நினைத்துக் கொண்டு, தன் பண்புநலனுக்கு முற்றிலும் புறம்பான ஒரு காரியத்தைத் தான் செய்து கொண்டிருப்பதை அவள் அறியவில்லை.

ஒருவரது குறையை நீங்கள் சுட்டிக் காட்டும்போது, "அப்படி என்ன உலகில் யாரும் செய்யாத ஒரு காரியத்தையா தான் செய்துவிட்டேன்?" என்பது எதிர்க்கேள்வியாக வரும். உலகின் பலவீனம் உங்கள் பலவீனத்திற்கு நியாயம் கற்பிப்பதை ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். துரியோதனனைச் சமாளிப்பதற்கு நாம் துரியோதனனாக மாற வேண்டிய அவசியமில்லை. உண்மையில், அர்ஜுனனாக இருந்துகொண்டுதான் உங்களால் துரியோதனர்களைச் சமாளிக்க முடியும்.

"உங்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்பவரைக்கூட நீங்கள் ஏன் பாராட்டுகிறீர்கள்?" என்று குழு உறுப்பினர் ஒருவர் குழுத் தலைவரிடம் கேட்டார். அதற்கு அவர், "காரணம் எளிதான ஒன்று. பாராட்டுவது என் பண்பு, மரியாதைக் குறைவாக இருப்பது அவரது பண்பு. அடுத்தவருடைய நடத்தை என் நடத்தையின்மீது தாக்கத்தை ஏற்படுத்த நான் விரும்பவில்லை," என்று பதிலளித்தார்.

நம்மிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளாதவர்களிடம்கூட நாம் நல்ல விதமாக நடந்து கொள்வோம். நடத்தைக் குறைவை நம்மால் நியாயப்படுத்த முடியாது. அடுத்தவர்கள் நம் நல்லெண்ணத்திற்குத் தகுதி வாய்ந்தவர்களா இல்லையா என்பது இங்கு முக்கியமல்ல; நம் இதயத்திலும் அல்லது பண்புநலனிலும் எந்தவிதக் குறைகளும் ஏற்படும் அளவுக்கு நாம் தரம் தாழ்ந்துவிடக்கூடாது.

https://telegram.me/aedahamlibrary

உங்கள் பண்புநலனை ஒருபோதும் கைவிடாதீர்கள், அதற்குக் கொடுக்க வேண்டிய விலை எதுவாக இருந்தாலும் சரி.

https://telegram.me/aedahamlibrary

'என்னால் முடியும்' என்பது வாழ்க்கையின் மொழி

சுவரில் உவர்ந்து சென்றுகொண்டிருக்கும் எறும்புகளின் வரிசைக்குக் குறுக்காகத் தங்கள் கைகளை வைத்து அவற்றின் வழியை மறிக்கும் குறும்புக்காரச் சிறுவர்களை நான் அடிக்கடிப் பார்த்திருக்கிறேன். உடனடியாக அந்த எறும்புகள் வேறொரு வழியைக் கண்டுபிடித்து மீண்டும் நடைபோடும். அவன் அந்தப் பாதையைத் தடுத்தாலும், எறும்புகள் வேறொரு பாதையைத் தேடிக் கண்டுபிடித்துச் செல்லும். குறும்பின் காரணமாக, சுவற்றிலிருந்து சில எறும்புகளை அச்சிறுவன் விலக்கித் தள்ளுவான். அதையும் எதிர்த்துச் சமாளித்து, அந்த எறும்புகள் மீண்டும் சுவரில் ஏறத் துவங்கும். தடைகள் எதுவாக இருந்தாலும் சரி, முட்டுக்கட்டைகள் எவ்வளவு கடினமானவையாக இருந்தாலும் சரி, 'என்னால் முடியும்' என்ற நம்பிக்கையில் அவை தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கும். இறக்கும்வரை அவை முயற்சி செய்து, போராடி, இன்னும் தீவிரமாக முயன்று, 'என்னால் முடியும்' என்ற நம்பிக்கையில் தொடர்ந்து நடைபோடும். 'என்னால் முடியும்' என்ற நம்பிக்கையை, இறக்கும்வரை அவை கொண்டிருக்கும்.

காளை மாடுகள் மேம்பாலங்களில் அளவுக்கதிகமான சுமைகளைச் சுமந்து செல்வதை நான் பார்த்திருக்கிறேன். மிகுந்த போராட்டத்துடன் அவை ஒவ்வோர் அடியாக எடுத்து வைக்கும். இறுதியில் அவை சென்றடைய வேண்டிய இடத்தைச் சென்றடையும். மனிதனின் சுயநலத்திற்கு அவை பலியாகியிருந்தாலும், தம் முயற்சியை அலை ஒருபோதும் கைவிடுவதில்லை. புல் மற்றும் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிரிகளும்கூட 'என்னால் முடியும்' என்ற நம்பிக்கையுடன்

https://telegram.me/aedahamlibrary

அனைத்து எதிர்ப்புகளையும் தாண்டி வளர்கின்றன. சாகும்வரை அவை தம் சுயநம்பிக்கையை இழப்பதில்லை.

'என்னால் முடியும்'என்பது வாழ்வின் மொழி. 'என்னால் முடியாது' என்பது சாவின் மொழி

அனைத்துப் படைப்புகளிலும் சிறந்த படைப்பாகக் கருதப்படும் மனிதன் மட்டுமே சாவின் மொழியைப் பேசுகிறான். 'என்னால் முடியாது' என்ற சாவின் மொழியை மனிதன் மட்டுமே பேசுகிறான், நம்புகிறான், பின்பற்றுகிறான். இதற்குக் காரணம், ஒவ்வொரு மனித உயிரும் 14 வயதை எட்டுமுன், 'உன்னால் முடியாது' என்ற வார்த்தைகளைத் தன் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகம், மற்றும் நண்பர்கள் வாயிலாக, சராசரியாக 1,48,000 முறைகள் கேட்டுவிடுகிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. "அவனால் முடியாது" என்று அவனது சுற்றுச்சூழல் 1,48,000 முறைகள் அவன் இதயத்தில் ஆணியடித்துவிடுகின்றது.

என்னால் முடியும். உங்களால் முடியும். நம்மால் முடியும். மனிதன் சக மனிதனைக் காட்டிலும் உயர வேண்டும்; சாவின் மொழியைத் துறந்துவிட்டு, வாழ்வின் மொழியை அரவணைக்க வேண்டும்; 'என்னால் முடியாது' என்ற வார்த்தைகளை என்னால் விட்டொழிக்க முடியும்; நான் விட்டொழிக்க வேண்டும்; அவற்றை நான் விட்டொழிப்பேன். 1,48,000 முறைகள் 'உன்னால் முடியாது' என்று என்னிடம் கூறப்பட்டால்தான் என்ன? மனித வரலாற்றில் 1,48,000க்கும் அதிகமானோர் 'என்னால் முடியும்' என்று எனக்குக் காட்டிவிட்டுச் சென்றுள்ளனர். என்னால் முடியும் என்று நான் நம்புவதற்கு என்னை உத்வேகப்படுத்த ஒவ்வொரு வாழ்வினமும் உள்ளது. வாழ்வின் குரல் என்னுள் மெல்ல மெல்ல ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. அது சாவின் குரலுக்கான மரண ஒலி.

நாம் நம்மீது முழு நம்பிக்கை கொள்வோம். நம்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை, நம்மை உருவாக்கிய ஞானத்திடம் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் பிரதிபலிப்பு.

https://telegram.me/aedahamlibrary

நீங்கள் யாராக மாற விரும்புகிறீர்களோ, அதற்குத் தேவையானவற்றைச் செய்தே ஆக வேண்டும்

சமீபத்தில் பெருநிறுவன 'சர்க்கஸ்' ஒன்றை நான் காண நேர்ந்தது. விற்பனையில் வணிக நிர்வாக மேற்படிப்பு முடித்து வெளிவந்த ஒரு குழுவினரை அந்நிறுவனம் வேலைக்கு அமர்த்தியது. தங்கள் நிறுவனத்தின் பொருட்களைப் பற்றிய அறிமுகம் மற்றும் விற்பனைத் திறமைகள் குறித்த இரண்டு வாரத் தீவிரப் பயிற்சிக்குப் பிறகு, களத்தில் வேலை செய்வதற்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். வெளியில் சென்று விற்பனை செய்த வெறும் இரண்டு நாட்களில் அவர்களில் ஒருசிலர் நொந்துபோயும், வேலையில் உற்சாகமிழந்தும் காணப்பட்டனர். அவர்கள் ஊக்கம் இழந்ததற்கான காரணத்தை அவர்களிடம் கேட்டபோது, "தடைகளைத் தகர்த்தெறிந்து எங்களால் ஏன் வெற்றி பெற முடியவில்லை என்று எங்களுக்குத் தெரியவில்லை," என்று சிலர் பதிலளித்தனர். வெறும் இரண்டு நாட்கள் வேலைக்குப் பிறகு வெற்றி கண்ணுக்கு எட்டவில்லை என்பது குறித்தப் படபடப்பு. என்னவொரு வேடிக்கை! நான் அதைப் பெருநிறுவன சர்க்கஸ் என்று அழைப்பதற்குக் காரணம், அந்நிறுவனம் அளித்த இரண்டு வாரப் பயிற்சி அல்லது வணிக நிர்வாகத்தில் அந்தப் பட்டதாரிகள் மேற்கொண்ட இரண்டு வருடப் பட்டப் படிப்பு அல்லது அவை இரண்டும் சேர்ந்து, 'எளிய வெற்றி' அல்லது 'வெற்றி எளிது' என்ற தவறான நம்பிக்கையை அந்த இளம் மனங்களில் ஏற்படுத்தியுள்ளன.

https://telegram.me/aedahamlibrary

வெற்றி பெற விரும்பும் பலர், அந்த வெற்றியை அடைவதற்குத் தேவையானவற்றை மேற்கொள்ள விரும்பாததைக் கண்டு மனம் வேதனைப்படுகிறது. வெற்றி பெறுவதற்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு விரும்பும் மனப்போக்கு இல்லாமல், வெறும் வெற்றி பெறும் மனப்போக்கைக் கொண்டிருப்பதால் என்ன பயன்? பொன் முட்டையிடும் திறன் கொண்ட வாத்தைக்கூட, வளர்ந்து பெரிதாகும்வரை சீராட்ட வேண்டும். அதற்கு நேரமும் முயற்சியும் தேவைப்படும். முட்டையிலிருந்து வெளிவந்தவுடனேயே அது முட்டையிட வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!

எந்தவொரு விளையாட்டு வீரனும், போட்டிக்கு ஒரு வாரத்திற்கு முன் உடற்பயிற்சி செய்யத் துவங்கி, போட்டியில் பங்குபெறத்தக்க உடல் வலுவை அடைய முடியாது என்பதைப் படிப்பறிவில்லாதவன் கூடப் புரிந்து கொண்டிருப்பான். இருந்தாலும், கிரிக்கெட் விளையாட்டு ஒரு மதமாகப் பார்க்கப்படும் ஒரு தேசத்தில், முக்கியப் போட்டிகளுக்கு ஒரு வாரத்திற்கு முன் உடற்தகுதிக்கான முகாம்களை நடத்தும் ஒரு சம்பிரதாயத்தை அல்லது சம்பிரதாய வேடிக்கையை எத்தனை ஆண்டு காலமாக நடத்திக் கொண்டு வருகின்றனர்? அதன் விளைவு? கிரிக்கெட் மைதானத்தில் தடகள வீரர்களுக்குப் பதில், வயதான மாமாக்களை அதிகமாகப் பார்க்கிறோம்.

உடற்பயிற்சி மையத்திற்குச் சென்ற ஒரே வாரத்தில் மெல்லிய இடையை நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? உங்கள் மகனைத் தனிப்பட்ட சிறப்புப் பயிற்சிக்கு அனுப்பிய ஒரே மாதத்தில் அவனிடம் மேம்பாடு எதுவும் காணப்படவில்லை என்று கவலைப்படுகிறீர்களா? திருமணமான இரண்டே மாதங்களில், உங்கள் திருமணம் நீங்கள் விரும்பியபடி அமையவில்லை என்று மனமுடைந்து, திருமண ஆலோசகரைப் பார்க்க நினைக்கிறீர்களா? எல்லாவற்றிலும் எதிர்ப்பைக் காட்டும், விடலைப் பிராயத்தில் உள்ள உங்கள் மகளிடம் நீங்கள் பாசத்துடன் அணுகிய ஒரு வாரத்திற்கு உள்ளாகவே, அவள் மனம் இரங்கவில்லை என்று நீங்கள் எரிச்சல் கொள்கிறீர்களா?

விதையை இன்று நட்டுவிட்டு, நாளைக்கே அது பழங்களைக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் எவரொருவரும் வேறு கிரகத்திற்குக் குடி பெயர வேண்டியதுதான். பூமியில் அது சாத்தியமில்லை. வெற்றி பெற வேண்டும் என்ற மனப்போக்கை,

https://telegram.me/aedahamlibrary

வெற்றிக்குத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற மனப்போக்குடன் இணைப்பதில், ஒருவர் தொடர்ந்து உறுதியுடன் செயல்பட்டால்தான் இங்கு வெற்றி பெற முடியும். தேர்வு நெருங்கும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற மனப்போக்கு ஒன்பதாவது வகுப்புக்குப் பிறகு எடுபடாது. வாழ்க்கையைப் பொறுத்தவரை, வெற்றி பெறுவதற்கு முயற்சி முக்கியத் தேவை.

"நீங்கள் வெற்றி பெறுவீர்களா?" என்று நீங்கள் உங்களிடமோ அல்லது பிறரிடமோ கேட்பதற்கு முன், "வெற்றி பெறத் தேவையானவற்றைச் செய்வதற்கு நீங்கள் தயாரா?" என்று கேட்பது நல்லது.

ஒரு பெண்கள் சங்கத்தில் நடைபெற்ற ஒரு சிறந்த பியானோ கச்சேரிக்குப் பின், அக்கலைஞரின் வாசிப்பில் மனத்தைப் பறிகொடுத்த ஒருவர், அந்தப் பிரபல பெண் கலைஞரைச் சந்தித்து, "இவ்வாறு வாசிப்பதற்கு நான் எதை வேண்டுமானாலும் கொடுப்பேன்." என்று கூறினார். அதற்கு அவர், "நீங்கள் என்னவாக ஆக விரும்புகிறீர்களோ, அவ்வாறு ஆவதற்கு எதையும் செய்யத் தயார் என்று உங்களில் ஏராளமானோர் வாக்குறுதி அளிக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அவ்வாறு செய்ய மாட்டீர்கள். மணிக்கணக்காக, நாட்கணக்காக, மாதக்கணக்காக, வருடக்கணக்காக நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்து பயிற்சி செய்ய மாட்டீர்கள்," என்று பதிலளித்தார்.

நீங்கள் யாராக மாற விரும்புகிறீர்களோ, அதற்குத் தேவையானவற்றைச் செய்தே ஆக வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

நீங்கள் முதன்முதலில் அழுதபோது
ஒரு புதிய குரல் இவ்வுலகிற்குள் வந்தது.
நீங்கள் முதல்முதலில் புன்னகைத்தபோது
ஒரு புதிய வளைவு வடிவியலில் சேர்க்கப்பட்டது.

நீங்கள் பிறந்தபோது,
நீங்கள் இவ்வுலகிற்குப் பரிசளிக்கப்பட்டீர்கள்,
இவ்வுலகம் உங்களுக்காகப் பரிசளிக்கப்பட்டது.

நீங்கள் பிறந்த அந்த நாள்தான் உங்களது நன்னாள்.
நீங்கள் செம்மையாக வாழ்ந்தால்,
அது உலகிற்கு ஒரு நன்னாளாய் மலரும்.

https://telegram.me/aedahamlibrary

• • •

மேன்மையான மனங்கள் கருத்துக்களை விவாதிக்கும், குறுகிய மனங்கள் மக்களைப் பற்றி விவாதிக்கும்

நாகரீக உலகில் மிகவும் அநாகரீகமான நடவடிக்கை வெட்டிப் பேச்சுதான். அதிகம் கற்றவர்களும் மேல்தட்டு மக்களும்கூட இந்த அநாகரீகமான செயலில் ஈடுபடுகின்றனர். வெட்டிப் பேச்சு என்பது தயவு தாட்சண்யம் அற்றப் பொழுதுபோக்கு. வெட்டிப் பேச்சில் நாக்கும் அறிவும் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. பல வழிகளில், வெட்டிப் பேச்சு என்பது அவமரியாதையான மனப்போக்கு.

மக்கள் பலரும் ஒன்றிணைந்து பல கழகங்களையும் சங்கங்களையும் ஏற்படுத்துகின்றனர். உண்மையில் வெட்டிப் பேச்சுதான் அவர்கள் தோழமைக்கான உயிர்நாடி. இக்குழுக்களின் முக்கிய வேலை எது தெரியுமா? அங்கு இல்லாத மற்றவர்களைப் பற்றி விவாதிப்பதுதான். வீண் பேச்சுப் பேசுபவரை ஒருபோதும் நம்பாதீர்கள். உங்களுடன் வம்பு பேசிக் கொண்டிருந்தவர்கள், நீங்கள் அவ்விடத்தைவிட்டுச் சென்றவுடன், இப்போது மற்றவர்களுடன் சேர்ந்து உங்களைப் பற்றி வம்பு பேசுவர். வம்பு பேசும் ஒவ்வொருவரும் பிற வம்புப் பேச்சாளர்களைப் பற்றி வம்பு பேகவார்கள். இது உலகளாவிய உண்மை.

உங்கள் முகத்திற்கு முன் இனிமையாகப் பேசி, உங்கள் முதுகிற்குப் பின் உங்களைப் பற்றிக் குறை கூறுவோர் பாசாங்கு செய்பவர்கள்.

https://telegram.me/aedahamlibrary

அவர்களது வாழ்வை நம் வெட்டிப் பேச்சு எவ்வளவு தூரம் பாதிக்கும் என்ற அக்கறை துளியும் இன்றி, வெட்கமின்றி நாம் மக்களின் உருவங்களைச் சீர்குலைக்கிறோம். வம்பு பேசுபவர்கள், உணர்ச்சிரீதியாகக் காயப்பட்டவர்களைப் பற்றித் தலைப்புச் செய்திகளை உருவாக்காமல், அவர்களுக்கு மன ஆதரவு தந்தால், தற்கொலையின் விளிம்பிலிருக்கும் பல உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

வெட்டிப் பேச்சு என்பது அரைகுறை அறிவிலிருந்து வரும் தீர்ப்பு. வம்பு பேசும் ஒவ்வொருவரும் இறுதியில் தங்கள் சொந்த விஷத்தையே பருக நேரிடுகிறது. பிறர் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற கவலை அவர்களுக்கு அதிகமாகிவிடுகிறது. "அடுத்தவர்கள் நம்மைப் பற்றி என்ன கூறுகிறார்கள்?" என்று தெரிந்து கொள்ள அவர்களது மனம் எப்போதும் ஆவலாக இருக்கிறது. நீங்கள் அடுத்தவரை எடை போடாவிட்டால், அவர்களும் உங்களைச் சீர்தூக்கிப் பார்க்க மாட்டார்கள். அதற்கு நேர்மாறான கூற்றும் உண்மைதான். நீங்கள் அடுத்தவரை எடை போட்டுப் பார்த்தால், அவர்களும் உங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பார்கள்.

ஆர்வமும், கட்டுக்கடங்கா ஆவலும் மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சிக்கான உயிர்நாடிகள். அறிவு குறித்த இப்பசியையும் தாகத்தையும் வாழ்வின் உயரிய யதார்த்தங்களைக் கொண்டு தணிக்கும்போது வளர்ச்சி ஏற்படுகிறது. இந்த அறிவுப் பசிக்கும் தாகத்திற்கும் வெட்டிப் பேச்சை நாம் தீனியாகப் போடும்போது மாபெரும் தவறு செய்கிறோம். அறிவுத் தேடலைப் பொறுத்தவரை, அரிஸ்டாட்டில், ஃபிராய்டு, ஜே. கிருஷ்ணமூர்த்தி, மற்றும் நாம் அனைவரும் ஒன்றுதான். அவர்களெல்லாம் வெட்டிப் பேச்சாளர்களாக இருந்திருந்தால், அவர்களும் நம்மில் ஒருவராக இருந்திருப்பார்கள். வம்பு பேசுவதை நாம் நிறுத்தினால், நாமும் அவர்களுள் ஒருவராகிவிடலாம்.

பூனைகளுக்கு நடுவே சிங்கத்திற்கு என்ன வேலை? அடுத்த முறை உங்களை சுற்றியுள்ளவர்கள் வெட்டிப் பேச்சைத் துவங்கும்போது எழுந்து சென்றுவிடுங்கள். அங்கு இல்லாதவர்களைப் பற்றிப் பேசவோ, அவர்களைப் பற்றிய பேச்சைக் கேட்கவோ செய்யாதீர்கள். பிறரது இதயங்களைக் காயப்படுத்திவிட்டு அதன்மூலம் நாம் புளகாங்கிதம் அடையத் தேவையில்லை.

மேன்மை பொருந்திய மனங்கள் கருத்துக்களை விவாதிக்கும். சராசரி

https://telegram.me/aedahamlibrary

மனங்கள் நிகழ்வுகளைப் பற்றி விவாதிக்கும். குறுகிய மனங்கள் மக்களைப் பற்றி விவாதிக்கும்.

https://telegram.me/aedahamlibrary

• • •

நல்ல தகவல் பரிமாற்றம் சிறந்த உறவுகளுக்கு வலு சேர்க்கும்

"நான் வெளிப்படையாகவே கூறுகிறேன் ..."

"நான் வெளிப்படையாகப் பேசுபவன். மக்களிடம் நான் சொல்ல விரும்புவதை, அவர்கள் முகத்திற்கு நேராகவே கூறிவிடுவேன் ..."

"மக்களால் ஏனோ என் வெளிப்படையான பேச்சை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை ..."

மேற்கூறப்பட்ட உரையாடல் வரிகளெல்லாம் அன்றாடம் நீங்கள் கேட்பவை. இதில் வேடிக்கை என்னவென்றால், இத்தகைய "வெளிப்படையான" மக்களால், பிறரிடமிருந்து தங்களை நோக்கி வரும் வெளிப்படையான கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது. கருத்துக்கள் அவர்களிடமிருந்து வந்தால், அவர்கள் வெறுமனே நேரடியாகப் பேசுகிறார்கள் என்று அர்த்தம்; அவை பிறரிடமிருந்து வந்தால், அவர்கள் அனைவரும் ஆணவக்காரர்கள், அலட்சியப்படுத்துபவர்கள் என்று இவர்கள் குறை கூறுவார்கள்.

வெளிப்படையாகக் கூறப்படும் சாதாரண உண்மைகள்கூட ஏற்றுக் கொள்வதற்குக் கடினமானவையாக இருக்கின்றன. அப்படியானால், நம் வெளிப்படையான பேச்சை எப்படி மற்றவர்களால் பொறுத்துக் கொள்ள முடியும்? பெரும்பாலான சமயங்களில் வெளிப்படையான பேச்சு என்று நாம் கருதுபவை வெறுமனே நம் அபிப்பிராயங்கள்தான்.

உண்மையில், வெளிப்படையாக இருப்பதில் பிரச்சனை

https://telegram.me/aedahamlibrary

இருப்பதில்லை. நம் வெளிப்படையான கருத்துக்களை, அடுத்தவர்களைக் காயப்படுத்தும் விதத்தில் நேரடியாகக் கூறும்போதுதான் பிரச்சனையையே உருவாகுகிறது. மனித இனம், அடிப்படையில் உணர்ச்சிபூர்வமான படைப்புதான், அறிவுபூர்வமான படைப்பு அல்ல. நமது வெளிப்படையான பேச்சில் ஓரளவு நியாயம் இருக்கலாம், ஆனால் பிறரிடம் அது மிகவும் கறாரான முறையில் நேரடியாகத் தெரிவிக்கப்படும்போது, அவர்களிடையே உணர்ச்சிரீதியான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. ஒரு காயப்பட்ட இதயம், மனத்தின் புரிந்து கொள்ளும் திறனைக் குறைத்துவிடுகிறது.

ஓர் அம்பு உங்களைத் தாக்கினால், அது எந்தெந்தக் கச்சாப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட அம்பு என்று ஆற அமர ஆராய்ந்து கொண்டிருப்பீர்களா? மக்களின் மென்மையான இதயங்களை ஒருவரது வார்த்தைகள் காயப்படுத்தும்போது, அவ்வார்த்தைகள் உண்மையிலேயே எந்த அர்த்தத்தில் கூறப்பட்டன என்பதைப் பற்றி அவர்கள் எந்த அக்கறையும் கொள்ள மாட்டார்கள்.

நீங்கள் எப்படி சமைக்கிறீர்கள் என்பது மட்டுமல்ல, அதை எப்படிப் பரிமாறுகிறீர்கள் என்பதும் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. ஒருவரிடம் கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளும்போது, அதன் நான்கு அம்சங்களும் சரிவரக் கையாளப்பட்டால்தான் அவ்வுரையாடல் பயனளிக்கும். நீங்கள் எதைக் கூறுகிறீர்கள், அதை எப்படிக் கூறுகிறீர்கள், எப்போது கூறுகிறீர்கள், எப்போது நிறுத்துகிறீர்கள் ஆகியவைதான் அந்த நான்கு அம்சங்கள்.

வெளிப்படையாகக் கூறினால், சிறந்த கருத்துப் பரிமாற்றம் ஓர் உறவை வளர்க்கும்; முறையற்றக் கருத்துப் பரிமாற்றம் ஓர் உறவைக் கெடுக்கும்.

https://telegram.me/aedahamlibrary

உள்நோக்கமற்றுச் செய்யப்படும் செயல்கள் கடவுளின் செயல்களாகிவிடும்

ஏன் இவ்வளவு அக்கறையின்மை இருக்கிறது? துன்பப்படும் மக்களிடமிருந்து நம் பார்வையை விலக்கிவிடுவது எளிதாகத் தோன்றுகிறது அல்லவா? பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதும், உலகின் துன்பங்களில் தலையிடாமல் இருப்பதும் எளிதான பாதையாகத் தோன்றுகிறது அல்லவா? அங்கு தீவிரவாதம் இருக்கட்டும், பசி இருக்கட்டும், என் வேலைக்காரியின் குழந்தைகள் கந்தலான ஆடையை உடுத்தியிருக்கட்டும். என் கார் ஒட்டுனரின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருந்தால் என்ன? அது அவர்கள் தலையெழுத்து. அவர்கள் விதிக்கு நான் பொறுப்பல்ல. பிறரது வலிகள் மற்றும் அவலங்களில் தலையிடுவது நமக்குப் பிரச்சனையாக அமையும் அல்லவா? அவனவன் அவனவனுடைய சிலுவையைச் சுமக்கிறான், அது அவனது சுமை. எப்படிப்பட்ட அக்கறையின்மை! என் வாழ்வு சீராக ஒடிக் கொண்டிருக்கும் வரை, என்னால் சிறந்த உணவை அனுபவிக்க முடியும்வரை, கூடி வாழ்வதற்கு ஒரு குடும்பம் இருக்கும்வரை, ஒரு பாதுகாப்பான எதிர்காலத்திற்குப் போதுமான பணம் இருக்கும்வரை, என் அண்டை வீட்டாருக்கு என்ன நடக்கிறது என்பது என்னைப் பாதிப்பதில்லை.

அக்கறையின்மை என்பது கோபத்தைக் காட்டிலும் மோசமானது, பகைமையைக் காட்டிலும் கொடூரமானது, பழிவாங்குதலைக் காட்டிலும் கேடு விளைவிப்பது. கோபம், பகைமை, மற்றும் பழிவாங்கும் வெறி

https://telegram.me/aedahamlibrary

ஆகியவற்றில் அடுத்தவர் குறித்துச் சிறிதளவாவது உணர்ச்சிகள் இன்னும் மிச்சமிருக்கின்றன. அக்கறையின்மை அடுத்தவரை வெறும் கற்பனைக் கதாபாத்திரமாகச் சுருக்கிவிடும். அக்கறையின்மை என்பது அடுத்தவர்மீது உங்களுக்கு இருக்கும் உணர்ச்சிகளை மரத்துப் போகச் செய்யும். அந்த வகையில் பார்த்தால், அக்கறையின்மை ஒரு பாவம் மட்டுமல்ல, ஒரு தண்டனையும்கூட.

கடைசி மனிதனுக்காக அனுதாபப்பட நாம் கற்றுக் கொள்வோம். பிறரது கண்களில் கண்ணீரைப் பார்க்கும்போது, நம் கண்களிலும் சில கண்ணீர்த் துளிகள் பிறக்கட்டும். அக்கறையின்மையைத் துறப்போம். நாம் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவோம். நம்மால் முடிந்ததை நாம் செய்வோம். நம்மால் ஒரு பெரும் பங்கை ஆற்ற முடியும். வாழ்க்கையால் ஏற்கனவே கைவிடப்பட்டவர்களை நாம் கைவிடாமல் பார்த்துக் கொள்வோம். ஒவ்வொருவருடைய கண்ணீரையும் நம்மால் துடைத்தெறிய முடியும் என்று நினைப்பதுகூட நம் கற்பனைக்கு எட்டாத ஒன்றாகத் தோன்றலாம். ஆனால், இவ்வுலகில் துன்பங்கள் இருக்கும்வரை, நம்மிடம் சுவாசம் இருக்கும்வரை, நம் வேலை தொடரட்டும்.

என்னை வரையறுப்பது நான் அல்ல. மாறாக, நான் எதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறேனோ, அதுவே என்னை வரையறை செய்கிறது. சாதாரண மக்கள், தங்களைவிடப் பெரிய இலக்கு ஒன்றைத் தங்களுக்கென்று அடையாளம் கண்டுகொண்ட பிறகு, அசாதாரணமான சாத்தியக்கூறுகள் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. என்னை முன்வைக்காமல் பிறரை முன்வைத்துச் செய்யப்படும் எந்தவொரு காரியமும், ஒரு மாபெரும் ஆளுமையை எனக்குள் இருந்து வெளிப்படுத்துகின்றது. சுயநலமின்றிச் செய்யப்படும் எந்தவொரு செயலும் கடவுளின் செயலாகிறது. வழக்கறிஞராக இருந்த மகாத்மா காந்தியும், பள்ளி ஆசிரியையாக இருந்த அன்னை தெரேசாவும், பத்திரிக்கை ஆசிரியராக இருந்த சுவாமி சின்மயானந்தாவும், தச்சராக இருந்த ஏசுபிரானும் போற்றப்பட்டதற்குக் காரணம், தங்களைவிடப் பெரிய ஒரு காரியத்தை அவர்கள் கண்டுகொண்டு அதை நோக்கிச் செயல்பட்டதுதான்.

இதயத்தின் குறிக்கோள் மற்றோர் இதயத்துடன் தன்னை இணைத்துக் கொள்வதே. மீண்டும் பிறரது உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கற்றுக் கொள்வோம். படைத்தவனின் படைப்புகளை நீங்கள் உணர்ந்து

https://telegram.me/aedahamlibrary

கொள்ளும்போது, படைத்தவன் உங்களை உணர்ந்து கொள்வான்.

https://telegram.me/aedahamlibrary

ஆசைப்படுவதை நீங்கள் பெறுவதில்லை, தகுதியானவற்றையே பெறுகிறீர்கள்

"உங்கள் புத்தாண்டு வாக்குறுதிகளைப் போலவே உங்கள் துயரங்கள் அனைத்தும் விரைவில் மறைந்து போகட்டும்," என்பது ஓர் இத்தாலியக் கூற்று. எல்லோரும் ஆரோக்கியமாக இருக்க விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் அதற்குத் தகுதியானவர்கள்தானா? எல்லோரும் வெற்றி பெற விரும்புகிறார்கள், ஆனால் அவர்கள் அதைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள்தானா?

வாழ்வில் நீங்கள் விரும்புவது உங்களுக்குக் கிடைப்பதில்லை. நீங்கள் எதைப் பெறத் தகுதி வாய்ந்தவரோ அதை மட்டுமே பெறுகிறீர்கள். உங்கள் விருப்பங்களைத் தகுதிகளாக எப்படி மாற்றுவது? ஆழமான விருப்பங்களுடன், சுயஊக்குவிப்புடன்கூடிய தொடர் முயற்சி இணைந்து கொள்ளும்போது, அவை தகுதி பெறுகின்றன.

முயற்சியற்ற நிலை முயற்சியின் வாயிலாகவே அடையப்படுகிறது. "மேதைமை என்பது 1% ஊக்கம், 99% சதவீத உழைப்பு," என்று தாமஸ் எடிசன் கூறினார். என் நண்பர் ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டார்: "பிறரைப்போல் நான் புத்திசாலியாக இல்லையென்றால் அது குறித்து என்னால் எதுவும் செய்ய இயலாது. உணர்ச்சிரீதியான பக்குவம் என்னிடம் இல்லையென்றால் அதை நான் ஏற்றுக் கொள்வேன். அது பெற்றோரின் வளர்ப்பில் ஏற்பட்டத் தவறு. ஆனால், பிறரைக் காட்டிலும் அதிக முயற்சியை நான் மேற்கொள்ளலில்லை என்றால்,

https://telegram.me/aedahamlibrary

ஒருபோதும் என்னால் என்னை மன்னிக்க முடியாது. ஏனெனில், அது என் தவறு."

புதுவருடத் தீர்மானங்கள் குறித்து எடுக்கப்படும் முயற்சிகள், அந்த மாத இறுதிக்குள் மறைந்து போய்விடுகின்றன. வெற்றிக்கான இரகசியங்களில் ஒன்று, உடனடியான துவக்கமல்ல, சுய துவக்கம்தான். சுய ஊக்குவிப்பு மட்டும்தான் நிரந்தரமான ஊக்குவிப்பு. உத்வேகம் உள்ளிருந்து வர வேண்டும்.

"செய்யப்படக்கூடாத ஒரு விஷயத்தை அதிகத் திறமையுடன் செய்வதைக் காட்டிலும் பயனற்றச்

செயல் ஏதுமில்லை," என்று பீட்டர் டிரக்கர் கூறுகிறார். போகும் திசையறியாத, சுயஊக்குவிப்புடன்கூடிய முயற்சி ஒரு வீண் முயற்சி ஏணியின் உச்சிக்குச் சென்ற பிறகு, அது தவறான சுவரில் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது என்று உணரும்போது என்ன பயன்? நேரமும் முயற்சியும் ஒருபோதும் தனிமையில் நிர்வகிக்கப்படுவதில்லை. வாழ்விலிருந்து உங்களுக்கு என்ன வேண்டும், வாழ்வில் நீங்கள் எங்கு சென்றடைய வேண்டும் என்பதை வைத்தே அவை நிர்வகிக்கப்படுகின்றன. குறிக்கோளற்ற நடவடிக்கை என்பது மாற்றம். குறிக்கோளுடன்கூடிய நடவடிக்கை என்பது முன்னேற்றம்.

எப்போதேனும் ஒரு மகத்தான காரியத்தை யாராலும் செய்ய முடியும். ஆனால், தொடர்ந்து மகத்தான காரியங்களைச் செய்பவர்கள்தான் உண்மையிலேயே மாபெரும் மனிதர்கள். எப்போதோவது நீங்கள் செய்யும் அல்லது செய்த காரியத்திற்காக இவ்வுலகம் உங்களை நினைவில் வைத்திருக்கப் போவதில்லை. எல்லா நேரங்களிலும் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதற்காகவும், என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதற்காகவும்தான் நீங்கள் நினைவுகூரப்படுவீர்கள்.

"நீங்கள் ஆசைப்படுவதை நீங்கள் அடைவதில்லை; உங்களுக்குத் தகுதியானவற்றை மட்டும்தான் அடைகிறீர்கள்," என்பது கடவுள் வகுத்த விதி. நம் விதி இப்படி இருக்கட்டும்: "சுய ஊக்குவிப்புடன்கூடிய தொடர்ச்சியான முயற்சியின் மூலம், வாழ்வில் சிறந்தவற்றை மட்டுமே பெற நான் தகுதி வாய்ந்தவன் என்பதை நான் உறுதி செய்வேன்."

https://telegram.me/aedahamlibrary

நீங்கள் எதிர்க்கும் உண்மைதான் உங்களின் போராட்டமாயிருக்கும்

நேர்மையுடன் வாழும்போது வாழ்வு தன்னைத் தானே குணப்படுத்திக் கொள்கிறது. நீங்கள் எதிர்க்கும் உண்மைதான் நீங்கள் எதிர்கொள்ளும் போராட்டமாக வெடிக்கின்றது.

துணி துவைக்கும் இயந்திரத்திற்குள் துணிகளைப் போட்டுவிட்டீர்கள். இயந்திரமும் தன் வேலையைச் செய்துவிட்டது. இப்போது துணிகளை வெளியே எடுத்து உலர்த்த வேண்டும். துணிகள் இயந்திரத்திற்குள்ளேயே அதிக நேரம் இருந்தால், அதிகமான துர்நாற்றம் அவற்றிலிருந்து வரும். சில நாட்கள் அவற்றை அப்படியே விட்டுவிட்டால், அந்த நாற்றத்தை நம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. அதேபோலத்தான், நம் எண்ணங்களும் உணர்ச்சிகளும், நமக்குள் அதிகரித்துக் கொண்டிருக்கும் எண்ணங்களைப் பிறரிடம் தெரிவிக்காமல் இருந்தால், நாம் அதிகளவில் உணரும் உணர்ச்சிகளைப் பிறரிடம் வெளிப்படுத்தாமல் இருந்தால், நம் உறவுகளுக்கிடையே உள்ள இடைவெளி அதிகரிக்கும். எவ்வளவு நாட்கள்தான் குப்பைகளைக் கம்பளங்களுக்கு அடியே தள்ளி மறைத்து வைப்பீர்கள்? இறுதியில் ஒருநாள் அவை வெளியே வந்துதானே ஆக வேண்டும்? அப்படி வெளியே வரும்போது, நம்மால் கையாள முடியாத அளவுக்கு மிகவும் அவலமான நிலையில் அவை வெளிவரும்.

பிறரிடம் தெரிவிக்கப்படாத நம் எண்ணங்களும், வெளிப்படுத்தப்படாத நம் உணர்ச்சிகளும் முழுமை பெறாத சுழற்சிகள். முழுமை பெறாத சுழற்சிகள் நம் ஆழ்மனத்திற்குள் எப்போதும்

https://telegram.me/aedahamlibrary

நிலைத்திருக்கும். உருவகப்படுத்திக் கூறினால், முழுமை பெறாமல் இருக்கும் சுழற்சிகள், மூக்குக் கண்ணாடியில் ஏற்படும் கீறல்களைப் போல. கீறல் விழுந்த மூக்குக் கண்ணாடி வழியாகப் பார்க்கப்படும் அனைத்தும் கீறல் விழுந்ததுபோலவே தெரியும். இதில் வேடிக்கை என்னவென்றால், கீறல்கள் நாம் பார்க்கும் பொருட்களில் இல்லை. அவற்றை நாம் எந்த ஊடகத்தின் வழியாகப் பார்க்கிறோமோ, அதில்தான் இருக்கின்றன. மொத்தத்தில் அவை நம் காட்சியைப் பாதிக்கின்றன.

நீங்கள் உடனடியாக உங்கள் எண்ணங்களைத் தெரிவிக்காமலும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமலும் இருக்கும்போது, அவற்றைத் திரிக்கத் துவங்குகிறீர்கள். அடக்கி வைக்கப்பட்ட உங்கள் உணர்வுகளை சாந்தப்படுத்துவதற்காக நீங்கள் உண்மையை மிகைப்படுத்திக் கூறுகிறீர்கள் அல்லது குறைத்துக் கூறுகிறீர்கள். உங்களால் அவற்றை எதிர்கொள்ள முடியாதபோது, அவற்றை மறுக்கிறீர்கள். உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாதவற்றைப் பற்றி உங்களுக்கு அக்கறை இல்லாததுபோல் நடிக்கிறீர்கள். முழுமை பெறாத நம் சுழற்சிகளைப் பொறுத்தவரை, காலம் நம் அனைவரையும் பொய்யர்களாக்கிவிடுகிறது.

ஒருவர் உங்களைக் காயப்படுத்தும்போது, அவர் உங்களைக் காயப்படுத்துகிறார் என்பதை அப்போதே அவரிடம் தெரிவிப்பதுதான் உணர்ச்சிரீதியான ஆரோக்கியத்திற்கான இரகசியம். இல்லையேல், எதிர்காலத்தில் இச்சுழற்சிகள் மீண்டும் மீண்டும் தோன்றி, உங்கள் நல்ல நேரங்களைப் பாழ்படுத்தும். உணர்ச்சிரீதியான பிரச்சனைகள் நிகழ்காலச் சுமைகளாகிவிடும். நிகழ்காலத்தில் ஏற்படும் ஏதோ ஒன்று, முடிக்கப்படாத, அடக்கி வைக்கப்பட்டுள்ள சில உணர்ச்சிகளை உங்களுக்கு நினைவூட்டி, பழைய உணர்வுகளை மீண்டும் கிளர்ந்தெழச் செய்யும். அந்த உணர்வுகள், உங்கள் நிகழ்கால வாழ்க்கைக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்ற நிலையில் நீங்கள் நடந்து கொள்ள உங்களை வழிநடத்தும். இருந்தாலும், பழைய உணர்வுகள் மேலெழுந்து வருவதற்குக் காரணம், அவை தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான், உங்களைத் தண்டிப்பதற்காக அல்ல. தெரிவிக்கப்படாத எண்ணங்களும் வெளிப்படுத்தப்படாத உணர்ச்சிகளும்தான் உணர்ச்சிரீதியான அழுத்தத்திற்குக் காரணம். உணர்ச்சிரீதியான நோய் என்பது சேகரித்து வைக்கப்படும் நோய்.

https://telegram.me/aedahamlibrary

"நேர்மையாக என் அனைத்து எண்ணங்களையும் உணர்வுகளையும் நான் வெளிப்படுத்தத் துவங்கினால், அது எனக்கு மிகவும் வேண்டியவர்களைக் காயப்படுத்தும்," என்று நீங்கள் என்னிடம் கூறுகிறீர்கள். நான் உங்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன்: "நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், இறுதியில் நீங்கள் அந்த உறவையே காயப்படுத்திவிடுவீர்கள்."

உண்மை உங்களைக் காயப்படுத்தும்போதுகூட அதை எதிர்கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள். நமக்கு வேண்டியவர்களும் அவ்வாறே கற்றுக் கொள்ளட்டும், உங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் யார் தூண்டினார்களோ, அவர்களிடம் அவற்றை நேரடியாக வெளிப்படுத்துங்கள். இதில் தாமதிக்காதீர்கள். சரியான சூழ்நிலைகளுக்காகக் காத்திருக்காதீர்கள். எளிய வழியைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் மனக் குறையை வெளிப்படுத்துங்கள், பிறகு அதை விட்டொழியுங்கள். மிகைப்படுத்தாதீர்கள், நச்சரிக்காதீர்கள். அதிகப்படியாக வலியுறுத்தாதீர்கள். அந்நபர் உங்கள் உணர்வுகளை மதித்தால், நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள். இல்லையேல், நீங்கள் யாருடன் சம்பந்தப்பட்டுள்ளீர்கள் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். எது உண்மையோ அதை ஏற்றுக் கொள்ளுங்கள். மன்னியுங்கள், உங்கள் காயத்தை வெளியேற்றுங்கள். மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பாருங்கள். நீங்கள் எதையும் நிரூபிக்க வேண்டியதில்லை.

https://telegram.me/aedahamlibrary

• • •

நம்மால் தீர்வாக இருக்க முடியாவிட்டாலும்கூட
மன ஆறுதலாகவாவது இருக்கலாம்.
நம்மால் உதவ முடியாவிட்டாலும்கூட,
தீங்கு விளைவிக்காமல் இருக்கலாம்.
நம்மால் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாவிட்டாலும்கூட,
பிரச்சனையைத் தோற்றுவிக்காமல் இருக்கலாம்.
நம்மால் முடுக்கிவிட முடியாவிட்டாலும்கூட
ஒடுக்காமல் இருக்கலாம்.

தலைவலிக்குக் காரணமாக இருப்பதற்குப் பதில்,
அலைக்கழிக்கப்பட்ட ஆன்மாவிற்கு வலி நிவாரணியாக
உங்களால் இருக்க முடிந்தால்,
உலகம் உங்களைத் தேடி ஓடி வரும்.

வார்த்தைகளிலும் செயல்களிலும் மனிதாபிமானத்துடன்,
ஒவ்வொரு மனிதனும்
தனக்கான தீர்வுகளைக் கண்டறிய உதவுங்கள்,
இந்த உலகம் உங்களுக்குச் சொந்தமாகிவிடும்.

https://telegram.me/aedahamlibrary

அமைதியின் கதவுகளை நம்பிக்கை என்னும் திறவுகோலால் மட்டுமே திறக்க முடியும்

உங்களுக்கு நேற்று என்ன நடந்திருந்தாலும் சரி, நீங்கள் உலகிற்கு என்ன செய்திருந்தாலும் சரி, உலகம் உங்களுக்கு என்ன செய்திருந்தாலும் சரி, எது எப்படி இருந்தாலும் சரி, ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து நீங்கள் இந்த உலகத்தை மீண்டும் நம்பித்தான் ஆக வேண்டும். செய்வதைவிடச் சொல்வது எளிது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், உங்களுக்கு வேறு வழி இல்லை. ஏனெனில், உங்கள் அமைதி உங்கள் நம்பிக்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளது. நம்பிக்கையின்றி அமைதி இல்லை. நம்பிக்கையின்மை மன அழுத்தத்திற்கு இட்டுச் செல்லும்.

நீங்கள் அரசாங்கப் போக்குவரத்தை ஓராயிரம் முறைகள் பயன்படுத்தும்போது, அதிகபட்சம் ஓரிரு முறை உங்கள் பர்ஸ் திருடு போகலாம். நீங்கள் உலகத்தை நம்பாமல் உங்கள் பர்ஸ் பத்திரமாக உள்ளதா என்று அவ்வப்போது பரிசோதித்தாலும், சாமர்த்தியமான திருடன் என்றேனும் ஒரு நாள் உங்கள் பர்ஸைத் திருடக்கூடும். ஆனால், அதற்கு முன் நீங்கள் இலட்சக்கணக்கான முறைகள் நிம்மதியை அனுபவிக்கும் சந்தர்ப்பங்களை இழந்திருப்பீர்கள். உங்களுடன் பயணிக்கும் ஒவ்வொருவரும் ஒரு திருடனாக இருக்கலாம் என்ற எண்ணத்துடன் உங்கள் கண்கள் அலைபாயும்போது, அது உங்கள் நிம்மதியை ஓராயிரம் முறைகள் பாதித்திருக்கும். மாறாக, உலகத்தை நம்புவது உங்கள் பயணத்தை அமைதியானதாக அமைத்திருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுங்கள்.

ஒரு நாதுராம் கோட்சே நிச்சயம் எங்கோ இருக்கக்கூடும். ஆனால், ஒவ்வொருவரையும் கோட்சேயாகப் பார்க்கும்போது, இலட்சக்கணக்கான காந்தியவாதிகளை நீங்கள் தவறவிடக்கூடும். அதனால் எந்தப் பயனும் இல்லை. ஓர் ஒசாமாவைத் தேடும்போது, ஒவ்வோர் உன்னதமான இதயத்தையும் நீங்கள் சந்தேகிக்க வேண்டியிருக்கும். அதுவும் பயனற்றது.

ஓர் ஊழியர் உங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யக்கூடும். இருந்தாலும், மற்றவர்களை நம்புங்கள். ஒரு முக்கியமான உறவு, உங்கள் நற்குணத்தை உங்கள் பலவீனமாகக் கருதி, உங்கள் நம்பிக்கையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தக்கூடும். மறுநாள் காலையில் எழுந்து அந்த உறவை மீண்டும் நம்பத் துவங்குங்கள். நான் அறியாமையில் பேசுவதுபோல் உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் அமைதிக்கான கதவுகளை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். நம்பிக்கை என்னும் திறவுகோலைக் கொண்டே உங்களால் அவற்றைத் திறக்க முடியும்.

நீங்கள் அமைதியை விரும்பினால், நேற்று நீங்கள் ஏமாற்றப்பட்டாலும், உங்களுக்கு வேறு வழி இல்லை. அடுத்த நாள் காலையில் எழுந்து இவ்வுலகத்தை மீண்டும் நம்பித்தான் ஆக வேண்டும். எப்போதெல்லாம் நான் ஏமாற்றப்பட்டேனோ, நம்பிக்கைத் துரோகத்திற்கு ஆளானேனோ, அல்லது காயப்பட்டேனோ, அப்போதெல்லாம், "நல்ல வேளை, நான் ஏமாற்றப்பட்டேன், ஆனால் நான் ஏமாற்றுக்காரன் இல்லை. எனக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கப்பட்டது, ஆனால் நான் நம்பிக்கைத் துரோகி அல்ல. நான் காயப்பட்டேன், ஆனால் நான் யாரையும் காயப்படுத்தவில்லை. பிறரது தவறான செயலால் நான் துன்பத்திற்கு ஆளானால் பரவாயில்லை. ஆனால் நான் ஒருபோதும் தவறிழைக்க மாட்டேன்," என்று எனக்கு நானே கூறிக் கொள்வேன்.

இன்றிலிருந்து உலகம் நம்பத்தக்க ஒன்றாக இருக்கும் என்று ஒவ்வொரு நாள் காலையிலும் அனுமானித்துக் கொள்ளுங்கள். கணக்கிலடங்கா முறைகள் இவ்வுலகம் நம் நம்பிக்கைக்கு ஏற்றவாறு வாழ்ந்து காட்டும், சில சமயம் நம் நம்பிக்கைக்கு முரணாக நடந்து கொள்ளும். ஆனால் சாத்தியக்கூறுகள் நமக்குச் சாதகமாகவே இருக்கின்றன. நம்பிக்கையை நோக்கி உங்கள் இதயம் சாயட்டும்.

https://telegram.me/aedahamlibrary

அமைதிக்கான ஒரே ஒரு வழி - நம்பிக்கை.

https://telegram.me/aedahamlibrary

நாளையப் பக்குவத்துடன் இன்று வாழ வேண்டியது இன்றியமையாதது

ஒரு கணவன் தன் மனைவியோடும் தன் தாயோடும் தனித்தனியாக சிறந்த நல்லுறவை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறான். ஒரு முக்கோணத்தை முழுமைப்படுத்த இரண்டு கோடுகள் போதாது. அவனது மனைவியும் தாயும் சிறந்த உறவை அனுபவிக்காவிட்டால், வாழ்க்கை முக்கோணம் முழுமை பெறாது. (தந்தை என்னவானார் என்று யோசிக்கிறீர்களா? வரலாற்றுரீதியாக, அவர் எப்போதுமே இந்தக் குடும்ப நாடகத்தில் அங்கம் வகித்ததில்லை.) ஒவ்வொரு முறையும் நான் ஒரு மனைவியின் பக்கமுள்ள நியாயத்தையும், மாமியாரின் பக்கம் உள்ள நியாயத்தையும், மிக முக்கியமாக, இவர்கள் இருவருக்கும் இடையே சிக்கிக் கொண்டிருக்கும் அந்தக் கணவனின் பக்கமுள்ள நியாயத்தையும் கவனித்துக் கேட்கும்போது, ஒரே ஒரு விஷயம்தான் மாறாமல் உள்ளது - 'நான் செய்வது சரி. தவறு அடுத்தவர்மீதுதான். அதை ஒப்புக் கொள்ளுங்கள்.'

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த 50 தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு, 'நிர்வாகத் தலைமை' என்ற தலைப்பில் நான் மூன்றுநாள் கருத்தரங்கு ஒன்றை நடத்தினேன். அதில் பங்கு கொண்டவர்களிடமிருந்து வந்த பல கேள்விகள் தங்கள் ஊழியர்களின் அடிப்படை மனப்போக்கு மற்றும் வேலை நெறிமுறைகள் தொடர்பானவையாக இருந்தன. பிறகு, 300 தொழில்முறை விற்பனையாளர்களுக்கு ஒருநாள் கருத்தரங்கு ஒன்றை நடத்தினேன். அவர்களுடன் நான் மேற்கொண்ட நேரடிக் கருத்துப் பரிமாற்றத்தின்போது, அவர்களில் பெரும்பாலோர் தங்கள்

https://telegram.me/aedahamlibrary

நிறுவனத்தின் அணுகுமுறை மற்றும் உத்திகள் குறித்துத் தங்கள் சந்தேகங்களை வெளிப்படுத்தினர். இவ்விரு விஷயங்களிலும் ஒன்றுதான் மாறாமல் இருந்தது; 'நான் செய்வது சரி. தவறு அடுத்தவர்மீதுதான். அதை ஒப்புக் கொள்ளுங்கள்.'

பல வருடங்கள், என் மகனைப் பள்ளியிலிருந்து கூட்டி வருவதற்காக நான் அவனது பள்ளிக்கூட வாசலில் காத்திருந்திருக்கிறேன். அங்கு நிற்கும்போது, இந்தப் பள்ளியின் அணுகுமுறை ஏன் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை என்றும், ஏன் அந்த ஆசிரியர் சரியில்லை என்றும் அங்கு வரும் பெற்றோர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருப்பதை நான் கேட்டிருக்கிறேன். பெற்றோர்கள் ஏன் அதை எதிர்பார்க்கக்கூடாது, பெற்றோர்களின் இந்த அணுகுமுறையை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது போன்றவை குறித்து, பள்ளி ஏற்பாடு செய்யும் பெற்றோர்— ஆசிரியர் கூட்டங்களிலும், தனிப்பட்ட முறையிலும் நான் கேட்டிருக்கிறேன். அவற்றில் மாறாத விஷயம் இதுதான்: "நான் செய்வது சரி. தவறு அடுத்தவர்மீதுதான். இதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டாம். நாங்கள் அதை ஏற்கனவே அறிவோம்."

துரதிர்ஷ்டவசமாக, சரியா தவறா என்பதைச் சுற்றி உலகம் இயங்குவதில்லை. அது பக்குவத்தால் இயங்குகிறது. எந்தவொரு சூழ்நிலையிலும், யார் சரியானவர்கள், யார்மீது தவறு உள்ளது என்பது பிரச்சனை அல்ல; வேறுபாடுகள்தான் வாழ்க்கைமுறை என்பதை ஏற்றுக் கொண்டு, சூழ்நிலையைச் சமாளிக்கும் ஒரு பக்குவப்பட்ட மனம்தான் எப்போதும் தேவைப்படுகிறது.

உங்கள் மாமியார் எல்லாவற்றையும் பற்றிக் குறை கூறுகிறார் என்றால், அது அவரது இயல்பு. உங்கள் மருமகள் நீங்கள் செய்யும் அனைத்தையும் விமர்சிக்கிறார் என்றால், அது அவரிடமுள்ள குறைபாடு. உங்கள் மனைவியும் தாயும் எப்போதும் மோதிக்கொண்டே இருக்கிறார்கள் என்றால், நீங்கள் தலையிட்டுத் தீர்க்க வேண்டிய ஒரு சூழ்நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும், நியாயங்கள் அலசிப் பார்க்கப்பட வேண்டும். புலம்புவதும், கண்டிப்பதும், அழுவதும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஒரு குடும்பத்தில் பிரச்சனைகள் இருப்பது மக்கள் அதில் சம்பந்தப்பட்டிருப்பதால் அல்ல, பக்குவமற்ற மக்கள் அதில் ஈடுபட்டிருப்பதால்தான். ஒரே ஒரு பக்குவப்பட்ட மனம் அங்கு இருந்தால்கூட, சூழ்நிலை நன்றாகச் சமாளிக்கப்பட்டு இணக்கம்

https://telegram.me/aedahamlibrary

உருவாகும். ஓர் ஊழியர் என்ற முறையில், நீங்கள் பணியாற்றும் நிறுவனத்தில் சிறப்பாக வளர்வதற்கான வழிகளைக் கண்டுபிடியுங்கள் அல்லது உங்களுக்கு ஏற்ற மற்றொரு நிறுவனத்தைக் கண்டுபிடியுங்கள்.

பெரும்பாலான சமயங்களில், மக்களைத் தங்கள் போக்கில் விட்டுவிட்டால், உங்கள் வழி தெளிவாகிவிடும். உண்மை எளிதானது, நேரடியானது. ஒரு பிரச்சனை இருக்கிறது என்றால், பக்குவமற்ற ஒரு மனம் அதில் சம்பந்தப்பட்டுள்ளது. ஒரு தீர்வு உள்ளது என்றால், பக்குவப்பட்ட ஒரு மனம் அதைச் சமாளித்துக் கொண்டிருக்கிறது. எந்தச் சூழ்நிலையிலும், ஒரு குறிப்பிட்ட நிலையிலிருந்து பார்க்கும்போது சரி எது, தவறு எது என்பது நமக்குப் புலனாகும். அதைவிட ஒருபடி மேலான நிலையில், தீர்வுகள் மட்டுமே நம் கண்களுக்குத் தெரியும். சாதாரண நிலையிலிருந்து உங்களைச் சற்று உயர்த்திக் கொள்ளுங்கள்; ஒரு வித்தியாசமான யதார்த்தம் உங்களுக்காக அங்கு காத்திருக்கும்.

உங்களது நேற்றைய தினத்தை இன்றையப் பக்குவத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் போதாது. இன்றைய தினத்தை நாளையப் பக்குவத்துடன் வாழ வேண்டியது இன்றியமையாதது. அப்படி வாழ்பவனுக்காக, எதிர்காலம் காத்திருக்கிறது . . .

https://telegram.me/aedahamlibrary

குருதான் உங்களை விடுவிக்கிறார்.

ஆழ்ந்த அன்பு, மரியாதை, சரணாகதி,
மற்றும் விசுவாசத்துடன்கூடிய ஓர் உறவு அது.

ஒரு குரு, ஒரு சீடனை உருவாக்கி,
பரிபூரணமாக அவனை மாற்றி,
அவனுக்குப் புது வாழ்வளிக்கிறார்.

விவரிப்பிற்கு அப்பாற்பட்ட ஈர்ப்பு
குருவிடம்தான் இருக்கும்.
ஒரு நிரந்தர ஈர்ப்பு, ஓர் அழைப்பு
அங்கு இருந்து கொண்டே இருக்கும்.
உண்மையிலேயே காந்தசக்தி கொண்ட
ஏதோ ஒன்று அங்கு இருக்கிறது.

குரு என்பவர் ஓர் இருத்தல்.
அந்த இருத்தல் உங்களது இருத்தலின்
வேதியியலை முற்றிலுமாக மாற்றிவிடுகிறது.

https://telegram.me/aedahamlibrary

• • •

பணம் சேர்ப்பதற்கான தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு நல்ல மனிதனுக்கும் உண்டு

ஓர் இருள் சூழ்ந்த சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் ஏராளமான நல்ல மனிதர்கள்தான். நல்ல மனிதர்களிடம் உள்ள பிரச்சனை என்னவென்றால், அவர்கள் தங்கள் வாழ்வில் பெரும் திருப்தியுடனும் மன நிறைவுடனும் இருப்பதுதான். தங்களிடம் இருப்பது போதும் என்று அவர்கள் ஒரேயடியாகத் திருப்திப்பட்டுவிடுவதால், பணக்காரராவதற்கான தூண்டுதல் அவர்களிடம் இருப்பதில்லை. பொருளாதார அபரிமிதம் குறித்த உணர்ச்சிரீதியான கட்டாயம் எதையும் அவர்கள் உணர்வதில்லை.

சாலையில் ஒரு நூறு ரூபாய் நோட்டு கிடப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த வழியாகச் செல்லும் ஒரு நல்ல மனிதர், அதைப் பார்த்துவிட்டு, "இது என் பணம் அல்ல. எனவே, அதை நான் தொட மாட்டேன்," என்று கூறிவிட்டுத் தன் வழியில் சென்றுவிடுவார். அவர் விட்டுச் சென்றதை ஒரு கயவன் கண்டெடுக்கிறான். தனக்குச் சொத்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும், அந்த நூறு ரூபாயை அந்த நல்ல மனிதர் எடுத்திருப்பாரேயானால், ஏழைகளின் பசியாற்ற அதைப் பயன்படுத்தியிருக்கலாம். அதைக் கண்டுகொள்ளாமல் சென்றதால், அழிவுபூர்வமான வழியில் அதைப் பயன்படுத்தக்கூடிய ஒரு கயவனின் கையில் அது கிடைத்துவிட்டது.

எந்தவொரு நாட்டிலும் புழங்கும் அதிகாரபூர்வமான பணம் ஓர்

https://telegram.me/aedahamlibrary

அளவிற்குட்பட்டது. இப்போது, அந்தப் பணம் ஒரு நல்லவரிடமும் இருக்கலாம், அல்லது ஒரு கயவனிடமும் இருக்கலாம். திருப்தி காரணமாகப் பெருஞ்செல்வத்தைக் குவிக்க விரும்பாத நல்லவர்களால், ஏராளமான பணம் தீயவர்களின் கைகளில் கிடைக்கும்படி ஆகிறது. ஒரு நிலைக்குப் பிறகு, செழிப்பு என்பது எவரொருவருக்கும் மிகையாகிவிடுகிறது. ஆனால் வித்தியாசம் என்னவென்றால், நல்லவர்களிடம் இருக்கும் மிகுதி ஒரு சிறந்த உலகை உருவாக்க உதவும்; நெறிமுறையற்ற, உணர்வுகளைப் புரிந்து கொள்ள இயலாத, தீய மனம் படைத்தவர்கள் கைகளில் உள்ள மிகுதி உலகை அழிக்கப் பயன்படுத்தப்படும். நல்ல மனிதர்கள் தங்களிடம் உள்ள மிகுதிப் பணத்தைக் கொண்டு பள்ளிகளைக் கட்டுவார்கள், சுற்றுச்சூழலை மேம்படுத்துவார்கள், கல்வி உதவி வழங்குவார்கள், ஏழைகளின் பசியைப் போக்குவார்கள், மருத்துவ உதவிகளைச் செய்வார்கள். தீமைக்கு அஞ்சாத மனிதர்கள் வெடிகுண்டுகளைப் போடுவர், தற்கொலைப் படைகளுக்குப் பயிற்சி அளிப்பர், மத நல்லிணக்கத்தைச் சீர்குலைப்பர், அப்பாவி மக்களைக் கொலை செய்வர்.

அன்னை தெரசாவின் கைகளில் அபரிமிதமான செல்வம் இருப்பதை எண்ணிப் பாருங்கள். ஒசாமாவின் கைகளில் அதே போன்ற செல்வம் இருப்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

நல்ல மனிதர்களுக்கு நான் கூற விரும்புவது இதுதான்: தங்கள் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நல்ல மனிதர்களை, செழிப்பான மனிதர்களைக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்க நீங்கள் முன்வாருங்கள். தீயவர்கள் கைகளுக்குப் போய்ச் சேரும்படி ஒரு நூறு ரூபாய் நோட்டை விட்டுச் செல்லாதீர்கள். நாம் அத்தீயவர்களைப் பலவீனப்படுத்துவோம். பொருளாதாரத்தை நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வோம். பொருளாதார உபரியை உருவாக்குவோம். உங்களுக்கு அவ்வளவு பணம் தேவையில்லாமல் இருக்கலாம். அதனால் என்ன? அதைக் கொண்டு ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குவோம்.

தெளிவாகவே கூறிவிடுகிறேன் - பனம் சேர்ப்பதற்கான தார்மீகப் பொறுப்பு ஒவ்வொரு நல்ல மனிதனுக்கும் உண்டு.

https://telegram.me/aedahamlibrary

நம் ஆசிரியர்களின் போதனைகளை நீக்கிவிட்டால், நம்மில் ஒன்றும் மிஞ்சாது

சச்சின் டென்டுல்கரைக் காட்டிலும் ராமகாந்த் ஆச்ரேக்கர் ஒன்றும் சிறந்த கிரிக்கெட் வீரர் அல்ல. ஆனால், அவரது பயிற்சிதான் சச்சினுக்கு சச்சினை அடையாளம் காட்டியது. அதுதான் சச்சினை உலகிற்கு அடையாளம் காட்டியது. பி.டி.உஷாவோடு ஒப்பிடுகையில் ஓ.எம்.நம்பியார் ஒன்றுமே இல்லை. ஆனால் அவர்தான் இந்தியாவிற்கு ஒரு தலைசிறந்த தடகள வீராங்கனையை வழங்கினார். தன் குருவான துரோணாச்சாரியாரை எதிர்த்துப் போரிட்டு வெல்லும் அளவுக்கு அர்ஜுன ன் வளர்ந்தது, துரோணாச்சாரியாரின் புகழைப் பறைசாற்றுகிறது.

நமக்கு வெளியே உள்ள ஒருவர் நம்மை வழிநடத்துவது அவசியம். அவர்கள், நம்மை நமக்கே பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி; நம் பலவீனங்களை எதிர்த்துப் போராடத் தேவையான, நமக்குள் இருக்கும் வலிமைகளை நமக்குக் காட்டுபவர்கள். நம் திறமைகளைப் பட்டைதீட்டிக் கொள்ள நமக்குத் தனிப்பட்டப் பயிற்சியாளர்கள் தேவை. நம் அறிவை விருத்தி செய்வதற்கு ஆசிரியர்கள் தேவை. நம் ஆன்மீக இருத்தலை உணர்ந்து கொள்ள நம் ஒவ்வொருவருக்கும் ஒரு குரு தேவை.

உங்கள் மழலையர் பள்ளி ஆசிரியர் அவரது வாழ்வில் உங்களைப்போல் உயர்ந்த நிலையை அடையாது இருந்திருக்கலாம்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் உங்கள் வாழ்வு அவர் உங்களுக்கு அளித்த அறிவின் அடித்தளத்தின்மீது கட்டப்பட்டுள்ளது. நம்மை வழிநடத்தும் ஒளியுடன் நம்மை நாம் ஒப்பிட வேண்டாம். சூரியக் கதிர்களிலிருந்து சூரியனை நீக்கிவிட்டால், எதுவும் இருக்காது. பானையிலிருந்து மண்ணை எடுத்துவிட்டால், அங்கும் எதுவும் இருக்காது. விளைவிலிருந்து காரணத்தை நீக்கிவிட்டால், எதுவும் மிஞ்சாது. நம் ஆசிரியர்களின் போதனைகளை நம்மிடமிருந்து நீக்கிவிட்டால், நம்மிடம் எதுவும் இருக்காது.

கரும்பலகையில் '1000' என்று எழுதிவிட்டு, தன் வகுப்பறையில் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து அவனது கணித ஆசிரியர், "இது எவ்வளவு ?" என்று கேட்டார். நம்பிக்கையுடன் இருந்தாலும், கேள்வியின் எளிமையைக் கண்டு சற்று அவமானமாக உணர்ந்து, "ஒராயிரம்," என்று அவன் பதிலளித்தான். இப்போது ஆசிரியர் கூடுதலாக ஒரு பூஜ்யத்தை அந்த எண்ணின் வலப்பக்கம் '10000' எழுதிவிட்டு, அது எவ்வளவு என்று அவனிடம் மீண்டும் கேட்டார். "பத்தாயிரம்," என்று உடனடியான பதில் வந்தது. இப்போது இன்னோரு பூஜ்யத்தை அந்த எண்ணின் இடப்பக்கம் '010000' என்று எழுதிவிட்டு, அது எவ்வளவு என்று கேட்டார். "அதே பத்தாயிரம்," என்று அவன் பதில் கூறினான். ஆசிரியர் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டிப் புன்னகைத்தவாறே, "ஒரு முக்கியத்துவமற்ற எண் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த எண்ணைப் பின்தொடர்ந்து செல்லும்போது, அதன் மதிப்பு கூடுகிறது. அதே எண் அந்த முக்கியத்துவம் வாய்ந்த எண்ணிற்கு முன்னால் செல்ல முயற்சிக்கும்போது, அதற்கு மதிப்பேதுமில்லை. அதுபோன்றதுதான் ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையே உள்ள உறவும். ஒரு மாணவன் தன் ஆசிரியரைப் பின்தொடர்ந்து சென்றால், அவனது மதிப்பு கூடுகிறது. அதுவே தலைகீழாக அமைந்தால்? பதில் உனக்கே தெரியும்," என்று கூறினார்.

ஒரு பயிற்சியாளரின் மகத்துவம், ஒரு வீரனுக்கு அவனது திறனை வெளிப்படுத்துவதில் உள்ளது. ஒரு விளையாட்டு வீரனின் மகத்துவம், தனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளத் தன் திறனுக்கு ஏற்றவாறு செயல்படுவதில் இருக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

கண்காணிப்புடன் நீண்டகாலமாகத் தொடரும் மாற்றங்கள் கலாச்சாரங்களாக மாறும்

மாறுவது, பின் அந்த மாற்றத்தை இழப்பது, மீண்டும் மாறுவது . . . என்று இந்த முடிவில்லாச் சுழற்சிக்குள் மாட்டிக் கொண்டிருப்பது எவ்வளவு அலுப்பாக உள்ளது!

பொது இடங்களில் புகைபிடிப்பதைத் தடை செய்து சமீபத்தில் சென்னையில் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. யார் அதைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள்? இன்னமும் மக்கள் பொது இடங்களில் புகைபிடிப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். பொது இடங்களில் குப்பை கொட்டுவதை நிறுத்த இருபது ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரிலும் ஒரு சட்டம் போடப்பட்டது. எல்லோரும் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றனர். ஏன்? இவற்றிலுள்ள வேறுபாடு என்ன? சட்டம் கடைபிடிக்கப்படுகிறதா என்பது சென்னையில் கண்காணிக்கப்படுவதில்லை, ஆனால் சிங்கப்பூரில் அது கண்காணிக்கப்படுகிறது.

கண்காணிப்புடன் நீண்டகாலம் தொடரும் மாற்றங்கள், கலாச்சாரங்களாக மாறிவிடும். மாற்றம் என்பது சவாலான விஷயமல்ல. ஆனால் அந்த மாற்றம் ஒரு கலாச்சாரமாக மாறுவதில்தான் சவால் உள்ளது.

பொது இடங்களில் புகைபிடிப்பதற்கு எதிரான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் அமைப்புகளோ

https://telegram.me/aedahamlibrary

அல்லது நபர்களோ இல்லை. எனவே, சட்டம் சட்டப் புத்தகத்தில் மட்டுமே உள்ளது, வழக்கத்தில் இல்லை. இருந்தாலும், சிங்கப்பூரில், குப்பை போடுதல் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டது. அந்த மாற்றம் நீண்ட காலமாகத் தொடர்ந்து பின்பற்றப்பட்டு, இன்று அது சிங்கப்பூரின் கலாச்சாரமாக மாறிவிட்டது.

ஒரு சிறந்த பயிற்சித் திட்டம், ஒரு நல்ல புத்தகம், ஓர் ஆன்மீகச் சொற்பொழிவு, அல்லது புதுவருடப் பிறப்பு போன்ற வெளிக் காரணிகள், மாறுவதற்கு நிச்சயமாக நம்மை ஊக்குவிக்கின்றன. இத்தகைய மாற்றங்கள் கண்காணிக்கப்படாவிட்டால், உடனடியாக அவை மறைந்துவிடுகின்றன. மாறுவது, பின்னர் அந்த மாற்றத்தை இழப்பது என்பது உளவியல்ரீதியாக ஒருவரைச் செயலிழக்கச் செய்துவிடும் — அது அரசாங்கமாக இருந்தாலும் சரி, ஒரு நிறுவனமாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு கழகமாக இருந்தாலும் சரி.

மாமனிதர்களைச் சாதாரண மக்களிடமிருந்து வேறுபடுத்துவது எது? மாமனிதர்கள் ஒரு மாற்றத்தைத் தழுவும்போது, அதைக் கண்காணித்து, அது அவர்களது கலாச்சாரமாக மாறும்வரை, தொடர்ந்து அதைப் பின்பற்றுவார்கள். மாறாக, உலகிலுள்ள ஏனையோர், தற்காலிக மாற்றங்களை அரவணைத்து, அவை கண்காணிக்கப்படாததால் அவற்றை இழக்கின்றனர். பிறகு, புது வருடம் போன்ற ஏதோ ஒரு சந்தர்ப்பத்திற்காகவோ அல்லது ஊக்குவிப்புப் பயிற்சிக்காகவோ மீண்டும் காத்திருக்கின்றனர். தாங்கள் ஏற்கனவே முயன்று, தோற்ற அதே மாற்றத்தை மீண்டும் பின்பற்ற முயற்சிக்கின்றனர்.

மாற்றங்கள் கலாச்சாரங்களாக மாறும்வரை, அவை கண்காணிப்பட்டு, நீண்டகாலம் தொடர்ந்தால், உங்கள் வாழ்வு உயரும். இல்லையென்றால், அது ஒரு முடிவில்லாச் சுழற்சிதான்.

துவங்கிய இடத்திலேயே முடிக்கப் போகிறீர்கள் என்றால், ஏன் தொடங்க வேண்டும்?

https://telegram.me/aedahamlibrary

• • •

அடுத்தவரை உதாரணமாகக் கொள்வது என்பது ஒரு நல்ல பண்பு. ஆனால் அதுவே உங்களைத் தாழ்த்திக் கொண்டு செய்வது என்றால் உங்களது பலவீனமாக ஆகிவிடும். உங்களைத் தாழ்த்திக் கொள்ளாமல் அடுத்த வரைப் பின்பற்றுங்கள். உங்கள் மேலதிகாரியைவிடவும், உங்கள் முதலாளியைவிடவும் உங்களால் சிறப்புற முடியும். ஏதாவது ஒரு விஷயம் ஒரு மனிதனுக்குச் சாத்தியம் என்றால், அது அனைவருக்கும் சாத்தியம்தான். ஒருவனால் ஒன்றைச் செய்ய முடியுமென்றால், மற்ற எல்லோராலும் அதைச் செய்ய முடியும். உண்மையில் அதைவிடச் சிறப்பாகவே செய்ய முடியும். பின்பற்றுவதற்காக நீங்கள் பிறக்கவில்லை. நீங்கள் முன்னடத்திச் சென்ற விந்தணுவாக இருந்தீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். விந்தணுவாய் இருந்தபோதுகூட நீங்கள் பின்பற்றுபவராக இருக்கவில்லை. நாம் வழிநடத்திச் செல்லவே பிறந்திருக்கிறோம். அதை மெய்ப்பிக்கும் விதத்தில் வாழுங்கள்.

https://telegram.me/aedahamlibrary

நாகலட்சுமி சண்முகம்
மொழிபெயர்ப்பாளர்

நாகலட்சுமி மிகச் சிறந்த ஊக்குவிப்புப் பேச்சாளர். மக்களிடம் பரிபூரண மாற்றம் கொண்டுவரும் கருத்தரங்குகளை இவர் நடத்தி வருகிறார். அவர் முழுநேரப் பேச்சாளராக ஆவதற்கு முன்பு, பத்து வருடங்கள் கணினித் துறையில் தலைமைப் பொறுப்பு உட்படப் பல பதவிகளை வகித்தார்.

தமிழ் நாடகத் துறையின் முன்னோடி மேதைகளான டி.கே.எஸ் சகோதரர்களில் ஒருவரான திரு.முத்துசாமி அவர்களின் பேத்தியான நாகலட்சுமியிடம் இருக்கும் இயல்பான தமிழ் ஆர்வம் தமிழ் மொழிபெயர்ப்புத் துறைக்கு அவரை இழுத்து வந்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் முப்பத்தைந்து புத்தகங்களை அவர் மொழிபெயர்த்துள்ளார். அவருடைய மொழிபெயர்ப்பு நூல்களில் ரோன்டா பைர்ன், டாக்டர் ஜோசப் மர்ஃபி, ஜான் மேக்ஸ்வெல், டாக்டர் ஸ்பென்சர் ஜான்சன், நார்மன் வின்சென்ட் பீல், ஜான் கிரே, கேரி சேப்மேன், ஜாக் கேன்ஃபீல்டு, மார்க் விக்டர் ஹான்சன், பிரையன் டிரேசி, ஸ்டீபன் ஆர். கவி, ராபர்ட் கியோஸாகி, டேல் கார்னகி போன்ற சர்வதேச அளவில் கொண்டாடப்படுகின்ற தலைசிறந்த நூலாசிரியர்களின் நூல்களும் அடங்கும்.

நாகலட்சுமி தன் கணவருடனும் தன் குழந்தைகள் இருவருடனும் தற்போது மும்பையில் வசித்து வருகிறார்.

https://telegram.me/aedahamlibrary

இன்ஃபினி நிமிடம்
11:11

இன்ஃபினி நிமிடமான காலை 11:11 மணியின் போது ஏற்படும் ஆன்மீகத் தொடர்பிற்கான செறிவை மேலும் மேலும் அதிகமான மக்கள் புரிந்து கொள்ளத் துவங்கியுள்ளனர். அதனால் அவர்கள் தினமும் காலை 11:11 மணிக்கு, தங்களைச் சுற்றியுள்ள அனைத்திலிருந்தும் தங்களை விடுவித்துக் கொண்டு, இன்ஃபினி பிரார்த்தனையை மெதுவாக உச்சரித்துக் கொண்டு, ஒரு நிமிடம் மௌனம் காக்கின்றனர். அந்த ஒரு நிமிடத்தில் அனைத்தும் மௌனத்தில் மூழ்கியிருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருப்பதால், அப்படிச் செய்வதன் மூலம் பிரபஞ்ச மௌனத்திற்கு அவர்கள் தங்களுடைய பங்களிப்பை வழங்குகின்றனர். இந்த ஒரு நிமிடத்தின்போது மஹாத்ரயா அவர்களும் தியான நிலையில் தன்னை இருத்தி, தனது அமைதி நிலையை உங்களோடு பகிர்ந்துகொள்கிறார்.

11:10 இருந்து 11:11 வரை	-	இன்ஃபினி பிரார்த்தனை
11:11 இருந்து 11:12 வரை	-	மௌனம்

இது குறித்து மேலும் தகவல் அறிய www.infinitheism.com என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

இன்ஃபினி பிரார்த்தனை

உனை உணர்கிறேன். உன் கருணையை உணர்கிறேன். உன் ஒளியை உணர்கிறேன். நீயே என் நம்பிக்கை, நீயே என் பலம். என் பாதையும் முடிவும் நீயே. நான் எப்போதும் உன்னோடு இனைந்துள்ளேன். எனது என்று எதுவுமில்லை, எல்லாமும் உனது. இன்னும் உயர வழிகாட்டு... இன்னும் ஆழ்ந்து செல்ல வழிகாட்டு... எல்லாவற்றையும் கடந்து

https://telegram.me/aedahamlibrary

செல்ல வழிகாட்டு... உனைச் சேர வழிகாட்டு...

இன்ஃபினிபிரார்த்தனையை www.infinitheism.com என்ற இணையத்தளத்திலிருந்து இலவசமாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய ஒன்று.

நான் பல புத்தகங்களைப் படித்துள்ளேன். ஆனால் 'தாயம்' புத்தகம்தான் நான் படித்ததிலேயே மிக அருமையான புத்தகம்.

ஆர். சி. லஹோட்டி
முன்னாள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி

...மிகப் பெரிய விஷயங்கள் இவ்வளவு எளிய வார்த்தைகளில் வடிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கமும் ஒரு பொக்கிஷம். ஒவ்வொரு பக்கமும் எல்லோருக்கும் பொருத்தமாக இருக்கிறது. நீங்கள் சோகமாக இருந்தாலும் சரி, மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி, நீங்கள் வெற்றிகரமானவராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இதை நீங்கள் படிக்கும்போது சிறப்பாக உணர்வீர்கள். அறிவுப் பொக்கிஷமாக, அக ஒளி வழிகாட்டியாகத் திகழும் இந்நூல்தான் என் இதயத்தைத் தொட்ட ஒரே ஆன்மீகப் புத்தகம். நான் இதைப் பற்றி எண்ணற்றோரிடம் பேசியிருக்கிறேன்.

சங்கர் மகாதேவன்
இசையமைப்பாளர் மற்றும் பாடகர்

வெற்றி பெரிய பெரிய விஷயங்களில் இருக்கிறது.
மகிழ்ச்சி சின்னச் சின்ன விஷயங்களில் இருக்கிறது.
தியானம் வெறுமையில் இருக்கிறது.
கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார்.
அதுதான் வாழ்க்கை.

Published by
MANJUL
www.manjulindia.com

In association with
infinitheism
www.infinitheism.com